# அலகுகள் 1 - 5

**அலகு -1**

1. திருஞான சம்பந்தர் தேவாரம் : முதலாம் திருமுறை
2. திருநாவுக்கரசர்: நான்காம் திருமுறை - முதல் பதிகம் முதல் பதிகம் திருவதிகை
3. சுந்தரர்: தேவாரம் : ஏழாம் திருமுறை முதல் பதிகம் - திருவெண்ணெய் நல்லூர்

**அலகு -2**

4. மாணிக்கவாசகர் : திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் திருக்கோத்தும்பி
5. காரைக்காலம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதல் திருப்பதிகம்
6. திருமூலர் – திருமந்திரம்- 18 அன்புடைமை

**அலகு -3**

7. ‘ஆண்டாள்’ – திருப்பாவை
8. பெரியாழ்வார்: திருமொழி திருப்பல்லாண்டு முதற்பத்து இரண்டாம் திருமொழி
9. குலசேகர ஆழ்வார்-நான்காம் திருமொழி

**அலகு - 4**

10. திருக்குற்றாலக் குறவஞ்சி
11. முக்கூடற்பள்ளு

**அலகு – 5**

12. தமிழ்விடுதூது
13. கலிங்கத்துப்பரணி
14. நந்திக்கலம்பகம்

## அலகு 1

திருஞான சம்பந்தர் தேவாரம் : முதலாம் திருமுறை
முதல் பதிகம்: சீர்காழி பதிகம் (திருப்பிரமபுரம்) (''தோடு உடைய செவியன்'' எனத் தொடங்கும் செய்யுள் முதல் ''அருநெறிய மறை வல்ல முனியகன்' எனத் தொடங்கும் செய்யுள் முடிய 11 செய்யுட்கள்)
திருநாவுக்கரசர் தேவாரம்: நான்காம் திருமுறை – முதல் பதிகம்: திருவதிகை வீரட்டானம். (கூற்றாயின வாறு விலக்ககிலீர்'' எனத் தொடங்கும் செய்யுள் முதல் ''போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்'' எனத் தொடங்கும் செய்யுள் முடிய 10 செய்யுட்கள்)
சுந்தர் ஏழாம் திருமுறை, முதல் பதிகம் - திருவெண்ணெய் நல்லூர். பித்தா பிறை சூடி எனத் தொடங்கும் செய்யுள் முதல் ''காரூர்புனல் எய்திக் கரை'' எனத் தொடங்கும் செய்யுள் முடிய 10 செய்யுட்கள்).

## அலகு 2

மாணிக்கவாசகர்: திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் திருக்கோத்தும்பி (20 செய்யுட்கள்)
காரைக்கால் அம்மையார்: திருவாலங்காடு மூத்த திருப்பதிகம் 1('கொங்கை திரங்கி''.......) எனத் தொடங்கும் செய்யுள் முதல் ''ஒப்பினை யில்லவன் பேய்கள் கூடி'' எனத் தொடங்கும் செய்யுள் முடிய 11 செய்யுட்கள்)
திருமூலர் – திருமந்திரம்: முதல் தந்திரம் -18 அன்புடைமை (''அன்பு சிவம்.... எனத் தொடங்கும் செய்யுள் முதல் ''அன்பினுள்ளான்'' என தொடங்கும் செய்யுள் முடிய 10 செய்யுட்கள்)

## அலகு 3

ஆண்டாள்: திருப்பாவை (1-10 செய்யுட்கள்) (''மார்கழித் திங்கள்'' எனத் தொடங்கும் செய்யுள் முதல் ''நேற்றுச் சுவர்க்கம் புகுகின்ற'' எனத் தொடங்கும் செய்யுள் முடிய 10 செய்யுட்கள்)
பெரியாழ்வார் திருமொழி: திருப்பல்லாண்டு முதற்பத்து: கண்ணன் திருவவதாரச் சிறப்பு (10 செய்யுட்கள்)
குலசேகர ஆழ்வார்: பெருமாள் திருமொழி திருவேங்கட மலையில் சம்பந்தம் வேண்டல், ''ஊனேறு செல்வத்து''.... எனத் தொடங்கும் செய்யுள் முதல் ''மன்னிய தண்சாரல்.... எனத் தொடங்கும் செய்யுள் முடிய 11 செய்யுட்கள்)

## அலகு 4

திருக்குற்றால குறவஞ்சி (வசந்தவல்லி பந்தாடுதல் வரை) முக்கூடற்பள்ளு.

## அழகு 5

தமிழ்விடு தூது (1-150: அடியார்களின் வழிபாடு வரை)
கலிங்கத்துப் பரணி (1-6: பேய்களைப் பாடியது வரை)
நந்திக் கலம்பகம் (தலைவி கூற்றுப் பாடல்கள் மட்டும்)

# அலகு - 1
## திருஞானசம்பந்தர் தேவாரம் : முதலாம் திருமறை

முதல் பதிகம்: சீர்காழி பதிகம் (திருப்பிரமபுரம்: 1,2,3 என மூன்று முதல் திருமுறைகள் திருஞான சம்பந்தர் உடையது. இவருடைய இயற்பெயர் ஆளுடைய பிள்ளை இவர் தந்தை சிவபாத இருதயர். பகவதி அம்மையார் ஆவர். இவர் தந்தை சிவபாத இருதயர் நீராடச் சென்றார். பசியால் அழுத ஆளுடைய பிள்ளைக்கு உமையம்மையே நேரில் வந்து பொற்கிண்ணத்தில் ‘‘ஞானப்பால்’’ ஊட்டினார். அன்றுதொட்டு ஆளுடைய பிள்ளை ஞானசம்பந்தர் என அழைக்கப்பட்டு வருகிறார். ஞானப்பால் உண்ட தனது மூன்றாம் வயதிலே,

**1. ‘‘தோடு உடைய செவியன் விடைஏறி ஓர்தூவெண் மதிசூடிக்**
**காடு உடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்**
**ஏடு உடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த**
**பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே’’**

**தெளிவுரை:**

தோடு உடைய செவிக்கு அணியும் அணிந்துள்ள உமையம்மையை, இடப்பக்கம் கொண்ட சிவபிரான் இடபவாகனத்தில் ஏறிதூய்மையான வெண்மதியைச்சூடி, திருவெண்ணீறு பூசிய திருமேனி பொலிய விளங்குமவர் என் உள்ளம் கவர் கள்வராவர். அப்பிரான் நான்முகனின் வழிபாட்டினை ஏற்று அருள் செய்தவர். அவரே எனக்குக் காட்சி தந்தவர்! அவரே இவராவர்.

**2. ‘‘முற்றல் ஆமையின் நாகமோடு ஏனம்**
**முளைக்கொம்பு அவை பூண்டு**
**வற்றலோடுகல னாப்புலி தோர்ந்தெனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**கற்றல் கேட்டல் உடையார்பெரியார் கழல்**
**கையால் தொழுது ஏத்தப்**
**பெற்றம் ஊர்ந்தபிர மாபுரமேவிய**
**பெம்மான் இவன் அன்றே’’**

**தெளிவுரை:**

நீண்ட நாள் வாழ்ந்த ஆமையோடு, நாகம், பன்றியின் கொம்பு இவைகளை அணிகலன்களாக் கொண்டு வற்றிய மண்டையோட்டினைத் திருவோடாகக் கொண்டு பிச்சையேற்கச் செல்லும் சிவபிரான் என் உள்ளம் கவர் கள்வராவர். கற்றலும் கேட்டலும் உடையவரே பெரியோர். இப்பெற்றியரும், திருத்தொண்டு செய்து வாழும் அடியார் பெருமக்களும் கரங்கூப்பி வணங்கி நிற்க இடப வாகனத்தில் காட்சி தருபவர் இவரல்லவா!

**3. ‘‘நீர்பரந்தநிமிர் புன்சடை மேலோர்**
**நிலாவெண் மதிசூடி**
**ஏர்பரந்த இனவெள்வளை சோரஎன்**
**உள்ளம் கவர் கள்வன்**
**ஊர்பரந்த உலகின் முதலாகிய**

**ஓரூர் இது என்னப்**
**பேர்பரந்தபிர மாபுரமேவிய**
**பெம்மான் இவன் அன்றே"**

கங்கை தங்கும் நிறைந்த புல்லிய சடையில் குளிர்ச்சியான ஒரு கலைப் பிறையைச்சூடி, அழகு மிகுந்த வளைகள் கைகளினின்று கழன்று செல்லுமாறு என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் சிவனாரே! உலகிலுள்ள ஊர்கள் யாவும் மகாப்பிரளய காலத்தில் அழிந்தாலும் அழியாது எப்பொழுதும் உள்ள பிரமபுரத்தில் இருக்கும் இவனல்லவா!.

4. **"விண்மகிழ்ந்தமதில் எய்தும் அன்றி**
**விளங்குதலை யோட்டில்**
**உண்மகிழ்ந்து பலிதேரிய வந்தெனது**
**உள்ளம் கவர் கள்வன்**
**மண்மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை**
**மலித்தவரை மார்பில்**
**பெண்மகிழ்ந்த பிரமா புரமேவிய**
**பெம்மான் இவன் அன்றே"**

**தெளிவுரை:**

விண்ணில் பறத்தலை விரும்பிச் செய்து, பிறரைத் துன்புறுத்தும் தன்மையில் மகிழ்ச்சிக் கொள்ளும் முப்புரக்கோட்டைகளை எரித்தும் அன்றி; நான்முகனின் தலையைப் பிச்சை பாத்திரமாகக் கொண்டு பிச்சையேற்கச் செல்வதோடு என் உள்ளத்தினையும் கொள்ளை கொண்டும்; அரவும் கொன்றை மலரும் மார்பினில் சிறந்து விளங்கவும் உமையம்மையே மகிழ்வுடன் இடப்பக்கத்தில் வைத்து விளங்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

5. **"ஒருமை பெண்மை உடையன் சடையன்விடை**
**ஊரும் இவன் என்ன**
**அருமையாக உரை செய்ய அமர்ந்தெனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**கருமைபெற்ற கடல் கொள்ள மதிந்ததோர்**
**காலம்இது என்னப்**
**பெருமை பெற்றபிர மாபுரமேவிய**
**பெம்மான் இவன் அன்றே"**

**தெளிவுரை:**

ஓர் உருவிலே பெண்ணுருவும் ஆணுருவும் கொண்டு இரு உருவங்களாகக் காட்சி நல்குபவன்; சடை முடியோடு இடபம் ஏறி அமர்பவன்: அருமையான உரைகளைக் கூறி என் உள்ளம் கவர்கள்வன்; ஊழிக்காலத்தும் அழியாத பெருமையுடைய பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!.

6. **"மறைகலந்த ஒலி பாடலொடு ஆடவர்**
**ஆகி மழுவேந்தி**
**இறைகலந்த இன வெள்வளை சோர என்**

**உள்ளம் கவர் கள்வன்**
**கறைகலந்தகடி யார் பொழில் நீடுயர்**
**சோலைக்கதிர் சிந்தப்**
**பிறைகலந்தபிர மாபுரமேவிய**
**பெம்மான் இவன் அன்றே”**

**தெளிவுரை:**

மறைஒலி முழங்க பாடலொடு ஆடலும் செய்து மழு ஏந்தி, இருப்பவன் பெருமான்; ஆனால் அவன் என் கைகளிலுள்ள வளையல்கள் தாமே கழன்று விழும்படி என் உள்ளத்தைக் கவர்ந்து உருகச் செய்தவன் அடர்த்தியான சோலைகள் சூழ்ந்தும் நறுமணம் வீசுவதுமான நிலவின் தன்மை கொண்ட பிரமபுரத்தல் மேவும் பெருமான் இவனல்லவா!.

7. **“சடைமுயங்குபுன லன் அனலன் எரி**
**வீசிச்சதிர் வெய்த**
**உடைமுயங்கு அரவோடு ஊழி தந்து எனது**
**உள்ளம் கவர் கள்வன்**
**கடல் மயங்குகழி சூழ்குளர் கானல்அம்**
**பொன்னஞ்சிறகு அன்னம்**
**பெடைமுயங்கு பிர மாபுரம் மேவிய**
**பெம்மான் இவன் அன்றே”**

**தெளிவுரை:**

சடையில் கங்கையையும் திருக்கரத்தில் தீயையும் ஒளிபெறச்செய்து பெருமை கொள்பவனும், ஆடையின் மேல் அரவினை இறுகக்கட்டிய நிலையில் அது திரியும் நிலை கொண்ட காட்சி தரும் பெருமான் என் உள்ளம் கவர் கள்வராவர். உப்பங்கழிகள் கொண்ட சோலையில் அன்னப்பறவைகள் தம் பேடைகளுடன் கூடி விளங்கும் பிரமாபுரத்தில் இருப்பவர் இவரல்லவா.

8. **“வியர் இலங்குவரை உந்திய தோள்களை**
**வீரம்விளை வித்த**
**உயர் இலங்கை அரை யன் வலி செற்று எனது**
**உள்ளம் கவர்கள்வன்**
**துயர் இலங்கு உலகில் பல ஊழிகள்**
**தோன்றும் பொழுது எல்லாம்**
**பெயர் இலங்குபிர மாபுரமேவிய**
**பெம்மான் இவன் அன்றே”**

**தெளிவுரை:**

வியர்வை விளங்குகின்ற திண்தோள்களின் வலிமையைக் காட்டும் நிலையில் கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனின் வலிமையை அழித்தவர் என் உள்ளம் கவர் கள்வராவர். வினையின் கன்மத்தைச் சேர்த்துத் துயரைத் தரும் இவ்வுலகின் ஊழிக்காலத்திலும் அழியாது நிலைத்து நிற்கும் சிறப்பினைக் கொண்ட தலமான பிரமபுரத்தில் மேவியவர் இவரல்லவா!.

9. “தாள்நுதல் செய்து இறை காணியமாலொடு
தண்தாமரை யானும்
நீணுதல் செய்து ஒழிய நிமிர்ந்தான் எனது
உள்ளம் கவர் கள்வன்
வாள்நுதல் செய்மக ளிர் முதலாகிய
வையத்தவர் ஏத்தப்
பேணுதல் செய்பிர மாபுரமேவிய
பெம்மான் இவன் அன்றே”

**தெளிவுரை:**

திருவடியையும் திருமுடியையும் காணத் திருமாலும் நான்முகனும் முயல, அவர்களின் முயற்சி பயனற்றவனாகச் செய்யும் நிலையில் நீண்டு உயர்ந்து வளர்ந்தோனாகிய பெருமாள் என் உள்ளம் கவர் கள்வனாவார். வாளனைய நெற்றியையுடைய மகளிர் முதலாக உலகோர் அனைவரும் போற்றிப் பேணிக் காக்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவரல்லவா!.

10. “புத்தரோடு பொறியில் சமணும் புறம்
கூறிநெறி நில்லா
ஒத்தசொல்ல உலகம்பலி தேர்ந்தெனது
உள்ளம் கவர் கள்வன்
மத்தயானை மறுக அவ்உரிபோர்த்ததோர்
மாயம் இது என்னப்
பித்தர்போலும் பிர மாபுரமேவிய
பெம்மான் இவன் அன்றே”

**தெளிவுரை:**

அறிவற்ற புத்தரும் சமணரும் நன்னெறி யில்லாத மாற்றுக்கருத்துக்களை கூறிடினும், பலியேற்கச் செல்லும் பிரானே என் உள்ளம் கவர் கள்வராவர். செருக்குற்ற யானையுடன் பொருது அழித்து அதன் தோலை உரித்துத் தன்மெய்யுக்குப் போர்வையாகக் கொண்ட பின்னர். மாயங்கொண்டு அடியார்களிடத்துப் பித்தரைப் போல் விளங்குபவரே பிரமாபுரம் மேவிய பெருமான் இவரல்லவா!

11. “அருநெறிய மறை வல்ல முனியகன்
பொய்கையலர் மேவிய
பெருநெறிய பிர மாபுரமெவிய
பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்
பந்தன் உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவா தொல்வினை
தீர்தல் எளிதாமே”

**தெளிவுரை:**

அருமையான வழிமுறைகளை வகுக்கும் மறைகளில் வல்ல முனிவனாகிய நான்முகன், தாமரை மலர்கள் விளங்கும் அகன்ற பொய்கைகளையுடைய பிரமாபுரத்தில் வீற்றிருந்து

முத்திநெறி சேர்க்கும் முதல்வனை, ஒன்றுபட்ட மனத்தினால் வைத்துப் போற்றிய திருஞானசம்பந்தன் உரை செய்த இந்த திருநெறிய தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லாரின் தொல்வினை எளிதாகத்தீரும்.

**குறுகிய விடையளி**

1. திருப்பிரம்மபுரத்தில் வீற்றிருக்கும் சிவனின் தோற்ற நிலையை விளக்குக?
2. சீர்காழி பதிகம் உணர்த்தும் இறைவனின் திருச்செயல்கள் பற்றி விளக்குக.

**விரிவான விடையளி**

1. திருஞானசம்பந்தர் சீர்காழி பதிகத்தில் உணர்த்தம் கருத்துக்களை விவரி.

## திருநாவுக்கரசர்: நான்காம் திருமுறை – முதல் பதிகம் முதல் பதிகம் : திருவதிகை

**வீரட்டானம்**

இயற்பெயர் மருள்நீக்கியார் 4,5,6 இவருடைய திருமுறைகள். பெற்றோர் அல்லாத இவரைத் தமக்கை திலகவதியார் வளர்த்தார். சமண சமயத்தில் சேர்ந்து தருமசேனர் என சமணத் தலைவராகவும் இருந்தார். கடுமையான சூலைநோய் (வயிற்றுவலி) மூலம் வருந்தினார். வலிதாளாமல் தான் படும் கொடுமையை “வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன் அடியேன்’ என்று திருவதிகை வீரட்டானம் இறைவனிடம் கண்ணீரோடு வேண்டினார். சமண சமயத்தில் இருந்து சைவராக மாறுவேன் என்பதை ஏற்றாய்! அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவேன்’ என்று இறைவனிடம் அறிக்கை இட்டார். இவரது தமக்கை திலகவதியார் திருநீறு பூச மருள் நீக்கியாரின் சூலைநோய் குணமானது. அன்றுமுதல் சைவரானார்.

1. **“கூற்றாயின வாறு விலக்கலீர்**
   **கொடுமை பல செய்தன நான் அறியேன்**
   **ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்**
   **பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
   **தோற்றாதென் வயிற்றின் அகம்படியே**
   **குடரோடு துடக்கி முடக்கியிட**
   **ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில**
   **வீரட்டானத்துறை யம்மானே”**

**விளக்கவுரை:**

திருவதிகையிலுள்ள கெடிலயாற்றின் வடகரையில் அமைந்துள்ள திருவீரட்டானத்தில் அமைந்துள்ள பெருமானே! அடியேனுக்குக் கூற்றுவன் வந்துள்ள இந்நோயினை விலக்காமல் உள்ளீரே! நான் செய்த கொடுமைகள் பல உண்டு அவற்றின் பயனை முன்னம் யான் அறியவில்லை. இப்பொழுது நீ என்னை நின் திருவடிக்கு அடிமையாக ஏற்றுக் கொண்டாய். இனி இரவும் பகலும் நின்னைப் பிரியாமல் நின் மலரடியே வணங்குவேன்! புறத்தே கண்ணிற்குத் தோன்றாமல் வயிற்றின் உள்ளிடத்து குடலோடு பின்னிப்பிணைத்துக் கொண்டு யாதொரு செயலும் செய்ய வொட்டாமல் என்னை முடக்கிக் கிடக்கிடலால் இந்நோயின் வலியினை ஆற்றமாட்டாமல் வருந்துகின்றேன். இவ்வருத்தத்தை நீக்கி எளியேனை ஆண்டருள்வாய்!.

2. “நெஞ்சம் உமக்கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம் இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும் இடர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில்
வீரட்டா னத்துறை அம்மானே”

**விளக்கவுரை:**

திருவதிகையிலுள்ள கெடில நதிக்கரையின் வடகரை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! அடியேனுடைய நெஞ்சத்தை உமக்கே இடமாக வைத்தேன். இச்சூலைநோய் போன்ற கொடுமையான நோயின் இடரை அநுபவித்தறியேன். அடியேனின் வயிற்றின் உள்ளிடத்து, குடலுடன் உட்சேர்ந்து யாதொரு செயலும் செய்யாமல் முடங்கிக் கிடக்கும்படி நஞ்சாகி அடியவனை வருத்துகிறது. இனி இக்கொடிய சூலைநோய் என்னைப் பற்றாமலும் துரத்தாமலும் மறைந்தருள்வது நம் செயலே! ‘அஞ்சேல்’ என அபயமும் அளித்திடுவீர்! என் செய்வன்.

3. “பணிந்தாரன பாவங்கள் மாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தே உமக்(கு) ஆட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவித்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டு பூசவல்லீர்
பெற்றம் ஏற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை கொண்(டு)
அணிந்தீர் அடி கேள் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே”

**விளக்கவுரை:**

திருவதிகையிலுள்ள கெடிலயாற்றின் வடகரையில் அமைந்துள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! பிணிபற்றி இறந்தாரின் உடலை எரிக்கும் சாம்பலைத் திருமேனியில் பூசும் பெருமானே! தேவரீரைப் பணிந்து போற்றும் அடியார்களின் பாவங்களைப் போக்கும் வல்லமை கொண்டவரே! இறந்தாரின் வெண்டலையைக் கையில் கொண்டு பிச்சை ஏற்றுத் திரிவீர்! நும் வலிமை கண்டு ‘என்னையும் ஆளுவீர்’ என்றெழும் பெருவிருப்பால் உமக்கு ஆட்பட்டேன்! இயத்தை விரும்பி ஏறும் பண்பீர்! சூலைநோய் என்னைச் சுடுகின்றது. அதனை தடுத்தருள்வீராக.

4. “முன்னம்அடி யேன் அறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்காளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவித்தருளீர்
தன்னை அடைந் தார்வினை தீர்ப்பதன்றே
தலையாயவர் தங்கடன் ஆவதுதான்
அன்னநடை யார் அதி கைக்கெடில

**வீரட்டானத்துறை அம்மானே"**

**விளக்கவுரை:**

திருவதிகையிலுள்ள கெடிலயாற்றின் வடகரையில் அமைந்துள்ள திருவீரட்டானத்தில் அமைந்திருக்கும் பெருமானே! அடியேன் முன்னர் புறச்சமயம் போந்து அறியாமையால் இரந்தேன் அதன் பொருட்டு கொடிய சூலை நோயை எனக்கு முனிந்து தந்து அதனால் எளியேனை முடக்கியிடக்கிட நலியுமாறு செய்தீர்! இன்றோ நான் உமக்கு ஆட்பட்டு அடிமையாயினன். சூலையோ மிகச் சுடுகின்றது. தன்னை யடைந்தாரின் வினையை தீர்ப்பது அன்றோ தலைவரானவரின் தலையாய கடன். என் பிணியைத் தவித்தருள்வீர்! நான் அடியவன்.

**5. "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்**
**கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி**
**நீத்தாய கயம்புக நூக்கியிட**
**நிலைக் கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்**
**வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்**
**வயிற்றோடு துடக்கி முடக்கியிட**
**ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில**
**வீரட்டானத்துறை அம்மானே!"**

**விளக்கவுரை:**

நீர் வளம் நிறைந்த திருவதிகை கெடிலயாற்றின் வடகரையிலுள்ள திருவீரட்டானத் துறையில் எழுந்தருளியுள்ள பெருமானே! நீர் நிலையினை காத்து ஆள்வோரின் காவலைப் பொருட்படுத்தாமல் அதன் கரையில் நின்றவரிடம், இந்நீர் நிலையில் நீரின் ஆழம் அளவு என்ன? என அறிய வினவிய என்னையே நோக்கி "நீயே இறங்கிக்காண்" என அவர் கூறி அந்நீர் நிலையில் என்னைத்தள்ளிவிடவும் (நீச்சல் அறியாதவன்) நிலை கொள்ளும் ஒருவழித் துணையை அடைந்திலேன்.

(நீரில் விழுவதற்கு முன்னால்) அறிவுறுத்திய நன்மொழியைப் போன்ற ஒரு சொல்லை இன்று வரை யான் கேட்டறியேன். வயிற்றினை முடக்கி இடக்கிடும் இக்கொடிய நோயைப் போக்குவாயாக.

**6. "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**
**நலத்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்**
**உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்**
**உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்**
**உடலுள்ளுறு சூலை தவித்தருளாய்**
**அலந்தேன் அடி யேன் அதி கைக்கெடில்**
**வீரட்டா னத்துறை அம்மானே"**

**விளக்கவுரை:**

நீரும், மலரும், தூபதீபப்புகையும் இன்னபிறவும் கொண்டு நின்னை வழிபடுவதை மறந்தறியேன்; நலத்திலும் தீதிலும் உன்னை மறவேன். உன் திருப்பெயரை என் நாவில் பல்கால்

கூறி மகிழ்ந்திட மறந்தறியேன்; இறந்தாரின் தலையைக் கையில் ஏந்திப்பிச்சை ஏற்றுத்திரிபவனே! அடியவன் உடலின் உள்ளே மிக வருத்தும் சூலை நோயை போக்குவாயாக.

**7. "உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்**
**ஒருவர்தலை காவல் இலாமையினால்**
**வயந்தே உமக் காட்செய்து வாழலுற்றால்**
**வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்**
**பயந்தேன் வயிற்றின் அகம்படியே**
**பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட நான்**
**அயர்ந்தேன் அடியேன்அதி கைக்கெடில**
**வீரட்டானத்துறை அம்மானே"**

**விளக்கவுரை:**

திருவதிகையிலுள்ள கெடில நதிக்கரையின் வடகரை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! இவ்வுலகில் எனக்கு வழிநின்று உணர்த்துபவர் உம்மை அல்லாது வேறு ஒருவரும் இல்லாத காரணத்தால் மனை வாழ்க்கையையும், அதற்கு தேவையான பொருளும் உயர்ந்தது என்ற பொய்மையை உணர்ந்து அவற்றினின்றும் நீங்கியே வாழ்ந்தேன். உமக்கு ஆட்சிசெய்து வாழ்தலை மேற்கொண்டேன். இதுவே அழியாச் சிறப்புடையது என்று உணர்ந்தேன். உன்னை உற்ற என்னை சூலைநோய் துன்புறுத்துகின்றது. என் அடி வயிற்றின் குடலைப் பறித்துப் புரட்டி அறுத்து இழுத்திடலால் அஞ்சி அயர்ந்தேன்.

**8. "வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்**
**வஞ்சம் மனம் ஒன்று இலாமையினால்**
**சலித்தால் ஒருவர் துணை யாருமில்லைச்**
**சங்கவெண் குழைக் காதுடை யெம் பெருமான்**
**கலித்தேயென் வயிற்றின் அகம்படியே**
**கலக்கிமலக் கிட்டு கவர்ந்துதின்ன**
**அலுத்தேன் அடியேன் அதி கைக்கெடில**
**வீரட்டானத்துறை அம்மானே"**

**விளக்கவுரை:**

திருவதிகையிலுள்ள கெடிலநதிக்கரையின் வடகரை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! அடியேன், பொய்யும், சூதும் கொண்ட மனத்தின் காரணத்தினாலும், நன்மையைத் தேர்ந்து அறியும் தன்மை இல்லாததாலும் மனை வாழ்க்கை வாழும் நெறியினை உலகத்தவர் பெரும் பேறாய்க்கருதினர். இது நற்பேறன்று என்பதனை இன்று உணர்ந்து ஓர்ந்தேன். வெண்குழையைத் திருச்செவியில் கொண்ட எம்பெருமானே! என் வயிற்றினுள் சூலைநோய் ஆரவாரித்து கலக்கி மயக்கிட முயல்கின்றது. இக்கொடிய பிணியினைப் போக்கியருள்க.

**9. "பொன்போல மிளர்வதோர் மேனியினீர்**
**புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்**
**துன்பேகவ லைபிணி யென்றிவற்றை**
**நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்**

**என்போலிகள் உம்மை யினித்தெளியார்**
**அடியார் படுவ திதுவேயாகில்**
**அன்பே அமையும் அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே”**

**விளக்கவுரை:**

திருவதிகையிலுள்ள கெடிலநதிக்கைரயின் வடகரையிலுள்ள திரு வீரட்டானத்தில் எழுந்தருளியருக்கும் பெருமானே! பொன்போல் ஒளிரும் திருமேனியீர்! சடைமுடியில் பிளந்த பிறைச்சந்திரனை உடையீர்! என்னைத் துன்பமும், கவலையும் பிணியும் பற்றாதவாறு பாதுகாப்பினைத் தராது ஒழிந்தீர்! அப்பிணியைத் துரத்தாமலும், மறையவும் அருள் பாலித்திலீர்! இதனால் தெளியமாட்டார். அடியார் படுவது இதுவே யாகில் அன்பு அமையுமோ!

**10. “போத்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்**
**புறங்கா டரங்காநட மாடவல்லாய்**
**ஆர்த்தான் அரக் கன்றனை மால்வரைக்கீழ்**
**அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்**
**வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்**
**என்வேதனை யான விலக்கிடாய்**
**ஆர்த்தார்புனல் சூழ் அதிகைக் கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே”**

**விளக்கவுரை:**

ஒலித்து நிறையும் நீர் சூழ்ந்த திருவதிகை கெடிலயாற்றின் வடகரையிலுள்ள திரு வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள பெருமானே! யானையின் தோலை உரித்துப் போர்த்து விளங்கும் தலைவனே! சுடுகாட்டினை ஆபரங்கமாகக் கொண்டு ஆடல் புரியும் பெருமானே! வீரமுழக்கத்தோடு கயிலை மலையைத் தூக்க முயன்ற அரக்கனான இராவணனை; அம்மலையின் கிடத்தி நசுக்குறச் செய்து, நசுக்குண்ட அவனும் சமாதனத்தால் சாமகீதம் இசைக்கக்கேட்ட நல்லருள் செய்ததைக் கருத மாட்டாயா? வேர்த்தும், புரண்டும் விழுந்தும், எழுவதுமான என் வேதனையை விலக்கிடாய்.

**குறுகிய விடையளி:**

1. திருவதிகை வீரட்டானத்தில் திருநாவுக்கரசர் இறைவனிடம் வேண்டுவன யாவை?
2. திருவதிகை வீரட்டானத்தில் காணப்படும் இறைவனின் செயல்கள் யாவை?

**விரிவான விடையளி:**

1. திருநாவுக்கரசர் ‘திருவதிகைவீரட்டானம்’ என்ற பகுதியில் இறைவனிடம் வேண்டுவதை விவரிக்க.

**சுந்தரர்: தேவாரம் : ஏழாம் திருமுறை முதல் பதிகம் - திருவெண்ணெய் நல்லூர்**

சுந்தரர் பாடியவை 7ஆம் திருமுறை ஆகும். இவரது இயற்பெயர் ஆரூரர். இவரது அழகில் மயங்கிய நரசிங்க முனையரையர் என்னும் குறுநிலமன்னரால் தத்து எடுக்கப்பட்டு மன்னன் மகனாக வளர்ந்தார். இவரது 16வது வயதில் திருமணத்தன்று இறைவனே முதியவர் வடிவில் நேரில் வந்து ஓலை காட்டி ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி என்னும் மூவகைச் சான்றுகளாலும்

சுந்தரர் தனது அடிமை என நிறுவினார். தன்னை அடிமை என்று கூறிய இறைவனைப் ‘‘பித்தா’’ எனக் கோபித்து பேசினார்.

சுந்தரர் வன்தொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், திருநாவலூரர் என்று அழைக்கப்படுகின்றார். சுந்தரர் பாடிய 7ஆம் திருமுறையை ‘‘திருப்பாட்டு’’ என அழைக்கப்படுகின்றது.

**1. பித்தாபிறை சூடி பெரு**
**மானேஅரு ளாளா**
**எத்தான்மற வாதே நினைக்**
**கின்றேன் மனத்(து) உன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட் டுறையுள்**
**அத்தாஉனக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன் எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

பித்தனே! பிறையணிந்தவனே! பெருமையுடையவனே! அருளாளனே! என் மனத்துள் எவ்வகையாலும் மறவாது உன்னை வைத்தாய்! பெண்ணையாற்றின் தென்திசையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரில் ‘அருள்துறை’ என்னும் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள அத்தனே! முன்பே உனக்கு அடிமையாகி இப்பொழுது ‘உனக்கு அடிமை அல்லன் எனக் கூறுவது நன்றோ!

**(குறிப்புரை):** எத்தால் - எவ்வகையாலும்; அருள்துறை – திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவாலயம்; அத்தன் - இறைவன்.

**2. நாயேன்பல நாளும் நினைப்**
**பின்றிமனத்(து) உன்னைப்**
**பேயாய்த்திரிந்(து) எய்த்தேன்பெற**
**லாகாவருள் பெற்றேன்**
**வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட் டுறையுள்**
**ஆயா உனக்(கு) ஆளாய் இனி**
**அல்லேன் எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

மூங்கில்கள் நெருங்கி வளரப் பெற்ற பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூரிலுள்ள அருள்துறை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தலைவனே! நாயனைய கீழ்மையான யான் உன்னை நீண்ட நாட்கள் மனத்தில் நினையாது பேய் போல் திரிந்து இளைத்தேன். ஆனால் இன்றோ பெறற்கரிய உன் திருவருளைப் பெற்றேன். இந்நிலையை எனக்கு அளித்த உனக்கு முன்பே அடிமையாகி இனி ‘உன் அடிமையல்லேன்’ என எதிராடல் கூடுமோ?

**(குறிப்புரை):** எய்த்தேன் - இளைத்தேன்; வேய்ஆர் - மூங்கில்கள் நெருங்கி வளரப்பெற்ற; ஆயா – ஆயனே (தலைவனே).

**3. மன்னேமற வாதே நினைக்**
**கின்றேன் மனத்(து) உன்னைப்**
**பொன்னேமணி தானேவயி**
**ரம்மே பொரு துந்தி**
**மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர் அருட்டுறையுள்**
**அன்னே உனக்(கு) ஆளாய் இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

கரையை மோதும் பொன்னையும் மணியையும், வயிரத்தையும் தள்ளிக் கொண்டு வரும் ஒளி மிகுந்த பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண் அமைந்துள்ள அருள் துறையுள் எழுந்தருளியுள்ள தாயை ஒத்தவனே! உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனக் கூறல் அழகோ! இனி உன்னை ஒரு போதும் என் மனத்தில் மறவாமல் நினைப்பேன்.

**(குறிப்புரை):** மன் - இறைவன்; பொருதல் - மோதுதல்; உந்தி – தள்ளி; மின் - ஒளி.

**4. முடியேன் இனிப் பிறவேன்பெறின்**
**மூவேன்பெற்றம் ஊர்நீ**
**கொடியேன்பல பொய்யே உரைப்**
**பேனைக்குறிக் கொள்நீ**
**செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட் டுறையுள்**
**அடிகேள் உனக்(கு) ஆளாய் இனி**
**அல்லேன் எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

இடபவாகனனே! (கரையில்) செடிகள் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் அமைந்துள்ள திருவெண்ணெய் நல்லூர் அருள்துறையுள் எழுந்தருளியுள்ள தலைவரே! உனக்கு நான் பண்டே அடிமையாகி இப்பொழுது ‘அடியேன் அல்லேன்’ என எதிர் வழக்காடல் முறையோ? (என் அறியாமையை நீ அகற்றித் தெளிவித்தமையால்) இனி நான் இறவேன், பிறவேன். (ஒருவேளை, பிறவியைப் பெறினும்) மூப்படைந்து வருந்தேன். பல பொய்யுரைக்கும் கொடியவனான். என்னை நீ வெறான குறி வைத்துக் காப்பாயாக.

**(குறிப்புரை):** முடியேன் - இறவேன், பெற்றம் - காளை, செடியார் செடிகள் நிறைந்த.

**5. பாதம்பணி வார்கள் பெறும்**
**பண்டம்மது பணியாய்**
**ஆதன்பொருள் ஆனேன் அறி**
**வில் லேன் அரு ளாளா**
**தாதார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**ஆதீ உனக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

அருளாளனே! மகரந்தம் நிறைந்த மலர்கள் கொண்ட பெண்ணையாற்றின் தென்பால் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள அருள் துறையுள் வீற்றிருக்கும் முதல்வனே! உனக்கு நான் முன்பே அடிமையாகி இப்பொழுது ‘அடிமை அல்லேன்’ என எதிர் வழக்காடல் பொருந்துமோ! அப்பொருந்தாச் செயலைச் செய்தமையால் மூடன் என்னும் சொல்லுக்குப் பொருளானேன். அறிவற்றவனானேன். ஆயினும் உன் திருவடியை வணங்குவோர் பெறுதற்குரிய அறிவர் பெறும் பேற்றை அளித்தருள்வாயாக.

**(குறிப்புரை):** பண்டம் - பொருள்; ஆதன் - மூடன், தாதுஆர் – மகரந்தம் நிறைந்த.

**6. தண்ணார் மதி சூடிதழல்**
**போலும் திரு மேனீ**
**எண்ணார்புரம் மூன்றும்எரி**
**உண்ணநகை செய்தாய்**
**மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட் டுறையுள்**
**அண்ணாஉனக்(கு) ஆளாய் இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**பொழிப்ரை:**

தண்மை மிகுந்த பிறையைச் சூடியவனே! அனல் போன்ற திருமேனியை யொத்தவனே! உன்னை மதியாதவரின் முப்புரங்களையும் எரியுண்ணும்படி நகைத்தவனே! அணி செய்யப்பெற்ற பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூர் அருள்துறையுள் எழுந்தருளியுள்ள அண்ணலே! இப்பொழுது உனக்கு யான் ‘அடியேன் அல்லேன்’ எனக்கூறல் பொருந்துமோ?

**குறிப்புரை):** தண்மை – குளிர்ச்சி, எண்ணார் – மதியாதார், மண் ஆர் – அணி செய்யப் பெற்ற.

**7. ஊனாய்உயிர் ஆனாய்உடல்**
**ஆனாய்உல கானாய்**
**வானாய்நிலன் ஆனாய் கடல்**
**ஆனாய்மலை ஆனாய்**
**தேனார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**ஆனாய் உனக்(கு) ஆளாய் இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

தேன்நிறைந்த மலர்களைக் கொண்ட பெண்ணையாற்றின் தென்பால் அமைந்துள்ள திருவெண்ணெய் நல்லூர் அருள் துறையுள் அமர்ந்தோய்! தசையாய், உயிராய், தசையும் உயிரும் கொண்ட உடலாய், உலகமாய், வானாய். நிலனாய், கடலாய். மலையாகியும் நிற்கின்றாய். இப்பேராளனான உனக்கு யான் ‘அடியவன் அல்லேன்’ எனக் கூறல் பொருந்துமோ?

**(குறிப்புரை):** ஊன் - தசை.

**8. ஏற்றார்புரம் மூன்றும்எரி**
**உண்ணச்சிலை தொட்டாய்**
**தேற்றாதன சொல்லித்திரி**

**வேனோசெக்கர் வான்நீர்**
**ஏற்றாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**ஆற்றாய் உனக்(கு) ஆளாய் இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

பெண்ணையாற்றின் தென்பால் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள அருள் துறையுள் குடிகொண்ட சிறப்புடையோய்! நின்னைப் பகையாகக் கொண்டு எதிர்த்தோரின் முப்புரங்களையும் எரி உண்ண விற்பிடித்தவனே! செவ்வானம் போல் சிவந்த சடையில் ஆகாய கங்கையைத் தாங்கினாய். இப்பெருமைகளை அறியான் அறியாமையால் தெளிவற்ற சொற்களைச் சொல்லி வீணே உழலலாமோ? அடிமைக்கு மாறார். 'அடியவன் அல்லேன்' எனக்கூறல் இழுக்கல்லவா?

**9. மழுவாள்வலன் ஏந்தீமறை**
**ஓதிமங்கை பங்கா**
**தொழுவார்அவர் துயர்ஆயின**
**தீர்த்தல் உன் தொழிலே**
**செழுவார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**அழகாஉனக்(கு) ஆளாய் இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

மழுவாகிய வாளினை வலப்பக்கத்தில் ஏந்தியவனே! செழுமையாய் ஒழுகின்ற பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூர் அருள்துறையுள் அமைந்த அழகனே! மறையை ஓதுபவனே! ஊமையைப் பாகமாகக் கொண்டவனே! உன்னைத் தொழுவாரின் துன்பங்களை ஒழித்தலையே தொழிலாகக் கொண்டவனே! இத்தகு பெருமை பெற்ற உன்னிடம் 'யான் அடிமையல்லேன்' எனக்கூறல் பொருந்துமோ?

**(குறிப்புரை):** செழு – செழுமையாய், வார் – ஒழுகின்ற.

**10. காரூர்புனல் எய்திக்கரை**
**கல்லித்திரைக் கையால்**
**பாரூர் புகழ் எய்தித்திகழ்**
**பன்மாமணி உந்திச்**
**சீரூர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட் டுறையுள்**
**ஆரூரன்எம் பெருமாற்காள்**
**அல்லேன் எனல் ஆமே.**

**பொழிப்புரை:**

மேகத்தினின்று வீழ்கின்ற நீரானது திரண்டு வந்து அலைகளாகிய கைகளால் கரையைத் தோண்டி, உலகம் முழுவதும் பரவிப் புகழ் கொண்டு, ஒளிமிகுந்த பலவாகிய பெரிய மணிகளைத் தள்ளி, சிறப்புப் பொருந்திய பெண்ணையாற்றின் தென்பால் அமைந்துள்ள அருள்துறை எனும்

திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு ஆரூரனாகிய ‘யான் அடிமையல்லேன்’ என எதிர் வழக்காடல் சிறந்ததோ?

**திருச்சிற்றம்பலம்,**

**சிறிய வினாக்கள்:**

1. இறைவன் நீக்கமற விளங்குகின்றதை நும் பாடப்பகுதி கொண்டு சுந்தரர் தேவாரம் வழி நின்று விளக்குக.

**பெரிய வினாக்கள்:**

1. சுந்தரர் திருவண்ணெய் நல்லூரில் எழுந்தருளியருக்கும் தடுத்தாட் கொண்டு நாதரிடம் கொண்ட பக்தி நயத்தைப் புலப்படுத்துக.
2. சுந்தரம் தடுத்தாட்கொண்ட நாதரிடம் நடத்திய உரையாடல்களைக் கட்டுரைக்க.

## அலகு-:2

## மாணிக்கவாசகர் : திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் திருக்கோத்தும்பி

மாணிக்கவாசகர் பாடியவை 8ஆம் திருமுறை. இயற்பெயர் தெரியவில்லை. திருவாதவூர் சொந்த ஊர். எனவே திருவாதவூரர் எனப்படுகிறார். கி.பி. 9ஆம் நூற்றாண்டினர். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்து தென்னவன் பிரம்மராயன் என்னும் பட்டம் பெற்றவர். மாணிக்கவாசகர் தனது இறையனுபவங்களை திருவாசகம், திருக்கோவை என்னும் இரு நூல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**1. மாணிக்கவாசகர் : திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் - திருக்கோத்தும்பி.**

**பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த**
**நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்**
**மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்**
**சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

அரச வண்டே! செந்தாமரையிலிருக்கும் நான்முகனும், இந்திரனும், அழகு பொருந்திய நாமகளும், திருமாலும், நால்வகை வாக்குக்களும், உருத்திரனும் தேவர்களும் அறியாத விடைப்பாகனது திருவடி மலரில் போய் ஊதுவாயாக.

**2. நானாரென் உள்ளமர் ஞானங்க ளாரென்னை யாரறிவார்**
**வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி**
**ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்**
**தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ**

**தெளிவுரை:**

சிவபெருமான் அடியேனை ஆட்கொள்ளாவிட்டால், நான் எப்படியிருப்பேனோ? மனம் எப்படியாமோ? அறிவு என்னாமோ? மதி மயக்கமுடைய நான் முகனின் மண்டையோட்டில் பலி ஏற்கும். அம்பலவன் திருவடித்தாமரையில் ஊதுவாயாக.

**3. தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே**
**நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்**
**அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்**
**குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

பூவிலுள்ள தினையளவு தேனைப் பருகாமல், எண்ண, காண, பேச நேரும் பொழுதும், மற்றப் பொழுதிலும், எலும்புகளும் உள்ளே இளரும்படி பேரின்பத் தேனைப் பொழியும் திருநடமுடையவன் திருவடி மலரிடையே அடைந்து ஊதுவாயாக.

**4. கண்ணப்பர் அருஞ்செயலால் அவர் வடிவு முற்றும் அன்பாயிற்று.**

**“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட் கொண்டருளி”**

என்றும், ஆகையால் இறைவன் கருணை மிக்கவன். நீறணிந்தவன் அவன் திருவடி மலரில் சென்று ஊதுவாயாக

5. **உண்மை தெரியாதவர் உயிரினங்களாகிய தேவர்களைக் கடவுள் என்று பேசிப் பிதற்றுகின்றனர். இவ்வுலகத்தே,**

**"பந்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற**
**மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"**

என்று உண்மைக் கடவுளின் திருவடியில் நின்று ஊதுவாயாக என்கிறார்.

6. **வைத்தநிதி பெண்டீர் மக்கள்குலம் கல்வி என்னும்**
**பித்த உலகில் பிறப்போடு இறப்பென்னும்**
**சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த**
**வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**தெளிவுரை**

மயக்கம் நிறைந்த உலகிலே செல்வம், மனைவி, மக்கள், குலம், கல்வி, பிறப்பு, இறப்பு என்பவை காரணமாக ஏற்படும் மனமாறுபாடு, மனக்குழப்பம் முதலியவற்றை நீக்கித் தெளிவு தந்த அறிவு வடிவாகிய கடவுளின் திருவடி மலரில் ஊதுவாயாக.

7. **சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனைக்**
**கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத திருவடியை**
**ஒட்டாத பாவித தொழும்பரை நாம் உருவறியோம்**
**சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

சங்கரனை உள்ளத்தே சிறிதும் நினைப்பினும் பேரின்பம் ஊறும், அவனது முடிவிலாத திருவடியை மறக்கமாட்டேன். நினையாத பாவத்தொழில் உடையாரை நாம் சேரோம். நுண்ணிய நல்லோன் திருவடிக்கே சென்று ஊதுவாயாக.

8. **ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு**
**நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த**
**என்தாதை தந்தைக்கும் எம் அனைக்கும் தம்பெருமான்**
**குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

மாயையிலிருந்து ஒன்றாய்த் தோன்றிப் பலவாக விரிந்திருக்கும் உலகு உடல் முதலியவற்றோடு என்னை வைத்து நாய்போலும் என்னைச் சிவிகை ஏற்றி அடியாரோடு சேர்த்த தந்தைக்கும் தாய்க்கும் முதல்வனான அவனடிக்கே ஊதுவாயாக.

9. **கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்**
**சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு**
**மரணம் பிறப்பென்று இவையிரண்டின் மயக்கறுத்த**
**கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

கருவிகளைக் கடந்து நின்ற கடவுள், திருநீலகண்டன். அவன் திருவடியைச் சார்ந்ததுமே எனக்கு இறப்புப் பிறப்பு என்னும் இரண்டின் மயக்கம் நீக்கினன்; அருட்கடல் போன்றவன். அவன் திருவடிக்கே சென்று ஊதுவாயாக.

**10. நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து**
**நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்**
**தாயுற்று வந்தென்னை ஆண்டு கொண்ட தன்கருணைத்**
**தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

பிணிப்பட்டு மூப்படைந்து தாயினால் தள்ளப்பட்ட கன்றுபோல, நான் செல்வத்தை நுகர்ந்தறியா வகை இருப்ப, தாய் போல் ஆட்கொண்ட குளிர்ந்த பேரொளி பொருந்திய பெருமானுக்கே சென்று ஊதுவாயாக.

**11. என்னை உருகாத மனமுடைய வஞ்சகன் குரங்கு மனத்தன்**
**எனக் கருதி அகற்றிவிடாமல், என்நெஞ்சை உருக்கித்**
**திருவருளால் ஆட்கொண்ட தில்லை நகரிலுள்ள**
**அம்பலவனது பொற்கழலணிந்த திருவடிக்கே போய்**
**ஊதுவாயாக.**

**12. நாய் போன்ற அடியேனைத் தன் திருவடிகளைப்**
**பாடும்படி செய்த முதல்வனைப் பேய்த் தன்மையுடைய**
**என் மனக்குற்றங்களை மன்னிப்பவனை, யான் செய்யும்**
**தொண்டுகளை ஏற்றுக் கொள்ளும் என் தாயான**
**ஆண்டவனிடமே ஊதுவாயாக.**

**13. நான்தனக்கு அன்பின்மை நானுந்தா னும்அறிவோம்**
**தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்**
**ஆன கருணையும் அங்குற்ற தானவனே**
**கோன் என்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

சிவன்பால் அன்பில்லாதிருத்தலை அவனும் நானுமே அறிவோம். அவன் என்னை அடிமை கொண்டது. உலகெலாம் அறியும். அருளும் அவன்பால் ஏற்பட்டது. அவனே தலைவன். அவனாக வந்து என்னைக் கூடும்படி மெல்ல ஊதுவாயாக.

**14. “கருவாய் உலகினுக்கு அப்புறமாய் இப்புறத்தே**
**மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி**
**அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டு கொண்ட**
**திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

உலகிற்கு மூலவித்தாய் அப்பாற்பட்டவனாய் இங்கு உமையம்மையோடு போந்தருளியும் அஞ்செழுத்துப் பயிற்றுவிக்கும் ஆசானாய் வெளிப்பட்டுத் தோன்றியும் மனத்தில் அருவாயும் ஆட்கொண்ட கடவுளிடமே போய் ஊதுவாயாக.

**15. நீண்டதிருச்சடையையுடைய பெருமான், சிவமும்
சக்தியுமாக வந்து என்னை ஆட்கொள்ளாவிட்டால்,
நானும் என் மனமும் முதல்வனுக்கு மிகுந்த
தொலைவிலிருப்போம். தேவவுலகுதிசை
எல்லாமும் கலந்து நிற்கும் பெருமான் பால்
ஊதுவாயாக.**

**16. ஊள்ளப் படாததிருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்எம் பிரான் என்னை வேறே ஆட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

**தெளிவுரை:**

மனத்துக் கெட்டாத சிவன் உண்மையினைச் சிவஞானத்தாய் காணுதலும், வெளிப்பட மகிழ்வு தந்த பேரருள் வெள்ளத் தலைவன், எம்பெருமான் எனக்குத் தனியாக வீடருளும்படி அவனிடமே சென்று அவன் திருவடிக்கே ஊதுவாயாக.

**17. பொய்யாய வெல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என் ஆருயிரே அம்பலவா என்றவன் தன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கொத்தும்பீ.**

**தெளிவுரை:**

நிலையில்லாத பொருள்களில் நாள்தோறும் ஆழ்ந்து அவற்றை நிலையென்று கருதிப் பயனில்லாமல் கிடந்த என்னை ஆண்ட தலைவனே, என் உயிர்க்குயிரே அம்பலவனே, என வாழ்த்தி அவன்தன் செம்மலர்த்தாளிணைக்கே ஊதுவாயாக.

**18. தோலும் துகிலும் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.**

**தெளிவுரை:**

அம்மையின் பகுதி துகில், தோடு, குழைந்த திருநீறு, பச்சைக்கிளி, வளையல், அப்பன், பகுதி தோலாடை, குண்டலம், முழுநீறு, முத்தலைவேல் ஆகிய கோலம் மிகவும் பழைமை வாய்ந்தது. மாதொருபாகன் வடிவத்தைக் கண்டு மெல்ல ஊதுவாயாக.

**சிறிய வினாக்கள்:**

1. மாணிக்கவாசகர் ஞானத்தைப் பற்றி திருக்கோத்தும்பியிடம் எவ்வாறு கூறுகிறார்?

2. மாணிக்கவாசகர், திருவாசகத்தில் கூறும் அடியாரின் அன்புச் செயலை எழுதுக.

**பெரிய வினாக்கள்:**
1. மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பியிடம் சிவபெருமான் செய்த பக்தி திறத்தை எவ்வாறு உணர்த்துகிறார்?
2. மாணிக்கவாசகர், தும்பியைப் பார்த்து இறைவன் பால் செலுத்தும் விதத்தை கட்டுரைக்க.

## காரைக்காலம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதல் திருப்பதிகம்

காரைக்கால் சொந்த ஊர் இயற்பெயர் புனிதவதி. நாகப்பட்டினத்துப் பரமதத்தன் கணவர். புரமதத்தன் கொடுத்தனுப்பிய இரு மாங்கனிகளுள் ஒன்றை இறையடியார்க்குப் படைத்து விட்டார். உணவின்போது ஒரு மாங்கனியை உண்ட பரமதத்தன், அதன் சுவையால் கொடுத்தனுப்பிய மற்றொரு மாங்கனியையும் தரக்கேட்டார். இறைவனிடம் வேண்டி மற்றொரு மாங்கனியைப் பெற்றுக் கணவரிடம் தந்தார். முன்னதைக் காட்டிலும் இது சுவைத்தது. விவரம் கேட்ட பரமதத்தனிடம் உண்மை உரைத்தார் புனிதவதி.

பயந்துபோன பரமதத்தன் புனிதவதியாரை விட்டு நீங்கினான். வேறு ஒருத்தியுடன் வாழ்ந்தான் எனவே புனிதவதியார் இறைவனை வேண்டிப் பேயுரு கொண்டார். கயிலை மீது தலையாலேயே நடந்து சென்றார். இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்டார்.

இவர் பாடியன “திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2 நூல்கள் திரு இரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி, இவ்வாறு நான்கு நூல்கள் ஆகும்.

**1. கொங்கை திரங்கி நரம்பெழுந்து**
**குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்**
**பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு**
**பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்**
**தங்கியறியுவறு காட்டில்**
**தாழ்சடை எட்டுத் திசையும் வீசி**
**அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்**
**அப்ப னிடந்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

கொங்கைகள் வற்றி நரம்புகள் மேலெழுந்து, கண்கள் குழி விழுந்து, பற்கள் வீழ்ந்து, வயிற்றில் குழிவிழுந்து, தலையிலுள்ள முடி சிவப்பாகி, கோரைப் பற்கள் இரண்டும் நீண்டு, கணுக்கால் உயர்ந்து, நீண்ட கால்கள் கொண்ட ஒரு பெண் பேய் தங்கி, அலறி, காய்ந்த காட்டில், தாழ்வுற்ற சடையால் எண் திசைகளிலும் வீசி, அங்கம் குளிருமாறு ஆடும், எங்கள் அப்பன் இருக்கும் இடம் திரு ஆலங்காடேயாகும்.

**(சொற்பொருள்):** திரங்கி – வற்றி, பங்கி – மயிர், பெண் பேய் - தம்மையே கூறினார். அலறி- திருக்கூத்துக் காணுமாறு அலறி.

**2. கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டிக்**
**கடைக் கொள்ளி வாங்கி மசித்துமையை**
**விள்ள எழுதி வெடுவெடென்ன**

நக்கு வெருண்டு விலங்கு பார்த்து
துள்ளி சுடலைச் சுடு பிணைத்தீச்
சுட்டிட முற்றும் சுளிந்து பூழ்கி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங்காடே.

**தெளிவுரை:**

கள்ளிக் கிளைக்கு இடையில் காலை நீட்டிக் கொள்ளிக் கட்டையை வாங்கிக் குழைத்து அதனால் வரும் மையை அழித்து எழுதி வெடுவெடுவென பிறர் நடுங்குமாறு அச்சம் ஊட்டிச் சிரித்து, மருட்சி கொண்டிருக்கும் பிணத்தின் தீ சுடவும், சினக்குறிப்போடு மணலை அள்ளிப் போட்டு அவித்து நின்றாடும் அப்பன் தங்கியிருக்கும் இடம் திருவாலங்காடேயாகும்.

**(சொற்பொருள்):** மசித்து - குழைத்து

**3.** **வாகை விரிந்து வெண் ணெற்றொலிப்ப**
**மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே**
**கூகையோடு ஆண்டலை பாட ஆந்தை**
**கோடதன் மேற்குதித்து ஓட வீசி**
**ஈகை படர் தொடர் கள்ளி நீழல்**
**ஈமம் இடுசுடு காட்டகத்தே**
**ஆகம் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்**
**அப்பன் இடம்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

பாலை நிலத்திற்குரிய வாகை மரம் விரிந்து நின்றிட அதனின்று வெண்மையான நெற்றுக்கள் காற்றில் ஒலி செய்யவும், அறிவினை மயக்குறும் நள்ளிரவில் கோட்டானொடு ஆண்தலை போன்ற வடிவினையுடைய பறவை பாடிடவும், ஆந்தை கொம்புடன் அதன் மேல் குதித்து ஓடிட, வீசி கொடி படர்ந்த கள்ளியின் நிழலின் ஈமம் அடுக்கப்பட்ட இடுகாட்டில் உடல் குளிர்ந்து அனலில் ஆடுகின்ற எங்கள் அப்பன் இருக்கும் இடம் திருவலாங்காடேயாம்.

**(சொற்பொருள்):** வாகை – பாலைநிலத்திற்குரிய ஒரு மரம்.

**4.** **குண்டில்ஓ மக்குழிச் சோற்றை வாங்கிக்**
**குறுநரி தின்ன அதனை முன்னே**
**கண்டிலோ மென்று கனன்று பேய்கள்**
**கையடித்து ஓடிடு காடரங்கா**
**மண்டிலம் நின்றங்கு உளாளம் இட்டு**
**வாதித்து வீசி எடுத்த பாதம்**
**அண்டம் உறநிமிர்ந்து ஆடும் எங்கள்**
**அப்பன் இடம்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

மிக ஆழ்ந்துள்ள வேள்விக்குரிய குழியினுள் இடப்பட்ட சோற்றை குறுநரி எடுத்துத் தின்றிடவும், அதனைக் கண்ட பேய்கள் ‘இதனை நாம் முன்பே பார்க்காமல் போனோமே’ என சீற்றங்கொண்டு கையடித்துச் சுடுகாட்டினைச் சுற்றி ஆடும் அரங்காகக் கொண்டு, வளைந்துச்

சுற்றி வந்து எல்லா உலகங்களிலும் பொருந்துமாறு ஆடுகின்ற எங்கள் அப்பன் இருக்கும் இடம் திருவாலங்காடேயாம்.

**(சொற்பொருள்):**குண்டில் ஓமக் குழி – வேள்விக்குரிய ஆழ்ந்தகுழி, குண்டு – ஆழம், உளாளம் இடுதல் - வளைந்து சுற்றிவரல், வாதித்தல் - மாறி வரல், அண்டம் - அனைத்து உலகம்.

**5. விழுது நிணத்தை விழுங்கியிட்டு**
**வெண்தலை மாலை விரவப்பூட்டிக்**
**கழுதுதன் பிள்ளையைக் காளியென்று**
**பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்**

**புழுதி துடைத்து முலைகொடுத்துப்**
**போயின தாயை வரவுகாணாது**
**அழுதுபுறங் கும்புறங் காட்டில் ஆடும்**
**அப்பன் இடம்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

விழுதாக உள்ள ஊனினை விழுங்கி வெண்மயமான தலைமாலையைப் பரவ அணிந்து பேயானது, தன் பிள்ளையைக் காளி என்று பெயரிட்டு, சிறப்புடன் வளர்ந்து, தூசுதட்டி, பால் கொடுத்துச் சென்ற தாயின் வரவினைக் காணாது அழுது உறங்குகின்ற, ஊழிக்கால ஈமத்தில் ஆடுகின்ற என் அப்பன் வாழும் இடம் திருவாலங்காடேயாம்.

**6. பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்போய்**
**பருந்தொடு கூகை பகண்ட ஆந்தை**
**குட்டியிட முட்டை கூகை பேய்கள்**
**குறுநரி சென்றணங்கு ஆடுகாட்டில்**
**பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட**
**பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே**
**அட்டமே பாயநின்று ஆடும் எங்கள்**
**அப்பன் இடம்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

பட்டு அடிப்பட்ட நீண்ட நகத்தையும், மாறுபட்ட கால்களையும் கொண்ட பேய், பருந்து, கூகை, சீவற்பறவை ஆந்தை ஆகியவை முட்டைகள் இடவும், குறு நரி வெறியாடவும் பின்புறம் அடித்து, சுடுகாட்டில் இட்ட பிணத்தினை வெளியே எடுத்து குறுக்கே பாய நின்று ஆடுகின்ற எங்கள் அப்பன் கோயில் கொண்டிருக்கும் இடம் திருவாலங்காடேயாம்.

**7. சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய்**
**சூழ்ந்து துணங்கையிட்டு ஓடியாடித்**
**தழலுள் எரியும் பிணத்தைவாங்கித்**
**தான்தடி தின்றணங்கு ஆடுகாட்டில்**
**கழல் ஒலி ஓசைச் சிலம்பொலிப்பக்**
**காலுயர் வட்டணைஇட்டு நட்டம்**
**அழல்உமிழ்ந்து ஓரி கதிக்க ஆடும்**

**அப்பன் இடம்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

சுழன்று சுற்றித் திரியும் தீப்போன்ற கண்கள் கொண்ட கொள்ளி வாய்ப் பேய்கள் ஒன்று கூடி துணங்கை எனப்படும் கூத்தை ஆடி, தீயில் எறியப்பட்ட பிணத்தை எடுத்து அதிலுள்ள ஊனினைத் தின்று ஆடுகின்ற இடுகாட்டில் திருவடியிலுள்ள சிலம்பின் ஓசை ஒலித்திட, காலை உயர்த்தி வட்டனை எனும் சுழன்றாடும் ஆடலை, நெருப்பைக் கக்கி, நரியும் ஆடும்படிச் செய்து ஆடுகின்ற எங்கள் அப்பன் வாழும் இடம் திருவாலங்காடேயாம்.

**(சொற்பொருள்):** துணங்கை – ஒரு வகைக்கூத்து, தடி – ஊன், வட்டனை – சுழற்சி, ஓரி கதிக்க – நரியும் ஆட.

**8. நாடும் நகரும் திரிந்து சென்று**
**நன்னெறி நாடி நயந்தவரை**
**மூடி முதுபிணத்து இட்டமாடே**
**முன்னிய பேய்க்கணம் சூடிக் சூழக்**
**காடும் கடலும் மலையும் மண்ணும்**
**விண்ணும் சுழல் அனல்கையேந்தி**
**ஆடும் அரவப் புயங்கன் எங்கள்**
**அப்பன் இடம் திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

நாடும் நகரமும் அலைந்து திரிந்து சென்று விரும்பிய வரை மண்ணினுள் மூடிப் புதைத்த இடுகாட்டில் வந்து சேர்ந்து பேய்க் கூட்டம் சூழக்காடும், கடலும், மலையும், மண்ணும், விண்ணும் சுழன்றிடுமாறு தீயைக் கையிலேந்தி ஆடும் அரவினையும் அணிந்து 'புயங்கக் கூத்தினை' ஆடல் கொள்ளும் எங்கள் தலைவன் கோயில் கொண்டு விளங்குமிடம் திருவலாலங்காடேயாம்.

**9. துத்தங்கைக் கிள்ளை விளரிதாரம்**
**உழைகுளி ஓசைபண் கெழுமப்பாடிக்**
**சச்சரி கொக்கரை தக்கையோடு**
**தகுணிதந் துந்துபி தாளம் வீணை**
**மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்**
**தமருகம் குடமுழா மொந்தை வாசித்து**
**அத்தனை விரவினோடு ஆடும் எங்கள்**
**அப்பன் இடம்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, குளி, ஓசை என்ற ஏழு பண்களையும் இசைத்து சச்சரி, கொக்கரை. தக்கை, தகுணி தந்துபி, தாளம், வீணை, மத்தளம், கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை முதலிய வாத்திய வகைகளை இயக்கி, அதற்கேற்ப ஆடல் கொள்ளும் இறைவன் எழுந்தருளியிருக்கின்ற இடம் திருவலாங்காடேயாகும்.

**10. புந்தி கலங்கி மதி மயங்கி**
**இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுக்**

**சந்தியில் வைத்துக் கடமை செய்து**
**தக்கவர் இட்டசெந் தீவிளக்கா**

**முந்தி அமரர் முழவின் ஓசை**
**திசைகது வச்சிலம் புஆர்க்க ஆர்க்க**
**அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்**
**அப்பன் இடம்திரு ஆலங்காடே.**

**தெளிவுரை:**

அறிவுகலங்கி, மதிமயங்கி இறந்தவர்களை இடுகாட்டில் வைத்து, இறுதிச் சடங்குகளையாற்றி அச்சடங்கு செய்யும் உரிமையுடையார் இடம் தீயை விளக்காகக் கொண்டு, முன்பு விண்ணோர்களின் மத்தளத்தின் ஓசை திசைகள் தோறும் சென்று ஒலிக்க, சிலம்பு ஆர்க்க ஆர்க்க யுக முடிவில் பெரிய ஆடல் கொள்ளும் எங்கள் அப்பன் உறையுமிடம் திருவாலங்காடேயாம்.

**11. ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி**
**ஒன்றினை ஒன்றடித்து ஒக்கலித்துப்**
**பப்பினை யிட்டுப் பகண்டை யாடப்**
**பாடிருந்து அந்நரி யாழ்அமைப்ப**
**அப்பனை அணிதிரு ஆலங்காட்டுள்**
**அடிகளைச் செடிதலைக் காரைக்காற் பேய்**
**செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்**
**சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே.**

**தெளிவுரை:**

ஒப்புயர்வற்றவனோடு பேய்கள் கூடி நின்று ஒன்றினை ஒன்று அடித்து, களிப்பு மிகுதியினால் ஆரவாரங்கொண்டு இசையெழுப்பி பகண்டை பாடுதற்கேற்ப யாழினை மீட்டி ஒலிக்க, நரி கூவிட, திருவாலங்காட்டு அடிகளை தங்கள் தலைகளில் முடிக்கப் பெறாமல், முடியாமல் உள்ள விரித்துப் பரந்த தலைமுடி கொண்ட காரைக்காற்பேய் என்று தன்னையே கூறிக் கொள்ளும் காரைக்கால் அம்மை பாடிய செந்தமிழ்ப்பாடல்கள் பத்தினையும் பாட வல்லார் சிவகதி பெற்றுப் பேரின்பம் பெறுவர்.

மேற்கூறிய பத்துப்பாடல்களைப் பாடுவதால் ஏற்படும் நலங்கள் நூலில் 11ஆம் பாடல் அமைந்துள்ளது. எனவே 10 பாடல்களைக் கொண்டது பதிகமென அம்மையார் காலத்தே கொண்டனர் போலும்.

**சிறிய வினாக்கள்:**

1. திருவாலங்காட்டு பேய் சுடுகாட்டில் நிகழ்த்திய விளையாடலை எழுதுக.
2. திருவலாங்காட்டில் உள்ள விலங்கு பறைவகளின் செயல்களை எடுத்துரைக்க.
3. திருவாலங்காட்டில் நடத்திய பேய்களின் துணங்கைக் கூத்தினை எழுதுக.
4. காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் பாலைத்திணையை விளக்குக.

**பெரிய வினாக்கள்:**

1. திருவாலங்காட்டு இறைவனிடம் காரைக்காலம்மையார் கொண்ட பக்தி திறத்தைப் புலப்படுத்துக.
2. திருவலாங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் - முதல் திருப்பதிகம் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

## திருமூலர் – திருமந்திரம்- 18 அன்புடைமை

**முன்னுரை**

திருமந்திரம் சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகும். இதனை அருளியவர் திருமூலர். இவர் திருவாவடுதுறையில் இருந்த ஓர் அரச மரத்தின் கீழ் அமர்ந்தார். மூவாயிரம் ஆண்டு தவம் செய்தார். ஆண்டுக்கு ஒரு பாடலை இயற்றினார் என்பது செவிவழிச் செய்தி. பெரியபுராணத்திலும் இச்செய்தியே பேசப்படுகின்றது.

திருமூலர் வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்துகிறார். தமிழில் தோன்றிய முதல் யோக நூல் இதுவே! முதல் சித்தரும் இவரே! இவரது காலம். கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்கு முந்தையது எனலாம்.

**திருமந்திரத்தின் அமைப்பு**

திருமந்திரத்தில் பாயிரமும் ஒன்பது தந்திரங்களும் உள்ளன. தந்திரம் என்பது இந்நூலைப் பொறுத்த வரையில் நூலின் உட்பிரிவு ஆகும். இயல், படலம், காதை, சருக்கம் என்பவை போல ‘தந்திரம்’ நூலின் உட்பிரிவு.

இதன் கண் ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கு தந்திரங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் உணர்த்துகின்றன எனலாம். ஐந்து முதல் ஒன்பது வரையில் உள்ள ஐந்தும், வீட்டுப்பேறு, வீட்டுப் பேற்று வழி, வழிபாடு, வழிபாட்டுறுதி ஒருவாற்றால் உணர்த்துவன எனலாம்.

**முதல் தந்திரம்**

இது அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அறத்தின் அடிப்படையில் முப்பொருள் உண்மையை உணர்த்துவது. அதுதான் பதி, பசு, பாசம் என்பவையாகும். முதல் தந்திரத்தில் உள்ள 18வது அன்புடையாகும்.

### அன்புடைமை

அன்புடைமை என்பது இறைவனிடம் அன்பு கொள்ளும் தன்மையாகும்.

1. **அன்பே சிவம்:**

**அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரு மறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்**
**அன்பே சிவமா யஉாந்திருந்தாரே**

**தெளிவுரை**

அனுபவம் அற்றவர் அன்பாகிய சக்தியும் அறிவாகிய சிவமும் இரண்டு என்பர். அன்பின் முதிர்ச்சியால் சிவமாகிய அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தவர், தாழ்ந்தவர் எவரும் உணர்வதில்லை. அன்புதான் சிவத்தை விளங்கச் செய்வது என்பதை எல்லாரும் அறிந்த பின்பு அன்பே வடிவாய்ச் சிவமாம் தன்மையை அடைந்திருந்தார்.

**2. இறைவனுக்கு அன்பு செலுத்த வேண்டும்:**

**பொன்னைக் கடந்துஇலங் கும்புலித் தோலினன்**
**மின்னிக் கிடந்த மிளிரும் இளம்பிறை**
**துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்**
**பின்னிக் கிடந்ததுஎன் பேரன்புதானே**

**தெளிவுரை**

கூத்தன் பொன்னின் ஒளியை வென்ற புலித்தோலை உடுத்தவன். மின்னல் ஒளிபோல் விளங்கும் பிறைச் சந்திரனைச் சூடியவன். அப்பிறையானது பொருந்தியிருந்த வெண்ணீற்றின் ஒளியில் விளங்குபவன். அப்பெருமானுக்கு எனது பேரன்பு பொருந்தியுள்ளது.

**விளக்கம்:**

பொன்னை விட அதிக மஞ்சள் நிறம் கொண்டது புலித்தோல். சுடுபொடியாடி – வெண்ணீற்றினை அணிந்தவன்.

**3. அன்புடன் வழிபடல் வேண்டும்:**

**என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்**
**அன்போடு உருகி அகம்குழை வார்க்கும் அன்றி**
**என்போன் மணியினை எய்தஒண் ணாதே.**

**தெளிவுரை**

எலும்பையே விறகாகக் கொண்டு உடம்பின் தசையை அறுத்துப் பொன்னைப் போன்று தீயில் இட்டுக் காய்ச்சி வறுத்தாலும், அன்புடன் உருகி உள்ளம் நெகிழ்பவர்க்கல்லாமல் என்னைப் போல் இறைவனை அடைய இயலாது.

**விளக்கம்:** கனல் - தீ, அகம் குழைவார் – மனம் நெகிழ்பவர். மணியினை - இறைவனை.

**4. அன்பினர் இறைவனை அடைவர்:**

**ஆர்வம் உடையவர் காண்பார் அரன்தன்னை**
**ஈரம் உடையவர் காண்பார் இணைஅடி**
**பாரம் உடையவர் காண்பார் பாவம் தன்னை**
**கோரநெறி கொடு கொங்குபுக் காரே.**

**தெளிவுரை**

மிக்க அன்பு கொண்டவர் இறைவனை உணர்வர். அன்பால் ஏற்படும் உள்ள நெகிழ்வு கொண்டவர் விந்து நாதமான திருவடிகளைத் தலையில் சூடுவர். சம்சாரமான சுமையைத் தாங்கி வருந்துபவர். பிறவியான கடலில் ஆழ்ந்து துன்புறுவார். அன்பில்லாதவர் துன்பமான காட்டில் போகும் வழியை அறியாது வருந்துவர்.

**விளக்கம்:** ஈரம் - அன்பால் உண்டாகும் உள்ள நெகிழ்ச்சி, ஆர்வம் - அன்பு, பாரம் - குடும்பச் சுமை, பவம் - பிறவிக்கடல். கொங்கு – காடு, கோரநெறி – கொடிய துன்பம்.

**5. அன்புடன் வழிபடின் இறைவன் அருள்வான்:**

**என் அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்**
**முன் அன்பு உருக்கி முதல்வனை நாடுமின்**
**பின் அன்பு உருக்கிப் பெருந்தகை நந்தியும்**
**தன் அன்பு எனக்கே தலைநின்றவாறே.**

**தெளிவுரை**

பல சொற்களைச் சொல்வதால் பயன் யாது? அன்பு கொண்டு உள்ளத்தை உருக்கி இறைவனை வழிபடுவீராக! தலைமையான அன்பினால் உள்ளத்தை உருக்கி இறைவனை நாடுங்கள். அவ்வாறு நாடிய எனக்குப் பெருமை பொருந்திய குருநாதன் என் பாசத்தைப் போக்கித் தன் கருணையைக் காட்டினான். அவன் அருள் காட்டும் வகை இதுவாம்.

**விளக்கம்:** என் - என்ன பயன்? முன் அன்பு – தலைமையுடைய அன்பு, நந்தி – சிவபெருமான், ஏத்துமின் - வழிபடுங்கள்.

**6. என் அன்பு வலையில் சிக்கினான்:**

**தான் ஒரு காலம் சயம்பு என்று ஏத்தினும்**
**வான் ஒரு காலம் வழித்துணையாய் நிற்கும்**
**தேன் ஒரு பால் திகழ் கொன்றை அணி சிவன்**
**தான் ஒரு வண்ணம்என் அன்பில்நின் றானே.**

**தெளிவுரை**

சிவபெருமான் தானே தனியனாய் நின்ற நாளில் சுயம்பு என்று நினைத்து வழிபட்டால் வானத்தில் ஒரு காலத்தில் பொருந்தி வழிபடுவர்க்குத் தக்க துணையாய் இருக்கும். தேன்போல் இன்பம் தரும் மொழியுடைய சக்தியை ஒரு பக்கத்தில் கொண்டவனாய்ப் பொன் ஒளியில் விளங்கும் இறைவன் தானே ஒரு நிறத்தைப் பெற்று என் அன்பு வலையில் அகப்பட்டு நின்றான்.

**விளக்கம்:** சயம்பு – தான் தோன்றி, சுயம்பு என்பதன் விகாரம். தேன் ஒரு பால் திகழ் - ஒரு பக்கத்தில் விளங்கும் உமையம்மையை உடைய, கொன்றை அணிசிவன் - கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமான்; பொன் ஒளியுடன் திகழ்பவன்.

**7. இறைவனிடம் அன்பு செலுத்தாமல் உள்ளனரே!:**

**முன் படைத்து இன்பம் படைத்த முதலிடை**
**அன்பு அடைத்து எம்பெரு மானை அறிகிலார்**
**வன்பு அடைத்து இந்த அகலிடம் வாழ்வினில்**
**அன்பு அடைத் தான் தன் அகலிடத்தானே.**

**தெளிவுரை**

உலகைப் படைத்து எல்லா இன்பங்களையும் அமைத்த இறைவனிடம் அன்பைச் செலுத்தி எலலா உயிர்களுக்கும் தலைவனாகிய இறைவனை அறியாமல் கெடுகின்றனரே! உறுதியைத் தந்து இந்த உலக வாழ்க்கையில் அன்பினைப் படைத்த பெருமான் அகண்ட உலகமாயும் விளங்குகின்றான்.

**விளக்கம்:** வன்படைத்து – வன்பு + அடைத்து, உறுதியைத் தந்து, அகலிடத்தான் - அகண்ட உலகமாய் உள்ளான்.

**8. சிவ ஒளியைப் பெருகும்படி செய்வான் நந்தி:**

**கருத்துஉறு செம்பொன்செய் காய்கதிர்ச்சோதி**
**இருத்தியும் வைத்தும் இறைவன் என்று ஏத்தியும்**
**அருத்தியுள் ஈசனை ஆரருள் வேண்டில்**
**விருந்தி கொடுத்திடும் விண்ணவர்கோனே.**

**தெளிவுரை**

உள்ளத்தில் பொருந்தும் உருக்கும் போது ஒளிரும் செம்பொன் போன்ற சோதியின் வடிவானவன் இறைவன். அவனை நினைத்தும் மனத்தில் அமைத்து வைத்தும், அவனையே

தலைவன் என்று போற்றி வணங்குங்கள்! அன்பு கொண்ட அவனை எவர் வேண்டினாலும் தேவரின் தலைவனான அவன் அந்த ஒளியில் நின்று சிவ ஒளியைப் பெருகும் படியாகப் செய்வான்.

**விளக்கம்:** காய்கதிர்ச் சோதி – உலையில் காயும் பொன்போல் விளங்கும் தீப்பிழம்பு. அருத்தி – அன்பு, விருத்தி – வளர்ச்சி. விண்ணவர் கோன் - தேவரின் தலைவனான சிவன்.

**9. இறைவனை நாடவில்லையே!:**

**நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்**
**வைத்த பரிசு அறிந்தேயும் மனிதர்கள்**
**'இச்சையுளே வைப்பர் எந்தை பிரான்' என்று**
**நச்சியே அண்ணலை நாடுகி லாரே.**

**தெளிவுரை**

செய்த வினைக்கு ஈடாக இறப்பையும் பிறப்பையும் அமைத்தவன் இறைவன். அவன் வைத்த முறைமையை அறிந்திருந்த மக்கள் உலகு போகத்தில் விருப்புக் கொள்வர் 'எம் தந்தையே, எம் பிரானே' என்று விரும்பிப் பெருமையுடைய சிவனை வணங்கவில்லை. என்னே, அவர் செயல் இருந்தவாறு!

**விளக்கம்:** துஞ்சும் - இறைப்பையும், பரிசு – தன்மை, நச்சுதல் - விரும்புதல்.

**10. அன்பர்க்குத் துணை ஆவான்**

**அன்பின் உள்ளான் புறத்தான் உடலாய் உள்ளான்**
**முன்பின் உள்ளான்; முனிவர்க்கும் பிரான் அவன்**
**அன்பினுள் ஆகி அமரும் அரும் பொருள்**
**அன்பினுள் ளார்க்கே அணைதுணை ஆமே.**

**தெளிவுரை**

இறைவன் தன்னை அறியும் அறிவு கொண்டவரிடம் அவர் அன்பில் அறியும் அறிவு கெர்ணடவரிடம் அவர் அன்பில் நின்றருளுவான்! தன்னில் நிற்றலைப் போன்றே மற்றவரிடம் நிற்பவனும் அவனே ஆவான். அவன் அன்பே உடலாயுள்ளான். உலகத் தோற்றத்துக்கு முன்னும் உலக அழிவுக்குப் பின்னும் அழியாது நிற்பான். அவனே ஆத்ம விசாரணை செய்யும் முனிவர்க்குத் தலைவன். ஆவான், அவனிடம் எவர் ஒருவர் அன்பு கொண்டாரோ அவரிடம் நிலையாய்ப் பொருந்தும் அரிய பொருள் ஆவான். அன்பின் வழி அணுகுபவர்க்கு அவன் துணையாகி உய்யும்படி செய்வான்.

**சிறுவினாக்கள்**

1. அன்பு சிவத்தை விளங்கச் செய்வது எவ்வாறு?
2. அன்புடையோர், அன்பில்லாதவர் காணும் முறைமையினை விளக்குக.
3. இறைவனை எவ்வாறு வழிபடல் வேண்டும்?

**நெடுவினாக்கள்**

1. 'அன்புடைமை' எனும் அதிகாரத்தில் இடம் பெறும் கருத்துக்களை திருமந்திரம் வழிநின்று கட்டுரைக்க.
2. இறைவனிடம் அன்பு கொள்ளும் தன்மையினை எடுத்துரைக்க.

# அலகு-3
## ‘ஆண்டாள்’ – திருப்பாவை

பன்னிரு ஆழ்வாருள் பெண்பாலர் இவர் ஒருவர் மட்டுமே. பெரியாழ்வாரின் நந்தவனத்தில் துளசி செடிகளுக்கு இடையே கிடைக்கப் பெற்றார் என்பர். இவரை பெரியாழ்வார் பெற்றெடுத்த ‘பைந்தொடி எனப் போற்றுவர்.

திருமாலையே மணக்க வேண்டும் என்னும் வேணவா கொண்டிருந்தார். திருமாலுக்கு கட்டிவைத்த மாலையைத் தினமும் தான் சூடிக் கண்ணாடியில் அழகு பார்த்தார். இதனை அறிந்த பெரியாழ்வார், வேறு மாலைகட்டி திருமாலுக்குச் சாத்த முனைந்தார். பெருமாள் மறுத்து ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையே விரும்பிக் கேட்டார். எனவே ஆண்டாள் ‘சூடிக் கொடுத்த சுடர்க்கொடி’ எனப்படுகிறாள். இவ்வாறு ஆண்டவனையே ஆண்டதால் ‘ஆண்டாள்’ என்றும் - சிறப்பிக்கப்படுகின்றாள்.

ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்கள் பாவை நோன்பு பற்றியது. மார்கழித் திங்கள் வைகறையில் வைணவர்களால் பாராயணம் செய்யப்பெறும் சிறப்பு மிக்கது. நாச்சியார் திருமொழி ஆண்டாள் இறைவன் மீது கொண்ட காதல் மனத்தைக் காட்டும்.

**“மானிடவர்க்கும் என்று பேச்சுப்படில்**
**வாழகில்லேன் கண்டாய் மன்மதனே”**

**1. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ; நெரிழையீர்**
**சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்**
**சுடர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்**
**ஏரார்ந்த கண்ணி யசோதை இளங்சிங்கம்**
**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்**
**நாராயணனே நமக்கே பறை தருவான்**
**பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.**

**தெளிவுரை:**

செல்வம் கொழிக்கும் ஆயர் பாடியிலே உள்ள பாக்கியம் செய்த சிறு பெண்களே! அழகிய ஆபரணங்களை அணிந்துகொண்டிருப்பவர்களே! கூரியவேல் ஏந்தி கொடிய தொழில் புரியும் நந்தகோபனின் குமாரனும், அழகு பொருந்திய கண்களை உடைய யசோதையின் இளஞ்சிங்கம் போன்றவனும், சூரியனையும் சந்திரனையும் போன்ற திருமுகத்தைக் கொண்டவனுமாகிய நாராயணன், நாம் கோரும் நோன்பிற்கு வேண்டிய பறையைக் கொடுப்பான். இந்த மார்கழி மாதப் பௌர்ணமியில், நீராட விருப்பம் உள்ளவர்கள் அனைவரும் வாருங்கள்.

**2. வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்கு**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
**பையத்துயின்ற பரமன் அடிபாடி**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம்; நாட்காலே நீராடி**
**மையிட் டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம்**
**செய்யாதன செய்யோம், தீக்குறளைச் சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**

**உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.**

## செய்ய வேண்டியவை – விலக்க வேண்டியவை

**தெளிவுரை:**

இவ்வுலகில் வாழ்வோர்களே! நம்முடைய பாவை நோன்புக்காக நாம் அனுசரிக்க வேண்டிய கடமைகளைக் கேட்பீராக. திருப்பாற் கடலிலே யோக நித்திரை புரியும் பரந்தாமனது திருவடிகளைத் துதிப்போம். நெய்யும் பாலும் அருந்த மாட்டோம். விடியற் காலையிலே குளிப்போம். கண்களுக்கு அழகூட்டும் மையை இட்டுக் கொள்ளமாட்டோம். செய்யத்தகாத தீச்செயல்களைச் செய்ய மாட்டோம். யோகிகளுக்கும் தவசிகளுக்கும் நாமாகச் சென்று தர்மம் செய்வதும், வீடு தேடி வரும் சந்நியாசிகளுக்கும் பிரம்மச்சாரிகளுக்கும் பிச்சையும் இயன்ற அளவு அளிப்போம். இவையாவும் விருப்புடன் செய்து நாம் கடைத்தேறும் வழியை நினைத்து மகிழ்வோம்.

**3. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.**

## நீங்காத செல்வம் நிறைக!

**தெளிவுரை:**

வாமனாவதாரத்தில் திருவிக்கிரமனாக ஓங்கி உயர்ந்து உலகத்தை மூன்று அடிகளால் அளந்த உத்தமனான திருமாலின் நாமங்களைப் பாடிப்பாவை நோன்பிற்காக நாம் நீராடினோமானால், தீமையற்று, மாதம் மூன்று மழை நாடெங்கிலும் பொழியும். செந்நெல் ஓங்கிப் பருத்து வளரும். அப்பயிர்களின் நெருக்க மிகுதியால். மீன்கள் துள்ளிக் குதித்துப் பாயும். அழகிய குவளை மலர்களில் வரிகளை உடைய வண்டுகள் தேனைக் குடித்த மயக்கத்தில் உறங்கிக் கிடக்கும். தயக்கமின்றி அருகில் சென்று பெருத்த மடிகளைப் பற்றிக் கறக்க, வள்ளல்களைப் போன்ற பெரிய பசுக்கள் கறக்கும் வரை பால் சுரந்து குடங்களை நிரப்பும். இத்தகைய செல்வங்கள் எல்லாம் நீக்கமற நிறைந்து கொழிக்கும்.

**4. ஆழிமழைக் கண்ணா! ஒன்று நீகைகரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி**
**ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து**
**பாழியந்தோளுடைய பத்மநாபன் கையில்**
**ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து**
**தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில் செய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.**

(கைகரவேல் - மறைத்துக் கொள்ளாதே, ஆர்த்து-சப்தத்து, ஆழி-சக்கரம், வலம்புரி-சங்கு.

## மழையே! வாழ உலகினில் பெய்திடாய்!

**தெளிவுரை:**

கடல் போன்ற பெருமை வாய்ந்த மழைக்கு அதிபதியான வருணதேவனே! நீ ஒரு சிறிதும் ஒளிக்காமல் கடல் ஆழத்திற்குச் சென்று நீரை முகந்து வந்த வான வெளியில் பரவி ஊழிக்காலத்திலும் மாசற்று விளங்கும் திருமாலின் கருநிறமேனியைப் போல விளங்கிப் பெருமையும், எழிலும் வலிமையுமுள்ள, பத்மநாபனின் வலக்கரத்தில் திகழும் சக்கராயுதத்தைப் போல் ஒளியுடனும், இடக்கையிலுள்ள வலம்புரிச் சங்கின் நாதத்தை ஒத்த முழக்கத்துடனும் அவன் கையிலுள்ள சார்ங்கம் என்னும் வில்லிலிருந்து பாயும் அம்பு மழைபோல் தாமதமின்றி மழை கொட்ட வேண்டும். அதனால் உலகம் உய்யவும் நாங்கள் நீராடவும் செய்து மகிழ்விப்பாய்.

இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனை**
**தூயப் பெருநீர் யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,**
**தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை**
**தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது**
**வாயினாற் பாடி, மனத்தினால் சிந்திக்க**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.**

(தூமலர் – தூயமலர், தூசு – பஞ்சு)

## பாவங்கள் போயின

**தெளிவுரை:**

மாயம் வல்லவனும், நிலைபெற்ற வடமதுரையில் வந்து பிறந்தவனும், தூய்மையான பெரிய யமுனை நதியில் விளையாடியவனும், ஆயர்கள் குலத்திலே வந்து தோன்றி இரத்தின தீபம் போன்றவனும், தாயாகிய யசோதையின் பெற்ற வயிற்றைப் பெருமைப்படுத்தித் ‘தாமோதரன்’ என்று பெயர் பெற்றவனுமாகிய கண்ணனை தூய்மையான மனத்தோடு சென்று தூவுகின்ற மலர்களை அவன் திருவடிகளில் இட்டு, வணங்கி வாயினால் அவன் புகழைப் பாடி, மனத்தினால் அவனைத் தியானித்து வழிபட்டால் நமது பிழைகள் யாவும் நீங்கும். வந்து சேர இருக்கும் வினைகளும் நம்மை நெருங்கா. அவை தீயில் இட்ட பஞ்சு போல மங்கி மாண்டு போகும். அவன் திருப்பெயர்களைச் சொல்லுங்கள் என்றுஅழைக்கிறார் ஆண்டாள்.

**6. புள்ளும் சிலம்பின:**

**“புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்**
**வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ**
**பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு**
**கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி**
**வெள்ளைத்தரவில் துயிலமர்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்**

**மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்”**

(புள் - பறவைகள், புள்ளரையன் - பறவைகளின் அரசன் - கருடன்.

## பிள்ளாய் எழுந்திராய்

**தெளிவுரை:**

பறவைகள் சப்திக்கின்றன; கருடனுக்குத் தலைவனான நம்பெருமானார் எழுந்தருளிய திருக்கோயிலில் ஒலிக்கும் வெண்மையான சங்கின் பெரும் சப்தம் உன் காதில் படவில்லையா? அனுபவம் இல்லாத பெண்ணே! எழுந்திராய், பூதகி என்னும் அரக்கியின் நச்சுப் பாலை உண்டவனும், வண்டிச் சக்கரவடிவில் தன்னைக் கொல்ல வந்த சகடாசுரனை நொறுக்கி மாய்க்கத் தன் திருவடியைத் தூக்கியவனும், திருப்பாற்கடலில் ஆதிசேடன் மேல் பள்ளி கொண்டுள்ள அவதாரங்களுக்குக் காரணனுமான திருமாலை முனிவர்களும், யோகிகளும் தங்கள் உள்ளத்திற் கொண்டு, நிதானமாக எழுந்து ‘அரி, அரி’ என்று பலமுறை சொல்லும் பெரும் சப்தம் நம் உள்ளம் புகுந்து குளிர்ந்தது.

**7. கீசு கீசு**

**கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து**
**பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே!**
**காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து**
**வாச நுறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ**
**நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி**
**கேசவனைப் பாடவும் நீகேட்டே கிடத்தியோ**
**தேசம் உடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.**

## எங்கள் தலைவியே எழுந்தரு!

**தெளிவுரை:**

மதிகெட்ட பெண்மணியே! கீசுகீசு என்று வலியன் என்னும் கரிக்குருவிகள் இரைதேடப் புறப்படும் முன் ஒன்றுடன் ஒன்று கலந்து உறவாடும் பெரும் சப்தத்தை நீ கேட்கவில்லையா? நறுமணம் வீசும் கூந்தலுடைய ஆயச்சியர்கள் அணிந்துள்ள அச்சுத்தாலி, ஆமைத்தாலி, கலகலவென்று ஒலிக்கக் கைகளை வீசி மத்தினால் தயிர் கடையும் சப்தத்தை நீ கேட்கவில்லையா? தலைமையான பெண்ணே! நாராயணனாகிய மூர்த்தியை, கேசவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும் நீ படுத்துக் கிடக்கிறாயே, ஒளி பொருந்தியவளே! கதவைத் திறவாய்.

**8. கீழ்வானம்**

**கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு**
**மேயவான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்**
**போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்**
**கூவுவான் வந்து நின்றோம் கோதுகலமுடைய**
**பாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு**
**மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய**
**தேவாதி தேனைச் சென்று நாம் சேவித்தால்**
**ஆவாவென் றாராய்ந்து அருளே லோ ரெம்பாவாய்**

## உற்சாகமிக்கவளே! இன்னுமா உறக்கம்

**தெளிவுரை:**

உள்ளக் களிப்புள்ள பெண்மணியே! கிழக்கே வானம் வெளுத்துள்ளது. எருமைகள் நுனிப்புல் மேயப் பரவலாகச் செல்கின்றன. நோன்பு நோற்கும் இடத்திற்குப் பலர் சென்று விட்டனர். மீதமுள்ளவர்களும் அங்குப் புறப்படுகின்றனர். அவர்களைப் போகவிடாமல் தடுத்து நிறுத்தி உன்னை அழைத்துச் செல்ல வந்துள்ளோம், எழுந்திரு; கேசி என்னும் குதிரை வடிவில் வந்த அசுரனை வாய்பிளந்து கம்சனால் அனுப்பப்பட்ட மல்லர்களை அழித்த தேவர்களுக்கெல்லாம் தேவனை நாம் சென்று பாடி பறையைப் பெற்று வணங்கினால் ‘ஆ! ஆ!’ என்று நம்முடைய கோரிக்கையை அப்பெருமான் ஆராய்ந்து அருள்புரிவான்.

**9. தூமணி மாடம்**

**தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய**
**தூபம் கமழத் துயிலணைமேல் கண் வளரும்**
**மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்**
**மாமீர்! அவளை எழுப்பீரோ? உன்மகள் தான்**
**ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?**
**ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ**
**மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று**
**நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.**

## மாமன் மகளே தூக்கம் போதாதா?

**தெளிவுரை:**

மாசற்ற மாணிக்கங்கள் பதித்த மாளிகையில் எல்லாத் திசைகளிலும் விளக்குகள் எரிய அகிற்புகையின் நறுமணம் தவழ, தூங்குவதற்கான படுக்கையில் உறங்குகின்ற மாமன் மகளே! மாணிக்கக் கதவின் தாழ்ப்பாளைத் திறந்துவிடு. மாமியாரே! அவளை எழுப்புவீர்களா? உங்கள் மகள் ஊமையோ? அல்லது செவிடா? ஆழ்ந்த தூக்கமோ, அல்லது நெடுநேரம் தூங்குமாறு மந்திரத்தினால் கட்டுப்பட்டாளோ? மாமாயவன், மாதவன், வைகுந்தன் என்னும் அவனுடைய பல திருநாமங்களைப் பாடினோம்.

**10. நோற்றுச் சுவர்க்கம்**

**நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்**
**மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?**
**நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்**
**போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்**
**கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்ப கருணனும்**
**தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ**
**ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே**
**தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.**

## தெளிவாக வந்து திறவம்மா கதவை!

**தெளிவுரை:**

கண்ணனை அனுபவிக்க முற்பிறப்பில் தவம் செய்து, இப்போது சுகத்தை அனுபவிக்கும் தலைவியே! வாயிற்கதவைத் திறவாது இருப்பவர் ஒரு மறுமொழியாவது சொல்ல மாட்டோர்களோ? நறுமணமுள்ள திருத்துழாயை முடியில் அணிந்த எம்பெருமான் நம்மால் போற்றப்படும் நிலையில் நமது நோன்புக்கு வேண்டிய பறையைத் தரக்கூடிய உபாயமானான். முன்னொரு காலத்தில் (இராம பிரானால்) இயமன் வாயிலே விழுந்த கும்பகருணன் என்பவனும் உனக்குத் தோற்றுப் போய், தன் பெரிய தூக்கத்தை உன்னிடம் கொடுத்து விட்டானோ? மிகவும் சோம்பலை உடையவளே! கிடைத்தற்கரிய ஆபரணம் போன்றவளே, தெளிவுடன் வந்து கதவைத் திறப்பாயாக!

**சிறுவினாக்கள்**

1. பாவை நோன்பு – சிறு குறிப்பு வரைக.
2. பாவை நோன்பில் செய்ய வேண்டியவைவிலக்க வேண்டியவைகளை விளக்குக.
3. நீங்காத செல்வம் நிறைய வேண்டும் என்று கன்னிப்பெண்கள் கூறும் கருத்துகளை எழுதுக.
4. மழை பெய்ய வேண்டும் என்று ஆண்டாள் வருணபகவானிடம் எவ்வாறு வேண்டுகிறார்?
5. பள்ளி எழுச்சிப் பாடலைப் பற்றி திருப்பாவை வழி நின்று நிறுவுக.

**நெடுவினாக்கள்**

1. கன்னிப்பெண்கள் மார்கழிமாத நோன்பினை எடுத்துரைக்க
2. திருப்பாவையில் இடம்பெறும் புராணச் செய்திகளைத் தொகுத்துரைக்க.
3. “புள் அரையன் கோவில் வெள்ளை விளி சங்கில் பேரரவம் கேட்டிலையோ” - இடம் சுட்டி விளக்குக.

## பெரியாழ்வார்: திருமொழி திருப்பல்லாண்டு முதற்பத்து
## இரண்டாம் திருமொழி

ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர் இயற்பெயர் விஷ்ணுசித்தர் பட்டர்பிரான் னவும் படுவார். குழந்தை கண்ணனின் பிறப்பு, தாலாட்டு, அம்புலி, நீராட்டல், பூச்சூட்டல், காப்பிடல், இளமை விளையாட்டு அனைத்தையும் பெரியாழ்வார் உணர்ந்து பாடியுள்ளார். பெரியாழ்வார் “பெரியாழ்வார் திருமொழியினை பாடியுள்ளார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் திருமாலுக்குப் பூமாலை கட்டி இறைபணி புரிந்தார்.

**“பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**
**மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்**
**சேவடி செவ்வி திருக்காப்பு”**

என்று திருமாலுக்கு பல்லாண்டு பாடி பாமாலையும் சாத்தினார். திருப்பல்லாண்டு பாடியமையால் பெரியாழ்வார் என அழைக்கப்படுகின்றார்.

## வண்ணமாடங்கள்
## கண்ணன் திரு அவதாரச் சிறப்பு

பாண்டிய நாட்டிலுள்ள பதினெட்டு திருமால் திருத்தலங்களில் (பெருமாள் கோயில்கள்) திருக்கோட்டியூரும் ஒன்று. ஸ்ரீவல்லப பாண்டியனின் அரச புரோகிதராகவும், அமைச்சராகவும் இருந்த செல்வநம்பி என்பவர், இவ்வூரைச் சோந்தவர். இவர் பெரியாழ்வாரின் நெருங்கிய தோழர். ஒரு சமயம் (கண்ணன் பிறந்தநாள் கொண்டாட்ட நாள் அன்று விழா அங்கு நடந்து கொண்டிருந்தது) செல்வ நம்பியைப் பார்ப்பதற்குத் திருக்கோட்டியூர் வருகின்றார் பெரியாழ்வார். அங்கு கோயில் கொண்டிருக்கும் சௌமிய நாராயணப் பெருமாளை அவர் வணங்கினார். அப்போது அவர் மனக்கண்ணிற்கு அத்திருக்கோவில் நந்தகோபனின் மாளிகையாகவும், அவ்வூர் ஆயர் பாடியாகவும், மாறின. அப்பெருமாள் கண்ணனாக காட்சியளித்தார். இதைக் கண்ட பெரியாழ்வார் தானும் யசோதையாக மாறி, காட்சியை நமக்குப் பின்வரும் பாடல்களின் மூலம் விளக்குகிறார்.

1. **வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்**
   **கண்ணன் கேசவன் நம்பி பிறந்தீனில்**
   **எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட**
   **கண்ணன் முற்றம் கலந்தள றாயிற்றே**

**தெளிவுரை:**

அழகிய வீடுகளால் சூழப்பட்டுள்ள திருக்கோட்டியூரில் கேசவன் என்ற திருநாமத்தை உடையவனும் குணங்களால் நிரம்பியவனுமான திருமால் பிறந்த வீட்டில் வந்து திருவாய்ப் பாடியிலுள்ளவர்கள் கூடினர். அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தவர்களாய் எண்ணெயையும் மஞ்சள் பொடியையும், ஒருவர் மீது ஒருவர் தூவவே, அவ்விரண்டும் கீழே விழுந்து ஒன்று சேர்ந்து கண்ணன் திரு அவதரித்த மாளிகையின் முற்றத்தைச் சேறாக்கி விட்டன.

2. **ஓடுவார், விழுவார், உகந்தாலிப்பார்**
   **நாடுவார், நம்பி ரான் எங்குத் தான்என்பார்**
   **பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று**
   **ஆடுவார்களும் ஆயிற்றாய்ப் பாடியே.**

**தெளிவுரை:**

திருவாய்ப் பாடியில் உள்ள ஆயர்கள் எல்லோரும், தமக்குத் தலைவனான நந்தகோபனுக்குப் பிள்ளை பிறந்ததைக் கேட்டு, மிகுந்த மகிழ்ச்சியடைந்து, தாம் செய்வது இன்னதெனத் தெரியாமல் சிலர் ஓடுபவர்களும், சிலர் எண்ணெய் சுண்ணம் கலந்ததனாலான சேற்றிலே வழுக்கி விழுபவர்களும், சிலர் ஆரவாரம் செய்பவர்களும் ஆனார்கள். வேறு சிலர், பிறந்த குழந்தையைத் தேடினர். இன்னும் சிலர் கண்ணன் எதிரே இருக்கும் போதே; நமக்குத் தலைவன் எங்கே இருக்கிறான் என்று கேட்டனர். மற்றும் சிலர் பாடினர். சிலர் பறையடிக்க; அதற்கேற்பக் கூத்தாடினர். இவ்வாறு ஆயர்பாடியிலுள்ளவர்கள் ஆனார்கள்.

3. **பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தீனில்**
   **காணத் தாம்புகுவார், புக்குப் போதுவார்**
   **ஆணொப் பார் இவன் நேரில்லை காண் திரு**
   **ஓணத் தான்உல காளும் என் பார்களே.**

**தெளிவுரை:**

நல்ல குணத்தையுடைய புதல்வன் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு பிறந்த போது, பிள்ளையைப் பார்ப்பதற்கு, நந்தகோபர் மனையில் ஆயர்கள் புகுந்தனர். பார்த்தவர்கள் வெளியே வந்தனர். அவர்களில், உடலமைப்பு இலக்கணம் தெரிந்தவர்கள் (சாமுத்திரிகா இலட்சணம்) கண்ணனைப் பார்த்து, இப்பிள்ளைக்குச் சமமானவா ஆண்களில் ஒருவரும் இல்லை என்பர். திருவோண நட்சத்திரத்திற்குரிய திருமாலினுடைய உலகை இவன் ஆளுவான் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

4. **உறியை முற்றத் துருட்டிநின் றாடுவார்**
   **நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்.**
   **சேறிமென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும்**
   **அறிவ ழிந்தனர் ஆய்ப்பாடி யாயரே.**

**தெளிவுரை:**

அந்த ஆயர்களில் சிலர், தங்களுக்கு ஏற்பட்ட அடங்காத பெருமகிழ்ச்சியால், நெய்யும், பாலும், தயிரும் இருக்கிற தறிகளை அறுத்துக் கொண்டு வந்து வீட்டின் முன்புறத்தில் உருட்டி விட்டு ஆடினர். வேறு சிலர், பிள்ளைக்கு நலம் உண்டாக வேண்டுமென்று நெய், பால், தயிர்களை மிகுதியாகத் தானம் செய்தனர் மற்றும் சிலர் தங்களுடைய மென்மையான கூந்தல் அவிழ்ந்து அலையும்படிக் கூத்தாடினர். இவ்வாறு ஆயர்களெல்லாம் பேரானந்த நிலையில் செய்வது இன்னதென்று அறியாமல், அறிவு அழிந்து நின்றனர்.

5. **கொண்ட தாளுறி கோலக் கொடுமழு**
   **தண்டி னர் பறியோலைச் சயனத்தர்**
   **விண்ட முல்லை யரும்பன்ன பல்லினர்**
   **அண்டர் மிண்டிப் புகுந்து நெய் யாடினார்.**

**தெளிவுரை:**

ஆயர்கள் உறியையும், மழு என்னும் ஆயுதத்தையும், பசு மேய்க்கும் கோலையும், ஓலைப்பாயையும் உடையவர்களாவர். அவர்கள் மகிழ்ச்சியினால், தங்கள் பற்கள் வெளியே தெரியும்படி சிரித்துக்கொண்டு, நெருங்கி வந்து நின்று, பிள்ளை பிறந்த மகிழ்ச்சியினால், எண்ணெய் தேய்த்துக் கொண்டு நீராடினர்,

**விளக்கம்:** அண்டர் – தேவர்கள், ஆயர்கள்.

6. **கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்**
   **பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்**
   **ஐயநா விழித்தாளுக்கு அங்காந்திட**
   **வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே.**

**தெளிவுரை:**

ஒருநாள் கண்ணனுடைய தாயார் யசோதைப் பிராட்டி கண்ணனை நீராட்டும் போது வழக்கப்படியே, குழந்தையின் கையையும், காலையும் மெல்ல நீட்டி நிமிர்த்து, சிறு மஞ்சளைப் பூசினாள். பச்சிலைகளையும், வாசனைப் பொருள்களையும் சேர்த்துக் காய்ச்சின நீரைக் கொண்டு

நீராட்டினாள். பின்னர் மஞ்சள் தேய்வையைக் கொண்டு, அக்குழந்தையின் நாக்கை வழித்தாள். அப்போது அக்குழந்தையின் திறந்த வாயிலே, உலகம் ஏழினையும் ஞானக் கண்ணால் கண்டாள்.

**7. வாயுள் வையகம் கண்ட மடநல்லார்**
**ஆயர் புத்திரன் அல்லன் அருந்தெய்வம்**
**பாய சீருடைப் பண்புடைப் பாலகன்**
**மாயன் என்று மகிழ்ந்தனர் மாதரே.**

**தெளிவுரை:**

யசோதைப் பிராட்டி, கண்ணனின் திருவாயிலே எல்லா உலகங்களையும், கண்ணன் தந்த ஞானக் கண்ணால் கண்டு, ஆச்சரியப்பட்டு, தன் அருகிலிருக்கும் பெண்களுக்கும் காட்ட, அவர்களும் கண்ணன் அருளால் ஞானக்கண் பெற்று எல்லா உலகங்களையும் கண்டு, மிகுந்த புகழையும், நல்ல குணங்களையும் உடைய மனிதர்களால் செய்ய முடியாத ஆச்சரியமான செய்கையைச் செய்கின்றான். ஆதலால் இவன் இடைப்பிள்ளை அல்லன்; அருமையான தெய்வமே இப்படி நேரில் வந்துள்ளது என்று கொண்டாடிக் கூறினார்கள்.

**8. பத்துநாளும் கடந்த இரண்டாம் நாள்**
**எத்திசையும் சயமரம் கோடித்து**
**மத்த மாமலை தாங்கிய மைந்தனை**
**உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே.**

பிறந்த குழந்தைக்கு 10ஆம் நாளிலோ, 12ஆம் நாளிலோ பெயரிட (நாமகரணம்) வேண்டும் என்பது மரபு. கண்ணன் பிறந்த 13ஆம் நாள் ஆயர்பாடி முழுவதையும் அலங்கரித்து திருநாமம் இடுவது பற்றி இப்பாசுரம் கூறுகிறது.

**தெளிவுரை:**

12ஆம் நாளன்று எல்லாத் திசைளிலும் வெற்றிக்கு அறிகுறியான ஆயர்பாடியில் தோரணங்களை நாட்டி அலங்கரித்தனர். கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பிடித்த கண்ணனை நாமகரணம் செய்ய வந்த ஆயர்கள், தம் தம் கைகளிலே எடுத்துக் கொண்டு மகிழ்ந்தனர்.

**9. கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்**
**எடுத்துக் கொள்ளில், மருங்கை யிறுத்திடும்**
**ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்**
**மிடுக்கி லாமையால் நான் மெலிந் தேன், நங்காய்,**

**தெளிவுரை:**

என்னருகிலிருக்கும் பெண்களே, நீங்கள் அனைவரும் பருவத்துக்குத் தகுந்த செயல்களைச் செய்யும் பிள்ளைகளைப் பெற்றதால் ஒன்றும் குறைவில்லாது இருக்கிறீர்கள். ஆனால் என் மகன் செய்வதைக் கேளுங்கள் என்று யசோதை கூறுகின்றாள். இப்பிள்ளையைத் தொட்டிலில் கிடத்தினால், அத்தொட்டில் கிழிந்து விடும்படி உதைக்கிறான். அக்கால்களுக்கு வலிக்குமே என்று இவனை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டால், அந்த இடுப்பை நழுவி முறித்து விடுகின்றான். இதனால் இக்குழந்தைக்கு நோவுண்டாகுமே என்று மார்பிலே தழுவிக்

கொண்டால் கால்களால் வயிற்றை உதைக்கின்றான். இப்படி இவன் தன்னுடைய பருவத்திற்குத் தகாத செயல்களைச் செய்வதை நினைத்து, நான் மிகவும் இளைத்து விட்டேன் என்கிறான்.

**10. செந்நெ லார்வயல் சூழ்திருக் கோட்டியூர்**
**மன்னு நாரணன் நம்பி பிறந்தமை**
**மின்னு நுல்விட்டு சித்தன் விரித்த இப்**
**பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே.**

**தெளிவுரை:**

இப்பாசுரத்தால் இப்பதிகத்தைக் கற்பதனாலாகும் பயன் கூறுகின்றார். நெற்பயிர் நிறைந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்த வளமான திருக்கோட்டியூரிலே எப்போதும் கோயில் கொண்டிருக்கும் பெருமான் ஆயர்பாடியில் கண்ணனாகத் திரு அவதாரம் செய்த போது, அங்கு நடந்த கொண்டாட்டம் முதலியவற்றைப் பெரியாழ்வார் விரிவாகக் கூறினார். புலவர்கள் இப்பாடல்களை சிறப்பித்துச் சொல்வர். இவற்றைப் பொருளோடு நன்கு ஓதி உணர்பவர்களுக்கு பாவம் இல்லையாம்.

**சிறிய வினா**

1. கண்ணன் பிறந்த செய்தியைக் கேட்டு ஆயர் பாட்டியில் உள்ளோர் செய்த செயல்களை விளக்குக.

**பெரிய வினா**

1. கண்ணன் திரு அவதாரச் சிறப்பினை பெரியாழ்வார் எவ்வாறு உணர்த்துகிறார்?

## குலசேகர ஆழ்வார்-நான்காம் திருமொழி

ஊர் சேரநாட்டுத் திருவஞ்சைக்களம். திருடவிரதன் என்னும் மன்னனின் மகன், தம் பாடல்களில் இவர் தம்மைக் கொல்லி காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன் எனக் கூறிக் கொள்வதால் பாண்டி சோழ சேர நாடுகளுக்கும் தலைவராய் இருந்தார் எனத் தெரிகிறது திருமால் பக்தியால் அரசு துறந்தவர்.

இவர் தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்தமாலையும் செய்துள்ளார்.

## ஊனேறு செல்வம்

**1. “ஊனேறு செல்வத்து உடல் பிறவியான் வேண்டேன்**
**ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லால்**
**கூனேறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்து**
**கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.**

**பொருள்:**

“நம்பின்னைப் பிராட்டியின் பொருட்டு ஏழு எருதுகளை வென்றவனான எம்பெருமானுக்கு அடித் தொண்டு செய்வதையே யான் வேண்டுவதல்லாமல் சதை வளர்ந்து துடிப்பதாகிற செல்வத்தையுடைய இம்மனித உடம்பெடுத்துப் பிறத்தலை நான் விரும்பமாட்டேன். அன்றியும்

வளைந்திருக்கிற பாஞ்ச சன்னியம் என்னும் சங்கினை இடக்கையிலே உடையவனான எம் பெருமானுடைய திருவேங்கட மலையில் திருக்கோனேரி என்றழைக்கப்படும் அழகிய திருக்குளத்தில் வாழும் நாரையாகவாவது பிறக்கக் கடவேன்'' என்கிறார் ஆழ்வார்.

**2. ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ**
**வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்**
**தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்**
**மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.**

**தெளிவுரை:**

அழியாத செல்வத்தையுடைய அரம்பையர்கள் என்னைச் சூழ்ந்து நிற்க மேலுலகத்தை அரசாளுகிற செல்வத்தையும், இம்மண்ணுலகத்தையும் ஆளுகின்ற அரசாட்சியையும் அரிய முயற்சியின்றிக் கிடைப்பதாயினும் நான் விரும்பமாட்டேன். தேன் மிக்க மலர்கள் நிறைந்துள்ள சோலைகளை உடைய திருவேங்கடமலையிலிருக்கிற சுனைகளிலே ஒரு மீனாகப் பிறக்கத்தக்க பேற்றினை நான் பெறக் கடவேனாக'' என்கிறார் ஆழ்வார்.

**3. பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்**
**துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள் வாசல்**
**மின் வட்டச் சுடராழி வேங்கடக் கோன் தானுமிழும்**
**பொன் வட்டில் பிடித்துடனே புகப் பெறுவானவனே**

**பொருள்:**

''திரிந்து விட்ட சடையையுடையவனான சிவனும், நான்முகனும். தேவேந்திரனும், நெருக்கி முயன்றும் உள்ளே புகுவதற்கு எளிதாயிராத பூலோக வைகுண்டமாகிய திருமலையிலுள்ள திருக்கோயிலின் நீண்ட திருவாயிலிலே, மின்னலை வளைத்தாற் போலச் சோதிமயமாய் விளங்குகின்ற வட்ட வடிவமான சக்ராயுதத்தையுடைய திருவேங்கடமுடையான் வாய் நீர் உமிழ்கிற தங்கவட்டிலைக் கையிலேந்திக் கொண்டு அந்தரங்க அடிமைக் கொண்டவருடனே யானும் உள்ளே புகும் பேற்றினைப் பெறக் கடவேன்'' என்கிறார் ஆழ்வார்.

**4. ஒண்பவள வேலையுலவு தண்பாற்கடலுள்**
**கண்துயினும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கே**
**பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்து**
**செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே.**

**பொருள்:**

''உமிழும் பவளக் கொடிகளைக் கரையிலே கொணர்ந்து கொழித்து அலைகள் உலாவுகிற குளிர்ந்த திருப்பாற்கடலில் அறிதுயில் (யோக நித்திரை) செய்தருள்கின்ற மாயோனாகிய எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளைக் கண்டு வணங்கும்படியாக இசையையே பேச்சாகக் கொண்டிலங்கும் வண்டுகளின் கூட்டங்கள் பண்ணிசை முழக்கும் திருமலையிலே சண்பகமரமாய் நிற்கும் பேறுடையவனாகக் கடவேன்'' என்கிறார் ஆழ்வார்.

**5. கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து**
**இன்பமரும் செய்வமும் இல்வரசும் யான் வேண்டேன்**

**எம்பெருமான் ஈசன் எழில் வேங்கடமலை மேல்**
**தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே.**

**பொருள்:**

''தன்னைக் கண்டவர்கள் அஞ்சி நடுங்கும் நடுக்கத்தை விளைவிக்கின்ற மதம் கொண்ட யானையின் கழுத்தின் மீது வீற்றிருந்து எல்லாவித சுகங்களையும் பொருந்தி அனுபவிக்கும் படியான செல்வத்தையும், அதற்குக் காரணமான அரசாட்சியையும் யான் விரும்ப மாட்டேன். எனது தலைவனும் எல்லா உலகங்களுக்கும் தலைவனுமான திருவேங்கடத் தானுடைய அழகிய திருமலையிலே புதராய் நிற்கும் படியானதோர் பேற்றினை உடையவனாகக் கடவேன்'' என்கிறார் ஆழ்வார்.

**சிறப்புப்பொருள்:** கம்பமம் - கட்டுத்தறி (அ) அசைவு (அ) நடுக்கம்; தம்பகம் - புதர், வேங்கடம் - ழெியாத செல்வம்.

6. **மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்**
**அன்னவர்தம் பாடலொடும் ஆடலவை யாதரியேன்**
**தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்**
**அன்னனைய பொற்குவடாம் அருந்தவத் தானவேனே.**

**பொருள்:**

மின்னல் போன்ற நுண்ணிய இடைய உடையவர்களாகிய ஊர் வசியும். மேனகையும் போலும் அழகியவர்களான மகளிரின் பாட்டும் கூத்துமான அவற்றை யான் விரும்பவில்லை. வண்டுகளின் கூட்டம் 'தெனதென' என்று ஆளத்தி வைத்து இசை பாடப்பெற்ற திருவேுங்கட மலையிலே அப்படிப்பட்ட பொன்மயமான சிகரமாவதற்குரிய அருமையான தவத்தை உடையவனாகக் கடவேன்'' என்கிறார் ஆழ்வார்.

7. **வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்**
**கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்**
**தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடமலை மேல்**
**கானாறாய்ப் பாயும் கருத்துடையே னாவேனே.**

**பொருள்:**

''ஆகாயத்தைத் தனக்கு இடமாகக் கொண்டு விளங்குகின்ற பூரண சந்திரன் போன்ற ஒற்றை வெண்கொற்றக் குடைக்குக் கீழ் மன்னவர்களுக்கெல்லாம் மன்னனாகப் பெருமை தோன்ற வீற்றிருந்து அனைவராலும் கொண்டாடப் படுவதற்குக் காரணமான செல்வத்தை யான் ஒரு பொருளாக மதிக்க மாட்டேன். தேன் நிறைந்த மலர்கள் மிகுந்துள்ள சோலைகளையுடைய திருமலையின்மேல் ஒரு காட்டாறாய்ப் பெருகும் படியான கருத்தினை யான் உடையவனாக இருக்கிறேன்'' என்கிறார் ஆழ்வார்.

8. **பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும்**
**முறையாய பெருவேள்விக் குறை முடிப்பான் மறையானான்**
**வெறயார் தண்சோலைத் திருவேங்கட மலைமேல்**
**நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே.**

**பொருள்:**

பிறைமதி சூடிய பெம்மானாகிய சிவனும், பிரமனும், இந்திரனும் தத்துமதி தகுதிக்குத்தக்கப்படி செய்கின்ற பெரிய யாகங்களின் பலனாக அவர்களது குறையைத் தீர்த்து, அவர்களது வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பவனும், வேதங்களில் பரம் பொருளாகக் கூறப்படுபவனுமான எம்பெருமானுடைய பரிமளம் வீசும் மிகக் குளிர்ந்த சோலைகளையுடைய திருவேங்கடமலைமேல் போகிற வழியாய்க் கிடக்கின்ற நிலையை உடையவனாகக் கடவேன் என்கிறார் ஆழ்வார்.

**9. செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே**
**நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்**
**அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்**
**படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே**

**பொருள்:**

செடிபோல் அடர்ந்துள்ள கொடிய வினைகளைப் போக்கியருள்கிற பெருமானே! பெரியானே! திருவேங்கட முடையானே! உனது சந்நிதியின உள்வாசலிலே பாகவதர்களும் மற்றைத் தேவர்களுள் அரம்பை மாதரும் இடைவிடாது இயங்கப் பெற்ற படியாய்ப் பொருந்தி உனது பவளம் போன்ற திருவதரத்தைக் காண்பேனாகக் கடவேன்'' என்கிறார் ஆழ்வார்.

**10. உம்பர் உலகாண்டு ஒரு குடைக்கீழ் உருப்பசி தன்**
**அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்**
**செம்பவள வாயான் திருவேங்கட மென்னும்**
**எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனுமாவேனே.**

**பொருள்:**

மேலுலகங்களை எல்லாம் ஒரு கொற்றக் குடையின் கீழ் அரசாண்டு ஊர்வசியின் அழகிய பொன்னுடையணிந்த அல்குலை அடையப் பெறினும் நான் அதனை விரும்ப மாட்டேன். சிவந்த பவளம் போன்ற வாயை உடையவனான எம்பெருமானுடைய திருவேங்கடமென்னும் அழகிய பெயரை உடைய திருமலையின் மேல் ஏதேனுமொரு பொருளாகப் பிறக்கக் கடவேன் என்கிறார் ஆழ்வார்.

**11. மன்னிய தண்சாரல் வடவேங்கடத்தான் தன்**
**பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்துறைஞ்சி**
**கொன்ன விலுங் கூர்வேல் குலசேகரன் சொன்ன**
**பன்னிய நூல் தமிழ் வல்லார் பாங்காய பக்தர்களே''**

**பொருள்:**

''பகைவர்களைக் கொல்லும் தொழிலைப் பயின்ற கூர்மையான வேலாயுதத்தையுடைய குலசேகராழ்வார், நிலைபெற்ற குளிர்ச்சியுடைய வடவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானது பொன்போல் சிறந்த சிவந்த திருவடிகளைக் கண்டு வணங்குவதற்கு ஆசைப்பட்டுத் தொழுது அருளிச் செய்த ஆராய்ந்த நூல்களில் கூறிய இலக்கணத்திற்கு இசைந்த தமிழ்ப் பாடலைக் கற்று வல்லவர் அப்பெருமான் திருவுள்ளத்துக்கு இனிய பக்தர்களாவர்'' என்று முடிக்கிறார் குலசேகரர்.

**சிறுவினாக்கள்**

1. குலசேகராழ்வார், பெருமாள் திருமொழியில் படியாய்ப் பிறக்கும் பிறவியினை எழுதுக.
2. குலசேகராழ்வார் பெருமாள்திருமொழியில் இறைவனுடன் நெருக்கமாக இருந்து பொன் வட்டிலாகப் பிறக்கும் பேறு குறித்து எழுதுக.

**நெடுவினா**

1. திருவேங்கட மலையின் சம்பந்தம் வேண்டல் குறித்து குலசேகராழ்வார் எங்ஙனம் பாடுகிறார்?

# அலகு - 4
# திருக்குற்றாலக் குறவஞ்சி

குறவஞ்சி என்பதற்குக் குறவர் குலப் பெண் (குறத்தி) என்று பொருள். ''கடடினும் கழங்கினும்'' என்ற தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் தோன்றிய இலக்கியம். குறம், குறத்திப்பாட்டு என்ற வேறு பெயர்களும் உண்டு. குறவஞ்சி ஓர் அக இலக்கிய நூல் எனினும் தலைவன் தலைவியின் பெயர் கூறப்படும். பாட்டுடைத்தலைவன் உலா செல்லும் போது கண்டு காதல் கொண்டு தவிக்கும் தலைவிக்கு குறித்தி ஒருத்தி குறி சொல்வதாக அமைவது குறவஞ்சி இலக்கியம். இயற்றமிழ், இசைத்தமிழ் இரண்டும் கலந்த இலக்கியம் குறவஞ்சி. முதல் குறவஞ்சி நூல் திருக்குற்றாலக் குறவஞ்சி. திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய திருக்குற்றலாக் குறவஞ்சி இதன் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு ஆகும்.

**இறைவனின் திருவுலா**

**1. கட்டியக்காரன் வந்தான்**

மன்மதன் தன் தேராகிய தென்றலிலே ஊர்ந்து வருபவன். அங்ஙனம் அவன் வருவதனால் வசந்த வீதிகளை உடையதாகத் திருக்குற்றால நகரம் விளங்கியது. அதன்கண் திருக்கோவில் கொண்டிருக்கும் செல்வர், குற்றாலத்து ஈசர் ஆவர். அவர், வீதியூடே பவனி வரப்போகின்றார். நில மக்களைத் தன் மனைவியாக உடையவன் திருமால்; அவனே எருது ஊர்தியாக அந்த இறைவனைத் தாங்கி வருபவன். அந்த விடையிலே ஏறியமர்ந்து அவர் இதோ பவனி வரப்போகின்றார். அதனைப் பற்றி ஊரவர்க்குக் கூறி எச்சரிக்கை கொண்ட முப்புரிநூல் விளங்கும் மார்பினையும், தன் கையிலே நெடிய கைப்பிரம்பினையும் உடையவனாக மழைக் காலத்தைக் கொண்ட மழைமேகங்களுள் சிறந்து விளங்கும் கருமையான ஒரு மேகத்தைப் போலக் கருநிறமுடையனான அக்கட்டியக்காரனும் குற்றாலத் தெருவிலே வந்தனன்.

**''தேர்கொண்ட வசந்த வீதிச் செல்வர்குற்றாலத் தீசர்**
**பார்கொண்ட விடையில் ஏறும் பவனி எச்சரிக்கை கூற**
**நேர்கொண்ட புரிநூல் மார்பும் நெடியகைப் பிரம்பும் ஆகக்**
**கார்கொண்ட முகிலேறு என்னக் கட்டியக்காரன் வந்தான்''**

**கண்ணிகள்**

உலகத்து மக்களை எல்லாம் முறைசெய்து காப்பவர்கள் மண்ணுலகத்து அரசர்கள். தேவருலகத்துப் பலரையும் காப்பவர் தேவேந்திரன் முதலாகிய அவ்வவ்வுலகத்து இறைவர்கள். இவர்கள் முதலியோரை எல்லாம், சிவ சன்னதியிலே நெறிமுறை தவறாமற் காத்தருளும் செய்கோலான பிரம்பினை உடையவன் அவன். மகாமேரு பர்வதத்தையே வில்லாக வளைத்துக் கைக்கொண்டவர், மேலான உயர்வினையுடையவர், திருக்குற்றாலநாதர். அவருடைய திருக்கோவிலின் திருவாசலிலே. கட்டியங்கூறி நிற்கும் கட்டியக்காரனாகிய அவனும், அவருடைய பவனிவரும் எச்சரிக்கைபற்றிய செய்தியை, அனைவருக்கும் கூறுவதற்காக நகரத்து வீதியிலே எழுந்தருளி வந்தனன்.

**''பூமேவு மனுவேந்தர் தேவேந்தர் முதலோரைப்**
**புரந்திடும்செங் கோலான பிரம்புடையான்**
**மாமேருச் சிலையாளர் வரதர்குற் றாலநாதர்**
**வாசற் கட்டியக் காரன்வந் தனனே!''**

## 2. ஞாயிறுபோல் மேவினாரே

தன்னுடைய வாக்கின்படியே வடதிசையினின்றும் எழுந்து தென்திசை நோக்கிப் போந்த குறுமுனியாகிய அகத்தியருக்காக, மானைத் தாங்கிய தன் திருக்கையை அபயமாகக் காட்டியருளிய அருள் உள்ளத்தினை உடையவர் குற்றாலநாதர். சீர்மைகளின் தேக்கமாகச் செறிவுற்று எழுந்தவை நான்கு வேதங்களும்; அவை சிலம்புகளாக அவன் திருப்பாதங்களிலே அமைந்து கிடந்து ஒலி முழங்கும். அவன் ஏறிவருகின்ற விடையோ மலைபோன்றதாகும். அதன்மீது ஏறியமர்ந்து, மேற்குத் திசையிலே தோன்றும் இளம்பிறையைத் தன் சடையிலே சூடியவனாகக், கிழக்குத் திசையிலே எழுந்து வரும் இளஞாயிறுபோல அவன் அதோ காட்சியளிக்கின்றான். மூக்குகளிலே எடுப்பாகத் தோன்றும் மூக்குத்திகளை அணிந்தவரான இளநங்கையர்கள். அணிவகுத்தாற்போல இரு மருங்கும் திரண்டு நிற்கின்ற, நன்மை பொருந்திய மூதூரான குற்றால நகரத்தின் வீதியிலே, அவன் இதோ எழுந்தருளி வருகின்றான். காண்பீர்! காண்பீர்! இப்படி அறிவித்துக் கொண்டே வருகின்றான். அந்தக் கட்டியக்காரன்.

**"மூக்கெழுந்த முத்துடையார் அணிவகுக்கும்**
**நன்னகர மூதூர் வீதி**
**வாக்கெழுந்த குறுமுனிக்கா மறியெழுந்த**
**கரங்காட்டும் வள்ள லார்சீர்த்**
**தேக்கெழுந்த மறைநான்கும் சிலம்பெழுந்த**
**பாதர்விடைச் சிலம்பில் ஏறி**
**மேக்கெழுந்த மதிசூடிக் கிழக்கெழுந்த**
**ஞாயிறுபோல் மேவினாரே"**

**பொருள்:**

மூக்கெழுந்த முத்துடையார் - முத்து மூக்குத்தி அணிந்தவான நங்கையர். அணி – வரிசை, வகுக்கும் - வகுத்து நிற்கும். 'வருக்கை' பாடமாயின் குறும்பலாவினையுடைய நன்னகரம்)

## 3. பவனிவந்தனரே

பவனி வருகின்றனர்; இளமை பொருந்திய விடையின் மீது ஏறி, அதோ நம் இறைவன் பவனி வருகின்றனர்.

உலகத்தவரெல்லாம் போற்றிய பெருமான்; குறும்பலாவின் அடியிலே வீற்றிருக்கின்றவன்; மவுன நாயகனாகவும்; எவன நாயகனாகவும் விளங்குபவன்; சிவனுமாகவும்; அரியுமாகவும், அயனுமாகவும் விளங்கும் ஏக மூர்த்தி! விரைந்து செல்லுகின்ற எருதின்மீது ஏறியவனாக, இதோ பவனி வந்து கொண்டிருக்கின்றார்!

தேவர்களின் கூட்டமும், முனிவர்களின் கூட்டமும், அசுரர்களின் கூட்டமும், மனிதர்களாகிய தொண்டர்களின் கூட்டமும், அனைத்துமே கண் இமைப்பில்லாதவராயினர் போலும் எனச் சொல்லும்படியாக, ஒருவரோடொருவர் கலந்து தனித்தனியே மயக்கம் உடையவராயினர். தொன்மையாக வரும் மக்களினத்தவர் இவர். தேவர்கள் இனத்தவர் இவர் என, நந்திப் பெருமான் அவர்களை மீண்டும் மீண்டும் பகுத்துப் பகுத்துத் தனித்தனியே நிறுவினன். அவ்வேளைகளிலே எல்லாம், ஆர்வத்தால் அவ்வப்பகுதிகட்குள் அடங்காது. இறைவனைத் தரிசிக்க முனைந்து வரும் அரசர்களை, நந்தி பிரம்படியினால் புடைத்து ஒதுக்க, அவ்வடிகள் அவர்களின் மகுட கோடிகளிலே பட்டு அவரை வருத்தும். இவ்வண்ணமாகக், குற்றால நாதர் இதோ பவனி வந்து கொண்டிருக்கின்றனர்.

**“பவனி வந்தனரே! முழவிடைப் பவனி வந்தனரே**

**அவனி போற்றிய குறும்ப லாவுறை**
**மவுனநாயகர் எவன நாயகர்**
**சிவனு மாயரி அயனு மானவர்**
**கவன மால்விடை அதனில் ஏறியே**

**அண்டர் கூட்டமும் முனிவர் கூட்டமும்**
**அசுரர் கூட்டமும் மனிதர் ஆகிய**
**தொண்டர் கூட்டமும் இமைப்பி லாரெனச்**
**சூழ்ந்து தனித்தனி மயங்கவே**
**பண்டை நரரிவர்தேவர் இவரெனப்**
**பகுத்து நிறுவிய வேளை தொறுந்தொறும்**
**மண்ட லீசரை நந்தி பிரம்படி**
**மகுட கோடியிற் புடைக்கவே.**

(பவனி – உலா. முழவிடை - இளையதான ஏறு. அவனி – உலகம். மவுன நாயகர் – சிவதவசி, எவன நாயகர் - இளமைக்கு நாயகமாகத் திகழ்பவர்.)

2. அடியார்களுக்கு அல்லல் வாராது தடுத்துக் காப்பது கை; அடியார் வேண்டுவனவற்றைத் தந்து கருணைபாலிப்பது ஒருகை; தாம் தரித்த ஒளியுடைய மழுப்படையை உயர்த்தி மேலே கொண்டது ஒரு கை; தாம் தாங்கும் சிறு மானைப் பிடித்திருப்பது ஒரு கை; இப்படியாக இறைவனின் நான்கு கைகளும் விளங்கும். பாம்பாகிய ஆபரணம் துலக்கமாகத் தோன்றும். தான் அழித்த ஒரு புலியானது கொடுத்த ஆடையினையும், ஆனையானது கொடுத்தமேற்போர்வையாகிய உரியினையும் அவன் உடுத்திருப்பவன். அழகிய இடையானது அசைய அவன் விடையூர்ந்து வருகின்றான். மலரிலே வாழும் அயனானவன் கொடுத்த. மண்டையோடாகிய உண்கலம் தன் கையிலே பொருந்தியிருக்க, அவன் இதோ பவனி வந்து கொண்டிருக்கின்றனன்!

**“தடுப்ப தொருகரம் கொடுப்ப தொருகரம்**
**தரித்த சுடர்மழு விரித்த தொருகரம்**
**எடுத்த சிறுமறி பிடித்த தொருகரம்**
**இலங்கப் பணியணி துலங்கவே**
**அடுத்த ஒருபுலி கொடுத்த சோமனும்**
**ஆனைகொடுத்தவிதானச் சேலையும்**
**உடுத்த திருமருங் கசைய மலரயன்**
**கொடுத்த பரிகலம் இசையவே”**

3. தம்மைத் தொடர்ந்து வரும் ஒப்பற்ற பெருச் சாளியின் மீது ஏறியவர் மூத்த பிள்ளையாராகிய திருமகன்; அவர் ஜெயப்படை தாங்கி அவனுடன் வருகின்றார். வன்மை பொருந்திய மயில் வாகனத்தையுடைய இளவரச குமரப் பெருமான்; அவர் வெற்றி வேலினைத் தாங்கி உடன் வருகின்றார். அகன்ற மார்பினிடத்தே கொன்றை மாலையானது விளங்குகின்றது. அது விளங்குதலால், அதனோடு மணிப்பதக்கத்தின் ஒளியும் அவன் மார்பிடத்தே கலந்து தேங்கிக்

கொண்டிருக்கின்றது. தம்மை எல்லாம் அடியவராக உடைய தலைவனின் உலா வருகையினைக் கண்டு கண்டு உலகமெல்லாம் வளத்தால் தழைத்து ஓங்குமாறு இறையவர் இதோ திருவீதியிலே உலாவந்து கொண்டிருக்கின்றார்.

**"தொடரும் ஒருபெருச் சாளி ஏறிய**
**தோன்றல் செயப்படை தாங்கவே**
**உடைய நாயகன் வரவு கண்டுகண்டு**
**உலகெலாந் தழைத் தோங்கவே"**

4. 'இடியின் முழக்கத்தோடு வந்து கொண்டிருக்கும் கருமேகம்' என்னும்படியாக, யானைகளின் மேலாகவிருந்து பெரிய பெரிய பேரிகைகளின் முழக்கங்கள் ஒருபால் எழுகின்றன. உடுக்கையின் முழக்கம் ஒருபால் எழுகின்றது. இவ்விரு முழக்கங்களாலும் எழுகின்ற பேரொலியினைத் தாளாமல் அட்டதிக்குக் களிறுகளும் தத்தம் துதிக்கைகளால் தத்தம் செவிகளைப் புதைத்துக் கொள்ளுகின்றன. அடியவர்கள் முழக்கிய திருப்பல்லாண்டின் இசையானது பரந்து சென்று, மூடிய அச்செவிகளைத் திறந்தது. நாயன்மார்கள் மூவரும் இறைவனின் பெருமைகளை வடித்துத் தந்த திருமுறைகள் ஒருபுறமாகவும், நான்மறைகளின் முழக்கம் ஒரு புறமாகவும் முறையே வழங்கிவர, நம் இறையவரும், திருவீதியிலே இதோ உலா வருகின்றனர்.

**'இடியின் முழக்கமும் பரந்து திசைக்கரி**
**துதிக்கை யாற்செவி புதைக்கவே**
**அடியார் முழக்கிய திருப்ப லாண்டிசை**
**அடைந்த செவிகளும் துறக்க மூவர்கள்**
**வடிசெய் தமிழ்த்திரு முறைகள் ஒருபுறம்**
**மறைகள் ஒருபுறம் வழங்கவே!"**

5. பொன்னாற் புனையப்பெற்ற தம்புரு, கின்னரம் ஆகியவையும் மிகுந்த விருப்பத்தை எழச் செய்யும் வீணையும் இனிதே மிழற்றுகின்றன. மிகுதியான அழகுள்ள முத்துப் பல்லக்கும் திருக்குடையும் அழகிய ஆலவட்டங்களும் பெருமானுக்கு நிழல் தந்து வருகின்றன. வனிதை மார்கள் பலர் குஞ்சம், சாமரை, விசிறி ஆகியவற்றை. வரிசை வரிசையாக இருபுறமும் நின்று சுழற்றிக் கொண்டே உடன் வருகின்றனர். தன நாயகனாகிய குபேரன், இந்திரன், வருணன் முதலிய சகலமான தேவர்களும், அவன் புகழைப் பாடிக் கொண்டே உடன் வருகின்றனர். இங்ஙனமாக, நம் பெருமான் இதோ பவனி வந்து கொண்டிருக்கின்றனர்

**"கனக தம்புரு கின்ன ரங்களி**
**ஆசை வீணை மிழற்றவே...**
**தனதன் இந்திரன் வருணன் முதலிய**
**சகல தேவரும் வழுத்தவே"**

6. சைவர்கள் மேன்மை நிலையினைப் பெற்றனர்; சமணர்கள் கீழான நிலையினைப் பெற்றனர். சகல சமயங்களும் இவ்வுண்மையை ஏற்குமாறு அவர் எழுந்தருளிப் பவனி வருகின்றனர். தம் கையிலே வலிய சக்கரப்படையினைத் தாங்கிய கருணைக்கடலான திருமாலோடு, கமலத் தோனாகிய பிரமனும் அவரது இருபுறமும் காத்து உடன் வருகின்றனர். "ஐம்பெருங்

கடவுளர்க்கும் தலைவன் வந்தனன்! அமரர்களுக்கு எல்லாம் முதல்வன் வந்தனன்! தெய்வங்கட்கெல்லாம் நாயகன் வந்தனன்!'' என்று கூறித் திருச்சின்னங்கள் அடுத்தடுத்து முழங்கிக் கொண்டிருக்கின்றன. இங்ஙனமாக, நம் இறையவர் பவனி வந்து கொண்டிருக்கின்றனர்.

**"சைவர் மேலிடச் சமணர் கீழிடச்**
**சகல சமயமும் ஏற்கவே**
**கைவ லாழியங் கருணை மாலொடு**
**கமலத் தோன்புடை காக்கவே**
**ஐவர் நாயகன் வந்த னன்பல**
**அமரர் நாயகன் வந்தனன்**
**தெய்வ நாயகன் வந்த னன்னெனச்**
**சின்னம் எடுத்தெடுத் தார்ப்பவே''**

7. படைவீரர் பெருக்கமும், படையணிகளின் பெருக்கமும், தேர்களின் பெருக்கமும், கொடிப்படைகளின் பெருக்கமும், யானைப் படைகளின் பெருக்கமும் குதிரைப் படைகளின் பெருக்கமும் தரை எங்கும் நெருக்கங்கொள்ளும்படியாக அணியணியாகத் திரண்டு வந்து கொண்டிருக்கின்றன. முதன்மையான கொடிகளின் அடர்த்தியானது பரந்த ஆகாயம் முழுவதையுமே போய் மூடின. அதனால், வானமும் இருண்டது. பின்னர், அவற்றினும் தனிப்பட்டதாகிய ஒளிப்பரப்பும் இடபக் கொடியானது அவற்றுக்கும் மேலாக எழுந்தது. திக்குகள் எல்லாம் தோன்றுமாறு அந்த இடபக்கொடியும் விளக்கம் பெற்று அவ்வாறு விளங்க, நம் இறையவர் எழுந்து, இதோ வீதி உலா வருகின்றனர்.

**"சேனைப் பெருக்கமும் தானைப் பெருக்கமும்**
**தேரின் பெருக்கமும் தாரின் பெருக்கமம்**
**ஆனைப் பெருக்கமும் குதிரைப் பெருக்கமும்**
**ஆவனி முழுதினும் நெருங்கவே**
**மோனைக் கொடிகளின் காடு நெடுவெளி**
**மூடி அடங்கலும் ஓடி இருண்டபின்**
**ஏனைச் சுடர்விரி இடப கேதனம்**
**எழுந்து திசை திசை விளங்கவே''**

8. கொத்தான மலர்களைச் சூடிய கூந்தலினராக தெய்வ மங்கையர்கள் குரவை ஆடுகின்றனர். அவருடைய குரலை ஒலியானது கடலின் பேரலை ஓசையினையும் அடங்குமாறு செய்வது போல மிகுதியாக எழுகின்றது. தம்முள் ஒத்த திருச்செவியினரான கனக, கம்பளர் என்னும் கந்தருவர்கள் இருவருடைய பாடல்களின் இனிமையானது ஏழு உலகங்களையும் உருகச் செய்து கொண்டிருக்கின்றது. மத்தளங்கள் இடிகள் போல முழங்குகின்றன. மயில் போன்ற சாயலுடையவரான நடன மாதர்களின் நடனங்கள் பெருக்கமாக வீதியிலே நிகழ்கின்றன. சக்தி, பைரவி, கௌரி ஆகிய திருப்பெயர்களையுடைய குழல்வாய் மொழி அம்மையானவள். பெருமானின் இடப்பாகத்திலே அமர்ந்திருக்கின்றனள். இங்ஙனமாக, நம் இறையவர், இதோ வீதி உலவந்து கொண்டிருக்கின்றனர்.

**"கொத்து மலர்க்குழல் தெய்வ மங்கையர்**

**குரவை பரவையை நெருக்கவே**
**ஒத்த திருச்செவி இருவர் பாடல்கள்**
**உலகம் ஏழையும் உருக்கவே**
**மத்த ளம்புயல் போன்மு ழங்கிட**
**மயிலனார் நடம்பெருக்கவே**
**சக்தி பயிரவி கௌரி குழல்மொழித்**
**தைய லாளிடம் இருக்கவே"**

## 4. உலாக் காணவரும் பெண்கள்

பால்போன்ற வெண்ணிறம் உடையது சிவபிரான் ஏறி ஊர்ந்து வருகின்ற அந்த இடபம். அதன் மேல் ஊர்ந்துவரும் திரிகூடப் பெருமானாரின் பவனியைக் காணக். கன்னிமார்கள் பலரும் திரள் திரளாக வந்து கொண்டிருக்கின்றனர். தென்றற் காற்றிலே ஏறிவரும் காமதேவனுக்காகக், கைகளிலே படைதாங்கித் துணை வருகின்ற சேனையர் போன்றோர் அக்கன்னிமார்கள் ஆடவர் உள்ளத்தே கலகம் விளைவிக்கும் கெண்டை மீனை ஒத்த தம் விழிக்கண்களைத் தீட்டியவர்களாக அவர்கள் வருகின்றனர். புருவங்களாகிய நெடிய விற்களை வளைத்தவர்களாக அவர்கள் வருகின்றனர். 'ஆடவர்கள் எல்லாம் மயக்கங்கொள்ளுமாறு அவர்களைப் போரிட்டு வெல்வோம்' என்று, தம் கால்களிலே விளங்கும் மாணிக்கப் பரல்களிட்ட சிலம்புகளாகிய முரசங்கள் முழக்கமிட, அவர்கள் நடந்து வருகின்றார்கள்.

**"பாலேறும் விடையில்வரம் திரிகூடப்**
**பெருமானார் பவனி காணக்**
**காலேறும் காமனுக்காக் கையேறும்**
**படைப்ப வுஞ்சாய்க் கன்னிமார்கள்**
**சேலேறுங் கலகவிழிக் கணைதீட்டிப்**
**புருவநெடுஞ் சிலைகள் கோட்டி**
**மாலேறப் பொருதும்என்று மணிச்சிலம்பு**
**முரசறைய வருகின்றாரே"**

## 5. கன்னியரின் பேச்சு

ஒரு மானைப் பிடித்து வந்த பெருமானாகிய குற்றால நாதரைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்ற ஒருகோடி மான்களைப்போல ஒருகோடி மடவார்கள் வந்தனர். அவர்களுள் அவனைப் பார்த்தவர்கள் தமக்குள் இவ்வாறாகப் பேசத் தொடங்குகின்றனர்: முப்புரி நூலணிந்திருக்கும் மார்பினையுடையவன் இவன். அதனால், 'இவன் அயனே' என்பார் சிலர். 'அயனாக இருந்தால் சினங்கொண்டு விளங்கும் பாம்பாபரணம் அவனுக்கு ஏது? காதுகளிலே ஒப்பற்ற சங்கக் குண்டலங்கள் ஏது? ஆகவே 'இவன்' அயன் அல்லன்' என்று, அவருக்குப் பதிலுரைப்பார்கள் சில பேர்.

**ஒருமானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்துவரும்**
**ஒருகோடி மான்கள்போல் வருகோடி மடவார்.**

**ஒருகோடி மார்பனிவன் அயனென்பார் அயனாகில்**
**பொங்கரவம் ஏதுதனிச் சங்கம்ஏ தென்பார்.**

ஒரு கையிலே வளையலை அணிந்து கொண்ட பெண்கள், தம் அடுத்த கையிலேயும் வளையலைப் பூண மறந்தவராக அவனைக் காணுவதற்கு ஓடுவார்கள். அவர்களின் நிலைதடுமாற்றத்தினைக் கண்டு நகைப்பார்கள் சிலர். அவர்களருகே சென்றதும் அப்பெண்கள் வெட்கித் தலைகவிழ்ந்து நிற்பார்கள். இரு தனங்களுக்கும் மேலாக அணியும் இரவிக்கையினைத், தம் மயக்கத்தினால் அரையிலுடுக்கும் உடையெனக் கருதி உடுக்க முயல்வார்கள் அவர்கள். பின்னர், அரையிலே அணியும் உடையினை ரவிக்கையென மயங்கிச் சாந்தம் பூசிய தம் முலைகளுக்கு மேலே இடுவார்கள் அப்பெண்கள்.

**ஒருகைவளை பூண்ட பெண்கள் ஒருகைவளை பூணமறந்து**
**ஓடுவார் நகைப் பவரை நாடுவார்கள் கவிழ்வார்.**

**இருதனத்து ரவிக்கைதனை அரையிலுடை தொடுவார்பின்**
**இந்தவுடை ரவிக்கையெனச் சந்தமுலைக் கிடுவார்.**

எதனையும் கருதி உணர்கின்ற மனமானது அவரை விட்டுப் புறத்தே உலாவரும் நாதனை நோக்கிப் போய்விட, ஒரு கண்ணுக்கு மை எழுத எடுத்த கையினராகவும், ஒரு கண்ணிலே மை இட்டவராகவும் தம்மை மறந்து ஓடி வருவார்கள் சில பெண்கள். ‘நம் உள்ளம் கவர்ந்த மன்னவன் இவன். நல்ல நம் நகரத்துத்தெருவினிலே இவன் நெடுநேரம் நிற்கமாட்டானோ! எம்மை வருத்தும் மதனை இன்னமும் அவன் வெல்லமாட்டானோ?’ என்று துடிதுடிப்பார் சில பெண்கள்.

**கருதுமனம் புறம் போக ஒரு கண்ணுக்கு மையெடுத்த**
**கையுமாய் ஒரு கணிட்ட மையுமாய் வருவார்.**

**நிருபனிவன் நன்னகரத் தெருவிலே நெடுநேரம்**
**நில்லானோ மதனை இன்னம் வெல்லானோ என்பார்.**

எம் தோள்களிலே யாம் பூண்டுள்ள வளைகளும், கழுத்திலே மறுவுடையவனாகிய தெய்வநாயகன் தன் சடையிலே முடித்த வெண்பிறையும் எம் பெண்மதிபோலத் தளர்வுற்று விளங்குகின்றனவே?’ என்பார்கள் சில பெண்கள். ‘நச்சுப் பையினையுடைய பாம்புகளை வளைத்துச் சூடிக் கொண்டிருக்கும் இவனுடைய உடலிலே, கிடந்து வளைந்து கொண்டிருக்கும் அந்தப் பாம்புகட்குத் தான் பசியாதோ? எம்மை வருத்துகின்ற இத்தென்றலைத்தான் புசித்து எம்மைக் காவாதோ?’ என்பார்கள் சில பெண்கள்.

**மெய்வளையும் மறுவுடைய தெய்வநாயகன்முடித்த**
**வெண்மதியும் விளங்குதெங்கள் பெண்மதிபோல் என்பார்.**

**பைவளைத்துக் கிடக்குமிவன் மெய்வளையும் பாம்புகட்குப்**
**பசியாதோ தென்றலைத்தான் புசியாதோ என்பார்.**

‘வளையலணிந்த நம் கைகள் தோள்களிலே பதியும்படியாக. இவன் மார்பிலே அழுந்தாமல் நமக்குப் பூரித்து எழுந்திருக்கும் அழகிய முலைகள்தாம் என்ன முலைகளோ? அவை எழுந்ததன் பயனைப் பெற்றிலவே’ என்பார்கள் சிலர். ‘மேகங்களும் வெட்க முறும்படி யமைந்த கூந்தலினை அவிழ்ந்து தொங்கச் செய்தான்; நம் கைவளைகளைக் கவர்ந்து கொண்டான்; இஃதென்ன மாயமோ? இவன் சடைதரித்த நியாயமும் இதுதானோ?’ என்பார் மற்றும் சில பேர்கள்.

**இவ்வளைக்கை தோளழுந்த இவன்மார்பில் அழுந்தாமல்**
**என்னமுலை நமக்கெழுந்த வன்னமுலை என்பார்.**

**மைவளையும் குழல்சோரக் கைவளைகொண் டானிதென்ன**
**மாயமோ சடைதரித்த ஞாயமோ என்பார்.**

## வசந்தவல்லியின் காதல்

### 1. வசந்தவல்லி வந்தாள்

பொன்போலும் அணி செய்வதாகிய பொட்டினை நெற்றியிலே தீட்டிக் கொண்டாள்; கூந்தலிலே அழகிய மலர் மாலையனைச் சூட்டிக் கொண்டாள்; அழகிற் சிறந்த மோகினியைப் போலத் தன்னை அழகுறப் புனைந்து காட்டிக் கொண்டாள்; நன்மையுடைய குற்றால நகரத்துப் பெருமானின் முன்னர்ச் சென்று, தம் நாணமும் ஆடையும் இழந்து நின்ற கன்னியர்களுக்குத் தானும் ஒரு துணையாவாள் போலக் காட்டிக் கொண்டவளாக, ஆடவர்கள் பகுதி எங்கணுமே காமவேளின் கலகச் செயலை மூட்டிவிடுபவளே போல, வசந்தமோகினி என்பவள், தன் வீட்டினின்றும் புறப்பட்டு வெளியே தெருவில் வருவாளாயினாள்.

**நன்னகர்ப் பெருமான் முன்போய்**
**நாணமும் கலையும் தோற்ற**
**கன்னியர் சநுப்போற் காட்டிக்**
**காமவேள் கலகம் மூட்டிப்**
**பொன்னணித் திலகம் தீட்டிப்**
**பூமலர் மாலை சூட்டி**
**வன்னமோ கினியைக் காட்டி**
**வசந்தமோ கினிவந்தாளே**

### 2. அவள் வரும் அழகு:

பொன்னாலாகிய ஆபரணங்கள் பலவற்றையும் பூட்டிக் கொண்டாள். நெற்றிக்குத் திலகம் இட்டுக் கொண்டாள். மாரனையும் தன் கண் பார்வையினாலேயே மயங்கச் செய்பவள் போலத் தோன்றினாள். சிருங்காரத்துக்கு ஏற்ற அந்த மோகனப் பெண்ணாளான வசந்த வல்லியானவள் இப்படியாகத் தேவலோகத்து அரம்பையைப்போல வீதியிலே வந்து கெண்டிருந்தாள்.

தன்னை ஏறெடுத்துப் பார்ப்பவரின் கண்களுக்குத் தன் இரண்டு கண்களுமே ஏற்ற பதிலைக் குறிப்பாலேயே சொல்லத் திரிகூடக் கண்ணுதலைத் தன் பார்வையினாலே வென்று வசப்படுத்தப், பெண்ணுக்குப் பெண்ணும் மயக்கங்கொள்ளும்படியான பேரெழிலுடன்,

வசந்தவல்லியானவள், அன்னத்தின் பேடையைப் போலே, மெல்ல மெல்ல நடை பயின்று வெளியே வந்து கொண்டிருந்தாள்.

**வங்காரப் பூஷணம்பூட்டித் -திலகந்தீட்டி**
**மாரனைக்கண் ணாலே மருட்டிச்**
**சிங்கார மோகனப் பெண்ணாள் - வசந்தவல்லி**
**தேவரம்பை போலவே வந்தாள்.**

**கண்ணுக்குக் கண்ணிணை சொல்லத் -திரிகூடக்**
**கண்ணுதலைப் பார்வையால் வெல்லப்**
**பெண்ணுக்குப் பெண்ம யங்கவே-வசந்தவல்லி**
**பேடையன்னம் போலவே வந்தாள்.**

கைகளிலே தன் ஆர்வம் தீரும் அளவுக்குச் சூடகங்களை இட்டுக் கொண்டாள். தன் போன்றவரான, பிற இளமங்கையர்களை எல்லாம் வெற்றி கொள்ளும் பொருட்டுத் தன் கண்ணிலே. தான் ஏதுமறியாதவள் போலேயொரு நாடகத்தையும் இட்டுக் கொண்டாள். ஒய்யாரமாக நடை நடந்து, இந்த வசந்தவல்லியானவள், ஓர் ஓவியத்தைப் போலே தானும் வீதியிலே வந்து தோன்றினாள்.

சல்லாபத்துக்குரிய, தன் மனைவியான குழல்வாய் மொழி அம்மையுடன் இன்புற்று மகிழ்கின்றவர் குற்றாலநாதர். அவர் உலாவந்து கொண்டிருக்கும் நீண்ட சங்கவீதியிலே உல்லாசம் பொருந்திய நடனமாதான இரதிதேவியைப் போல விளங்கும் வசந்தவல்லியானவள், ஊர்வசியும் தன்னைக் கண்டு வெட்க முறுமாறு ஒயிலுடன் நடந்து வந்தாள்.

**கையாரச் சூடகம் இட்டு-மின்னாரை வெல்லக்**
**கண்ணிலொரு நாடகம் இட்டு**
**ஒய்யார மாக நடந்து-வசந்தவல்லி**
**ஓவியத்தைப் போலவே வந்தாள்.**

**சல்லாப மாது லீலர் – குற்றால நாதர்**
**சங்கநெடு வீதிதனிலே**
**உல்லாச மாது ரதிபோல் - வசந்தவல்லி**
**உருவசியும் நாணவே வந்தாள்.**

## 3. வசந்தவல்லியின் அழகு

1. இருண்ட மேகங்கள் தம்முள் சுற்றிச் சுருண்டு சுழி கொண்டு எறிந்தாற்போல விளங்கும் சுருண்ட மயிரடர்ந்த கொண்டையினாள் அவள். காதளவு ஓடிக், காணும் ஆடவர்களது நெஞ்சையெல்லாம் சூறையாடும் கயல்மீன் விழியினாள் அவள். திருத்தமான அழகினையுடைய முருக்கம் பூவினது அரும்பினைப் போலச் செக்கச் சிவந்திருக்கும் இதழ்களை உடையவள் அவள். அழகிய வில்லைப் போல வளைந்து, இளம் பிறையின் வடிவினைப் போல விளங்கி, ஒளியுடன் திகழுகின்ற நெற்றியினையும் உடையவள் அவள்.

**இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு**
**சுழி எறியும் கொண்டையாள்**
**ஏறி யாடி நெஞ்சைச் சூறையாடும்**
**விழிக் கெண்டையாள். (குழை)**
**திருந்து பூமுருக்கின் அரும்புபோ**
**லிருக்கும் இதழினாள்**
**சிலையைப் போல்வளைந்து பிறையைப்போல்**
**இலங்கும் நுதலினாள்.**

2. அரம்பையரின் தேசமாகிய வானுலகத்து வில்லாகிய வானவில்லும். இவள் புருவத்தின் அழகைப் பெறல் வேணடும் என விருப்பமுற்று ஆசையாகச் சொல்லுமளவுக்கு, அழகாகத் தோன்றும் புருவங்களையுடையவள் அவள். ஆடவராகிய பிறரின் அறிவை எல்லாம் மயக்குகின்ற, ஒப்பற்ற ஒரு கர்வமானது குடிகொண்டிருக்கும் மங்கைப் பருவத்தினள் அவள். கருப்பஞ்சாறு போல இனித்தும், அமுதம் போல வாழ்வு தந்தும் விளங்கும் சொல்லினை உடையவளும் அவள், ஆரவாரிக்கும் கடலைகள் கொணர்ந்து குவித்த முத்துக்களை, நிரையாகப்பதித்து வைத்தாற்போன்ற பல்வரிசையினையும் உடையவள் அவள்.

**அரம்பை தேசவில்லும் விரும்பி**
**ஆசை சொல்லும் புருவத்தாள்**
**அறிவை மயக்குமொரு கருவம் இருக்கும்**
**மங்கைப் பருவத்தாள்.**
**கரும்பு போலினித்து மருந்துபோல்**
**வடித்த சொல்லினாள்**
**கத்துந் திரைகொழித்த முத்து**
**நிரை பதித்த பல்லினாள்.**

3. பல்வரிசையின் அழகினை எட்டி எட்டிப் பார்ப்பது போலே மூக்கிலே விளங்கும் ஒப்பற்ற முத்துப் புல்லாக்கினையும் உடையவள் அவள். திங்களும் பழகுவதற்குரிய ஒளிடைய வடிவு நிலைபெற்று. அழகு குடிகொண்டிருக்கும் முகத்தினையும் உடையவள். ஒளி பொருந்திய பல வகையான அணிகளை எல்லாம் புனைந்து, அதனால் கொடி படர்ந்திருக்கும் கமுகையும் வெற்றி கொண்ட கழுத்தினையுடையவள். உலகனைத்தையும் தனக்குரிய விலையாக இட்டு எழுதி அத்துடன் இன்பநிலை இதுவே’ எனவும் எழுதியது போன்ற தொய்யிலாகிய எழுத்தினையும் உடையவள்.

**பல்லின் அழகைஎட்டிப் பார்க்கும்**
**மூக்கிலொரு முத்தினாள்**
**பழகும் வடிவுதங்கி அழகு**
**குடிகொளும் முகத்தினாள்.**
**வில்லுப் பணிபுனைந்து வல்லிக்**
**கமுகைவென்ற கழுத்தினாள்**
**விலையிட் டெழுதியின்ப நிலையிட்**
**டெழுதுந் தொய்யில் எழுத்தினாள்.**

4. மணிகள் பதித்த தங்கத்தாற் செய்த அழகிய கடகங்கள் இட்டு விளங்கும் சிவந்த கைகளையும் உடையவள். எவ்விடத்து கச்சுக்குள் அடங்கிக்கிடப்பனவாயினும் காணக் காணத் தித்தித்துக் கிடக்கும் இரு கொங்கைகளையும் உடையவள். இறைவனடிகளிலேயே ஒன்றிக் கிடக்கும் கருத்தினரான தவசிகளின் கல்லான மனமும் சுழலும்படியாகச் செய்யும் அழகிய உந்திச் சுழியினையும் உடையவள். அந்த உந்திச் சுழிக்கும் மேலாக, ஒழுங்குகொண்டு, ஆடவரின் உள்ளத்தை விழுங்கும் சிறிய ரோம பந்தியினையும் உடையவள் அவள்.

**கல்லுப் பதித்ததங்கச் செல்லக்**
**கடகம்இட்ட செங்கையாள்**
**கச்சுக் கிடக்கினும்தித் திச்சுக்**
**கிடக்குமிரு கொங்கையாள்.**
**ஒல்லுங் கருத்தர்மனக் கல்லுஞ்**
**சுழிக்குமெழில் உந்தியாள்**
**ஒழுங்கு கொண்டுளத்தை விழுங்குஞ்**
**சிறிய ரோம பந்தியாள்.**

5. உடுக்கையின் நடுவிலேயுள்ள குறுகிய பகுதியானது பெண்களின் இடையில் நுண்மைக்கு உவமையாகக் கூறப்படும். அதற்கும் உள்ளடங்கிய மிக நுண்மையான இடையினையும் உடையவள் அவள். ஒரு கைப்பிடிக்குள்ளே அடங்கிவிடுகின்ற அவ்வளவு சின்ன இடையினள். காமன் இளைஞர் உள்ளங்களை நிலையழியச் செய்து இன்புறுகின்ற ஒரு துட்டன். அவனுடைய அரண்மனைவாயிலுக்குக் கட்டி வைத்துள்ள கதலி வாழைகளைப் போல விளங்கும் அழகிய தொடைகளையும் உடையவள் அவள். அடுக்கடுக்காகப் பல வண்ணங்களையுடைய சேலையினைத் தேர்ந்தெடுத்து, அவற்றை நெறிப்படுத்திக் கொய்து, அழகாக உடுத்துக் கொண்டிருப்பவள் அவள். அன்னப் பேட்டின் நடையினுங் காட்டில் மெல்லென நடை பயின்றுவரும் மென்மையான நடையினளும் அவள்.

**துடிக்குள் அடங்கியொரு பிடிக்குள்**
**அடங்குஞ்சின்ன இடையினாள்**
**துட்டன் அரண்மனைக்குக் கட்டும்**
**கதலிவாழைத் தொடையினாள்.**
**அடுக்கு வன்னச்சேலை எடுத்து**
**நெறிபிடித்த உடையினாள்**
**அன்ன நடையிலொரு சின்ன**
**நடைபயிலும் நடையினாள்.**

6. ஆலைகளின் ஆரவாரத்தையுடைய கடலினிடத்தே தோன்றிய அமுதத்தை எடுத்து, அப்படியே பெண்ணின் உருவாகச் சமைத்ததுபோல விளங்கும் அமுதத் திருமேனியினையும் உடையவள் அவள். அடுதல் தொழிலிலே வீமனுடைய பாகமே சிறந்தது என்பார்கள்; அத்தகையோனால் பாகம் செய்யப் பெற்றது போலப் பக்குவமுடன் காய்ச்சப்பட்டுள்ள காமப்பாலுக்கு, மேலும் மேலும் சுவையூட்டுவதற்கு ஏற்புடைய சீனியினைப் போன்றவள் அவள். நறுமணம் கொண்டுள்ள வல்லிக் கொடியினைப்போல விளங்கும். வசந்தவல்லி' என்பவளினுடைய அழகின் பெருக்கமானது. அறுபத்து நான்கு சத்தி பீடங்களுள் ஒன்றாகிய

திருக்குற்றாலத்திலே எழுந்தருளியிருப்பவரான திரிகூட ராசரையும் கூடத், தம் சித்தம் உருகச் செய்யும் வண்ணம் மேற்கண்டவாறு விளக்கிற்று.

**வெடித்த கடலமுதை எடுத்து**
**வடிவுசெய்த மேனியாள்**
**வீமப் பாகம்பெற்ற காமப்**
**பாலுக்கொத்த சீனியாள்.**
**பிடித்த சுகந்தவல்லிக் கொடிபோல்**
**வசந்தவல்லி பெருக்கமே**
**பீடவாசர்திரிகூட ராசர் சித்தம்**
**உருக்குமே.**

4. **பந்தடி பயிலுதல்**

சிவபெருமான் விளங்கிய மெய்யறிவினை உடையவா. அவருடைய திரிகூட நகரத்திலே மேலே சொல்லிய பேரழகினை உடையவளான வசந்தவல்லி என்பவள், தன் வீட்டினின்றும் வெளியே வந்து தோன்றினாள். 'தாவித் தாவிக் குதிக்க வேண்டும்' என்ற விளையாட்டு ஆர்வத்தினாலோ, அல்லது பணைத்த கொங்கைகள் பூரித்துள்ள பருவத்தின் குறும்பினாலோ, அவள் தன் தோழியருடன் பந்தடிக்கத் தொடங்கினாள். சுங்கு வளைகள் விளங்கும் கைகள் சிவக்கும் படியாக, நாலடி தூரம் முன்னுக்குத் தாவியும், பத்தடி தூரம் பின்னுக்கு வாங்கியும், அவள் ஒய்யாரமாகப் பந்தாடினாள்.

**வித்தகர் திரிகூடத்தில் வெளிவந்த வசந்த வல்லி**
**தத்துறு விளையாட்டாலோ தடமுலைப் பணைப்பி னாலோ**
**நத்தணி கரங்கள் சேப்ப நாலடி முன்னே ஓங்கிப்**
**பத்தடி பின்னே வாங்கிப் பந்தடி பயில்கின்றாளே.**

5. **பந்தாடிய சிறப்பு**

அப்படி, வசந்தவல்லியானவள் பந்தடிக்கும்போது, அவளுடைய செய்கைகளிலேயுள்ள வளையல்கள் 'கலீர் கலீர்' என்றும், 'செயம் செயம்' என்றும் ஒலி முழங்கின. 'இடை இனி நிலைத்திருப்பதே சந்தேகந்தான்' என்று சிலம்புகள் புலம்பிக் கொண்டிருக்க, அவற்றுடன் தாமும் கலந்து புலம்புவது போலத் தண்டைகளும் சேர்ந்து ஒலி முழங்கின. அவளுடைய இரு கொங்கைகளும் 'வடிவமைதியிலே தம்மைப் போன்று விளங்கும் கொடிய எதிரியான பந்தினை வென்று விட்டோம்' என்று குதூகலிப்பன போலக் குழைந்து குழைந்து குதித்து ஆடிக் கொண்டிருந்தன. இப்படியாக, மலர்களையுடைய பசுங்கொடிபோல விளங்கும் நங்கையான, வசந்த வல்லி என்னும் அந்த அழகியானவள் பந்தடித்துக் கொண்டிருந்தாள்.

மிகவும் பெரிய காதணிகளோடு நெருங்கிய கயல் மீன்களை யொத்த விழிகள் இரண்டும் புரண்டு புரண்டு ஆடிக் கொண்டிருந்தன. மேகம் போன்ற கூந்தலிலே மொய்த்துக் கொண்டிருந்த வண்டுகள் கலைந்துபோதலைக் கண்டு, மதனின் சிலையிலே நாணாக விளங்கும் வண்டும், அவற்றுடன் கலந்து உடனே போயிற்று. இனி, 'இங்கு இவள் பந்திடிக்கும் இந்த நிலையினைக் கண்டால், ஆடவர் உலகமானது என்ன பாடுதான் படுமோ?' என்று கவலைப்படுவது போல, அவளுடைய இடையும் துவண்டு துவண்டு வாட்ட மடைந்தது. மலர்க்கரசாகிய தாமரை மலரிலே வீற்றிருக்கும் திருமகள் போன்ற நங்கையாகிய அந்த வசந்தசவுந்தரி, அவ்வாறு எழிலுடன் பந்தடித்துக் கொண்டிருந்தாள்.

செங்கையில் வண்டு கலின்கலின் என்று
        செயம் செயம் என்றாட
சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு
        தண்டைகலந்தாட
கொங்கை கொடும்பகை வென்றனம் என்று
        குழைந்து குழைந்தாட
பைங்கொடி நங்கை வசந்த
        சவுந்தரி பந்து பயின்றனளே.

பொங்கு கனங்குழை மண்டிய கெண்டை
        புரண்டு புரண்டாடக்
மங்குலில் வண்டு கலைந்தது கண்டு
        மதன் சிலை வண்டோட
இங்கிது கண்டுல கென்படும் என்படும்
        என்றிடை திண்டாட
பங்கய மங்கை வசந்த சவுந்தரி
        பந்து பயின்றனளே.

சூடகம் அணியப் பெற்றிருக்கும் முன்கைகளிலே அணிந்துள்ள வெள்ளிய வளையல்கள் தம்மருகே தோன்றக்கண்டு, தோள் வளைகளும் மேலெழுந்தாடின. புனைந்துள்ள பாடகமும், சிறுபாதச் சிலம்பும் மேலும் கீழுமாக எழுந்தாடி அவை அங்கொரு பாவனை கொண்டவைபோல ஆடிக் கொண்டிருந்தன. நன்மை விளங்கும் நகரமாகிய திருக்குற்றாலத்து வீதியிலே, அழகிய பொன்கொடி போன்ற ஒயிலினளான அந்த வசந்தவல்லியானவள், நடனம் ஆடிக் கொண்டிருக்கும் ஒரு தோகை மயிலினைப் போலவே, ஒய்யாரமாகத் துள்ளித் துள்ளி அவ்வாறு பந்தடித்துக் கொண்டிருந்தனள்.

“இவள் திருமகளோ? இவள் இரதி தேவியோ? இவள் தேவலோகத்து அரம்பையோ? இவள்தான் அன்று அசுரரை மயக்கிய மோகினியோ?” என்று எல்லாம் கண்டோர் தம்மை மறந்து வியந்து நின்றனர். ‘மனம் முந்தியதோ? விழி முந்தியதோ? கரங்கள் முந்தியவோ? என்னும்படியாக, அவள் துள்ளித் துள்ளிப் பந்தாடினாள். சந்திரனைச் சூடியிருக்கின்றனவர், குறும்பலாவின் அடியிலே வீற்றிருக்கும் ஈசுவரர்; அவர் உலாவர, அவரைக் காண விரும்பிய தொண்டர் கூட்டம் நெருங்கியிருக்கும் சங்க வீதியிலே, பசிய வளைகளணிந்த நங்கையான வசந்தவல்லியானவள், இவ்வாறாகப் பந்தாடிக் கொண்டிருந்தனள்.

சூடக முன்கையில் வால்வளை கண்டிரு
        தோள்வளை நின்றாடப்
பாடக முஞ்சிறு பாதமும் அங்கொரு
        பாவனை கொண்டாட
நாடகம் ஆடிய தோகை மயிலென
        நன்னகர் வீதியிலே
ஆடக வல்லி வசந்த வொய்யாரி
        அடர்ந்து பந்தாடினளே!

இந்திரை யோவிவள் சுந்தரியோதெய்வ
        ரம்பையோ மோகினியோ
முந்திய தோவிழி முந்திய தோகர

முந்திய தோவெனவே
சந்திர சூடர்குறும்பல வீசுரர்
சங்கணி வீதியிலே
பைந்தொடி நாரி வசந்த ஒய்
யாரிபொற் பந்து கொண் டாடினளே!

## 6. பந்தாடலின் சிறப்பு

பூங்கொத்துகள் அணிந்துள்ள அழகிய கூந்தலானது அவிழ்ந்து தொங்கியது. அப்படித் தொங்கியவண்ணமாக அவள் முன்னால் அடியிட்டும், பின்னால் அடியிட்டும். இடையிலே மூன்றடி நாலடியிட்டு நடந்து சென்றும், வரைந்து மாதர்கள் கூட்டத்திலே ஒரு கலகலப்பு ஏற்பட, இடசாரி வலசாரியாகச் சுற்றிச் சுற்றி வந்தவளாகத் தன் சகிமார்கள் சூழப், பந்தடித்துக் கொண்டிருந்தனள். கோடிய காமனின் படையான அவள், அங்ஙனம் இளைஞரை வெல்லப் போரிடலிலே ஈடுபட்டிருந்த பாவனையைப் பார்த்த ஆண்களோ, 'இதனைப் பார்க்கப் பிரமன் நமக்கு ஆயிரம் கண்களைப் படைத்தானில்லையே?' என்றுதான் எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தனர்.

கொந்தடிப்பூங் குழல்சரிய நன்னகரில்
வசந்தவல்லி கொடிய காமன்
முந்தடி பிந்தடியிடைபோய் மூன்றடிநா
லடிநடந்து முடுகி மாதர்
சந்தடியில் திருகியிட சாரிவல
வாரிசுற்றிச் சகிமார்சூழப்
பந்தடிக்கும் பாவனையைப் பார்க்கவயன்
ஆயிரங்கண் படைத்தி லானே!

### சிறிய வினா:

1. வசந்தவல்லி பந்தாடிய சிறப்பினைத் தரிகூடராசப்பக் கவிராயர் எங்ஙனம் வருணிக்கிறார்?
2. வசந்தவல்லியின் அழகினைக் குறித்து எழுதுக.

### பெரிய வினா:

1. திரிகூடப் பெருமானின் திருவுலாவினை குற்றாலக் குறவஞ்சியின் வழி எடுத்துரைக்க.

# முக்கூடற்பள்ளு

உழவர் வாழ்வை சித்தரிக்கும் இலக்கியம் பள்ளு மருதநில நூலாகக் கழுதப்படும் சிற்றிலக்கியம் பள்ளு சேரிமொழியும், செந்தமிழ் வழக்கும் கலந்து நூல் ஏசல் இடம் பெறும் இலக்கியம் சமயங்களை தாக்குவது போன்று சமயக் கருத்துகளையும் கதைகளையும் சுவையாகக் கூறுவது உழத்திப்பாட்டு என்ற வேறு பெயரும் உண்டு. முக்கூடற்பள்ளு நூலின் ஆசிரியர் அறியப்படவில்லை என்பது குறிப்பிடதக்கது.

**1. காப்புச் செய்யுள்கள்**

**"பூமேவு நீலவெற்பில் பொன்னிறமும் உண்டெனப்பூ**
**மாமேவு முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே**
**பாமேவு சொற்புரப்பார் பாவலரென் றெட்டெழுத்து**
**நாமேவு பத்தர் பத்து நாவலரும் காப்பாமே"**

அழகு குடிகொண்டிருக்கிற ஒரு கருநீலவண்ணக்குன்றம் அதனிடையே பொன்னிறமும் ஒருசார் அறைந்திருக்கிறது. இப்படி வியந்து போற்றும் வண்ணமாக தம்முடையை கருநீல மேனியிலே பொன்னிறம் உடையவளாகிய திருமகளை (மார்பிலே) கொண்டிருப்பவர் திருமால். அவர் அன்பர்களுக்கு அருள் செய்யும் பெருங்கருணைப் பெருக்கினாலே, முக்கூடல் நகரிலே காண்பவர் மயங்கும் பேரழகினராக, முக்கூடல் அழகர் என்னுந் திருநாமத்துடனே வந்து கோயில் கொண்டிருக்கிறார். அவர் மீது பாடப்பெறும் பள்ளுநூல் இது.

**2. குடிமை! பெருமை!**
**பள்ளியரின் வரவு**
**முக்கூடற் பள்ளி:**

நெற்றியிலே மஞ்சணைப் பொட்டு விளங்கியது. அதன் மேலாக மற்றொரு திருநாமப் பொட்டும் இலங்கியது. நெகிழ்ந்த கருங்கொண்டையாகக் கூந்தல் முடியிடப்பட்டும் பின்புறம் தொங்கியது. உச்சியிலே தலைமயிரை இரண்டாக வகிர்ந்த வகுப்பும் தோன்றியது.

கைகளிலே இரும்பு காப்புகள் பொருந்தியிருந்ததன் கையிலே வெற்றிலையும், வாயிலே ஒதுக்கிய பாக்குமாக வாயிலிடும் ஒவ்வொரு வெற்றிலைச் சுருளுக்கும் ஒரு தடவை விரிந்து கொடுக்கும் இதழ்களுடனே, அவள் வந்து கொண்டிருந்தாள்.

ஆடவரைத் தம் பார்வையால் ஊடுருவி வெற்றி கொள்ளும் ஆற்றல் படைத்தன. அவளுடைய விழிகள் அவற்றுக்குப், பகைகொண்டு எழுந்த இருகொம்புகளைப் போல விளங்கும் கொங்கைகளின் முகங்கள், அதனாற் கருமையுற்றன. அந்தக் கருப்பு அந்த இருவரின் சந்திப்பு இன்னும் அதிகமானால் மிகுதியாகப் பரந்து விடுதலும் கூடுமோ என எண்ணிச் சற்றே சரிந்து விளங்கின அக்கொங்கைகள். ஒடுக்கமான இடையும், எடைக்கு எடை செம்பொன் பெறும் என்று போற்றத் தகுந்த பட்டுச்சேலையும் அவ்விடையிலே இலங்கத் திருமுக்கூடலிலே பிறந்த அந்த மூத்த பள்ளியானவள் வந்து தோன்றினாள்.

**"நெற்றியில் இடும் மஞ்சணைப் பொட்டும்**
**மற்றொரு திருநாமப் பொட்டும்...."**

3. காண்பவர்களின் உள்ளத்திலே ஊசலிட்டுக் கொண்டேயிருக்கின்ற, உல்லாசமான பார்வையினைக் கொண்ட அவள் விழிகளிலே தோன்றுகின்ற கள்ளத்தினாலே இரும்பும் கல்லும் கரைந்து விடாவோ? பாற்கடல் என்று சொல்லப்படும் ஊழிவெள்ளத்திலே, அறிதுயில் செய்கின்ற கருமேனி அழகராகிய திருமாலுக்கு உரியதான முக்கூடல் நகரிலே பிறந்தவளான அந்தப் பள்ளத்தியாரின் அழகினைப் போல வேறு எங்குமே பார்க்க முடியாது. அத்துணை அழகுடையவள் அவள்.

4. மருதூர்பள்ளி:

சிவந்த பாதங்களிலே கொச்சி மஞ்சளை அழகாகப் பூசியிருந்தாள் கூந்தலிலே சூடிய அழகிய மருக்கொழுந்தின் மணம் எங்கும் கமழ்ந்து கொண்டிருந்தது. சிறுத்த நெற்றியான பிறையிலே வெண்ணீற்றுக் குறியின் ஒளியும் வீசிக் கொண்டிருந்தது.

பசுமை வண்ணம் பூசிக்கொண்ட கெண்டை மீன்களைப் போல அஞ்சன மைதீற்றிய அவளுடைய கண்கள் இரண்டும் அவள் ஒரு பக்கமாகப் போட்டிருந்த கொண்டை மீதும் மற்றொரு பக்கத்துக்காதின் குழையினும் தைக்கப் போவன போலக் குதித்தாடிக் கொண்டிருந்தன.

காண்பவரின் நெஞ்சங்களைத் தம்பால் கவர்ந்து கொள்ளக்கூடிய பருத்த கொங்கைகளான, மிக்க மருதங்கொண்ட யானையின் இரு கொம்புகள் அசைத்து கொண்டிருந்தன. அவற்றின்மேல் நீலக்கல் பதித்து மாலையும் கோவைத் தாலியும் விளங்கின.

கொடி போன்ற அவளுடைய ஒடுக்கமான இடையிலே அதற்கு அழகுதரும் பட்டும், அதன்மேல் அவள் அணிந்துள்ள பஞ்சவர்ணம் என்னும் அணியின் அழகும் ஒளிவீச மருதூர்க்குச் சிறப்பாக வந்து வாய்ந்த பள்ளியானவள் பண்ணையிலே வந்து தோன்றினாள்.

**'செஞ்சாரணப் படமிடுங் கொச்சியின்**
**மஞ்பளும்பூ பச்சையும் மணக்கச்**
**சிறியநுதற் பிறைவெண்ணீற்றுக்**
**.................................'**

5. ஐந்து போகம் பயிராகும்!

சகலத்துக்கும் ஆதியாகிய விளங்குபவர் மருதூரிலே கோயில் கொண்டிருப்பவரான சிவபெருமான். அவருக்கு வழிவழியாக அடிமைப்பட்டவள் இந்த மருதூர்பள்ளி இவள், இவள் பாதியிலே முக்கூடல் அழகருக்கு அடிமைப்படுவாளோ? இந்த மருதூரளாகிய இளமை உடையவள். தன்னுடைய ஒளியுடைய முகம் மன்னருக்கு மட்டுமே தோன்ற வயலிலே இறங்கி நாற்றினை நட்டாளானால் அந்த ஒரு போகத்திலேயே ஐந்து போ விளைச்சலுக்குரிய கண்டு முதலும் காணுமே! அவ்வளவு கைராசிக்காரியல்லவோ இவள்!

6. குடும்பன் வந்தான்:

சீற்றங்கொண்டு பாயும் செம்மறி ஆட்டுக்கிடாயின் கொம்புகளைப் போல விளங்கும் முறுக்கிவிட்டிருக்கும் மீசையும், அழகுடன் கத்தரிகையினாலே மயிர்கள் கத்தரித்து விடப்பட்ட அழகான கன்னங்களின் எழிலும் குறுக்கிலே வளைதடி சேர்த்து இறுக்கிக் கட்டியிருக்கும் இடுப்புக்கச்சையும், கழுத்திலே செம்பொன்னால் பொட்டிட்டது போல அழகாகப் புள்ளியுடன் விளங்கும் உருமாலும் கருநீல நிறக்கொண்டையும் காலிலே யாதாயினும் சுறுக்கெனத் தைக்குத்தோறும் ஓர் அலட்சியமான தலையசைப்பும் உடையவனாகக் கையிலுள்ள தடியினைச் சுழற்றியவாறே, ஏப்பமிட்டுக் கொண்டே மெல்ல மெல்ல அடி எடுத்து வைப்பதும் தன் நினைவை மறுதலைப்படுத்தும் கள் வெறி கொண்டு அதனால் காண்பவருக்கு அச்சமுண்டாக்கும்

சிரிப்புத்தோன்ற நடப்பதுமாக நல்ல வடிவழகனாகிய அழகக் குடும்பனும் அங்கே வந்து தோன்றினான்.

**“கறுக்கும் கடாய் மருப்பின்**
**முறுக்கு மீசையும் சித்ரக்**
**.................................”**

**7. பள்ளன் பெருமை:**

பள்ளன் தனது பெருமையை தானே கூறுவது போல் அமைந்துள்ளது. ஆண்டையே! ஒரு பொழுதாகிலும் முக்கூடல் அழகரின் பாதாரவிந்தங்களைக் கருதாத மனத்தை எல்லாம் முரம்பு நிலமாகப் பார்க்கும் தரிசுகள் என்று எண்ணி அவற்றை அவ்வாறு போகவிடாமல், கொழுப்பாய்ச்சி உழுவேன். அந்த பள்ளன் நான்.

ஸ்மிருதிகள் பரவும் எட்டெழுத்துக்களின் உண்மைப் பொருள்களை எல்லாம், எங்கள் பெரிய நம்பியைக் கேட்டு அறிந்து கொள்ள முன்வராத துட்டர்களின் காதுகளைப் பாம்பும் புற்றுக்கள் எனக் கருதிக் கொட்டால் வெட்டி எறிவேன் அத்தகையவன் நான்!.

பெருமாளுடைய நூற்று எட்டுத் திருப்பதிகளையும் உள்ளங்களிலே கொண்டு வலஞ்செய்து வணங்காதவர்களுடைய பேய்த்தன்மையுடைய கால்களை, வடத்தால் பிணித்து ஏர்காலிலே சேர்த்துக் கட்டுவேன்.

திருவாய்மொழிப் பாசுரங்களைக் கல்லாதவர்களை எல்லாம் இருகால் மாடுகளாக்கி, ஏரிலே பூட்டித் “தீத்தீ” என்று உழக்கோலால் சாத்தி ஒட்டிவேன். அத்தகைய பள்ளன் நான்.

**“ஒருபோதழகர் தாளைக்**
**கருதார் மனத்தை வன்பால்**
**.................................”**

**8. பள்ளியின் குடித்தரம்**

மள்ளர்களாகிய உழவர்களுடைய குடியிலே வந்தவரானாலும், இரண்டு பள்ளியர்களுக்கு ஒரு பள்ளக் கணவன் என்றால், அவர்களுக்குள் மன இயல்புகள் வேறுபடாமலாபோகும்? கள்ளத்தனமாகக் கம்சனால் ஏவுதல் பெற்றுப் புள்ளுருவாக வந்த பகாசுரன் என்னும் கொக்கின் வாயைக் கிழித்தவர் கருமேனி வண்ணனாகிய முக்கூடல் அழகர். அவருடைய முக்கூடல் ஊர் முழுவதும் நிறைவு கொள்ளுமாறு, அவர்கள் இருவரும் தம்முடைய குடிப் பெருமைகளைக் கூறுகிறார்கள்.

**“மள்ளர் குலத்தில் வரினுமிரு பள்ளியர்க்கோர்**
**பள்ளக் கணவனெனின் பாவனைவே றாகாதோ**
**கள்ளப்புள் வாய்கிழித்த காரழகர் முக்கூடல்**
**கொள்ளத் தமது குடித்தரங்கள் கூறினரே.**

**9. மூத்த பள்ளி நானே**

சித்திரா நதியானது முக்கூடலுக்கு வடபக்கமாக விளங்குவது. அதற்குத் தென்பக்கமாக ஓடுவது பொருநை. இவ்விரு நதிகளும் தாம் தோன்றி ஓடி வந்து தம்முள் முக்கூடலிலே ஒன்று கலந்த காலம் உலகந் தோன்றிய மிகமிகப் பழைய காலம் ஆகும். அப்படி அவை கூடும்போதே, அதிலிருந்து, பின்வந்து கொண்டிருக்கிற இத்துணைக் காலமும் கண்டு, அடியடி வாழையாய்த் தோன்றி, நிலவி வரும் மிகப் பழமையான குடும்பத்திலே நான் பிறந்தேன்.

'ஏதோ பக்திலே பதினொன்றாக இவளையும் வைத்துக் கொணடிருக்கிறேன்.' என்றாற்போலக், குடும்பன் என்னுடன் உறவு. கொண்டவனுமில்லை முதன் முதலாகவே, என்னை மாங்கல்யச் சரடு கட்டி மணந்து, உரிமையுடன் மனைவியாக்கிக் கொண்டான்.

முத்தமிழ் செழுமையுடன் வழங்கும், தென் பாண்டித்திருநாட்டிலே விளங்கும் அழகர் பெருமானுக்கு வழிவழி அடிமையாளனாகிய என் குடும்பனுக்கு வந்து வாய்த்த மூத்த பள்ளி நானேயாவேன், ஆண்டயே!

**"உத்தர பாக மான**
**சித்திர நதிக்குத் தென்பால்**
**ஓடும் பொருநையுடன்**
**கூடும் போதே**
**.................................................."**

**10. இளைய பள்ளி நானே**

செஞ்சி நாட்டிற்கும், கூடலாகிய மதுரை நாட்டிற்கும் தஞ்சை நாட்டிற்கும் தன் ஆணையானது செல்வாக்குடன் செல்லுபடியாகும் சிறந்த ஆட்சியாளன் வடமலையப்ப பிள்ளையன் என்பவர். அவர் ஊரும் எங்கள் ஊரேயாகும்.

அவர், தம் நெஞ்சிலே உலகுக்கு உபகாரமாக வெட்டுதல் வேண்டு என நினைத்த ஐந்து குளத்திற்கும் சக்கரக்கால் நிலைபெறுத்திய அந்த நாளிலேயே, நான் இந்தப் பண்ணையிலே வந்து சேர்ந்தவள்.

கஞ்சிக்கு வழியில்லாமல் கெஞ்சிக் கேட்டு நான் குடும்பனை வந்து கட்டிக் கொண்டவள் அல்ல அவன், என் அழகைக் கண்டு ஆசைப்பட்டு விரும்ப அதன் மேல் அவன் என்னை வந்து மணந்துகொள்ள அவனுடைய மனைவியானவள் நான்.

மேகத்தைப் போன்ற கருமை நிறத்தினை உடையவர் அழகர் அவருக்குத் தஞ்சமாக அடிமைத் தொழில் செய்யும் பள்ளனுக்குப், பொருத்தமான மருதூராளாகிய இளைய பள்ளி நான் தான் ஆண்டையே!

**"செஞ்சிக்கும் கூடலுக்குந்**
**தஞ்சைக்கும் ஆணை செல்லும்**
**செங்கோல் வடம வேந்திரன்**
**எங்கள் ஊரே**
**........................................."**

**11. வடிவழகக் குடும்பன் நானே**

இப்படிப் பள்ளியர்கள் இருவரும் தத்தம் குடிப் பெருமையும் உரிமையும் கூறவே பள்ளன் தன்னுடைய குடியின் சிறப்பினையும் கூறுகின்றான். சுக்கிராச்சாரியாருடைய தாயானவள் அசுரர்களுக்காக இந்திரன் ஒழிய வேண்டுமெனத் தவம் செய்தாள். அப்போது. திருமால் அவள் தவத்தைக் கலைக்கச் சென்று அவளையே கொன்று விட்டார். சக்கரத்து ஆழ்வாரான திருமால் அப்படி அவளைக் கொன்றதனால் அவரைப் பிரமஹத்திப் ற்றிக் கொண்டது. அது தன்னை விட்டுப் போகத் தெட்சண பூமியிலே வந்து தவம் இயற்றித் தெக்கண விட்டுணு வானவர் முக்கூடல் அழகர்.

அவர், முக்கூடலிலே வந்து திருவடி வைத்த அந்நாளிலே இருந்து, அவருடைய அடியவராகவரும் பழைய குடியிலே வந்து பிறந்தவன் அடியேன் அந்த உண்மையினை அறியாத

சிலர் என்னைத் ‘தூர விலகிப் போடா’ என்பார்கள். அப்படி அவர்கள் பக்கமிருந்து நான் தூரமாக விலகிப்போனாலும், அவர்களுக்குத் தகுதியான சோறாக அமைவது என்னுடைய வெள்ளாண்மையினால் வருவது தான் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் தாம் என்னைப் ‘பள்ளா பள்ளா! என்பார்கள்.

கருங்கடலினின்று கிடைக்கு முத்துக்கு ஈடாக மிகுதியான செந்நெல் முத்துக்களை விளைவிப்பவனான வடி வழகக் குடும்பன் என்பவன் நானேதான், ஆண்டையே!

**“சுக்கிரத் தேவர் தாயைச்**
**சக்கரத் தாழ்வார் கொன்ற**
**துட்டப் பிரம கத்தி**
**விட்டுப் போகத்**
**................................”**

**12. வளம் சொல்வர்**

மலைவளத்திற்கு ஒப்பாகக் கூறிச் சிறப்பிக்கப் பெறுபவர் முக்கூடல் அழகர். அவருடைய திருநாட்டின் வளமையினைப் பேசுவதற்காகப் பள்ளியர்கள் தம்முடைய நாவினை அசைத்தனர். பாட்டின் வளம் அனைத்தும் ஒருங்கே அமையச் சிறந்த பக்தர்களாகிய பத்து அடியார்களும் சூட்டிய பாசுரங்களாகிய அழகிய பாமாலைகளான காட்டுவளம் அனைத்தையும் யாமும் காட்டுவோம். என்பவரே போல, அந்தக் களமர்கள் சொல்லத் தொடங்கினார்கள்.

**“கோட்டுவளம் கூறியமுக் கூடல் அலங் காரர்திரு**
**நாட்டுவளம் பேசமணி நாவசைத்தார் பள்ளியர்கள்**
**பாட்டுவளஞ் சேரகுலப் பத்தனார் மாலிகைப்பூங்**
**காட்டுவள மெல்லாம் களமருரை செய்வாரே”**

**வடகரை வளம்**

வசந்தகாலம் தொடங்கிவிட்டது அந்தக் களிப்பிலே மேட்டின் மீது ஏறி நின்று. தன் கால்களைப் பவிசுடன் எடுத்து வைத்துத் தன் தோகைகளை விரித்துக் கொண்டு மயிலானது வானத்தை நிமிர்ந்து நோக்கிக் களிப்புடன் நடனமாடத் தொடங்கியது. “வசந்த காலம் தொடங்கியதோ?” எனத் தன் சரலெடுத்துக் கூவிக்கேட்க நினைத்த, மாமரத்திலே இருந்த பெட்டைக் குயில் ஒன்று, அந்த மயிலின் காட்சியைக் கண்டு உண்மையறிந்து தன் பிளந்த கோடை காலம் போய் விட்டதனால் ஏற்படும் மங்கல அடையாளங்களைக் கொண்டனவாக, மேகங்கள் குளிர்ந்த மழைத் துளிகளைத் தூவியனவாக வானிலே இயங்கத் தொடங்கின. தான் வரவேண்டிய காலம் வந்து விட்ட தென மழைத்துளி வீழ்ந்த நிலத்தினின்று நறுமணமும் ஓடி வந்து கொண்டிருந்தது. அதனால், நாட்டு மக்கள் அனைவரும், உள்ளத்திலே மகிழ்ச்சி கொள்பவராயினர். இத்தகைய இளவேனிலின் செழிப்பான தன்மையினை உடையது ஆசூர் வடகரை நாடு என்று கூறப்படும் எனது நாடு: மூத்த பள்ளி இப்படித் தன் நாட்டு வளமையினைக் கூறினாள்.

**“மேடை ஏறித்தன் காலைப் பவுசு**
**விரித்த பீலி**
**மயிலெட்டிப் பார்க்கப்**
**பேடை மாங்குயில் வாய்கொண்டு உசாவப்**

**பிளந்த வாய்தனைப்**
**பேசாமல் மூடக்**
**கோடை போய்விட்ட சோபனம் கொண்டு**
**குளிர்ந்த கொண்டற்**
**குறுந்துளி யோட**
**வாடை யோடி வரக்களி சூரும்**
**வளமை யாசூர்**
**வடகரை நாடே”**

**தென்கரை வளம்**

வானகத்திலே தோன்றி வெண்குடை விரித்தாற்போல எழுந்த நிலவாகிய பகையினை. ‘வெற்றி கொண்டலல்லாவோ விடுவேன். என்ற செருக்குடன், இரண்டு யானைகள் கூடி அந்த மதிக்குடையின் மீது தாவிச் செல்வது போல, வானிலே இருண்ட மேகங்கள் திரண்ட நிலவை மறைத்தன. அதனைக் கண்ட தம் உள்ளங் கலங்கிய ஆடவர்கள் தாம் ஒளிந்து கொள்வதற்குக் குன்றுகளும் பொருத்தமானவையன்று என ஒதுக்கி விட்டுப் பூங்கொடியனைய தம் காதலியரின் நகில்களாகிய குன்று களிலே சென்று பதுங்குவர். அவ்வாறு, இளையோரை இணைந்த புறாக்கள் போல மணஞ்சேர்த்து வைக்கும் தன்னுடையது இளவேனில் புறாக்களுக்கும் மாமரத்திலிருந்து கூவும் குயிலுக்கும் வசந்தம் தோன்றிய செய்தியை முன்னாக அறிவிக்க வருவது போலத் தென்றல் ஓடிவர, எல்லாவுயிருமே அது கண்டு மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைக்கும் இத்தகைய சிறப்பினையுடைய சீவல மங்கைத் தென்கரை நாடு இப்படித் தன் நாட்டின் வளமையினைக் கூறுகிறாள் இளைய பள்ளி.

**“வென்றல் லோவிடு வேனென வேயிரு**
**வேழங் கூடி**
**மதிக்குடை தாவக்**
**குன்றே லாந்தர மில்லையென் றாடவர்**

**கொம்ப னார்முலைக்**
**குன்றிற் பதுங்க**
**மன்றல் சேரிள வேனிற் புறாக்கள்**
**மாங்குயி லுக்கு**
**மாராயஞ் சொல்லித்**
**தென்ற லோடி வரக்களி கூரும்**
**சீவல மங்கைத்**
**தென்கரை நாடே”**

**முக்கூடலின் சிறப்பு**

முக்கூடல் அழகர் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயிலின் கோபுரம் மிகவும் உயரமானது. மேகத் திரள்கள் அந்தக் கோபுரத்தருகே வந்து குழுமியிருக்கக் காணலாம். வானம் மழைத்துளிகளாகிய தன் படித்தரத்தைத் தர, அத்திருக்கோயிலின் கொடிமரங்களிலே பறந்து கொண்டிருக்கும் கண்ட பேரண்டப் பட்சிகள் குளிர்ச்சியுடைய அந்த உச்சியை விரும்பிச் சென்று கொண்டிருக்கும் பொன்மயமான அந்தத் திருக்கோயிலின் முற்றத்திலே பெருகியிருக்கும் மழைநீரில் அன்னங்கள் விளையாடிக் கொண்டிருக்கும் மலர்களிலிருந்து வீழ்ந்த மகரந்தங்களைச்

சொரிந்து பரவிய தேன் வண்டலிழைத்தவாறே ஓடிக் கொண்டிருக்கும், வெம்மையான கதிரவனானவன் அந்தக் கோயிலின் மதிற்சுவர்களிலேதான் புகுந்து செல்வதற்குரிய வழியினைத் தேடிக் கொண்டிருப்பான். தேவர்களுக்குத் தலைவன் அழகர், அவர் கோயில் கொண்டிருக்கிற முக்கூடல் என்னும் ஊரே எங்கள் ஊருமாகும். மூத்த பள்ளி சொன்னது இது.

**“கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்**
**கொடிகள் வானம்**
**படிதர மூடும்**
**கண்ட பேரண்டம் தண்டலை நாடும்**
**கனக மூன்றில்**
**அனம்விளை யாடும்**
**விண்டபூமது வண்டலிட் டோடும்**
**வெயில் வெய்யோன்பொன்**
**னெயில்வழி தேடும்**
**அண்டர் நாயகர் செண்டலங் காரர்**
**அழகர் முக்கூடல்**
**ஊரெங்கள் ஊரே”**

**மருதூர் வளம்:**

மேட்டு நிலப் பகுதிகள் அனைத்தும் நீருள் அமிழ அங்கே சங்கினம் உலவிக் கொண்டிருக்கும். பொன்மயமான அரங்கங்களிலே அலைகளால் ஒதுக்கப்ப மீன்கள் துள்ளிட்ட விளையாடும் சோலைகளின் வானளாவிய மரங்களைத் திங்களானது அராவிக்கொண்டு செல்லும். அப்படிச் செல்லும் போது தெருக்கள் தோறும் பூந்தாதுக்களை மரங்கள் தூவிவிடும். பூஞ்சோலைகளினூடே பசுங்கிளிகள் தத்தம் துணையுடன் பொருந்தி இன்புற்றிருக்கும். நாகணவாய்ப் புட்களும். புறாவினங்களும் தத்தம் துணைகளை விரும்பிக்கூவிக் கொண்டிருக்கும் மரக்கலங்கள் செல்லும் கடலிலே அந்நாள் தோன்றிய கொடிய நஞ்சினை உண்டவரான மருதீசர் கோயில் கொண்டிருக்கும் மருதூரே எங்கள் ஊராகும்.

**“சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்**
**தரங்க மீன்பொன்**
**அரங்கிடை தாவும்**
**திங்கள் சோலை மரங்களை ராவும்**
**தெருக்கள் தோறும்**
**மருக்கனைத் தூவும்**
**பொங்கர் ஊடிளம் பைங்கிளி மேவும்**
**பூவை மாடப்**
**புறாவினங் கூவும்**
**வங்க வாரிதி வெங்கடு உண்ட**
**மருதீசர் மருதூர்**
**எங்கள் ஊரே”**

**ஆசூர் நாட்டு வளமை:**

வெண்மையான கலைகளையுடைய திங்கள் தான் கறைபட்டுக் காணப்படுமே தவிர மக்கள் உள்ளங்களிலே எவ்விதக் கறையுமே காணப்படுவதில்லை. கம்பத்திலே கட்டியிருக்கும்

யானைகள் கடமாகிய மதம்பட்டு நிற்குமேயல்லாமல் அவ்வூர் மக்கள் கடன்பட்டு வாழ்வதில்லை. வானத்திலே எழும்பிச் செல்லும் பறவைகள் தாம் சிறைபட்டிருக்குமே யல்லாமல் மக்களுள் எவரும் சிறை பட்டிருப்பதே கிடையாது.

நெய் பொருந்திய விளக்குத் திரி பொருத்தப்பட்ட தாயிருக்குமேயல்லாமல் அங்குள்ளவர்களின் அறிவிலோ நடத்தையிலோ எவ்வகையான திரிபையுமே காண முடியாது. மக்கள் நன்றாக உண்ணும் வளம் உடையவராயிருந்தால், கம்மியர்களால் அவர்கள் வீட்டு அம்மிகள் கொத்திக் குறைக்கப்பட்டிருக்கக் காணலாமே தவிர மக்களின் வாழ்க்கைத் தரம் குறைக்கப்பட்டிருக்கக் காணவே முடியாது. கொடிகளும் அவை தழுவிப் படரும் பூங்கொம்புகளும் குழைகளை யுடையதாயிருக்குமே தவிர மக்களும் கொடிகள் போன்ற மாதரினம் அவர் தழுவும் ஆடவரினும் குழைந்து கும்பிட்டு வாழ்பவராக எவருமே கிடையாது. செய்யுட்களின் அருமையான பொருள் நயங்கள் மறைப்பட்டிருக்குமே யல்லாமல் வயல்களுள் விளையும் விளைச்சலுள் எவ்விதமான ஒளிவு மறைவுமே காணப்படுவதில்லை. இப்படிப்பட்ட வளமுடைய நாடு எங்கள் ஆசூர் வடகரை நாடு. இப்படித் தன் நாட்டைப் போற்றிக் கூறினாள் மூத்த பள்ளி.

**“கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்**
**கடம்பட் டுள்ளது**
**கம்பத்து வேழம்**
**சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு**
**திரிபட் டுள்ளது**
**நெய்படும் தீபம்**
**குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி**
**குழைபட் டுள்ளது**
**வல்லியங் கொம்பு**
**மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள்**
**வளமை அசூர்**
**வடகரை நாடே”**

**தென்கரை நாட்டு வளமை:**

தன் வடகரை நாட்டை மூத்த பள்ளி இப்படிப் புகழ்ந்ததும் இளைய பள்ளிக்கு உற்சாகம் கரைபுரண்டு எழுகிறது. அவள், தான் பிறந்த சீவலமங்கைத் தென்கரை நாட்டின் புகழைக் கூறத் தொடங்கி விடுகிறாள்.

சூரியனின் வெப்பமாகிய வெயில் காய்வதைக் காணலாமே தவிர மக்களின் வயிறு காய்வதை எங்குமே காண முடியாது வெண்மையான தயிர்த் துண்டுகள் கலங்குவதைக் காணலாமே அல்லாமல், மக்கள் மனங்கலங்குவதைக் காண முடியாது. நாழிகைகளும் வாரங்களும் மாய்ந்து கொண்டு போகக் காணலாமேயன்றி, மக்கள் பசியால் மாய்தலை என்றும் காண முடியாது. மேகங்கள் சுழன்று இடித்துப் பொழியும் மழைவெள்ளத்தைத்தான் காணலாமே யல்லாமல், மக்கள் மறுகி வாடுவதைக் காணமுடியாது. செந்நெற் குலைகள் காய்த்துச் சாய்ந்து கிடப்பதைக் காணலாமே யன்றி, ‘மக்கள் தலைசாய்த்து நடக்கும் நிலையினைக் காணவே முடியாது தாபத நிலையினர் தனித்து இருக்கக் காணலாமேயன்றிக் கணவன் மனைவியர் தனித்திருக்கக் காண முடியாது. உரைத்திடும் சந்தனம் தேயக் காணலாமே அல்லாமல் உரைத்திடும் செய்யுட்களிலே பொருள் தேய்வு காணப்படுவதே கிடையாது. இப்படிப்பட்ட வளமைகள் எல்லாம் உடையது எங்கள் சீவலமங்கைத் தென்கரை நாடு.

“காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது
வெண்தயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது
வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
தனிப்பக் கண்டது
தாபதர் உள்ளம்
தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்
சீவல மங்கைத்
தென்கரை நாடே”

**முக்கூடல் வளம்**

ஒளி வீசும் சிறந்த மணி வகைகள் பதித்த மாளிகைகளை உடைய வீதிகளின் நெருக்கம் அதிகமாயிருக்கும். மலர்ச் சோலைகளிலே திரியும் வண்டினங்கள் தம் இரீங்காரப் பண்ணினைப் பாடி, இரும்பு உள்ளங்களையம் உருகச் செய்து விடும். நால்வகைச் சாதியினரான மாந்தர்களும், அந்தப் பேதங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, ‘ஒன்றை குலம்’ என்ற வளமான அறத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பார்கள். நீர்த் தடத்திலுள்ள வாளை மீன்கள் நீர் முகப்பார் குடங்களுள் நிறைந்து, அந்தக் குடங்களுள் நெருக்கடி நிலவச் செய்து கொண்டிருக்கும் இளைய எருமையானது; கழனிகளிலே மலிந்து கிடக்கும் நீர்ப்பூக்களை மேய்ந்து, அதன் கண் உள்ள மதுவையும் உட்கொண்டதால் செருக்கித் திரியும். மேட்டு நிலங்களில் எல்லாம் குளிர்ந்த மலர்கள் இதழ் விரித்திருக்கும். ஆதி நாதனாக விளங்கும் முதல்வர் ஆனால், அநாதியாகவே விளங்கும் ஒப்பற்றவர் அழகர். அவருக்குச் சொந்தமான முக்கூடல் என்னும் ஊரே எங்கள் ஊருமாகும்.

**“சோதி மாமணி வீதி நெருக்கும்**
**கரும்பு பாடி**
**இரும்பும் உருக்கும்**
**சாதி நால்வளம் நீதி பெருக்கும்**
**தடத்து வாளை**
**குடத்தை நெருக்கும்**
**போதில் மேய்ந்திள மேதி செருக்கும்**
**புனமெல் லாநதண்**
**மலர்விண் டிருக்கும்**
**ஆதி நாதர் அனாதி யொருத்தர்**
**அழகர் முக்கூடல்**
**ஊரெங்கள் ஊரே”**

**மருதூர் வளம்:**

பாய்கால்களின் இடையிடையே உள்ள அடைப்புக்களிலே தத்திச் செல்லும் நீரானது முத்துக்களால் இடைமறித்து அடைக்கப்படும். சாலை வழியாகக் கொணர்ந்து குவித்திருக்கும். கருப்பங்கழிகளைக் கரும்பாலைகள் சாறு பிழிந்து கொண்டிருக்கும் பேரிசைகளின் சத்தமோ காதுகளைச் செவிடாக்கும். அங்குள்ளோர் பலரும் அடித்துச் செய்யும் உலோக வேலைகளின்

ஒலியோ அந்தப் பேரிகையொலியையம் மறைக்கும்படியாக மிக்கிருக்கும். நாள்தோறும் விழாக்கள் கொண்டாடுவார்போல எங்கும் அழகுடன் விளங்கும். எல்லாச் செல்வங்களும் அந்த ஊரிலேயே கிடைக்கும். எளிய ஊமத்தைப் பூவையும் விரும்பிச் சூடுபவரான மதோன்மத்தர் மருதீசர். அவருக்கு உரியதான எங்கள் மருதூர் அப்படிப்பட்டதாகும்.

**தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்**
**சாலைவாய்க் கன்னல்**
**ஆலை யுடைக்கும்**
**கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்**
**கலிப்பு வேலை**
**ஒலிப்பைத் துடைக்கும்**
**நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்**
**நிதியெல் லாந்தன்**
**பதியிற் கிடைக்கும்**
**மத்தம் சூடும் மதோன்மத்த ரான**
**மருதீசர் மருதூர்**
**எங்கள் ஊரே”**

**வடகரை நாடே:**

மிக உயரமாக வளர்ந்த தென்னை மரங்களிலேயுள்ள இளநீர்களை, அதற்கிணையாக வளர்ந்துள்ள கமுகுகள் தாம் தங்கிக் கொண்டு, தம் காய்களைத் தம்மருகே மாமரங்கள் ஒன்றி வளர்ந்து சுமந்து கொண்டிருக்கக் கொடுத்துக் கொண்டிருக்கும். அந்த மாமரங்களோ தம்மிடையே தூங்கும் கனிகளைப் பலாமரத்திலே சேர்த்து விடும். பலாக் கனியோ அதனை யடுத்திருக்கும் வாழை மரங்கள் மீது சாய்ந்திருக்க, அதனால் அவை வளைந்து தம் ஒளியுடைய குலைகளைச் சாய்க்கும். அப்போது, அதனருகே நிற்கும் மாதுளங்கொம்பு அந்த வாழைக் குலையைத் தாங்கிக் கொள்ளும் இப்படி மரங்கள் பலவும் ஒன்றிற்கொன்று உதவியாக வளமுடன் வாய்ந்திருக்கும் நாடே எங்கள் ஆசூர் வடகரை நாடாகும். இப்படிப் பெருமிதத்துடன் கூறினாள் மூத்தபள்ளி.

**“மீது யர்ந்திடும் தெங்கிள நீரை**
**மிடைந்த பூசுஞ்**
**சுமந்துதன் காயைச்**
**குத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்**
**சூதம் தன்கனி**
**தூங்கும் பலாவின்**
**ஓதும் அந்தப் பலாக்கனி வாழை**
**உளுக்க வேசுமந்து**
**ஒண்குலை சாய்க்கும்**
**மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்**
**வளமை ஆசூர்**
**வடகலை நாடே”**

**தென்கரை நாடே:**

இப்படித் தன் மூத்தாள் பெருமையடித்துக் கொண்டால் இளையவள் சும்மா இருந்து விடுவாளா? அவள், தன் சீவலமங்கை நாட்டின் கண்ணும் எப்படி அனைவரும் ஒத்துழைப்புடன் வாழ்கிறார்கள் என்பதை மிகவும் நயமாகக் கூறுகிறாள்.

தாமரை மலரானது தன் தலையை நீட்டி வரப்பிலே வளர்ந்திருக்கும் இஞ்சியின் பச்சை இலையான பெரிய சடையினைத் தடவிவிடும். அங்கே இருக்கும் இஞ்சியோ அருகேயிருக்கும் மஞ்சளின் கழுத்தை மெல்லத் தழுவியவாறே தொடும். அந்த மஞ்சள் அங்கே தன் பக்கத்திலே அசைந்தாடி நிற்கும் காய்க்கதிர்களை உடைய செந்நெற்பயிருடன் அளவளாவி இருக்கும். அந்தச் செந்நெல்லோ அதனையடுத்து வளர்ந்திருக்கும். செங்கரும்புக்குக் கைகொடுத்து நிற்கும். இப்படி ஒவ்வொன்றும் ஒன்றுக் கொன்று ஆதரவாக வளர்கின்ற செழுமையுடையது எம் சீவலங்கைத் தென்கரை நாடேயாகும் என்கிறாள்.

> **“பங்க யந்தலை நீட்டிக் குரம்பினில்**
> **பச்சை இஞ்சியின்**
> **பார்சடை தீண்டும்**
> **தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்**
> **தடவி மெள்ளத்**
> **தொடுமந்த மஞ்சள்**
> **அங்க சைந்திடும் காய்க்கதிர்ச் செந்நெல்**
> **அளாவி நிற்குமச்**
> **செந்நெலு மப்பால்**
> **செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்**
> **சீவல மங்கைத்**
> **தென்கரை நாடே”**

**குயில் கூவி அழைத்தல்:**

திருமுக்கூடலிலே கோயில் கொண்டிருப்பவர் தேவர்களுக்கெல்லாம் அதிதேவராக விளங்கும் பெருமான். அவருடைய முக்கூடல் நகரின் பெருமையைத் தம் நாவால் போற்றித் தத்தம் வளநாட்டின் செழுமையைக் கூறினர் பள்ளியர்கள். அதன்பின், பூவின் நறுமணம் சேர்ந்து வீசிக் கொண்டிருக்கும் அழகிய கூந்தலினையுடையவரான அவர்கள் இருவரும். பூங்குயிலைக் ‘கூவாய்’ என்று சொல்லுகின்ற முறையான குயில் மொழிதல் என்ற வகையிலே தம் கருத்துக்களைச் சொல்லத் தொடங்கினார்கள்.

> **“தேவாதி தேவர்திரு முக்கூடலின்பெருமை**
> **நாவால் வழுத்திவள நாட்டியல்பு கூறியபின்**
> **பூவா சனைசேர் புரிகுழலார் பூங்குயிலைக்**
> **கூவாயென் றந்தக் குயில்மொழியைக் கொண்டாரே!”**

**குயிலே கூவாய்:**

கார்மேகமானது தன்னிலே செந்தாமரை மலர்களையும் பூத்து விளங்கினாற்போன்ற வண்ணத்தினையுடைய அவருடைய படித்தரங்களாகிய கட்டளைகள் நாளும் உயர்வதற்காகக் குயிலே கூவுவாயாக. புகழ் மலர்ந்த முக்கூடல் நகரிலேயுள்ள பெரிய இராமானுச பீடம் மிகவும் விளக்கமுறும்படியாகக் குயிலே கூவுவாயாக. உலகெங்கும் பரந்த சிறப்பினைப் பெறுகின்ற வைணவ சமயத்தவர்களும், அவ்வப் பகுதிகளிலேயிருந்து நாடு காவல் புரிந்துவரும் தானிகரும்

மற்றும் அவர்களுடைய பரிவாரக் கூட்டங்களும் வாழும் படியாகக் குயிலே நீ கூவுவாயாக. சீர்மை பரந்த அருவியைப் போல அருள் செய்து வருபவராகிய திருமலைக் கொழுந்துப்பிள்ளையன் என்னும் மேகத்தில் செங்கோன்மை ஓங்கும்படியாகவும் கூவுவாயாக குயிலே.

**“கார்பூத்த வண்ணனார் கண்ணார் அழகர்படிக்**
**கட்டளைகள் உயரவே**
**கூவாய் குயிலே**
**பேர்பூத்த முக்கூடல் மிக்கரா மானுசப்**
**பீடம் மிக விளங்கவே**
**கூவாய் குயிலே**
**பார்பூத்த கீர்த்திபெறும் வைணவரும் தானிகரும்**
**பரிசனமும் வாழவே**
**கூவாய் குயிலே**
**சீர்பூத்த அருவிவரு திருமலைக் கொழுந்து முகில்**
**செங்கோன்மை ஓங்கவே**
**கூவாய் குயிலே!”**

## வளமை! செழுமை!:

**1. தெய்வவழிபாடு:**

காரிமாறானாரின் புதல்வர் நம்மாழ்வார். வேதசாரங்களை எல்லாம் கல்விச் செழுமையினையுடைய தமிழ்ப் பாசுரங்களாக அருளியவர் அவர். அந்தத் திருவாய் மொழியானது பரவியிருக்கும் அழகருடைய நல்ல நாட்டிலே மழை வளம் சிறக்க வேண்டும் என்னும் பொருட்டாக வரம் பெறுதலை நோக்கமாகக் கொண்டு மள்ளர்கள் எல்லோரும் தம் சேரியிலே குரவை ஒலியானது எழுந்து ஓங்கத் தெய்வநிலை போற்றினார்கள்.

**“காரிப் பிரான்புதல்வர் கல்வித் தமிழ்வேதம்**
**பாரித்த முக்கூடற் பண்ணவனார் நன்னாட்டில்**
**மாரிப் பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாம்**
**சேரிக் குரவையெழத் தெய்வநிலை போற்றினரே”**

1. உலகமெல்லாம் மாதம் மும்மாரியாக மழை பெய்வதற்குத் தெய்வங்களை நாம் முறையாகப் போற்றி வந்தோமானால் கட்டாயம் அவை நமக்குக் கைகொடுத்து உதவி செய்யும். அதனால் பூலாவுடையாருக்குப் பொங்கலிட்டுத் தேங்காயும் கரும்பும் நிரம்பப்படையிலிடுங்கள் குங்குமத்தோடு சந்தனத்தையும் கலந்து குமுக்கா உடையார் அய்யனுக்குச் சாத்திப் போற்றுங்கள். கரையடிச் சாத்தாவின் விழாவுக்குக் காப்புக் கட்டி ஏழு செய்கிடாய்களையும் அவர் முன்னே விரைவாக வெட்டிப் பலியிடுங்கள்.

**“திங்கள்மும் மாரியும் கெங்கும் பெய்யவே**
**தெய்வத்தைப் போற்றி வந்தாற்**
**கைதருங் காண்**

**பொங்குலு மிட்டுத்தேங் காயும் கரும்பும்**
**பூலா வுடையாருக்குச்**
**சாலக் கொடுங்கள்**

**குங்குமத் தோடுசந் தனமுங் கலந்து**
**குமுக்கா வுடையா ரய்யர்**
**தமக்குச் சாத்தும்**

**கங்கணங் கட்டியே ஏழுசெங் கடாயும்**
**கரையச் சாத்தா முன்னே**
**விரைய வெட்டும்"**

2. உச்சியிலே கொண்டைப் பூவினையுடைய செஞ்சேவலைச் சாத்திர முறைப்படி புலியூருடையார் ஏற்றுக் கொள்ளுமாறு பலியிடுங்கள். வாய்ப்பான சாராயமும், பனையிலிருந்து இறக்கும் ஊற்றாய கள்ளும் வடக்கு வாசற் செல்லியானவள் உண்ணுமாறு குடங்களிலே வையுங்கள், பள்ளர் எல்லோரும் வாருங்கள். தோத்திரம் பண்ணுங்கள். பண்பாடிப் போற்றுங்கள். கூத்தாடித் தொழுது தொழுது வேண்டுங்கள். மழை மெய்யுமாறு அருள் செய்ய வேண்டி அழகரின் திருநாமங்களை வாழ்த்தி வாழ்த்தி அனைவரும் வேண்டுங்கள்.

**"பூத்தலைச் செஞ்சேவற் சாத்திரத் தாலே**
**புலியூ ருடையார்**
**கொள்ளப் பலிதானிடும்**
**வாய்த்தசா ராயமும் பனையூற்றுக் கள்ளும்**
**வடக்குவாய்ச் செல்லியுண்ணக்**
**குடத்தில் வையும்**
**தோத்திரம் பண்ணும் பண்ணுங் கூத்தாடியே**
**தொழுது தொழுது**
**வேண்டும் மழைபெய்யவே**
**ஏத்தும் அழகர்பேரை வாழ்த்தி வாழ்த்தியே**
**எல்லோரும் வாரும்**
**பள்ளர் எல்லோருமே"**

**2. மழைக்குறி:**

உயிர்களுக்கு முத்தி தரவேண்டும் என்ற பெருங்கருணைப் பெருக்கினால் எழுந்தருளி வந்து முக்கூடலிலே கோயில் கொண்டிருப்பவர். மாதவராகிய முக்கூடல் அழகர். அவருடைய திருவடிகளின்பால் பக்தியை மறவாத பண்ணைக்கு அடிமைப்பட்ட பள்ளச் சேரியிலுள்ள பள்ளர்கள் எல்லாம் புத்திசாலித் தனத்துடனே மேற்கொண்டவாறு தெய்வநிலை போற்றினர். அதன்பின், வானத்து மேகங்கள் எல்லாத் திசைகளினும் பெய்வதற்கு உரிய மழையின் குறியும் உண்டாயிற்று.

**"முத்திதர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாட்**
**பத்திமற வாதபண்ணைப் பட்சேரிப் பள்ளரெல்லாம்**
**புத்தியுடன் தெய்வநிலை போற்றியபின் வானமுகில்**
**எத்திசையும் பெய்யமழை யின்குறியுண் டாகியதே"**

1. நாளைக்கு ஆற்றிலே வெள்ளம் வரப்போகிறதென்பதற்கு உரிய குறிகள் தோன்றுகின்றன. தென்மேற்குத் திசையிலே மலையாள மின்னலும் தென் கிழக்குத் திசையிலே ஈழத்து மின்னலும் சூழ வளைந்து மின்னிக் கொண்டிருக்கின்றன. நேற்றும் இன்றும் மரக்கொம்புகளை சுற்றியவாறு காற்று அடிக்கிறது. கிணற்று நீரிலே இருக்கின்ற சொறித்

தவளைகள் கூப்பிடுகின்றன. சேற்றிலே வாழும் நண்டுகள் தம் வளைகளுள் மழைநீர் புகுந்து விடாதபடி சேற்றினால் வளைவாயில்களை அடைக்கின்றன. மழை நீரைத் தேடி ஒரு கோடி வானம்பாடிப்பறவைகள் அங்குமிங்குமாக வானத்திலே பறந்து ஆடிக்கொண்டிருக்கின்றன. உலகமெல்லாம் போற்றும் திருமாலாகிய முக்கூடலின் அழகருக்கு ஏற்றவரான பெரிய பண்ணையைச் சார்ந்த சேரியிலுள்ள பள்ளர் வகையினரெல்லாம் மழையினை வரவேற்று ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோம். வாருங்கள்!

**“ஆற்றுவெள்ளம் நாளைவரத்**
**தோற்று தேகுறி – மலை**
**யாள மின்னல் ஈழ மின்னல்**
**சூழ மின்னுதே!**
**நேற்று மின்றுங் கொம்பு சுற்றிக்**
**காற்ற டிக்குதே – கேணி**
**நீர்ப்படு சொறித்த வளை**
**கூப்பிடு குதே!**
**சேற்று நண்டு சேற்றில் வளை**
**ஏற்றடைக்குதே – மழை**
**தேடி யொரு கோடி வானம்**
**பாடி யாடுதே!**
**போற்றுதிரு மாலழகர்க்**
**கேற்ற மாம்பண்ணைச் - சேரிப்**
**புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்**
**துள்ளிக் கொள்வோமே.**

2. பொருநை நிதியின் இந்தக் கரைக் கால்வாய் அந்தக் கரைக்கால்வாய் என்று ஏமமென்றும் சாமமென்றும் பாராமல் மழை பெய்ததும் நாமல்லவோ ஓடிப்போவோம். அதனால், ஆடிப்பாடிப் போவதற்குத் தகுதியான தோணியைத் துறையிலே சிக்கெனக் கட்டி வையுங்கள். படல், தாழைக் குடை, கொங்காணி காவற்கொம்புகள் ஆகியவை எல்லாம் சுருக்காக எடுத்துக் கொள்ளுங்கள். சீலைப் பந்தமும், அதற்கு ஊற்றும் விளக்கெண்ணெயும் முன்னதாகவே தேடி வைத்துக் கொள்ளுங்கள். முக்கூடல் அழகரின் பண்ணையாட்கள் மிகுந்துள்ள சேரியிலே பள்ளர்கள் அனைவரும் குரவையிட்டு எழுவதற்குரிய நாள் இது. எல்லோரும் ஆடிப்பாடி எழுந்து வாருங்கள்.

**“இக்கரைக்கா லிற்பொருநை**
**அக்கரைக் காலின் - மழைக்**
**கேம மென்றும் சாமமென்றும்**
**நாமல்லோ போவோம்**
**தக்கதோணி மைத் துறையிற்**
**சிக்கெனக் கட்டும் - படல்**
**தாழைக்குடை கொங்காணியும்**
**வேளைக்கே வேண்டும்**
**பக்கமே யுஞ் சூழ்கம்புசு**
**ருக்க வாங்கிடும் - சீலைப்**
**பந்தமும் விளக் கெண்ணெயும்**
**முந்தவே தேடும்**

**முக்கூடல் அழகர் பண்ணை**
**மிக்க சேரியில் - பள்ளர்**
**முழுதுங் குரவை யிட்டே**
**எழுதின மாடீர்"** :

**3. பெய்த பெருமழை:**

கருப்பமானது உரிய கால முதிர்ச்சியினை அடைந்து விட்டதென்றால் பிள்ளைப்பேறு உறுதியாகத் தோன்றாதோ செங்கண்ணினதனான திருமாலின் ஆசூர் எனப்படும் நல்ல நாட்டிலேயும் அந்த வண்ணமாகவே மழையும் உறுதியாகப் பெய்யும் அல்லவோ? உலகத்தின் வேலி போலச் சூழ அடைந்து கிடக்கும் கடலிலே மேய்ந்து கருக்கொண்ட மேகமும், அங்ஙனம் காலூன்றிப் பெய்யத் தொடங்கி, அந்தக் கார் காலத்தின் தன்மையைக் காட்டியது.

**"சூலா னதுமுதிர்ந்தால் தோன்றாகோ பேறுசெங்கண்**
**மாலாசூர் நன்னாட்டில் மழையுமந்தந்த வண்ணமன்றோ**
**வேலா வலயமுந்நீர் மேய்ந்துகருக் கொண்டமுகில்**
**காலான தூன்றியந்தக் காலமுறை காட்டியதே"**

**4. வெளிறிய வானம்:**

கற்பக மரங்கள் செறிந்த பூங்காவிற்கு இறைவனாக விளங்குபவன் இந்திரன். அவனுடைய ஏவலினால் தம் பணியினை மேற்கொண்டு எழுந்தன கார்மேகங்கள். அவை கடலிலே படிந்து, அழகிய வானவில்லை வளைவாக வானிலே இட்டு விளங்கும். அதனால், கடலிலே துயின்றவனும், சிவதனுசை வளைத்தவனுமாகிய முக்கூடலுக்கு இறைவனாகிய அரியைப் போல் விளங்கும். பூவுலகத்தினின்றும் உயர்ந்த கலைகின்ற மின்னலோடு கூடி விளங்கும்போது, தாமரைப் பூவின் மேல் உயர்வுடன் வீற்றிருக்கின்ற கமலத்து வாசனாகிய அயனைப் போலவும் உச்சியிலே நீரைச் சுமந்து கொண்டு மலையிலேறிக் கவிதலால் மின்னலாகிய கனலையும் உடைத்தாயிருத்ததலால், கங்கையையும் அனலையும் தாங்கிக் கயிலாச மலையில் ஏறியிருக்கும் சிவனாகவும் தோன்றும். பாம்புகள் எல்லாம் ஓடி ஒளியத் தாவிப் பறந்து, கோபித்து எழுந்த கருடனைப் போல, வானிலே பறந்து, பாம்புகளை நடுக்கும் இடி முழக்குடனும் விளங்கும். அதனால் கருடனும் அதுவேயாகித் தோன்றும். இவ்வுலகிற்கு உரிமையான ஊனும் உயிரும் அதுவேயாகி விளங்கும். மன்னர்களுள் பெரியவன் வடமலையப்ப பிள்ளையன். அவனுடைய போர் யானைகளைக் காட்டினும் சினந்து மழை பொழிந்த பின்னர் உலகம் எங்கும் குளிர்ச்சி பெறுகின்றது. வானமோ, அதன் பின், தன் தலைவனின் களிறாகிய வெள்ளை யானையைப் போலத் தானும் வெளிறுவதாயிற்று.

**"காவுக்கு இறைவ னாகும் இந்திரன்**
**ஏவற் பணிகொண் டெழுந்தகார்**
**கடலிற் படிந்து திருவிற் கோட்டி**
**அடல்முக் கூடல் அரியுமாய்ப்**

**பூவுக் குயர்ந்த கலைமின் னோடு**
**மேவிக் ககலத் தயனுமாய்ப்**
**புனலைத் தரித்து வரையி லேறிக்**
**கனலைத் தரித்த சிவனுமாய்த்**

**தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்**
**கோவித் தெழுந்து கருடனும்**
**தானே யாகி உலகுக் குரிமை**

**ஊனே யாகி உயிருமாய்க்**

**கோவிற் பெரிய வடம லேந்திரன்**
**மாவிற் கறுத்துப் பொழிந்தபின்**
**குளிரு கின்றது கோன் களிற்றினில்**
**வெளிரு கின்றது வானமே!**

**5. குளிரக் குளிர:**

வேகமாகப் பாய்ந்து செல்லும் செலவினையுடையது கருடன். அந்தக் கருடனைத் தமக்கு வாகனமாக உடையவர் திருமால். அவர் உருவத் திருமேனி கொண்டு அடியவர்களுக்கு உதவும் பொருட்டாக முக்கூடல் நகரிலே எழுந்தருளியிருப்பவர். அவ்வூரிலே காய்ச்சல் கொண்டனவாக விளங்கும் குன்றுகள் களப சுத்தூரிகள் பூசிய கொங்கைகளாகிய குன்றுகளே அல்லாமல் வேறு குன்றங்கள் எவையுமன்று. அலையலையாக வரும் மேகக் கூட்டங்கள் அமுத தாரைகளாக மழையினைக் குளிரக் குளிரப் பொழியும், அந்த அமுத தாரையிலே மூழ்கிவரும் தலைவருடைய உடைதான் ஈரமாயிருக்கிறதே தவிர, அவருள்ளத்திலே கொஞ்சமும் ஈரம் ஏற்படவில்லையே?

**"பாயுங் கருடப் பரியார்முக் கூடலிலே**
**காயும் பொருப்பென் களபத் தனிப்பொருப்பே**
**சாயும் புயலமுத தாரைகுளி ரக்குளிரத்**
**தோயும் பொருப்பர்கலை தோயந்தீரந் தோயாரே"**

**6. மலைச்சாரலில் மழை:**

வானகத்துக்குத் தலைவன் இந்திரன். அவனே மேகங்களுக்குத் தலைவன். அவன் வள்ளலாகத் திகழ்ந்தான். அவற்றை உலகுக்கு அருளுதல் மூலம் இந்திரன் மலைச் சிறகரிந்து அதன் செருக்கை அடக்கிய வச்சிர வேந்தன். கோடையின் வெம்மையால் செருக்குற்றுக் காய்ந்த மலைகளை அடக்குமாறு அவன் மழையினை ஏவினான். அங்குள்ள உயிர்களுக்கு வளத்தினை வழங்குமாறும் புறப்படடான் அவனுடைய படை வரவை அறிவிக்க, இடிகளாகிய முரசங்களை மேகங்கள் முழக்கின.

வானத்திலிருந்து பெய்கின்ற மழையானது மலையின் பல வளங்களையம் கொள்ளையிட்டுக் கைப்பற்றிக் காட்டிற்கு வழங்கும் வள்ளல் போலப் பொழிந்தது என்கிறார் கவிஞர். வழங்குகின்ற ஆறாகவும் புறப்பட்டு, ஒலி முழங்குகின்ற புது வெள்ளம் உடையதாகவும் அது ஓடிவந்து கொண்டிருந்தது.

மதகளிறுகள் அந்த வெள்ளத்திலே நீராடப் புகுந்து வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டன. கொலைக் குணத்தையுடைய காட்டுப் பன்றியின் ஏறுகள் ஆற்றிலே சிக்கி மடிந்தன. தழைத்தலையுடைய சந்தனமரக் கொம்புகளை மோதித் தள்ளிக்கொண்டும் மூங்கில்களின் முத்துக்களை உதிர்த்து அள்ளிக் கொண்டு வெள்ளம் வந்தது.

காட்டு மல்லிகைக் கொடிகள் வெள்ளத்திலே சிக்கி அலைக்கழிந்தன. தேன் உண்ணும் வண்டினங்கள் கலைந்து ஓடின. காட்டுச் சாதி மரங்களின் வேர்களுள்ளும் மேல் மண்ணை அரித்துக் கொண்டு வெள்ளம் புகுந்தது. குறச் சாதியினர் வாழும் மேட்டுப் புறங்களில் அமைந்த ஊர்களிலும் புகுந்தது.

குதிரைப் படைகளையுடைய அழகனாரி மருமகனாகிய குமரப் பெருமானைப் போற்றிக், கொல்லைகளிலே கதிர் முற்றியிருந்த தினைக் கதிர்களை வனத்திலே உதிர்த்துக் கொண்டு பாலை நிலத்தைப்போன்று பாழாகிக் கிடந்த காட்டுப் பகுதியை அடைந்தது வெள்ளம்.

**"வானக் குருசில் வள்ளலாய் வரைக்**
**கோனைப் பரிசு கொள்ளலாய்**

வழங்கு மாறும் புறப்பட்டே – புனல்
முழங்கு மாறுந் திறப்பட்டே

தானக் களிறு படிந்திடக் கொலை
ஏனக்களிறு மடிந்திடத்
தழையின ஆரம் உந்தியும் - பசுங்
கழையின் ஆரம் சிந்தியும்

கானக் குளவி அலையவே மது
பானக் குளவி கலையவே
காட்டுச் சாதி வேரிற்போய்க் - குற
மோட்டுச் சாதி ஊரிற் போய்ச்

சேனைப் புரவி அழகனார் – மரு
கோனைப் பரவி அழகுபூந்
தினையை வனத்தில் உதிர்த்துப் - பாலை
யனைய வனத்தை எதிர்ந்ததே”

**7. இரவே வராதே:**

பால்போலப் பொங்கிப் பெருக்கெடுத்து வரும் ஆற்றினை உடைய அழகரின் முக்கூடல் இது. இதனிடத்து, வந்து சேரும் வழியோ வெள்ளம் போலத் திரண்டிருக்கும் வேலமரக் காடுகளை மிகுதியாக உடையது. காலமோ, மின்னல் ஒளியைப் பாய்ந்து எங்கும் ஒளிவெள்ளத்தை நிறைத்து கொண்டிருக்கும் கார் காலம். கால்வாய்களையும் ஆறுகளையும் கரை மறைத்துக் கொண்டு செல்லும் வெள்ளத்திலே, ஒதுங்குவதற்குக் கரைகளைக் கண்டோமானாலும், காம மயக்கமாகிய பொங்கி எழும் வெள்ளத்திற்கு தப்புவதற்குக் கரை காணாமல் வாடுகின்றோமே? இரவே! நீ வருதலையாவது இனி விட்டு விடுவாயாக!.

**“பால்வெள்ளத் தாருடைப் பண்ணவர்முக் கூடலின் கண்
வேல்வெள்ளத் தாறெமது மின்னிறைக்குங் கார்காலம்
கால்வெள்ளத் தாறுகரை கண்டுகரை காணமேல்
மால்வெள்ளத் தாறு வரலிரவு தீர்வாயே!”**

**8. பாலையிலே வெள்ளம்:**

பெருகிவரும் மழைவெள்ளமானது குறிஞ்சியாகிய மலைப்பகுதிகளைக் கடந்து கோடையின் வெம்மையினால் பாலைப்பட்டுப் போய்க் கிடந்த காட்டுநிலப் பகுதியைச்சேர்ந்தது தனக்கு எதிர்ப்படும் பாலை நிலத்து வெண்கடப்ப மரங்களையும் மூங்கிற்காடுகளையும், வெப்பாலை மரங்களையம், குராமரங்களையம், இருப்பை ஈந்து, கள்ளி முதலியவற்றையும் பெயர்த்துத் தள்ளிக் கொண்டு கரைப் பகுதியிலே விளங்கிய குன்றுகளையும் அரித்துத் தள்ளிக் கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தது.

முதிர்ந்த பருந்துகள் குளிரினைத் தாங்க மடியாமல் தம் துணைகளைச் சேர விரும்பி அழைத்துக் கொண்டிருந்தன. கழுகுகள், குளிரால் நடுங்கிக், கீழே விழுந்தறுவாயிலிருந்த தம் குஞ்சுகளைச் சிறகால் அணைத்துக் காத்துக் கொண்டிருந்தன. வேல முள்ளைப் போன்ற முட்களையுடைய முள்ளம் பன்றிக் கூட்டங்கள் தாம் பதுங்கியிருந்த புதர்களினின்றும் எழுந்து, மேட்டுப் பகுதிகளை நோக்கி ஓடின. ஊர்களிலே இருந்த வெள்ளிய வேலினராகிய எயினர்களின்

படை வீரர்கள் வெள்ளத்திற்கு அஞ்சிப் பாதுகாவலான இடம் நோக்கிச் செல்ல எழுந்தனர். வெள்ளத்திலே சிக்கிய காளை மாடுகள் பலவும் நீந்த முடியாமல் தளர்ச்சியுற்று விழிபிதுங்க அயர்ந்து சோர்ந்தன. வெள்ளத்திலே சிக்கிய இளங்காளை ஒருவன், தன் குடல் அதிருமாறு உதவி நாடிக் கூப்பிடும் குரல் எழுந்தது. 'பெருவலிமையுடைய மறத்தியர் அல்லவோ இவர்கள் எனப் போற்றப்படும் கருமை நிறமுடைய மறத்தியர்களும், அவர்களுடன் வெள்ளத்திற்குப் பயந்து உயிர் தப்புவதற்காகக் கடந்து சென்று கொண்டிருந்தனர். எரிக்கும் கதிரவனும், உயிரைக் குடிக்கும் காலனும் போலப் பரந்து இரத்த ஒளிவீசுகின்ற சூலமாகிய வேற்படையினை யுடையவள் கன்னியான கொற்றவை. அவளின் திருமுலைகளிலேயிருந்து சுரந்து பெருகிவரும் பாலைப்போல் நுரையிட்டுப் பெருகிவந்த வெள்ளம், பாலையைக் கடந்து, விரைவாக முல்லை நிலத்திலே சென்று'' பரவிற்று.

**"எதிரும் பாலை மரவமும் - திரள்**
**வெதிரும் பாலை குரவமும்**
**இருப்பை ஈந்து கள்ளியும் - கரைப்**
**பொருப்பை ஈர்ந்து தள்ளியும்**

**முதிரும் பாறு முறையிடக் - கழு**
**குதிரும் பாறு சிறையிட**
**முள்வே லெயினக் கிடை எழப் - பதி**
**வெள்வே லெயினப் படையெழப்**

**பிதிரும் காளை விழியுடன் - குடல்**
**அதிரும் காளை மொழியுடன்**
**பெரு மறத்தியர் அல்லவே – எனும்**
**கரு மறத்தியர் செல்லவே**

**கதிரும் காலும் போலவே –சென்**
**றுதிரங் காலுஞ் சூலவேற்**
**கன்னி முலையிற் சுரந்தபால் என**
**முன்னி முலையிற் பரந்ததே"**

**9. சொல்லுங்கள்**

முந்நீராகிய கடல் நீர் வற்றுமாறு கணையேவிய சிறப்பினர் திருமால். அவர் திருக்கோயில் கொண்டிருப்பது நமது முக்கூடல். அதன் பெரிய மலையிலிருந்து மின்னல் போல நீர் பெருகிப் பாய்ந்துவரக் கானமும் வளமுடைய நிலம் போல விளங்கா நின்றது. இது என்ன காரணமோ? நன்னீர்ப் பெருக்கமுடைய மருதநிலைத்தைப் போன்று நால்வகை வளங்களும் இங்கே உண்டாகிவிட்டனவே? அவைகளைக் கண்டும் ஏதும் நினைக்கின்றீரில்லையே! அவற்றின் உண்மையை உணர்ந்து உவப்புடன் எனக்கும் மெல்லச் சொல்ல மாட்டீர்களோ? தோழியரே!

**"முந்நீர் அடுங்கணையார் முக்கூடல் மால்வரைபின்**
**மின்னீர் வரக்கான் விளங்கிநின்ற வாறேயோ**
**நன்னீர் மருதமென நால்வளமுண டாயதுவே**
**உன்னீர் அவைகண்டு உவந்துமெல்லச் சொல்லீரே"**

**10. முல்லைக்கு வந்த வெள்ளம்:**

மலையிலே பிறந்து, பாலையிலே பாய்ந்து ஓடி, இப்போது முல்லை நிலத்து பகுதியை வந்து சேர்ந்து விட்டது ஆறு வளமுள்ள தோட்டக் கால்களிலே புகுந்து அங்குள்ள கொன்றை மரங்களை மோதியும் தோன்றி மல்லிகை ஆகியவற்றை அலைத்தும், அவற்றின் பூக்களிலே வந்து நிரம்பியிருந்த மதுவைக் கொட்டித் தன்னுட் கொண்டும் மோதி அங்குள்ள எண்ணெயையும், அடுத்து தொலைவிலே சாடிகளிலேயிருந்த வெண்ணெயையும், எள் அவரை துவரை முதலிய தவசங்களையும் கொட்டித் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. அவ்வீடு வதியும் அவர் இவர் என்று சொல்லப்படுகின்ற அனைவரையும் பெரும் பாடு படுத்தியது அங்கே கிடந்த குண்டுக் கல்லைப் பெயர்த்து அதனைக் கொண்டு காயா மரத்திலே மோதத் தொடங்கியது. பூக்களுடன் கூடிய அதன் உச்சியைத் தொட முயன்று, அதனைச் சாய்க்க முயன்று, அதன் பூக்களை எல்லாம் உதைத்து உதிர்த்தது. அதன் பின்னர், துளசிக் காடுகளை எல்லாம் வெள்ளக்காடாக்கித் திருமாலுக்கு ஊழியிறுதியிலே கொள்ளும் தானமாகிய பாற்கடல் போலச் செய்தது.

மதங்கொண்ட களிற்றுயானையைப் போல இப்படித் தன் போக்கிலே எதிர்ப்பட்டதை எல்லாம் சாடிக் கொண்டு கடைசியாக மீன்கள் துள்ளிக் கொண்டிருக்கும் மருத நிலத்துக் குளங்களிலே சென்று வெள்ளம் பாய்ந்தது.

**“முல்லைக் கோடி யடுக்கையின் - மலி**
**கொல்லைக் கோடி கடுக்கையின்**
**முட்டித் தோன்றி மவ்வலை – மது**
**கோட்டித் தோன்றி வெவ்வலை**
**இல்லைச் சாடி எண்ணெயும் - அயல்**

**எல்லைச் சாடி வெண்ணெயும்**
**எள்ளும் அவரை துவரையும் - உறை**
**கொள்ளும் அவரை எவரையுந்**

**தொல்லைப் பாடு பண்ணியும் - துறு**
**கல்லைப் பாடு நண்ணியும்**
**தொடுத்துப் பூவை நெற்றியைத் -தொட**
**மடுத்தீதுப் பூவை எற்றியே**

**குல்லைத் தானந் தேக்கி – மாலுக்கு**
**எல்லைத் தான மாக்கிமால்**
**கொள்ளுங் கயத்தை நிகர்த்து – மருதந்**
**துள்ளுங் கயத்தில் பாய்ந்ததே”**

## 10. தோழியின் வருத்தம்

தலைவியின் வருத்தம் அவ்வாறாயிற்று. மாலைநேரமும் அணுகிக் கொண்டிருந்தது. ‘இன்று இரவு இவள் படும் வேதனையைத் தணிவித்துத் தேற்றுவார் யாவரோ?’ எனத் தோழி கலங்கினாள்.

‘குன்றைக் குடைகவிவதுபோலத் தூக்கிப் பிடித்து அன்று ஆனினங்களைக் காத்த கோவலனாகிய திருமால் எழுந்தருளியிருப்பது முக்கூடல். இவ்வூரிலே, இன்றைக்கு இரவிலே,

இவளை எவர்தான் தேற்றுவார்களோ? கன்றுகளின் தாய்ப்பசுக்களைக் கூவுகின்றவராகிய ஆயர்கள் கொன்றைப் பழத்தால் செய்த குழலினை ஊதி வருகின்றனர். அந்தக் குரல்தான் அழகிய கூந்தலினையுடையவளான இவளுடைய காதுகளுக்கு ஆகாததாயிற்றே!'

**"குன்றைக் குடைகவித்த கோவலர்முக் கூடலிலே**
**இன்றைக் கிரவில் இவளை எவர் தேற்றுவரே**
**குன்றைக் கழுத்தணைத்துக் கற்றாவைக் கூவுமண்டர்**
**கொன்றைக் குழல்பூங் குழலிசெவிக் காகாதே"**

## 11. மருதத்திலே வந்த வெள்ளம்

தான் வந்து பாயும் மருத நிலமெல்லாம் செழிப்பு அடையவும், பணைத்து வளர்ந்து வானத்தைத் தடவுவது போல உயர்ந்திருக்கும் மருதமரங்கள் தளிர்க்கவும், எருமைக்கடாக்கள் பூட்டிக் கமலை இறைத்து நீர் பாய்ச்சும் மேட்டு நிலப்பகுதிகளிலும், நீர் பெருக்கினையுடைய அகன்ற தாமரை மலர்கள் நிரம்பிய குட்டங்களிலும் சென்று வெள்ளம் பாய்வதாயிற்று.

அந்த வெள்ளத்தை நீந்த முடியாமல் தண்ணீரை விரும்பும் எருமைகளுங் கூடப் பதறின. எருவாக வயல்களிலே போடப்பட்டிருந்த எருமைச் சாணங்கள் சிதறி வெள்ளத்தோடு எங்கும் பரந்தன. உழுத புழுதியின் உழவுச் சால்கள் வழியாக ஓடி எங்கும் ஈரமாக்கிச் சாலைகளிலுள்ள மரங்களெல்லாம் குளிர்கோர்த்து நிற்கும்படியாகவும் செய்தது.

உரல்களும் கரும்புப் பயிரும் சாய்ந்தன. அதிலே பாய்ந்தும் ரீங்காரமிட்டும் வண்டினங்கள் திரிந்தன. முதலைகள் எல்லாம் தாம் கிடந்த குட்டைகளை விட்டு எங்கும் சரியுமாறு அவற்றை வெருட்டியதுடன், பெரிய வாழைகளை எல்லாம் மூட்டோடு பெயர்த்துக் குவித்து அடுக்கியும் வெள்ளம் வந்தது.

இப்படியாகச் சினங்கொண்டு வரும் வெள்ளை யானைக்கு எதிராக என்ன செய்வோமென்று நீர்நிலைகளிலே இருந்த வெண்சங்குகள் கிடந்து வருந்தின. இப்படியாக, மருத நிலத்துக் குடிசைகளையெல்லாம் பெயர்த்துக் கூட்டித் தன்னுடன் வாரிக் கொண்டு மழை வெள்ளமானது, நீர்ப் பறவை ஒலி முழக்கம் மிகுந்திருக்கும் அழகிய நெய்தல் நிலக்குடிசைகளை நோக்கிச் சென்று புகுந்தது.

**"பாயும் மருதஞ் செழிக்கவே – பணை**
**தோயும் மருதம் தளிர்க்கவே**
**பகட்டுக் கமலை வட்டத்தில் - புனல்**
**தகட்டுக் கமலக் குட்டத்தில்**

**பேயும் எருமை பதறவே – உற**
**மீயும் எருமை சிதறவே**
**புழுதிச் சாலை நனைத்துமே – குளிர**
**கொழுதிச் சாலை யனைத்துமே**

**சாயும் முரலுங் கரும்புந்தான் - அதில்**
**பாயும் முரலுஞ் சுரும்புதான்**
**சரிய முதலை முடுக்கியும் - வாழைப்**
**பெரிய முதலை அடுக்கியும்**
**காயும் தவள வாரணம் - எதிர்**
**ஆயுந் தவள வாரணம்**

**கழனிக் குடிலைத் தொகுத்து – நெய்தலந்**
**துழனிக் குடிலுற் புகுந்ததே”**

**12. அன்றிற் குலங்காள்:**

பொருநை நதியின் கரைகளிலே வாழ்ந்திருக்கும் துணையை விட்டுப் பிரியாத அன்றிப் பறவைக் கூட்டங்களே! முற்றங்களிலே எல்லாம் குடம் போலப் பருத்த சங்கினங்கள் ஊர்ந்து செல்லும் வளமுடைய முக்கூடல் என்னும் ஊருக்கு உரியவர் எமக்குச் செய்த உபகாரத்திற்கு இணையே கிடையாது. அவரைப் போலவே நானும் நெடிய மாலாகி விட்டேனே! அவருடைய வெற்றித் திருநாமந்தான் வேலாகுமோ? அவரிடம் சென்று இந்தச் செய்தியை நீங்கள் சொல்ல மாட்டீர்களோ?

**“மூன்றிற் குடவளையூர் முக்கூடல் ஊரர்செய்த**
**நன்றிக்கு இணையில்லை நான்நெடுமால் ஆனேனே!**
**வென்றிற் திருநாமம் வேறோ பொருநைநதி**
**அன்றிற் குலங்காள்! அவர்க்கிதுநீர் சொல்லீரே”**

**13. நெய்தலிற் புகுந்த வெள்ளம்:**

தான் புகுந்த நெய்தல் நிலப் பகுதிகளை எல்லாம் நிலை கலங்கி மயங்கிப் போகுமாறு செய்தது ஆற்றுப் புது வெள்ளம் மலர் மிகுந்த நெய்தற் பூக்களை எல்லாம் கசக்கி உதிர்த்தது. இரு கரைகளிலும் இருந்த மணல்மேடுகள் வெள்ளத்தால் கரைந்து சரிந்தன; அந்த வேளையிலே அம்மேடுகளிலே இருந்த நீர்ப்பறவை இனங்கள் எல்லாம் பறந்து ஓடின.

ஆறு பட்டினத்திற்குள்ளும் நுழைந்தது. அலைகளால் மோதிக் கொண்டு பட்டினத்திற்குள் நுழைந்த ஆற்று வெள்ளம், மீண்டும் மக்கள் நுழைந்து அதனைத் தடுத்து மீண்டும் பட்டினமாகப் படைக்க முடியாத வகையிலே அதனைத் தன்னுள் ஆழ்த்தியது. மக்கள் தமக்கோர் புகலிடம் கிடைத்திடாமல் உழன்று வெள்ளத்தை இகழ்ந்தனர்.

மழைக் கொடுமையினால் தம் இலை முதலியனவற்றை உகுத்து நின்ற கானற் சோலைகளை எல்லாம் அழித்தது. கடலுள் புகுந்து கடல்நீரை இரண்டாகப் பிளந்து சென்று எதிர்த்துவரும் அலைகளையும் தாக்கி வலியழியச் செய்தது. உப்பளத்தினுள் புகுந்து அங்கே இருந்தவரை எல்லாம் அதனை விட்டு வெருட்டியது. மேலும், அந்தக் கடற் பாங்கான இடத்திலிருந்தவரை எல்லாம் பெரிய மணல் மேடுகளிலே ஒன்று கூடுமாறும் செய்தது.

தகுதியுடையோனாகிய பரந்த கடலின் இறைவனாகிய வருணனைத் தொழுது போற்றி வழிபடும் நேர்த்திக் கடன் போன்ற முறைமையிலே, அவ்விடத்தைச் சார்ந்து சுறவுக்கோடு நட்டு, நானிலப் பொருள்களையும் படையலிட்டு, அவன் சுறவுகளின் மேலாக வந்து காட்சி தரவும் அவனை அணுகியதும் தன் வேகமெல்லாம் அடங்கக், கடலினுள் மெதுவாகப் பாய்ந்து கலந்தது, ஆறு.

**“புகுந்த நெய்தலை மயக்கியே – மலர்**
**மிகுந்த நெய்தலைக் கயக்கியே**
**புடையிற் புளினஞ் சரியவே அதன்**
**இடையிற் புளினம் இரியவே**

**புகுந்து நுழையப் பட்டினம் - நிரை**
**முகந்து நுழையப் பட்டினம்**
**படைத்திடாமே நிகழவே – நிலை**
**கிடைத்தி டாமை இகழவே**

**உகுந்த தண்டலை நீக்கியே – புனல்**
**வகுந்த தண்டலை தாக்கியே**
**உப்பளத் தாரை யோட்டியும் - புனல்**
**அப்பளத் தாரை யீட்டியும்**

**தகுந்த டங்கடல் இறைவனைத் தொழ**
**மகிழ்ந்தி டுங்கடன் முறையினில்**
**சார்ந்து சுறவு நேர்ந்து – குருக**
**வர்ந்து வெள்ளம் ஊர்ந்ததே**

**14. சங்கம் தாங்கேனே:**

தலைவன் வரக் காணாது அவனை எதிர்நோக்கிக் கடற்கரையிலே கண்பூத்துக் கலங்கி நின்றாள். எதிரே தோன்றும் மரக்கலமும், சங்கமும் அவள் பால் வேறு நினைவுகளை எழுப்புகின்றன. அவற்றை நோக்கி அவள் ஏக்கத்தைக் கூறுகின்றாள்.

'கருடனை ஊர்தியாக உடைய கடவுளரான திருமாலுக்கு உரிய இம்முக்கூடலிலே, தங்கத்தைத் தேடவிரும்பி என்னைப் பிரிந்து சென்றவர் என் காதலர். அவர் மீண்டும் வந்து என்னைக் கூடினாரில்லை. படகே! என் மேனியெல்லாம் நெருப்பிலிட்ட ஈயத்தைப் போல உருகுதலானேனே! வெண் சங்கமே! என்னுடைய சிவந்த முன்கைகளிலே சங்கு வளையல்களையும் தாங்காது இழந்து நிற்கின்றேனே! என் செய்வேன்?

**"கங்கமே யூரும் கடவுள் முக்கூடலிலே**
**தங்கமே தேடத் தணந்தார் மணந்திலரே**
**வங்கமே அங்கமனல் வங்கமே யானேன்வெண்**
**சங்கமே செங்கைதனில் சங்கமே தாங்கேனே.**

**15. பொருநை வெள்ளம்:**

உதைத்து வேகங்கொண்டதாக எதிர்த்துச் சென்று, கடலின் வயிற்றைக் கிழித்து ஆரவாரிக்கும் நீரானது, அந்த உதயவரைக்கும் மேற்கிலேஅதன் உற்பத்தித் தானமாகிய பொதிய வரைக்கும் இடையே ஒத்துப் போகும் படியாக அவற்றிக்கு இடைப்பட்டுக் கிடந்த நலமெங்கணும் பரந்து போய்க் கொண்டிருக்கும்.

வெள்ளத்திலே எதிரேற முடியாமல் பதைபதைத்து தெளியும் துதிக்கை, மூக்கன், பண்ணை சாலை எண்ணெய் மீன். பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி, பண்ணாங்கு, பழம் பாசி ஆகிய மீன் வகைகளும்.

எதிர்ப்பட்ட மனிதரை வதைக்கும் மகர மீன்கள், குதிக்கம் சள்ளை மீன், மத்தி, உல்லம், பொத்தி, மடந்தை, கடந்தை, செம்பொன் நொறுக்கி, பஞ்சலைக்கெண்டை, கருங்கண்ணி ஆகிய மீன்களும் ஆகியவற்றை எல்லாம் தன் அடி மணலிலே புதைத்தும் மணல் மேடுகளிலே ஒதுக்கியும், நிறத்தாலும், பெருங்கணைப் பெருக்கத்தாலும் கடல் போன்ற நம் முக்கூடல் அழகரின் பெருங்கருணையானது பெருக்கெடுத்து வருவது போலப், பொருநையாறு பெருகி வருகின்ற புதுமையான காட்சியைப் பாருங்களடீ, பள்ளியர்களே!.

**"உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலின்**
**ஊதரங் கீறியதிரும் நீர்**
**உதய வரைக்கும் பொதிய வரைக்கும்**
**ஒத்துப் போம்படி முற்றும் போய்**

**புதைத்து நெளியும் துதிக்கை மூக்கண்**
**பண்ணைச் சாலை எண்ணெய்மீன்**
**பசலி திருக்கை கசலி கெளுத்தி**
**பண்ணாங் கும்பழம் பாசிமீன்**
**வதைக்கும் மகரம் குதிக்குஞ் சள்ளை**
**மத்தி உள்ளம் பொத்திமீன்**
**மடந்தை கடந்தை செம்பொன் நொறுக்கி**
**மலங்கும் பஞ்சலை கருங்கண்ணி**
**புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலைப்**
**பொருநம் அழகர் கருணைபோல்**
**பொருநை யாறு பெருகி வார**
**புதுமை பாரும் பள்ளீரே"**

**16. சித்திரா நதியில் வெள்ளம்:**

குற்றாலத்தைத் தன்னிடத்தே கொண்ட திரிகூடமாகிய பெரிய மலை முகடுகளிலே மேகங்கள் சென்று படிந்து பொழிந்து, மழை நீரானது ஒன்று சேர்ந்து, பொருநை நதியோடு சேர்தலை விரும்பி, முக்கூடற் பதியை வலங்கொண்டு வரும்.

நீர் வற்றுதல் இல்லாத மடுக்களிலே, பரவை. குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி ஆறால், ஓராமின், பிடிக்கவே இயலாத அயிரை, கெண்டை, கெளிறு, பெரிய வரால்கள் ஆகியவை பலவும் கிடக்கும். அவை எல்லாம் புதுவெள்ளம் வரவும் எதிரேறிச் சென்று அணையிலே பாயும் அங்கிருந்து கால்வாய்களிலே பாயும் பின்னர், குளத்திலே பாய்ந்து வயல்களில் எல்லாம் பாயும் இத்தகைய வளமுடையது சிற்றாறு.

அது சிற்றாறு என்பதொரு பெயரினைப் பெற்றிருந்தாலும்கூட, ஒப்பற்ற சிறிய உருவத்தையுடைய வாமனரின் பெருமையைப் போல்வதாகும். அந்தச் சித்திராநதி பெருகிவருகின்ற அழகினைப் பாருங்களடி பள்ளியர்களே!

**"குற்றாலத் திரிகூட மால்வரை**
**யுற்றே மேகம் பொழிந்தநீர்**
**கூடிப் பொருநை நாடித்திருமுக்**
**கூடற் பதியை வலங்கொண்டே**

**வற்றா மடுவிற் பரவை குரவை**
**வாளை கோளை தேனி மீன்**
**மயிந்தி உழுவை அயிந்தி கூனி**
**மணலி ஆறால் ஓரா மீன்**

**பற்றா அயிரை கெண்டை கெளிறு**
**பருவ ராலும் அணையிலே**
**பாயக் காலிற்பாயக் குளத்தில்**
**பாய வயலிற் பாயவே**

**சிற்றா றென்பது பெற்றா லும்மொரு**
**சிறிய வாமனப் பெருமைபோல்**

**சித்தி ராநதி பெருகி வார**
**சித்திரம் பாரும் பள்ளீரே”**

## 4. குமுறல்! கொடுமை!

**1. பண்ணை விசாரிப்பான்**

ஆறு கரைபுரண்டு பரவிச் சென்றது, அதற்கப்பாலும் பெருகி ஓடிற்று. அதனால் அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் இந்தப் பகுதிக்கு வர முடியாமலும், இப்பகுதியிலே உள்ளவர்கள் அக்கரை சேர முடியாமலும் இருந்தது. நீர் வடிந்து தாம் கரைகடக்கப் பெறுதலை நினைத்து அவர்கள் ஆவலுடன் காத்திருந்தனர் கரை கடந்து ஏறிய வெள்ளம் வற்றியதைக் கண்டபின் அவர்கள் தம் விருப்பப்படி ஆற்றைக் கடக்கலாயினர். எம் பெருமானாகிய முக்கூடலழகரின் சிறந்த விளைவுகளைத் தரும் பண்ணையை விசாரிப்பவனும் ஆற்றைக் கடந்து வந்து சேர்ந்தான்.

**“ஆறுபரந் தப்பாலும் அந்நிலத்தார் இந்நிலத்திற்**
**பேறுடனே மற்றநிலப் பேறும் பெறநினைந்தே**
**ஏறுபுனல் கண்டதற்பின் எம்ரெுமான் முக்கூடல்**
**வீறுதரும் பண்ணை விசாரிப்பான் வந்தானே”**

**2. பண்ணைக்காரன்**

அவனுடைய கண்களோ மாறு கண்கள். பருத்திப் பொதியைப் போலக் கூறுபாடமைந்தது. அவனுடைய தொந்தி வயிறு கீரை மத்துப் போல விளங்குவது அவனுடைய வழுக்கைத் தலை. அவன் பற்களோ சுரைவிதைகள் போலக் காணப்பட்டன. அவனுடைய மூக்கில் நீறுபோல வெண்மையான ஊளை வடிந்து கொண்டிருக்கும். தட்டி நெரித்த மாங்கொட்டையைப் போலத்தோன்றும் அவன் வாயிலே ஈ அரித்துக் கொண்டிருந்தது.

தாறுமாறாக அமைந்திருந்த அவன் மீசையிலே ஐந்தாறு மயிர்களே காணப்பட்டன. தூங்கலாகிப் போன சண்ணைக் கடாவைப்போலக் காணப்படும் அவனுடைய நடை.

அவன் முகம் மயிர் அடர்த்தியில்லாமல் மொண்ணையாகவே இருக்கும். வேறாகக் கீறிப் பின் ஒட்டவைத்தாற் போன்ற ஏறுகாது உடையவன் அவன். இப்படியாகச் சக்கரப்படை வீரனானரான முக்கூடலழகரின் பண்ணைக்காரன் வந்தான்.

**“மாறு கண்ணும் பருத்திப்பைக்**
**கூறு வயிறும் - கீரை**
**மத்துப் போல தலையும் சுரை**
**வித்துப் போல் பல்லும்**

**நீறுபோல் வெளுத்து வூளை**
**ஊறு நாசியும் - தட்டி**
**நெரித்தமாங் கொட்டை போல்ஈ**
**அரித்த வாயும்**

**தாறுமாறாய் மீசையில் அஞ்**
**சாறு மயிரும் - தூங்கற்**
**சண்ணைக்கடாப் போல்நடையும்**
**மொண்ணை முகமும்**

வேறு கீறி ஓட்டவைத்த
ஏறு காது மாய் - நேமி
வீரனார்முக் கூடற்பண்ணைக்
காரனார்வந் தார்”

**3. மூத்த பள்ளி முறையிடுகிறாள்:**

எண்ணெய் கலந்த வாசனையுள்ள தயிலத்தைப் பூசியிருக்கின்ற கூந்தலையுடையவள் மூத்தபள்ளி. அவள், பண்ணையாரோடு பள்ளன் மனத்திலேயுள்ள கள்ளத்தனங்கள் எல்லாவற்றையும் சொன்னாள் வெண்ணெயுண்ட வாயினால் கண்ணன் அந்நாள் இசைத்த வேய்ங்குழலின் மாயம் போன்றதோ இவனுடைய மாயமும்? அழகருக்கு ஆட்பட்ட பெண் நான். ஏன்னை ஏமாற்றிவிட்டு ஊர்ப் பெண்களுடன் திரிகிறானே இவன்? அந்தப் பெண்களின் வாழ்வு என்னவாகும்? யார்தான் அவர்களைக் கைப்பிடித்து மணந்து கொள்வார்கள்? யார் மணப்பார்கள்? நீங்களே சொல்லுங்கள் இப்படி நியாயம் பேசுகிறாள் மூத்தவள்.

**“எண்ணெயார் பூந்தயிலம் ஏற்றகுழல் மூத்தபள்ளி**
**பண்ணையா னோடு ரைத்தாள் பள்ளன்மனக் கள்ளமெல்லாம்**

**வெண்ணையார் வாயினிசை வேயழகர் மாயமிதோ**
**பெண்ணையார் கையிற் பிடிப்பார் பிடிப்பாரே!”**

**4. மெய்தான் ஆண்டே:**

சின்னத் தனங்கொண்ட இந்தப் பள்ளன் எல்லோரையும் ஏய்த்து ஆடுகின்ற வெறியாட்டத்தைக் கொஞ்சங் கேளுங்கள். ஒன்றுக்கு மூன்று முறையும் சொல்லிவிட்டேன். காவல் காக்க வேண்டிய கால்வாய் அணையை இவன் பார்க்கவே போக வில்லை. காலத்தாற் செய்வதால் வரும் பயன்கள் தாம் பின் என்ன கோலங்கள் செய்தாலும் வந்து விளையுமோ? எதற்கும் ஒரு போக்குநீக்கு இருக்கவேண்டாமோ? அதுகூட இல்லையே? எதற்கெடுத்தாலும் மூக்கிலே கோபம். என் புத்திமதிகளையும் கேட்கமாட்டேன் என்கிறான். அவன் ஒரு சத்துரு நீலனைப் போல ஆகிவிட்டான். நான் உங்களிடம் சொன்னது தெரிந்தாற்கூட, ‘அவன் இப்படி வாக்கு வாதம் உண்டாக்கி விட்டானே?’ என்று, என்னை வந்து திட்டினாலும் திட்டுவான்.

**“தூக்குணிப் பள்ளன் - ஏய்க்கிற ஆட்டத்தைத்**
**துக்குணிக் கேளும் - முக்காலும் சொன்னேன்**
**காக்குங் காலணை – பார்க்கவுஞ் செய்யான்**
**காலஞ் செய்வது – கோலஞ் செய்யுமோ?**

**போக்கு நீக்கில்லை - மூக்கிலே கோபமென்**
**புத்தியுங் கேளான் - சத்துரு நீலன்**
**வாக்கு வாதமுண் - டாக்கினாள் என்றென்னை**
**வைதாலும் வையும் - மெய்தானி தாண்டே”**

**5. இளைய பள்ளி கூறுகிறாள்:**

தன் மாற்றாள் சொன்னதைக் கேட்டாள் மருதூர்ப் பள்ளி. பள்ளி பண்ணையார் பள்ளன் இருவருடைய தொடர்பும் இரண்டுபட யார்தான் பொறுப்பார்கள்? அப்படி நேர்ந்து விடக் கூடாது என்பதற்கு ஏற்றபடி சொல்லலானாள். தம் கணவருக்கு ஒரு சிறுமை வராமல் பெருமை வரும்படி

செய்யவல்ல பெண்கள், அழகரின் தோள்களிலும் மார்பிலும் வீற்றிருக்கும் ஜயலட்சுமியையும், திருமகளையும் போன்றவர்கள் அல்லரோ? அவர்களுடைய பெருமையைத் தேறி உணர்வதும் நமக்கெல்லாம் அரிதாகும் அல்லவோ?

**“மாற்றவள் தன்சொற்கேளா மருதூரிற் பள்ளியுந்தான்**
**ஏற்றபடி சொன்னாள் இரண்டுபடில் யார்பொறுப்பார்**
**தோற்றமரி தன்றோ சிறுமைவரா மற்பெருமை**
**ஆற்றவல்ல மாதர் அழகர்புய மார்பினரே”**

**6. அழகர் அறிவார்:**

என் குடிலிலே படுத்துக் கிடந்த பள்ளனை முக்கூடற்பள்ளி கூப்பிட்டு எழுப்பி, முந்தாநாள் கலையிலே வேலைக் குப்போ’ என்றாள். அவனும் போனான். ஆற்றில் வெள்ளமும் மேல்வரத்தாய்விட்டது. அவனுக்கு என்ன கடுமையான வேலையோ? இன்னும் அவன் திரும்பி வரக் காணேன். இன்றோடு மூன்றாவது நாளும் ஆயிற்று, இந்த அடிமைக்கு நேற்று இரவெல்லாம் உறக்கமில்லை. இந்த உண்மையை எல்லாம் அழகர் அறிவார் ஆண்டையே!

**“குடிலித் கிடந்த பள்ளனை – முக்கூடற்பள்ளி**
**கூப்பிட் டெழுப்பி முந்தா நாள்**
**விடியப்போ வேலையி லென்றாள் - அவனும் போனான்**
**வெள்ளமும் மேல்வரத் தாச்சு**
**கடினப் பிரவத்தி ஏதோ – திரும்பிவரக்**
**கண்டிலேன் இன்று மூன்றாம்நாள்**
**அடிமைக்கு நேற்று ராலெல் லாம் - உறக்கமில்லை**
**அழகர் அறிவார்காண் ஆண்டே”**

**7. கண் சிவந்தான்:**

எல்லாத் திசைகளிலுமே பேர்போன சூதுகளை எல்லாம் படித்தவளே! தென் மருதூர்ப் பள்ளியே! அடி கள்ளியே! இருந்த இடத்தைவிட்டு அசையாமல் பள்ளனை உன் குடிசைக்கு உள்ளேயே வைத்துக் கொண்டு என்னுடன் பொருத்தமற்ற பொய்வார்த்தைகளை எல்லாம் சொன்னாய். இப்படிச் சொல்லி எழுந்து, கண்கள் சிவக்க, ‘உண்மையைச் சொல்லடி, இல்லா விட்டால் உன்னைக் கசையால் அடிப்பேன்’ என்று சீறினான் பண்ணைக்காரன்.

**“திசைபோன சூதுகற்ற**
**தென்மருதூர்ப் பள்ளிகள்ளி**
**அசையாமற் பள்ளனையுள்**
**ளாக்கிவைத்துக் கொண்டெனுடன்**

**இசையாத வார்த்தை சொன்னாய்**
**என்றுபண்ணை யானெழுந்து**
**கசையால் அடிப்பனென்று**
**கண்சிவந்து கூறினனே”**

**8. பள்ளன்! வந்தான்!**

இப்படிப் பண்ணைக்காரன் சொன்ன கடுமையான பேச்சைக் கேட்டதும் வடிவழகக் குடும்பன் குடிசைக்குள்ளேயிருந்து அரை நொடியிலே வெளியே வந்து நின்றான்.

பண்ணைக்காரன் கள்ளத்தனமாகப் பள்ளனைப் பார்த்தான். ‘‘பள்ளா! வீணாகத் துள்ளாட்டம் போடாதேடா! பண்ணை பற்றிய செய்திகளை எல்லாம் சொல்லடா முதலில்’’ என்றான்.

**‘‘கடின உரையை கேட்டு**
**வடிவழகக் குடும்பன**
**குடிலி லிருந்தேயரை**
**நொடியில் வந்தான்’’**
**பள்ளனைப் பண்ணைக் காரன்**
**கள்ளமாய்ப் பார்த்துப் பள்ளா**
**துள்ளாதே பண்ணைச் சேதி**
**விள்ளடா என்றான்’’**

**9. பள்ளனின் பதில்:**

பத்து அவதாரங்கள் எடுத்து, அதனால் பத்து வடிவங்களை உடையவராகத் திகழ்பவர் முக்கூடல் அழகர். அவருடைய பண்ணைக்காரன் கேட்டபடி, வித்துவகை, மாட்டுவகை, மேழி ஏர்க்கால் முதலான இன வகைகள், கொத்துவகைகள் எல்லாம் கூட்டி, வரத்தும் செலவும், வைத்திருக்கும் இருப்பும் எல்லாம் குடும்பன் கொஞ்சமும் மாறுபாடில்லாமல் சொன்னான்.

**‘‘பத்துவுரு வத்தழகர் பண்ணையான் கேட்டபடி**
**வித்துவகை மாட்டுவகை மேழிஏர்க் கால்முதலாய்க்**
**கொத்துவகை அத்தனையும் கூடிவரத் துஞ்செலவும்**
**வைத்த இருப் புங்குடும்பன மாறாமற் கூறினனே’’**

என்னுடன் பழகியவர் நீர் என்னுடைய சாமர்த்தியங்களை நன்றாக அறிவீர். பயிரிடாமல் சோம்பி கிடக்கும் கள்ளத்தனமுடைய பள்ளனல்லவே நான்? உழவு தான் என்றால், ஒரு பன்றி உழுந் தரையளவு ஒன்று மட்டுமேயல்லாமல், அடுத்து இரண்டாவது தரைகூட எனக்குக் கிடையாதே. அழகருடைய ஏவலினாலேயே இலங்கையை அழித்து மீளும் குரங்கான அநுமான் உள்ள மட்டும், கிழமைதோறும் கதிர் முளைத்தாலும், அதற்காகப் பாடு படாமல் சோம்பிக் கிடக்க முடியுமோ? பண்ணை ஆண்டையே!

**10. வித்து வகை:**

நானும் பல பல வெள்ளாண்மை இட்டேன் என்ன பயன்? மணல் வாரியை முன் காலத்திலே நம் பெருமானின் கட்டளைக்குச் செலவு செய்து விட்டார்கள் அது செலவாகிப் போனதும் சிறிதளவேயிருந்த பூம்பாளை நெல்லையும் செண்டலங்காரருடைய தொண்டர் கூட்டத்திற்குப் பொங்கிப் போட்டு விட்டார்கள் கலகஞ் செய்யும் வேல் போன்ற கூர்மையான முனைகளையுடைய திருமங்கையாழ்வான் என்ற நெல்லைத் திருமகள் விழாவிற்குச் செலவிட்டனர். அதனையும் மிச்சம் காணவில்லை ‘மச்சு முறித்தான்’ என்ற நெல்லைக் காட்டிச். சொல்லவொண்ணாத அழகுடைய தேவதாசிகளுக்கு, அவர் முன் அதுவும் தீர்ந்தமையால், சொறி குரும்பை நெல்லை விற்றவர் பலர் ஆண்டையே!

**‘‘பலவெள் ளாண்மையிட் டேன் மணல் வாரியைப்**
**பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்**
**செலவு போனதும் போய்ச்சில பூம்பாளை**
**செண்ட லங்காரர் தோப்புக்கே காணும்**
**கலக வேற்கைத் திருமங்கை யாழ்வானைக்**

காணேன் மச்சு முறித்தானைக் காட்டிச்
சொலவொண் ணாத் தெய்வ தாசி களுக்கே
சொறி குரும்பை விற்றார்பலர் ஆண்டே”

**11. மாடுகள்? மாடுகள்?:**

நடந்த அதிசயங்களை எல்லாம் நான் சொல்லக் கேட்பீரானால், முக்கூடலழகரின் பண்ணைக்கு உழவு மாடு எங்கே இருக்கிறது? ஆயிரமல்லியன் விதிவசத்தால் மேற்றிசை நோக்கிப் போனது எங்கு போயிற்றோ? அதனை இன்னமும் திரும்பி வரக்காணேன். என்ன சதியாலோ செப்பறை போய்ப் புகுந்த மாட்டை, அது நம்முடைய மாடுதானா? என்பதற்குச் சடை அடையாளம் ஒத்திருக்கிறதா என்று இனித்தான் போய்ப் பார்க்க வேண்டும். எதிரில்லாத மயிலையை ஒரு செட்டி பிடித்துக் கொண்டுபோய் விட்டான் அது வெறும் பெட்டை என்று வேறு பலரும் சொல்லுகிறார்கள் ஆண்டையே! நான் என்ன செய்வேன்?

“அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்
அழகர் பண்ணைக்கு உழவுமா டெங்கே?
விதிவசந் தன்னில் ஆயிர மல்லியன்
மேற்றி சைமுகஞ் சேர்ந்தது காணேன்
சதியி லேசெப் பறைபுகு மாட்டைச்
சடைய டையாளம் போய்ப்பார்க்க வேணும்
எதிரில் லாதம யில்யுஞ் செட்டிகொண்
டேகினான் பெட்டை என்றார்காண் ஆண்டே”

**12. ஏர்க்கால்கள் இல்லை!:**

திருமுக்கூடல் நகருக்கு உரியவரான அழகர்க்கு இளையவனாகத் தோன்றிய பெண்ணான நீலியைத் தமக்கு மனைவியாகக் கொண்ட மருதப்பர், நானூறு கொழுக்களையும் மாணிக்கவாசகனிடமிருந்து வாங்கிக் கொண்டு போய் விட்டார். காரைக் காட்டாராகிய வேளாளர்கள் விருதுக்காக வழக்கிட்டு, மிச்சமிருந்த கொழுக்களையும் மேழியோடு சேர்த்து வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். காமன் இருக்கின்றானே. அவன், வந்து கேட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் உதவுதல் கருதி, இருந்த எல்லாக் கலப்பைகளையுமே கொடுத்துவிட்டான். ஆண்டையே! நான் என்ன செய்வேன்?

“திருமுக் கூடல் அழகர்க்கு இளைய
தெரிவை நீலியைத் தேவியாய்க் கொண்ட
மருதப் பர்கொழு நானூறும் மாணிக்க
வாச கன்கிட்ட வாங்கியே கொண்டார்
விருதுக் கேகாரைக் காட்டார் வழக்கிட்டு
மேழி சேரமுன் வாங்கிக் கொண்டார்கள்
கருதிப் பெண்ணுக்கும் ஆணுக்குங் காமன்
கலப்பை முற்றுஞ் செலவிட்டா னாணடே”

**13. நுகங்கள்! வடங்கள்!**

எவ்வகைக் குற்றமும் அற்றவரான ஆறை அழகப்ப முதலியார் என்னும் நயினாத்தை, அழகரின் மண்டபத்திருப்பணி செய்யும் போது தூண்களைச் சாரம்கட்டி ஏற்றுவதற்கு, அழகான நீண்ட வடக்கயிறுகள் ஒரு கோடிக்கு மேல் கொடுத்துவிட்டேன். கார்ப்பயிர் இடும்வரைக்கும் என்னிடம் எஞ்சியிருப்பதெல்லாம் ஒரே ஒரு வடந்தான். என்ன சொல்லுவேன் என் நிலைமையை?

எண்ணிக்கைக்கு நாலு நுகத்தடி என்னிடம் இருந்தது. ஆனால் உழுவதற்கு ஒரு நுகத்தைக் கூடப் பகலெல்லாம் தேடியும் என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. இராத்திரி தேடினால் பூரான் வேறு என்னைக் கடிக்கப் பார்த்தது என்ன செய்வேன் ஆண்டையே?

**"அனக னாறை வருநயி னாத்தை**
**அழகர் மண்டபத் தூண்சாரம் ஏற்றக்**
**கனக நீள்வடம் கோடி கொடுத்தேன்**
**கார்வ ரைக்கும்மு ழுவடம் ஒன்றே**
**என்சொல் வேனுகம் எண்ணிக்கை நாலுக்**
**கிருந்த தொன்றுழத் தன்னுகந் தன்னைத்**
**தினமும் நான்பகற் காணேன் இராத்திரி**
**தேடிற் பூரம் அடுக்குங்காண் ஆண்டே"**

**14. இடையனைக் கூட்டி வாடா!**

இப்படி என்னிடம் உழுவதற்கு எதுவுமே இல்லை; தான்ஏது செய்வேன்?' என்று சொன்ன பள்ளனின் ஏமாற்றுப் பேச்சுக்களைக் கேட்டான் பேய்த்தனமுடைய அந்தப் பண்ணைக்காரன் இன்னும் அவன் சொல்லவிருக்கும் மற்றைப்பகுதி பொய்களைக் கேட்பதும் அவற்றையெல்லாம் சோதனை செய்து உண்மை காண்பதும், பின்னர்ப் பார்த்துத் தீர்த்துக் கொள்ளலாம்' என்று கருதினான். "ஆதிவயல், நாள்வயல். வீதிவயல் ஆகிய கண்ணாறெல்லாம் ஆட்டுக்கிடை வைத்து, அதன் பின் போய்க் குற்றமற்றவனான அந்தச் சாதி இடையனைக் கூட்டிக் கொண்டுவா பள்ளா?" என்று அந்தப் பள்ளனை ஏவினான்.

**"ஏது செய்வேனென் றோதிய பள்ளன்றன்**
**ஏய்ப்புக் கேட்டந்தப் பேய்ப்பண்ணைக் காரன்**
**பாதி கேட்பதுஞ் சோதனை செய்வதும்**
**பார்க்க லாம்பின்பு தீர்க்கலாம் என்றே**
**ஆதி நாள்வயல் வீதிகண் ணாறெல்லாம்**
**ஆடுவைத் தின்னும் மேடுந் திருத்தக்**
**கோதி லானந்தச் சாதி யிடையனைக்**
**கூட்டிவா பள்ளா கூட்டிலா வென்றான்"**

**15. தேடி நடந்தானே!:**

கருமையான மேகத்தைப் போலும் தம் திருமேனி விளங்கும் அழகராகிய முக்கூடல் அழகரின் பண்ணை வயல்களில் எல்லாம், பண்ணைக்காரன் சொன்ன அந்தப் படியேதப்பாமல் ஆட்டுக்கிடை வைக்கவேண்டுமென்று ஒப்பில்லாத பள்ளனும் உள்ளத்திலே மகிழ்ச்சியுடையவனாகப் பண்ணைக்கார நயினார் சொன்னபடியே, ஆயர்களின் வீடுகளை நோக்கி நடந்தான்.

**"மைப்புயலே போலும் வடிவழகர் பண்ணைவயல்**
**அப்படியே தப்பாமல் ஆடுவைக்க வேணுமென்றே**
**ஒப்பரிய பள்ளன் உவந்துபண்ணை யாண்டவனார்**
**செப்பியவா றாயர்மனை தேடி நடந்தானே"**

**16. பள்ளன் விடைபெறுதல்:**

முக்கூடல் நகரிலே விளங்கும் சிறப்பான பண்ணை நிலங்களில் எல்லாம் உரம் ஏற்றுவதற்குத் தவறாமல் நான் ஆடு கொண்டு வருவேன் பாரும் ஆண்டையே!

உம்மைத் தொழுது விடைபெற்றுக் கொண்டு போய் நீர் சொன்னபடி ஆடுகளையும் திரட்டிக் கொண்டு பொழுது மலை வாயிற் புகும் முன்பாவே வந்து அதன்பின் வயலுக்குக் கிடைக்காக்கவும் புறப்படுவேன் ஆண்டையே!

குட்டிகளையும் ஒட்டிக் கொண்டு, அவற்றை அடைத்து வைப்பதற்கான சிறுசிறுகுடில்களையும் எடுத்துக் கொண்டு ஆட்டுப் பட்டிகளையும் எடுத்துக் கொண்டு இன்று பகல் வேளைக்குள்ளேயே வந்துவிடுவேன் ஆண்டையே!

அழகருடைய அருள் கொண்ட திருவுள்ளத்தைப் போல, என் நயினாரான ஆண்டவர்க்கும் என்மீது மனத்திலே கருணை வரும்படியாக, உழவுவயல் உள்ளதெல்லாம் ஆட்டுக்கிடைமறித்து உரம் வைப்பேன் ஆண்டையே!.

**“வீறான முக்கூடல் விளங்குபண்ணை உரமேற்ற**
**மாறாமல் ஆடுகொண்டு வருவேன்காண் ஆண்டே,**

**தொழுதுவிடை கொண்டுநீர் சொன்னபடி ஆடுகொண்டு**
**பொழுதுபுகு முந்திவந்து புறப்படுவேன் ஆண்டே.**

**குட்டிகளும் கொண்டு சிறு குடில்களையும் கொண்டாட்டுப்**
**பட்டிகளும் கொண்டின்று பகல்வருவேன் ஆண்டே.**

**அழகர் திருவுளம்போல் ஆண்டவர்க்கு மனதுவர**
**உழவுவயல் உள்ளதெல்லாம் உரம்வைப்பே னாண்டே”**

**17. கோனேரிக்கோன் வந்தான்:**

தன்னைக் கண்டவர்கள் பயப்படும்படியாகத் தன் கையிலேயுள்ள தடியைச் சுழற்றிச் செண்டாடிக் கொண்டு பள்ளன் சென்றான். அவன் அழைத்த சொற்படியே, சங்கத் தமிழின் வளம் நிறைந்திருக்கும் அழகருடைய முக்கூடல் ஆலயத்தை வழிபட்டுப் போற்றும் கோனேரிக் கோன் என்பவனும் வந்து தோன்றினான்.

**“கண்டார் பயப்படத்தன் கையிற் சுழற்றுதடி**
**செண்டாடிக் கொண்டுபள்ளன் சென்றழைத்த சொற்படியே**
**தண்டாத சங்கத் தமிழழகர் முக்கூடல்**
**கொண்டாடுங் கோனேரிக் கோன்வந்து தோன்றினனே!”**

**18. கோனடா குடும்பா:**

பூதக் கோனாரிடம் ஒரு பொது ஆடு இருந்தது. வாதுக்காக அதனை ஒரு பாம்பும் புலியும் காவல் காத்திருக்கும். அது கலிகாலத்தின் கோலம் என்பதை அறிவாய் குடும்பா!

வேதக்கோன் என்றொருவன்; அவன் கிடைமறிக்கும் தொழிலைக் கையாண்டான். அது எதுக்காகவோ? அவன் சாதியார்கள் வீதிகள் தோறும் கிடந்த கிடைகளைப் பெயர்த்து அடிக்கக்கூட இல்லையே குடும்பா?

தாதக் கோனாருடைய ஆட்டைப் பற்றியும் முதலிலே மனம் வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் தனதாகவே நிறுத்திக் கொண்டது உன் மனமும் அறியும். குடும்பனே!

நாதக்கோன், முக்கூடலின் ஆதிக்கோன், அவனுடைய பண்ணை வயல்களிலெல்லாம் உரமேற்றும் கோன் நான் ஒருவனே தானடா குடும்பா!

**“பூதக்கோன் பொதுவாட்டை**
**வாதுக்கே ஒரு பாம்பும்**
**புலியுங்காத் திருக்குமது**
**கலிகண்டாய் குடும்பா!**

**வேதக்கோன் கிடையாண்ட**
**தேதுக்காய் அவன்சாதி**
**வீதிதொறும் கிடந்தகிடை**
**பேதியான் குடும்பா!**

**தாதக்கோன் ஆட்டைமுதல்**
**சோதித்தேன் பணத்துக்கே**
**தனதாக நிறுத்தினதுன்**
**மனதறியும் குடும்பா!**

**நாதத்கோன் முக்கூடல்**
**ஆதிக்கோன் பண்ணைவயல்**
**நானடா உரமேற்றுங்**
**கோனடா குடும்பா”**

**19. மூத்த பள்ளி முறையீடு**

கோனார் கிடைமறிக்க வந்தார். ஆட்டுக்கிடைக்குக் காவலாகப் போகவேண்டிய பள்ளன். இளையாளைப் பிரிந்து இரவைக் கழிக்க மனமின்றி, அவளுடன் குடிசையிலேயே தங்கிவிட்டான். காலையிலே அதனைக் கண்டதும், மூத்த பள்ளியினுடைய பொறாமை உள்ளம் குமுறிற்று. ஆவேசங் கொண்டாள். ஓடிச் சென்று பண்ணைக்காரனிடம் பள்ளியின் செயலைப் பற்றி முறையிடத் தொடங்கினாள்.

‘இடையர்களைக் கூட்டி வந்து. அவர்களை வயல்களிலே கிடைமறிக்குமாறு ஏவிவிட்டு, இந்தக் குடும்பன், இளையாள் குடிலிலே கிடப்பதே நமக்கு நல்ல கிடை என்று போய்விட்டான். இப்படி அவன் அடைபட்டுக் கிடந்த செய்தியைக் கேளும் ஆண்டவனாரே’ என்று தன் பள்ளன்மீது போர் தொடுத்தவளாகச் சென்று முக்கூடற் காரியான மூத்த பள்ளி பண்ணைக்காரனிடம் முறையிட்டாள்.

**“இடையரைக்கொண் டேவயலில்**
**ஏவிஇளை யாள் குடிலிற்**
**கிடைநமக்கு நல்ல**
**கிடையெனச்சென் றான்குடும்பன்**

**அடைபட்ட செய்திப ண்ணை**
**ஆண்டவனார் கேளுமென்ற**
**படைதொடுத்து முக்கூடற்**
**பள்ளிமுறை யிட்டானே”**

**20. பள்ளன் வந்தான்:**

உலகனைத்திற்கும் கர்த்தராக விளங்குபவர் முக்கூடலிலே கோயில் கொண்டிருக்கும் கண்ணோட்டம் உடைய அழகர். அவருடைய பண்ணைகளை மேற்பார்வையிடும் பண்ணைக்காரரின் முன்பாக, அவர் மனத்திலே படும்படியாக,மேலே கண்டவாறெல்லாம் பழிசொல்லிவிட்டு, மூத்தபள்ளி போய்விட்டாள். அப்படி அவள் போய்விட்ட பின்னர், முதலிலேயே பொய்யான வார்த்தைகள் பலவற்றையும் பேசிவிட்டுப் போன பள்ளன் மீண்டும் வயலுக்கு எருவைத்துவிட்டு, அந்த வயலிலிருந்து வருபவனைப்போல, வந்து கொண்டிருந்தான்.

**"கத்தர்திரு முக்கூடல்**
**கண்ணர் பண்ணை ஆண்டவர்முன்**
**சித்தமுற மூத்த பள்ளி**
**செப்பிமறைந் தேகியபின்**
**பொய்த்தமொழி பேசிமுதற்**
**போனபள்ளன் மீண்டுமெரு**
**வைத்துவய லுற்று**
**வருவதுபோல் வந்தானே"**

**21. பள்ளன் சொல்லுதல்:**

மாரிபோல வளஞ்சுரக்கும் சீவலப்பேரித் தண்ணீர் பாய்கின்ற கண்ணாறான, இந்திரன் தொழும் அழகரின் பேராலுள்ள கேசவன் திருத்தும்,

கார்காலத்திலே பயிரிட்டு, ஊருக்கெல்லாம் அதிகமாயக் கதலிவாழை என்ற நெல்விளைத்த வயலும், புகழ்சேர்ந்த நயினாத்தையார் கட்டளைத் திருத்தும்.

சாரல் மழை கறுக்கிட்டுப் பெய்யும், ஈரம் பதியும்படியான அவ்வளவு தூற்றலிலேயே நாற்றுப் பாவும் நீர்வளமுடையை, சன்னை வெட்டியான் வாய்க்காற் பாய்ச்சலில் உள்ள நிலங்களும் வன்னிமரத் தடியிலேயுள்ள மேட்டு வயலும்,

கோரைப் புற்கள் அடர்ந்திருக்கும் குண்டு, ஓடை ஓரத்திலேயுள்ள வயல்; பார்வையான குத்துக்கல்லடி, குளத்துப் பற்று, முத்தன் பகுதி ஆகிய வயல்களும்,

வீரபாண்டியப்பேரிப் பாய்ச்சலிலுள்ள வயல்களும், நாச்சியார் திருவிளையாட்டமும், சுமைதாங்கிப் பட்டமும், களைபத்தித் தடியும்.

தென் மருதூரிலேயுள்ள பெரிய பண்ணை வயலுக்கும் அழகராச்சிப் படைக்கும் தெற்கிலும், குளத்திலுள்ள கல்மடைக்கு வடக்கிலும் உள்ள உட்பற்றாகிய வயல்களும்,

வாரத்துக்கு விட்டிருக்கும் உடையான் எரிக்கட்டளைப் பற்றும், வட்டமாக ஒருமிக்க அமைந்திருக்கும் வரிசையான வயல்களும், ஆந்தைக் குளப்பற்றும்,தோணி நிற்கும் துறைச் சுற்றும்,

மற்றும், வெவ்வேறு பேரிட்டுச் சொல்லப்படும் வயல்களாக உள்ளவெல்லாம், ஆட்டுக்கிடைகளை மறித்து எரு வைத்துவிட்டு இதுதான் திரும்பினேன். இன்னுந் தேவரீர் கட்டளையை விரும்பி வந்திருக்கிறேன். ஆண்டையே!

**மாரிச் சீவலப்**
**பேரித் தண்ணீர்பாய் - கண்ணாறான**
**வாசவன்தொழும் அழகர்பேருள்ள**
**கேசவன் திருத்தும்**

**காரிற் பயிரிட்டு**
**ஊருத் கதிகமாய்க் - கதலிவாழை**

காய்ந்த வயலும் கீர்த்தி சேர்நயி
னாத்தை யார்திருத்து”

**22. மரக்கட்டை சேர்த்தான்**

‘எம் தந்தையாராகிய, திருமாலான திருமுக்கூடல் அழகர் ஏரிப் பற்றுகளிலே நீ ஆடுவைத்துத் தந்த விதமோ? மருதூர்ச் சங்காத்தி வீட்டிலே கிடந்து உறங்கிய உறக்கமோ? நின் நெஞ்சைத் தொட்டுப் பாரடா?’ என்று சொல்லிப் பண்ணைக்காரன் சினத்தால் தன் கண்கள் சிவந்தவனாக அங்கே வந்த பள்ளனின் காலிலே மரக் கட்டையைச் சேர்த்து, அவனைக் காவலில் வைத்தான்.

**“எந்தைதிரு முக்கூடல்**
**ஏரியில் நீ ஆடுவைத்துத்**
**தந்தவித மோமருதூர்ச்**
**சங்காத்தி வீட்டுறக்கம்**
**சிந்தைதொட்டுப் பாரெனக்கண்**
**சிவந்துபண்ணைக் காரனங்கே**
**வந்தபள்ள ன்தன்காலில்**
**மரக்கட்டை சேர்த்தானே”**

## 5. விடுதலை! விளக்கம்

**1. இளைய பள்ளியின் வருத்தம்:**

மூத்த பள்ளியா அவள்? அந்த மூக்கூடற் பள்ளி, அவள் ஒரு பழிகாரி, தன்னைத் தொட்டுத் தாலி கட்டின பள்ளனென்றுகூட, முகத்தைப் பார்த்து இரக்கங் கொள்ளாமல், எங்கோ எந்த வழியாகவோ போகும் களவுகளையெல்லாம், உன் தலையின்மேல் அழுத்துக் கட்டிவிட்டு, உன்மேல் தான் கொண்ட ஆசையைக் காட்டி விட்டாளே?

‘கொழியல் அரிசியைப் போட்டாலும் கோழி அதைத் தின்னாமற் போய்க் குப்பையைத்தான் கிளறிக் கொண்டிருக்கும்’ என்ற பழமொழியைப் புதுக்கி விட்டாளே! செல்லுபடியாகாத காசுதான்எப்போதாவது செல்லவா போகிறது! நான் என்ன செய்வேன்? அழகரின் திருநாமத்தை உடைய என் பள்ளனே?

**“பழிகாரி முக்கூடற்பள்ளி – சரடுசெய்த**
**பள்ளனென்றும் முகம்பாராமல்**
**வழியேபோகுங் களவெல்லாம் - தலையின்மேம்**
**வலித்திட்டுப் பற்றுச் குறித்தாள்**
**கொழியல் அரிசி யிட்டாலுங்-குப்பைகிண்டுங்**
**கோழி என்பதைப் புதுக்கினாள்**
**அழியாதகா சழியுமோநான் - ஏதுசெய்வேன்**
**அழகர்திரு நாமப்பள்ளா?”**

**2. பள்ளன் தேற்றுதல்:**

சீக்கிரமாக என் அருகே வா! ஒரு ரகசியம் இருக்கிறது. குண்டுணிக்காரியான அந்த மூத்தபள்ளி இருக்கிறாளே, அவள் என்னைப் பார்க்க வந்தாலும் வருவாள் ஏதோ நம் உறவுக்கு நடுவே தெய்வம் புகுந்து நம்மை இப்படிச் சோதித்து விட்டது ஐயோ! நம் பண்ணை நயினார்க்குச்

செவிகூடக் கண்ணாயிற்றே? நீ விரைந்து இங்கிருந்து போய்விடு சும்மா, சேற்றிலே கல்லெறிந்த கதைபோல அவளிடம் ஏதும் பேச்சுக் கொடுத்து வாங்கிக் கட்டாதே. வடுவென்று ஒன்று வந்துவிட்டால், அதைத்தான் மறைக்க முடியுமோ? வருவதெல்லாம் எப்படியும் வந்தே தீருமடீ, என் மருதூர்ப் பள்ளி!

**"முடுகவா ராசியம் உண்டு – குண்டுணிக்காரி**
**மூத்தபள்ளி பார்க்க வருவாள்**
**நடுவே தெய்வஞ் சோதிச்சுதையோ – பண்ணை**
**நயினார்க்குஞ்செவி கண்ணாச்சே**
**கடுகநீ போய்விடுசும்மா – சகதியிலே**
**கல்லெறிந்த கதையாக் காதே**
**வடுவந்தால் மறைக்கப்போமோ – வருவதெல்லாம்**
**வந்துதீரும் மருதூர்ப்பள்ளி"**

**3. உண்பானோ ஆண்டே:**

முக்கூடற்பள்ளி இளையாள் மீது பள்ளன் மோகங்கொண்டு தன்னை வெறுத்தான் என்ற ஆத்திரத்தினால், அவனைப் பழிவாங்க அப்படியெல்லாம் சொன்னாளேயல்லாமல், அவளுக்கும் அவன் மீது அன்பில்லாமல் இல்லை அவன் சிறைப்பட்டுக் கிடப்பதறிந்த அவள். கறியுஞ் சோறும் சமைத்து எடுத்துக் கொ்ணடு அவனுக்குக் கொடுக்க வருகிறாள். அதற்காகப் பண்ணைக்காரனிடம் பொய் சொல்லவும் அவள் தயங்கவில்லை.

'நயினாரே! என் பள்ளன் எங்கே கிடக்கிறான்? உங்களிடத்திலே பணிவான விண்ணப்பம் ஒன்று இருக்கிறது. எனக்கு மூத்தவன் செங்கான் இருக்கிறானே, அவன் எதற்காகவோ தெய்வத்துக்குப் படையல் இட்டு வைத்தானாம். அங்கேயிருந்து ஒரு சட்டியிலே ஆட்டுக்கறியுஞ் சோறும் அனுப்பி வைத்தான் நான் தனியாக அதைச் சாப்பிடுவேனா? உங்கள் அடியானுக்கும் நான் கொஞ்சம் கொடுத்துப்பாத்தால், அவன் உண்பானோ, உண்ணமாட்டானோ? பார்க்கட்டுமா ஆண்டையே?

**"எங்கே கிடக்கிறான் பள்ளன் - நயினாரே**
**ஏறா விண்ணப்பம் ஒன்றுண்டு**
**செங்கான் எனக்கு மூத்தவன் - ஏதுக்கோ**
**தெய்வத்துக் காக்கி வைத்தானாம்**
**அங்கேயிருந் தாட்டுக் கறியும் - சோறும்**
**அனுப்பினான் நான்தனித் துண்பேனா**
**உங்கள்அடி யானுக்கு நான்கொடுத்துப் பார்த்தால்**
**உண்பானோ உண்ணானோ ஆண்டே!"**

**4. சோறு கொணர்ந்தாள்:**

தன்னுடைய கணவனுக்குத் தாரம் இரண்டு பேர்களாயிருந்த போதிலும், தன் கணவன் அவன் என்ற வாஞ்சையினால், முக்கூடற் பள்ளியானவள், அன்பாக அவனைத் தேடி உணவுடன் வந்தாள். இருந்தாலும், பண்ணைக்கானுக்கு அவளே பள்ளன் மீது சினம் ஊட்டியவள். ஆசையால் தந்திரமாக வேறொரு காரணம் சொல்லிவிட்டு, மனத்திலே அவன் மீது ஆசை கொண்ட அந்தச் சோரத்தனத்துடனே, பள்ளனுக்குச் சோறு கொண்டு வந்தாள்.

**"தாரமிரண் டானாலுந்**
**தன் கணவன் வாஞ்சையினால்**

**வாரமுடன் முக்கூடல்**
**வந்தபள்ளி தந்திரமாய்க்**
**காரணம்வே றொன்று பண்ணைக்**
**காரனுக்குச் சொல்லிமனச்**
**சோரமுடன் பள்ளனுக்குச்**
**சோறுகொண்டு வந்தாளே”**

**5. பள்ளனிடம் சென்றாள்:**

வசிய மருந்திட்டு உன்னை மயக்கிவிட்ட கள்ளி அந்த மருதூர்ப்பள்ளி, அவள் வடகரையை விட்ட வந்து பிறகு நீ அவள் தொடர்பை விட்டுத் திருந்த வேண்டுமென்று நான் பேசின பேச்சுகளையும் கேளாமற் போய்விட்டாய், நான் தெற்கே பார்த்தால் நீ வடக்கே பார்ப்பாய். அப்படியெல்லாம் என்னைப் பருந்தாட்டம் ஆட்டிக் கொண்டு நீதான் என்ன வாழ்ந்தாய்? கொப்பத்திலே ஆனை வந்து மாட்டிக் கொண்டதுபோல இந்தத் தொழு மரத்திலே வந்து மாட்டிக் கொண்டாய். ‘தான் செய்த தீவினையானது மீண்டும் தன்னையே வந்து பொருந்தச் சுற்றிக்கொண்டேயிருக்கும்’ என்ற விதிதான் பொய்யாகப் போமோ? முக்கூடற்பள்ளா, சொல்வாயாக!

**“மருந்துக் கள்ளி மருதூரிற் பள்ளி**
**வடகரைவிட்ட வந்த பிறகு**
**திருந்தப் பேசின வார்த்தையுங் கேளாய் நான்**
**தெற்கே பார்த்தால் வடக்கே நீ பார்ப்பாய்**
**பருந்தாட் டங்கொண்டு கொப்பத்தில் ஆனை**
**பட்டாப்போல் அகப்பட்டாய் மரத்தில்**
**பொருந்தத் தன்வினை தன்னைச் சுற்றும் விதி**
**பொய்க்குமோ சொல்லாய் முக்கூடற் பள்ளா?”**

**6. பள்ளன் சொன்னான்:**

கடந்துபோன செய்திகளைப் பற்றியெல்லாம் எதற்காக இப்போது சொல்லவேண்டும்? ஒருவருக்கு விருந்து வைத்த பின் அவருடைய தலையை வெட்டினவர் யாராவது உண்டோ? கிண்டலாகக் கொஞ்சத்தனமான பேச்சுக்களைச் சொல்லாதே வாயிலேயுள்ள கண்ணீரைக் குடித்தாலும் குடிக்கலாம்: கொப்புளித்தாலும் கொப்புளிக்கலாம். அதே போல, நீ என்னை ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம்; ஒதுக்கி இப்படியே போகிவிடவும் செய்யலாம்? அது உன் விருப்பம் பஞ்சிலே பற்றும் நெருப்பைப் போல உன் நெஞ்சிலே இன்னமும் பழைய பகைமைகளை எல்லாம் பற்ற வைக்காதே பண்ணை நயினாரைக் கெஞ்சி, என்னை மன்னிக்கும்படி கேட்டுப் பாரடீ முக்கூடற்பள்ளி!

**“மிஞ்சிப் போனதை ஏன்சொல்ல வேணும்**
**விருந்து விட்டபின் வெட்டினார் உண்டோ**
**கொஞ்சப் பேச்சுக்கள் சொல்லாதே வாய்த்தண்ணீர்**
**குடித்தா லுங்கொப் புளித்தாலும் ஆமே**
**பஞ்சில் பற்றும் நெருப்புப்போல் நெஞ்சில்**
**பழம்பகை இன்னும் பற்றவை யாதே**
**கெஞ்சிப் பண்ணை நயினாரை மன்னிப்புக்**
**கேட்டுபாரடீ முக்கூடற் பள்ளி”**

**7. அவள் சொன்னாள்:**

மனம் பேதலித்துப்போய் நிலைவாசலிலே முட்டிவிட்டுப் பின்னர்க் குனியும் பழைய கதையினை இப்போது நீ மெய்ப்பிக்கிறாய். இளையவள் தான் மிகவும் கெட்டிக்காரி. அவள் சொல்லாமல் இந்தக் கிழட்டுப்பள்ளியின் சொல் பண்ணையார்க்கு எடுக்குமோ? உனக்காக வரிந்து கட்டிக்கொண்டு நான் பேசத்தான் முடியுமோ? அரண்மனைக் காரியம் எல்லாம் என்னுடைய கைக்கைக்குள்ளேயேவா இருக்கிறது? வடிவழகரின் திரு நாமத்தையுடைய பள்ளனே! அவள் வட்டிலுக்குள் வாய் வைத்ததெல்லாம் அன்று சரியாயிருந்ததல்லவா? அவளையே போய்க் கேட்கச் சொல்வாயாக.

**"முட்டிவிட்டு குனியும்பழங்கதை**
**மூத லிக்கிறாய் பேதலித்துப்போய்**
**கெட்டி கெட்டி இளையவள் சொல்லாற்**
**கிழட்டுப் பள்ளிசொல் பண்ணையார்க் காமோ?**
**சுட்டி நான்பேசப் பேமோ அரண்மனைக்**
**காரியம் என்றன் கைக்குள்ளே உண்டோ?**
**வட்டி லுக்குள்வாய் வைத்ததெல் லாந்துறை**
**வடிவழகர் திருநாமப் பள்ளா"**

**8. மீண்டும் வேண்டுகிறான்:**

உனக்குப் பக்குவம் இப்படி என்று நான் சொல்லித் தருவதற்கு ஒரு நீதியுண்டோ? நான் இந்தப் பாடுபட்ட பின்பும் இனிஎப்படி நடப்பதென்று அறியாமலிப்போனோ? உனக்கு அவள் சக்களத்தி என்று கருதி, நீ அவளுக்குச் சரிக்குச்சரி சொல்லிக் கொண்டேயிருந்தால், அதனால் உனக்குத் தான் தாழ்ச்சியுண்டாகும் என் மக்கள் ஆணையாகச் சொல்லுகிறேன். என்னாணை உன்னாணையாகச் சொல்லுகிறேன். நீ வார்த்த கஞ்சியைக் குடித்துவிட்டு, நீ கிட என்ற இடத்திலே விழுந்து கிடப்பேன். அந்த விக்கல் வாய்ப் பண்ணை ஆண்டவரைக் கேட்டு, என்னை நீயே மீட்டுக்கொள்ளடீ, முக்கூடற்பள்ளி!

**"பக்குவஞ் சொல்ல நீதியோ நானிந்தப்**
**பாடுபட்டும் இனியறி யேனோ**
**சக்களத்தி அவளென்றுனக்குச்**
**சரிசொன் னாலந்தத் தாழ்ச்சி உனக்கே**
**மக்க ளாணைஎன் ஆணையுன் னாணைநீ**
**வார்த்த கஞ்சி குடித்துக் கிடப்பேன**
**விக்கல் வாய்ப்பண்ணை ஆண்டையைக் கேட்டென்னை**
**மீட்டுக கொள்ளடீ முக்கூடற் பள்ளி"**

**9. ஆண்டவர்முன் சென்றாள்:**

ஆணைகளிட்டுச் சத்தியமாகச் சொன்ன பள்ளன் சற்றும் மனங்கோணாமல் இருக்கும் பொருட்டு, அவனுக்குப் பலபல புத்திகளையும் சொல்லி, நான் போய் உன்னைச் சிறைமீட்பேன்" என்று எழுந்தாள் மூத்தபள்ளி. முத்தி தரும் திருமாலான முக்கூடல் அழகருக்கு அடிமைப்பட்ட அந்த மூத்தபள்ளி. அந்த இடத்திலேயிருந்து புறப்பட்டுப் பண்ணைக்கார நயினாரின் முன்பாகச் சென்றாள்.

**"சத்தியமாய்ச் சொன்னபள்ளன்**
**சற்றுமனங் கோணாமல்**

**புத்திசொல்லி உன்சிறைநான்**
**போய்மீட்பேன் என்றெழுந்து**
**முத்திதரு மாலழகர்**
**முக்கூடல் மூத்தபள்ளி**
**அத்திசையில் நின்றுபண்ணை**
**ஆண்டவர்முன் சென்றாளே”**

**10. வேண்டினாள்:**

ஐயா! பராக்குப் பராக்கு! உம்மைக் கும்பிட்டேன் ஆண்டையே! உம்மையல்லவோ தேடி அடியாளிங்கே ஓடி வந்தேன். ஆண்டையே! கையாரக் கண்ட களவெல்லாம் பொறுத்துக் கொள்வீரே, ஆண்டையே! பள்ளன் கிடக்கும் காவலைக் கண்ணாலே பார்க்கப்படாது. அவ்வளவு பரிதாபமாயிருக்கிறது ஆண்டையே!

**“ஐயா பராக்குப் பராக்கும்மைக்**
**கும்பிட்டே னாண்டே – உம்மை**
**அல்லவோ தேடி அடியாளிங்**
**கேவந்தேன் ஆண்டே**
**கையாரா கண்ட களவும்**
**பொறுப்பீரே ஆண்டே – பள்ளன்**
**காவலைக் கண்ணாலே**
**பார்க்கப் படாதுகாண் ஆண்டே”**

**11. அவளால் வந்தது**

ஏதோ தர்மத்துக்காகவாவது இந்தப் பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள். கொங்கை சாய்ந்தால் அதனை வயிறு தானே தாங்க வேண்டும். வேறு எது தாங்கிக் காக்கும்? அதுபோலவே பண்ணைக்காரர் தானே எங்களைத் தாங்கிக் காக்க வேண்டும். வன்மத்தைக் கொண்டு பார்த்தால் அதற்கு இவன் ஓர் இலக்காக ஆவானா? எல்லாம் அந்தத் தென்மருதூர்ப் பள்ளியினால் வந்த பொல்லாப்புப் பாருங்கள் நயினாரே!

**“தன்மத்துக்கிந்த பிழையைப் பொறும்**
**எங்கள் ஆண்டே – முலை**
**சாய்ந்தால் வயிறல்லவோ தாங்கவேணும்**
**பண்ணை ஆண்டே**
**வன்மத்தைப் பார்த்தால் அவனிலக்**
**கல்லவே ஆண்டே – தென்**
**மருதூரிற் பள்ளியால் வந்தபொல்**
**லாப்புக்காண் ஆண்டே!”**

**12. தேவரீர் சித்தம்:**

ஆடிமாதக் கடைசியிலே வெள்ளாண்மைகள் செய்ய வேண்டிய நாளாச்சே? பள்ளன் இல்லாமற்போனால் பயிரிடுபவர் யாரோ தன் பண்ணை ஆண்டையே? உணவுப் பொருள்களைத் தன் உழைப்பினாலே தேடிக் கொண்டு தரும் பள்ளன் நீங்கள் பெற்ற பிள்ளைக்குச் சமமானவன்

ஆண்டே! இனித் தேவரீருடைய சித்தம் எதுவோ, அதுவே என் பாக்கியமாகும் பண்ணை நயினாரே!

**“ஆடிக்கா லாவதி வெள்ளாமை நாளாச்சே**
**ஆண்டே – பள்ளன்**
**அல்லாமல் பயிர் ஆரிடுவார் பண்ணை**
**ஆண்டே!**
**தேடிடும் பள்ளுப் பிள்ளைக்கிணை கண்டீர்**
**ஆண்டே - இனித்**
**தேவரீர் சித்தமென பாக்கியங் காண்பண்ணை**
**ஆண்டே!”**

**13. விடுவிக்க வேண்டும்:**

சட்டத்தை முதலிலே காட்டிவிட்டு, அதற்கே மறுபடியும் பிழைப்பாக வந்து இப்படிக் கேட்கிறாயே என்பீர்கள். சட்டத்தின் மேல் சட்டம் பிழைத்தேன் என்றாலும்,நான் ஒரு பெண் பிள்ளை தானே ஆண்டே! ஏதோ, பொல்லாத கள்ளுத் தண்ணீரைக் குடித்து, அந்த வெறியினாலே மயங்கி முதலில் வந்து என்னவெல்லாமோ சொல்லிவிட்டேன். இனி நீங்கள் கட்டளையிட்டபடியே புத்திமதிகளைக் கேட்டு அவன் நடப்பான். பள்ளனுடைய கால் மரத்தை நீக்கி அவனை விடுவிக்க வேண்டும் ஆண்டையே!

**“சட்டமேல் சட்டம் பிழைத்தாலும்**
**பெண்பிள்ளை ஆண்டே – பொல்லாத**
**தண்ணீர் குடித்த வெறியால்**
**முதற்சொன்னேன் ஆண்டே**
**கட்டளை யிட்ட படிபுத்தி**
**கேட்பான்காண் ஆண்டே – பள்ளன்**
**கால்மரம் வெட்டி விடுவிக்க**
**வேணுங்காண் ஆண்டே”**

**14. வகை சொன்னான்:**

பண்ணையானும் மூத்தபள்ளியின் வேண்டுதலுக்கு இணங்கினான். அவள் சொற்படியே முக்கூடற் பள்ளனைக் கால்சேர்த்து மாட்டி வைத்திருந்த மரத்தையும் கழற்றி விடச் செய்தான் அதன் பின், செய்யவேண்டிய முறைப்படி எல்லாம் செய்த பின்னர், பள்ளனை எதிர் பார்த்துக் காத்திருந்தான். பள்ளனும் வந்து அந்தக் கண்ணருடைய பண்ணைக்காரனின் முன்னால் தோன்றினான். வாய்ப்பான வித்து வகைகளை அவற்றின் பிரிவுகளுடனும், பின் மாட்டு வகைகளையும் எடுத்துக் கூறினான்.

**மூத்தபள்ளி சொற்படியே**
**முக்கூடற் பள்ளனைக் கால்**
**சேர்த்த மரமுங் கழற்றிச்**
**செய்வரிசை செய்ததற்பின்**
**காத்திருந்து பின்னுமவன்**
**கண்ணர்பண்ணை ஆண்டவர்முன்**
**வாய்ந்த விதை வர்க் கமுடன்**
**மாட்டுவ கை சொன்னானே”**

**15. வித்து வகைகள்:**

சித்திரக் காலி வாலான், சிறை மீட்டான், மணல் வாரி, கருஞ்சம்பா, செஞ்சூரை, சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலைமுண்டன், பொற்பாளை. நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற் சம்பா, கத்தூரி வாணன், கடைக்கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை பூம்பாளை, பாற்கடுக்கன், வெள்ளை, புத்தன். கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் இரண்டு பூவுக்கும் காணுமளவுக்குத் தொகுத்து விதைச் சேரில் போட்டிருக்கின்றேன் ஆண்டையே!

**"சித்திரக் காலிவாலான் சிறைமீட்டான் மணல்வாரி**
**செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா**
**முத்து விளங்கிமலை முண்டன்பொற் பாளைநெடு**
**மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா**

**கத்தூரி வாணன் காடைக் கழுத்தன் இரங்கல் மீட்டான்**
**கல்லுண்டை பூம்பாளைபாற் கடுக்கண் வெள்ளை**
**புத்தன் கருங்குறுவை புனுகுச்சம் பாவும்இரு**
**பூவுக்கும் விதைசேரிற் போட்டேனா னாண்டே"**

**16. மாட்டு வகைகள்:**

குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக் குளம்பன், மோழை குடைச் செவியன். குற்றான், கூடுகொம்பன், மடப்புல்லை, கரும்போரான், மயிலை, சுழற்சிக் கண்ணன், மட்டைக்கொம்பன், கருப்பன், மஞ்சள்வாலன், படைப்புப் பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன், பசுக்காத்தான், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத்தலைப்பூ நிறத்தான், வெள்ளைக் காளை, இந்தப்படியான விதங்களிலே ஆயிரம் மாடுகள் உண்மையாகவே இருக்கின்றன. ஆண்டையே!

**"குடைக் கொம்பன் செம்மறையன்**
**குத்துக் குளம்பன் மோழை**
**குடைச் செவியன் குற்றாலன்**
**கூடுகொம்பன்**
**மடப்புல்லைக் கரும்போரான்**
**மயிலை சுழற்சிக் கண்ணன்**
**மட்டைக்கொம் பன்னருப்பன்**
**மஞ்சள் வாலன்**

**படைப்புப் பிடுங்கி கொட்டைப்**
**பாக்கன் கருமறையன்**
**பசுக்காத்தான் அணிற்காலன்**
**படலை கொம்பன்**

**விடத்தலைப் பூ நிறத்தான்**
**வெள்ளைக் காளையும் இந்த**
**விதத்திலுண் டாயிரத்தான்**
**மெய்காண் ஆண்டே"**

**17. ஏர்க்கால் முதலியன:**

தசரத மன்னனின் மகனான ராமர் என்னும் செத்தாமரைக் கண்களையுடைய அழகரானவர், முன் காலத்திலே வில்லைவளைத்து ஏழுமரா மரங்களையும் அம்பேவித்துளைத்த அந்த நாளிலே, சுயமரம் ஒன்று வளைக்கை ஒன்று, நுகம் ஒன்று, வயலை உழும் குத்தி ஒன்று, வளைந்த மேழி ஒன்று, இந்த வகையான ஏழு உறுப்புகளையும் அந்த ஏழு மரத்தாலும் செய்து, அவற்றை முறையாகப் பதனம் பண்ணி வைத்திருப்பது அத்தனையும் எண்ணி அறிய வல்லமை உடையவர்கள் எவர் இருக்கிறார்கள் ஆண்டையே?

**"தயரத ராமரான தாமரைக் கண்ணழகர்**
**தனுவாங்கி மரமேழும் சாய்ந்த நாளில்**
**சுயமரம் ஒன்றுவளைக் கையொன்று நுகமொன்று**
**கழுந்தேர்க்கா லொன்றுசிறு கைக்கோல் ஒன்று**
**வயலுழுங் குத்தியொன்று வளைமேழி ஒன்றிந்த**
**வகையேழும் அந்த எழு மரத்தால் செய்தே**
**இயல்பாய்ப் பதனம் பண்ணி இருப்பதுண் டத்தனையும்**
**எண்ணி அறியவல்லார் எவர்காண் ஆண்டே!"**

**18. நாளேரிட வாரும்:**

இலங்காபுரியிலே, முன் காலத்திலே, எங்கள் அழகருடன் எதிர்த்த இராவணன் மகனாகிய இந்திரசித்து என்பவனும் உள்ளங்கலக்கமடையுமாறு, அங்கே வந்த கருடனின் சிறகுகளைக் கண்டு, கட்டுக் கழன்ற நாகபாசத்தைப் போன்ற வடக்கயிறுகள் ஆயிரம் உள்ளன. தம் குலங்களுடன் மடிந்த கொலைவாளினை உடையவரான அரக்கர்களுடைய வேல்களையும் கூர்மையான வாள்களையும் சேர்த்துக் காய்ச்சி அடித்த கொழுக்கள் ஆயிரம் உள்ளன. உழவுக்கு மயக்கமில்லாமல் இந்தப்படி உழவு கருவி வகையெல்லாம் தேடி வைத்திருக்கிறேன். இனி வயலிலே நாளேர் பூட்டி உழுவதற்கு நீரும் வருவீர் ஆண்டையே!

**"இலங்கா புரியில் முன்னால் எங்கள் அழகருடன்**
**எதிர்த்த ராவணன்மகன் இந்திர சித்து**
**கலங்கவே வந்தசிறைக் கருடனைக் கண்டுகட்டுக்**
**கழன்ற பாசவடக் கயிறா யிரம்**
**குலங்க ளுடன்மடித்த கொலைவா ளரக்கர்வேலும்**
**கூர்வாளும் சேர்த்தடித்த கொழுவாயிரம்**
**மலங்காமல் இந்தப்படி வகையெல்லாம் தேடி வைத்தேன்**
**வயலிலே நாளேரிட வாரீர் ஆண்டே!"**

## 6. விளைவு! மகிழ்வு!

**1. நாள் பார்த்தல்:**

ஏரும், பலவகையான வித்துக்களும், ஏர்க்கால் முதலான பலவகைச் சீர்களும் எல்லாம், வடிவழகக் குடும்பனானவன், பண்ணைக்காரன் செய்திகளைத் தெரிந்து கொள்ளும் படியாகச் சொன்னான். அதன்பின், எவரானாலும் போற்றிப் பரவும் அழகருடைய பண்ணைக்காரனானவன் கல்வி கேள்விகளிலே சிறந்த சோதிடன் தனக்கு வகுத்துக் கூறியிருந்த, நாளேர் பூட்டி ஒட்டுவதற்கான நல்ல வேளையைக் குடும்பனிடம் சொன்னான்.

**“ஏரும் பலவிதையும் ஏர்க்கால் முதலான**
**சீரும்அழ கக்குடும்பன் செய்திபெறச் சொல்லியபின்**
**ஆரும் பரவும் அழகர்பண்ணை யான்கேள்வி**
**கூரும் முகிழ்த்தம் குடும்பனுடன் சொன்னானே”**

**2. உழச் சென்றான்:**

“சப்தமி திதியும், புதன்கிழமையும், சுவாதி நட்சத்திரமும், தைதுலக் கரணமம், சுபயோகமும் எல்லாம் தவறாமல் அமைந்த வேளையே ஏற்றதெனத், தகுதி பெறக் கூறம் பஞ்சாங்கத்தை நோக்கி, அதுவே மிகவும் நல்ல வேளையெனக் கண்டு, மேலான வேதியர்கள், மிக்க துலாமுகூர்த்தம் ஆகிய இன்றைக்கு அதனை விதித்துள்ளனர் பக்தர்கள் பணியும் முக்கூடற் பரமானார் ஆகிய அழகருடைய பண்ணைக்கு இன்றைக்கு நாள் ஏரிடவேண்டும். பள்ளா!” என்று பண்ணைக்காரன் உத்தரவிட்டுச் சொன்னான். அதனைச் கேட்ட குடும்பன், அந்தவுடனேயே ஏர்பூட்டுவதற்கு உரியவற்றுடன் வயலை நோக்கி உழுவதற்குச் சென்றான்.

**சத்தமி புதன்சோதி தைதுலக் கரணம்**
**தவறான சுபயோகந் தருபஞ் சாங்கம்**
**மெத்தநன் றெனப் பார்த்து மேலான வேதியர்கள்**
**மிக்க துலாமுகிழ்த்தம் விதித்தார் இன்று**
**பத்தர்பணி முக்கூடல் பரமனார் அழகர்தம்**
**பண்ணைக்கே ரிடவேணும் பள்ளா என்றே**
**உத்தாரம் பண்ணைக் காரன் உரைத்தான்**
**உரையைக் கேட்டவுடனே குடும்பன்**
**ஏர்கொண் டுழச் சென்றானே”**

**3. கூடி உழுதார்:**

சாத்தன், பெரியான், கொன்னைத்தாண்டி அரியான், சடையான், உடையான், கட்டைச் சங்கன், புங்கன், போத்தன், அருதன், கோணப்பூவன், மருதன், பூலான், வயித்தி, வேலான் புலியன், கலியன், காத்தன், வெருகன், கப்புக் காலன். முருகன், கண்டன், கருத்தன், முண்டன், கங்கன். சிங்கன், கூத்தன் முதலாகச் சேரியிலிலேயுள்ள பள்ளர் எல்லாம் கூடிக் குரவையிட்டு ஏர்மங்கலம் பாடி நாளேர் பூட்டி உழவைத் தொடங்கினார்கள்.

**சாத்தன் பெரியான் கொன்னைத்**
**தாண்டி அரியான்**
**சடையான் உடையான் கட்டைச்**
**சங்கன் புங்கன்**

**போத்தன் அருதன் கோணப்**
**பூவன் மருதன்**
**பூலான் வாயித்தி வேலான்**
**புலியன் கலியன**

**காத்தன் வெருகன் கப்புக்**
**காலன் முருகன்**

கண்டன் கருத்த முண்டன்
கங்கன் சிங்கன்

கூத்தன் முதலா யுள்ள
பள்ளர் எல்லாம்
குரவையிட் டேரைப் பூட்டிக்
கூடி யுழுதார்.

4. மாடு குத்துதல்:

முதல் நாள் நாளேர் உழவு முடிந்ததும், அடுத்த நாள், வழக்கமாகப் பூட்டுங் காளையை விட்டுவிட்டு அதுவரை ஏரிலே பூட்டாத புதிய காளை மாடுகளைச் சிலர் ஏரிலே பூட்டும் பொழுது, அதிலே ஒரு புல்லைக் காளையொன்று, வயலுட் கிடந்த பெரிய வரால்மீன் ஒன்று குதிக்கக் கண்டு வெருவித், தன் முகத்தை மாறிக்கொண்டு, அதனை முடுக்கி மடக்க முயன்ற ஆட்களை எல்லாம் முட்டித் தள்ளிவிட்டு ஓட ஆரம்பித்து 'அந்த மாட்டின் குறும்புத்தனம் அடங்குமாறு அதனை நான் மறிப்பேன்' என்று வடிவழகக் குடும்பன் சொல்லிக்கொண்டே ஓடி, அதன் முன்வந்து, அதை மறித்தான், அந்தவுடனே அது கொம்பு முனையினாலே அவனைக் குத்தித் தள்ளிற்று, குடும்பனும் சிறிது மயக்கங் கொண்டு விழுந்துவிட்டான்.

"பூட்டுங்கா ளையைவிட்டுப் பூட்டாக் காளையைப்
பூட்டுக் பொழுதுதிலொரு புல்லைக் காளை
மோட்டு வரால் குதிக்க முகத்தை மாறி
முடுக்கி மறிக்கும் ஆளை முட்டி ஓட
மாட்டுக் குறும்படங்க மறிப்ப னெனவே
வடிவழக் குடும்பன் வந்து மறித்தான்
கோட்டு முனையாலது குத்துமளவில்
குடும்பன்சற் றேமயக்கங் கொண்டு வீழ்ந்தான்"

5. பள்ளியர் வந்தனர்:

துள்ளி எழுந்த அந்தப் புல்லைக் காளையானது விடாமல் பள்ளனைப் பாய்ந்து கீழே தள்ளி விடுகின்றதையும், அதனால் அவன் கொண்ட சோர்வையும் கண்டதும், சற்றும் தாழ்க்காமல், பகாசுரனாகிய கொக்கின் கடை வாயைக் கிழித்த சிறந்தோராகிய முக்கூடல் அழகரின் முக்கூடற் பள்ளி வந்தாள்; அப்படியே தென்மருதூர்ப் பள்ளியும் அங்கே ஓடி வந்தாள்.

"துள்ளி யெழுங்காளை தொடர்ந்துபள்ள னைப்பாய்ந்து
துள்ளிவிடும் சோர்வுகண்டு சற்றும் தரியாமல்
புள்ளின்கடை வாய்கிழித்த புங்கவனார் முக்கூடற்
பள்ளிவரத் தென்மருதூர்ப் பள்ளியும் வந்துற்றாளே"

6. மூத்தாள் புலப்பம்:

மதயானைகளைக்கூட முன்பெல்லாம் பிடிக்க வல்லமை உடையவனாயிற்றே நீ, இப்போது இந்த மாட்டுக்கு எதிர் நிற்கமாட்டாமல் போனதென்ன? சொல்வாயாக; முன், மலைபோன்ற காளைகளின் கொட்டங்களையெல்லாம் அழித்து முறித்தாயே? அவை எல்லாம் பழங்கதையோ?' அந்தப் பலத்தை இப்போது காண்கிலேன்' என்று எனக்குக் காட்டவோ நீ ஓடிப்போய் அந்தக் காளையை மறித்தாய்? சதுர்வேதனாகிய பிரமன் விதித்த தலை எழுத்தோ? அல்லது, மருதூர்ச்

சக்களத்தி உனக்கு இட்ட மோசமான மருந்தின் வெறியோ? என் வாழ்வின் முதலே! முக்கூடல் அழகரின் பண்ணைக் குடும்பா! இது யார் விளைத்த இடும்போ தெரிந்திலேனே?

**மதயானை முதற்பிடிக்க எல்லாய் - இந்த**
**மாட்டுக்கு மாட்டாமல் போனதென்ன சொல்லாய்**
**கதையோமுன் மலைகளையும் முறித்தாய் - அந்தப்பலங்**
**கண்டிலேனா னென்றோடி மறித்தாய்**
**சதுர்வேதன் விதித்தலைப் பொறியோ – மருதூர்ச்**
**சக்களத்தி புலைமருந்தின் வெறியோ**
**முதலேயீ தார்விளைத்த இடும்போ – தெரிந்திலேன்**
**முக்கூடல் அழகர் பண்ணைக் குடும்பா?**

**7. இளையாள் புலப்பம்:**

வடிவழகரின் பாதங்களை ஒருபோதும் மறவாத அவருடைய பண்ணைக் குடும்பனே! உன்னுடைய வடுப்படாத மேனியும் இப்படி வடுப்படுமோ! என் வல்லாளனுடைய சமர்த்தும் இப்படிப் போய்விடுமோ? நன்று! நன்று! எதற்காக அந்த மாட்டைத் தடுத்துத் தொடர்ந்து ஓடினாய்? இந்த முக்கூடற் சதுரி இருக்கிறாளே இவள் பார்த்து இப்படிச் சிரிப்பதற்காகவோ நீ வீழ்ந்து கிடந்தாய்? இப்போது தானே குட்டையிலிருந்து மீண்டாய் அதனையடுத்து இதுவும் உனக்கு வருதல் மீண்டாய். அதனையடுத்து இதுவும் உனக்கு வருதல் என்ன முறைமையோ? மலையின் மேலே இருக்கின்ற ஐயனாரான பூலாவுடையாரின் குறையோ? படுத்த கிடையிலிருந்து எழுந்து இருந்து கொள்வாய்!

**வடுப்படா மேனிவடுப் படுமோ – நன்று நன்றென்**
**வல்லாளன சமர்த்தும் போய்விடுமோ**
**தடுத்துநீ ஏன்மாட்டைத் தொடர்ந்தாய் - முக்கூடல்**
**சதுரிப்பார்த்துச் சிரிக்கவோ கிடந்தாய்**

**அடுத்திதுவும் உனக்குவர முறையோ – மலையின்மேல்**
**ஐயாபூ லாவுடையார் குறையோ?**
**படுத்தகிடை எழுந்திருந்து கொள்ளாய் - வடிவழகர்**
**பாதமற வாத பண்ணைக் குடும்பா!**

**8. எழுந்தான் அவன்:**

இவ்வாறாகப் பள்ளியர் இருவரும் தன் நிலைமை கண்டு இரங்கி நிற்கின்ற, புலம்பியமும் வார்த்தைகள் தன் காதுகளிற் புகுந்ததுமே, தான்பட்ட துயரமெல்லாம் நீங்கத் தலையை அசைத்துத் தோள்களைக் குலுக்கி, ஏதும் நடவாதவொரு பாவனையோடு முக்கூடற்பள்ளனும் எழுந்து விட்டான்.

**“ஏங்கியிரு பள்ளியரும் இவ்வா றிரங்கிநிற்குந்**
**தேங்குதலை வார்த்தை செவியிற் புகுதலுமே**
**தூங்குதுயர் நீங்கித் தலையசைத்துத் தோள்குலுக்கிப்**
**பாங்கினொடு முக்கூடற் பள்ளன் எழுந்தானே”**

**9. விதை தெளித்தான்:**

பள்ளன் எழுந்து தன் பழைய நிலையினை அடைந்தான். தன் அருகே வருந்தி நின்ற பள்ளியர்களின் முகங்களைப் பார்த்துச் சிரித்தான். மெல்லப் புருவத்தை வளைத்து நெரித்துக் கண் சிமிட்டினான். அந்த மாட்டையே பிடித்து வந்து மீண்டும் ஏரிலே பூட்டி உழத்தொடங்கினான்.

உழுத உழவுசால்களை எல்லாம் பார்த்துப்பார்த்து உள்ளத்திலே களிப்புக் கொண்டான். அங்குள்ள பள்ளர்களை எல்லாம் கூப்பிட்டான். எல்லோருடனும் கூடித் தொழுது தெய்வக்கடன்களை எல்லாம் செய்து கழித்தான். அதன்பின், தொளியிலே விதைகளை எடுத்துத் தெளிக்கத் தொடங்கினான்.

**“பள்ளன் எழுந்தநிலை தரித்தான் - நின்று**
**பள்ளியர் முகம்பார்த்துச் சிரித்தான்**
**மெள்ளப் புருவங்கோட்டி நெரித்தான் - மாட்டை**
**மீளவும் பூட்டியுழத் தரித்தான்**

**உழுத உழவைக்கண்டு களித்தான் - பள்ளர்**
**உள்ள பேரையெல்லாம் விளித்தான்**
**தொழுது தெய்வக்கடன் கழித்தான் - அந்தத்**
**தொளியில் விதைகள் எல்லாம் தெளித்தான்”**

**10. நாற்றுமுகங் கண்டான்:**

விதைகள் முளைக்கத் தொடங்கின. முளைக்கு முறையாகத் தண்ணீர் அடைத்தான். மறுநாள் தோட்டங்களிலேயுள்ள மரக் கொம்புகளை எல்லாம் வெட்டி விட்டான். அந்தக் கொம்புகளால் நாற்றங்காலைச் வெட்டி விட்டான். அந்தக் கொம்புகளால் நாற்றங்காலைச் சுற்றிலும் வேலி நட்டுப் பாதுகாவலும் செய்தான். நாற்று வளர்க்க நாள் தோறும் ஒரு மனத்தோடு ஈடுபட்டான்.

வளர்ந்து கொண்டிருந்த நாற்று முகத்தைக் கண்டதும், அந்த மகிழ்ச்சியினால், சேரியிலுள்ள உழவர்கள் கூடச்சேர்ந்து கொண்டு மதுவுண்டு களித்தான். அளவிட முடியாத மகிழ்ச்சி கொண்டான். பண்ணைக்காரனிடம் போய் நாற்றுத் தயாராய்விட்ட அந்தச் செய்தியையுஞ் சொன்னான்.

**முளைக்குத் தண்ணீரை அடைத் திட்டான் - கொல்லை**
**முழுதும் மறுநாள் வெட்டி விட்டான்**
**வளைத்து வேலிசூழ நட்டான் - நாற்று**
**வளர்க்க நாளும் ஒருப் பட்டான்**

**வளர்ந்த நாற்றைமுகங் கண்டான் - சேரி**
**மள்ளர் கூடமது வுண்டான்**
**அளந்தி டாமகிழ்ச்சி கொண்டான் - பண்ணை**
**ஆண்டையைப் போய் அந்தச் செய்தி விண்டான்”**

**11. நாள் நடவு அறிவிப்பு:**

நறுமணங் கமழுகின்ற துளசி மாலை அணிபவரான அழகருடைய முக்கூடல் நாட்டிலே பயிர் ஏறுவதற்குச் செய்கின்ற நாற்று இன்றைக்கு நாள் நடவாக நடவேண்டுமென்று, பண்ணையார்

நன்றாகத் நெளிவு அடையும் படியாக எடுத்துச் சொல்லிவிட்டு, அவர் இட்ட கட்டளைகளையும் தலைமேற் கொண்டவனாகப், பள்ளன் வயல்களை நோக்கி வந்து சேர்ந்தான்.

**“நாறுந் துழாயழகர் நாட்டிற் பழனமெல்லாம்**
**ஏறும் பயிர்தருநாற் றின்றுநட வேணுமென்றே**
**தேறும் படியறிக்கை செய்து பண்ணை யாண்டவனார்**
**கூறும் பணிதலைமேற் கொண்டுபள்ளன் மீண்டானே”**

**12. நாற்றுப் பிடுங்குதல்:**

முதலிலே தரிசை அடிக்கிற முதலுழவு செய்தனர். பின் மறித்து மறித்து முச்சாலடித்து நாலு உழவுகளையும் உழுது முடித்தனர். உழவு கட்டிகள் நொறுங்கி, வயல் சமமாகித் திருந்தும் பொருட்டு மூன்று மரமும் அடித்தனர்.

அந்தத் தொளிக்கென்று பக்குவமாக வைத்திருந்த நாற்றைப் பிடுங்கி கொண்டுவந்து வேறுவேறு முடிகளாக அடுக்கி முடிந்து அடுத்த வயலிலே வட்ட வட்டங்களாகக் குவித்துக் கொண்டனர். அதன் பின்னர்,

முக்கூடல் அழகரின் திருப்பாதங்களை வணங்கி வந்தனர். வைக்க நாற்று முடிகளை எடுத்து நெற்றியிலே வைத்துக் கொண்டு, நாலுதிசையும் நோக்கி வாழ்த்தி கும்பிட்டார்கள்.

அதன்பின் நடுபவர்களைப் பந்திப் படுத்திப் பகுத்து நிற்க வைத்து, அவரவர்க்கு உரிய நிரையை வகுத்துப் “பரவை யொலி போலக் குரவை ஒலியினை எழுப்பிப் பயிர் நெருங்காமல் தொளியிலே பதியுங்கள் பள்ளியர்களே!” என்று குடும்பன் ஆணையிட்டான்.

**“முந்திக் தரிசை அடித்து மறித்து**
**முச்சாலடித்திட் டுழவு நாலும்**
**முழுதும் உழுது திருத்தும் பரம்பு**
**மூன்றுந் தடவியே**

**அந்தத் தொளிக்குச் சமைந்த நாற்றை**
**அடுத்த வயலிற் பிடுங்கி வேறே**
**அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க**
**ளாய்க் குவித்தபின்**

**வந்தித் தழகர் பதத்தைத் துதித்து**
**வைத்த நாற்றை எடுத்து நெற்றியில்**
**வைத்து நாலு திசையும் நோக்கி**
**வாழ்த்திக் கும்பிட்டே**

**பந்தி பகுந்து நிரையை வகுத்துப்**
**பரவை யொலிபொல் குரவை எழுப்பிப்**
**பயிர் நெருங்காமல் கலந்து போகாமல்**
**பதியும் பள்ளீரே!”**

**13. சமர்த்தைக் காட்டுங்கள்!:**

சின்னி, குருந்தி, அருதி, மருதி, செல்லி, இருவி, எல்லி, கலிச்சி, திருவி, அணைஞ்சி, வெழுகி, பெரிச்சி செம்பி, வம்பி தம்பிச்சாள், நன்னி, உடைச்சி, சடைச்சி, மூக்கி, நல்லி, பூலி, ஆலி, வேலி, நாச்சி, சுந்தி, எழுவி, நாகி, போகிலாள், பொன்னி. அழகி, நூவி, சேவி, பூவி, சாத்தி, காத்தி, அம்மச்சி, பூமி, காமி, வேம்பி, கரும்பி, புலிச்சி, அங்காளி, கன்னி, பொதுவி,

அன்னம், பாலி, கள்ளி ஆகிய பள்ளியர்களே! எல்லோரும் ஒருவருக் கொருவர் கலந்து கைவிரைவாக உங்கள் நடுகைச் சமர்த்துக்களைக் காட்டுங்கள் பார்க்கலாம்! இப்படிக், கூவி அவர்களை உற்சாகப்படுத்தி ஏவினான் பள்ளன்.

**சின்னி குருந்தி அருதி மருதி**
**செல்லி இருவி எல்லி கலிச்சி**
**திருவி அணைஞ்சி வெழுதி பெரிச்சி**
**செம்பி வம்பி தம்பிச்சாள்**

**நன்னி உடைச்சி சடைச்சி மூக்கி**
**நல்லி பூலி ஆலி வேலி**
**நாச்சி பேச்சி சுந்தி எழுவி**
**நாகி போகி லாள்**

**பொன்னி அழகி நூவி வேி**
**பூவி சாத்தி காத்தி அம்மச்சி**
**பூமி காமி வேம்பி கரும்பி**
**புலிச்சி அங்காளி**

**கன்னி பொதுவி அன்னம் பாலி**
**கள்ளியுங்கலந் தொருவர்க் கொருவர்**
**கைவிரசலாய் நடுகைச் சமர்த்தைக்**
**காட்டும் பள்ளீரே!**

**14. நடுகைச் சிறப்பு:**

காம்பெல்லாங் கொத்துக் கொத்தாகப் பூத்துருக்கின்ற பூந்துளசி மாலையை அணிந்த அழகரது முக்கூடல் நகரினுள்ளே, சேறுபடுந்த கால்களை உடையவரான பள்ளர்களுக்குத் தென்றற் காற்றினால் தான் என்ன விளைவு உண்டாகுமோ? ஆற்றுக்கால் ஆட்டியர்களாகிய பள்ளியர்களின் மனத்திலே ஊடலாகிய ஆட்டம் எழுந்த காலத்தே, வயல்களிலே நடவெல்லாம் நாற்றுக் காலை விட்டு நடுகைக் காலில் ஏற மாட்டாதாகி விடுமே!

**“நாற்றுக்கால் பூந்துளவத் தாரழகர் முக்கூடற்**
**சேற்றுக்கால் மள்ளருக்குத் தென்றற்கா லென்னாமோ**
**ஆற்றுக்கா லாட்டியருள் ஆட்டெழுங்கால் பண்ணைநடும்**
**நாற்றுக்கால் விட்டு நடுகைக்கால் ஏறாதே”**

**15. குருந்தி திருந்தினாள்!:**

தம்மை எதிர்க்கப் படைகொண்டு, வந்த கரன் என்னும் அரக்கனையும் படைத்தொழில் ஆற்றும் வல்லமை சேர்ந்த வனான திரிசிரன் என்பவனையும் முந்நாளிலே எய்து கொன்ற இராமபாணத்தை உடையவர்; குகன் என்னும் வேடன் தனக்கு பற்றுக்கோடாகக் கொள்ள அவனுடைய தோழனாக விளங்கியவர்;

கோவர்த்தன கிரியைக் குன்றாகத் தூக்கிப் பிடித்து ஆநிரைகளைக் காத்து நின்றவர்; முக்கூடலிலே அழகராக அமர்ந்திருக்கும் திருமால், அவருடைய வயற்காடுகளிலே அவரையே

முதலில் வழிபாடு கொண்டு பள்ளியர்களை நடச்செய்தலை இன்றுதான் கண்டோம். இது என்ன புதுமையோ?

தொடை என்றால் வாழைத் தண்டைப் போலிருக்கின்றன; விழிக்கடை என்றால் இரண்டும் இரு அம்பு முனைகளைப் போலிருக்கின்றன; கூந்தற் சொருக்கு என்றால் அது மேகத்தொகுதியைப் போலிருக்கிறது; கொங்கைகளின் நெருக்கம் என்றாலோ அது ஒன்றோடொன்று இணைந்திருக்கும் இரு குடங்களைப் போலிருக்கிறது.

இடை என்றாலோ வஞ்சிக் கொடியைப் போலத் தோன்றுகிறது; நடந்துவரும் நடையென்றாலோ இளைய பிடியானையின் நடையை போலிருக்கும்; முன்பு இருந்த சாயலுக்கு இப்பால் அந்தக் குருந்தி மிகவும் ஆள் திருந்தி விட்டாளடி பள்ளியரே!

**“படைகொண் டேவருங் கரனையும் - பொரு**
**விடையஞ்சேர் திரி சிரனையும்**
**பண்டு முடித்த கணையினார் – குகன்**
**கண்டு பிடித்த துணைவனார்**

**குடைகுன் றாய்ப்பசுக் கிடைநின்றார் – முக்**
**கூடலழகர் வயலுள்ளே**
**கொண்டாடிக் கொண்டு நடச்செய்தே – அன்று**
**கண்டோ மிதென்ன புதுமையோ?**

**தொடையென் றால்வாழைத் தண்டைப்போல் - விழிக்**
**கடையென் றால்கணை ரெண்டைப்போல்**
**சொருக்கென் றால்மேக படத்தைப்போல் - முலை**
**நெருக்கென் றால்இணைக் குடத்தைப்போல்**

**இடையென் றால்வஞ்சிக் கொடியைப் போல் - வரும்**
**நடையென் றாலிளம் பிடியைப் போல்**
**இருந்த சாயலுக் கிப்பாற் - குருந்தி**
**திருந்தி னாளடி பள்ளீரே!”**

**16. கிடையும் பாரும்!:**

அருகிலே வருவாரைக் கடித்துக் கொல்லும் பாம்பான காளிங்கனின் தலையிலே நின்று நடனமிடும் இறைவர்; தன் மாமனாகிய கஞ்சனார்க்குத் தானே உயிர் குடிக்கும் நஞ்சாக இருந்தவர்; உடைகின்ற அலைகளையுடைய பாற்கடலிலே கடைந்தெடுத்த அமுதத்தைத் தன் மோகினி உருவைக் காட்டி அசுரர்களை ஏமாற்றித் தேவர்களுக்கு ஊட்டினவர்; அவருடைய திருவடிக்குள்ளேயே முந்நாள் அடங்கிப் போன இந்தப் பூமிக்கு முதல்வராக விளங்குபவர்; அவரே முக்கூடல் அழகர்.

அவருடைய வயல்களினுள்ளே, ஆடிப்பாடி, நாற்று முடியை அலைத்துக் குலைத்துப், பள்ளியர்களை நடச்செய்தே. பதனாக வடிக்கும் மதுவைக் குடிப்பதிலே உண்டாகிய ஆசை காரணமாக வந்த மயக்கமும், அதனைக் குடித்தனால் உண்டான பெரும் எக்களிப்பும் கொண்டு வரப்பிலே ஏறுவதற்குப் பாய்ந்து, பரம்பு மரத்திலே சாய்ந்து கிடக்கிறவனுடைய வாட்டத்தையும், அவன் முகம் கோணுகிற கோணல்களையும்.

துடிக்கும் இதழ்களைக் கடிக்கும் அவன் பற்களையும், சோர்ந்து விரிந்து கிடக்கும் கூந்தலையும், அவன் தொடைகளையும் நெகிழ்ந்து போன உடையையும், அவன் கிடந்த கிடையையும் பாருங்களடீ, பள்ளியர்களே!

**“கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்**
**கஞ்ச னார்க்கொரு நஞ்சனார்**
**கடையும் அமுதம் உடையும் திரையிற்**
**காட்டி அண்டருக்கு ஊட்டினார்**

**அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர்**
**அழகர் முக்கூடல் வயலுள்ளே**
**கடிப் பாடி நாற்று முடியை**
**அலைத்துக் குலைத்து நடச்செய்தே**

**வடிக்கும் மதுவைக் குடிக்கும் ஆசை**
**மயக்கமும் பெருந் தியக்கமும்**
**வரம்பிற் பாய்ந்து பரம்பிற் சாய்ந்த**
**வாட்டமும் முகக் கோட்டமும்**

**துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்**
**சோர்ந்து விரிந்த கூந்தலும்**
**தொடையும் நெகிழ்ந்த உடையும் கிடந்த**
**கிடையும் பாரும் பள்ளீரே”**

**17. கும்மி பாரும்!**

சிறந்த சான்றோர்கள் கூடிய தமிழ்ச்சங்கத்திலே கலந்து கொண்ட புலவர்களுள். தலைமைபெற்று விளங்கிய திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான அழகனாரின் பொருநை ஆற்றிலேயுள்ள அணைக்கட்டிலே, நீர் பெருகுங்காலத்திலே, புனல் வந்து மோதிக் கொண்டிருக்கும் மருதூர் வயற்காட்டினுள்ளே,

தங்கள் நடவு வேலைக்குரிய நாற்றுக்கும், பள்ளர் அங்கலாய்ப்புடன் எதிர்பார்த்திருக்கும் சோற்றுக்கும், கொஞ்சம் காலதாமதம் ஏற்படவே, மற்று, அவற்றுள் ஒன்றினைக் காரணஞ்சாட்டிப் பள்ளியர் எல்லோரும் மேட்டிற் கூட்டமாகக் கூடிவிட்டனர்.

எங்கும் காப்புக்களின் ஒலிகள் பொங்குகின்றன. அதற்கு எதிராகக் கழுத்துச் சங்கிலிகள் அதிர்கின்றன, விளங்கும் கொங்கைகள் குலுங்குகின்றன. காதுகளிலே பொருந்திய அணிகள் ஊசலாடுகின்றன.

இப்படியாக. அங்கும் இங்குமாகத் தம்சிவந்த உள்ளங்கைகளை நீட்டிநீட்டி அருதியும். சின்னமருதியும், அரியாளும், கட்டைப் பெரியாளுமாகக் கும்மியடித்துக் கொண்டிருப்பதைப் பாருங்களடி. பள்ளியர்களே!

**“புங்கவர் தமிழ்ச் சங்கம் மருவும்**
**புலமைத் தலைமை அழகனார்**
**பொருநை ஆற்றணை பெருகுங்கால் - புனல்**
**பொருத மருதூர் வயலுள்ளே!**

**தங்கள் வேலை நாற்றுக் கும்பள்ளர்**
**அங்க லாய்க்குஞ் சோற்றுக்கும்**
**தாமதப்பட வேமற்ற தொன்றைச்**
**சாட்டி மேட்டிற் கூட்டமாய்;**

**எங்குங் காப்பொலி பொங்க வேயதற்கு**
**எதிராய்ச் சங்கிலி அதிரவே**
**இலங்கும் முலைகள் குலுங்கவே காதில்**
**இசையும் பணிகள் அசையவே!**

**அங்கும் இங்கும் செங்கை நீட்டி**
**அருதியுஞ் சின்ன மருதியும்**
**அரியாளும் கட்டைப் பெரியாளும் - கும்மி**
**அடிப்பதைப் பாரும் பள்ளீரே"**

**18. கோப்பைப் பாருங்கள்**

வெள்ளையானைக்கு இறைவனான இந்திரனாலும் போற்றப்படுவர்; ஒப்பற்ற புள்ளரசாகிய கருடனின் உருவம் பொறித்த கொடியை ஏற்றுபவர், வேதங்கள் போற்றிப் பரவுகின்ற பாதங்களையுடையவர்; வைகுண்டத்திலே வீற்றிருக்கின்ற வீரர்; முக்கூடல் அழகர்!

அவருடைய உள்ளூர்ப் பண்ணை வயலினுள்ளே தெற்கு வெள்ளூர்ப் பள்ளியாகிய வெயிலியும், உளக்குடிப் பள்ளியாகிய உடைச்சியும், மேலக்களக்குடிப் பள்ளியாகிய சடைச்சியும் தள்ளாடிக் கொண்டே நடவு நடுகிறார்கள்.

பள்ளர்கள் துள்ளியாடிக் கூட்டம் இட்டுக் கொண்டிருக்கிறார்கள். தையலி என்பவளுடைய மகள் பொய்யலி இருக்கிறாளே. அவள் அருகே பெரியான் சாடிக்கொண்டு ஓடிப் போகிறான்.

கள்ளால் உற்ற வெறியானது கட்டுமீறிப்போக, ஒரு நிலை கொள்ளாவல் தடுமாறிக் கொண்டு, 'உன் காப்பைக் காட்டு பார்க்கலாம்' என்று சொல்லி, அவருடைய கையைப் பிடிக்கிறான். அந்தக் கட்டுக் கோப்பைப் பாருங்களடீ!

**வெள்ளா னைக்கிறை போற்று வார் –ஒரு**
**புள்ளா டற்கொடி ஏற்றுவார்**
**வேதம் பரவும் பாதர் வைகுண்ட**
**வீரர் அழகர் முக்கூடல்**

**உள்ளூர்ப் பண்ணை வயலு – ளேதெற்கு**
**வெள்ளூர்ப் பள்ளி வெயிலியும்**
**உளக்கு டிப்பள்ளி உடைச்சி யும்மேலக்**
**களக்கு டிப்பள்ளி சடைச்சியும்**

**தள்ளாடிக்கொண்டு நடச்செய்தே – பள்ளர்**
**துள்ளா டிக்கூட்டம் இடச்செய்தே**
**தையலி மகள் பொய்யலி கிட்டச்**
**சாடிப் பெரியான் ஓடிப்போய்க்**

கள்ளால் உற்றது மீறி – யேறிலை
கொள்ளா மல்தடு மாறியே
காப்பைக் காட்டென்று கையைப் பிடிக்கும்
கோப்பைப் பாரும் பள்ளீரே!”

**19. தாங்குகிறான் பாரும்!:**

சிறுத்த கண்களையுடைய யானையானது தானுற்ற கொடுந்துயரத்துக்கு ஆற்றாது ஓலமிட, அதன் துயரத்தைத் தீர்த்து, அதன்முன் தோன்றிக் காட்சியளித்து நின்றவர் முக்கூடல் அழகராகிய திருமால். அவருடைய பழைய திருவிளையாட்டுப்புரவிலுள்ள வயலிலே,

குறுவைப் பயிர் அறுத்து விட்டுக் கிடக்கும் அறுதாள் அடிமையும், பள்ளன் நெருக்கமாக உழுதிருக்கும் சிறு கடியையும் , குழப்பிப் பரம்பு தடவிக், காலிட்டு உழப்பிச் சம்பா நாற்று நடச் செய்திருக்கிறான். அங்கே,

சருவக் குடும்பன், மிகவும் மனம் மறுகி மறுகித், தன் மச்சினியான கூழைப் பிச்சியை வா வா என்று அழைக்கிறான். அவளோ போ போ என்கிறாள். இவன் அவள் வழியை மறித்தான். அவள் பின்னால் விலகிப் போனாள்.

அப்படிப் போகும் பொது அறுகங் கொடியிலே கால் தட்டி அவள் கீழே விழுந்த உடனே, அவளுடைய தலையைத் தாங்குகிறவனைப் போலே காட்டிக் கொண்டு அவளுடைய குவிந்த கொங்கைகளைப் பற்றித் தாங்குகிறான் பாருங்களடீ! பள்ளியரே?

“சிறுகண் வேழம் உறுவெந்துயரம்
தீர்த்து முன்னின்று காத்தவர்
திருமுக் கூடல் அழகர் பழைய
திருவி ளையாட்டுப் புரவிலே
குறுவை அறுதாள் அடியை யும்பள்ளன்
புரவி உழுத தடியையும்
குழப்பிப் பரம்பு தடவிக் காலிட்
டுழப்பிச் சம்பா நடச்செய்தே
மறுகி மறுகிச் சருவக் குடும்பன்
மச்சினி கூழைப் பிச்சியை
வாவென் றானவன் போவென் றாளிவன்
மறுத்தான் அவள்பின் பிரித்துப்போய்த்
தறுகி அறுகங் கொடியி லேஅடி
தட்டி விழுந்த மட்டிலே
தலையைத் தாங்குறாப் போலே – குத்து
முலையைத் தாங்குறான் பள்ளீரே!”

**20. அடுக்கிறான் பாரும்!:**

இராவணேசுவரனாகிய அரக்கர் கோமானுடைய பத்துத் தலைகளையும், இருபது தோள்களையும் வெட்டுண்டு துள்ளிக் கீழே விழும்படி ஒப்பற்ற ராமபாணமாகிய கணையை ஏவியவர்; கார்ப்பருவத்து மேகத்தின்நிறத்தைக் கொண்ட திருமேனியினை யுடையவர். முக்கூடல் அழகர் அவருடைய பண்ணைக் கண்ணாறுகளை நடச் செய்திருக்கிறார்கள். அங்கே

முத்தக் குடும்பன் பெற்ற அந்தப் பொத்தாணியிருக்கிறானே ஒரு நொண்டித் திருடன், அவன், மாறனூர் மூக்கிக்கும், அவள் தமக்கையான காக்கி, கறுப்பி, மூவி என்பவர்களுக்கும் இளையவளான நூவியினுடைய,

குவிந்த கொங்கைகளையும், முத்துச் சிரிப்பையும் குறிவைத்துப் பார்த்துக் கொண்டே இருக்கிறான். அந்தச் சிறுக்கியும் கொஞ்சம் கூசிப் பார்க்கிறாள். அதற்கு மேலே, அவன், அவளுடன் மெள்ளப்பேசிப் பார்க்கவேண்டும் என்ற ஆசையினாலே,

அவளை மாற்றத் துணிந்து அதட்டிக் கொண்டே, அவள் முன்பாக ஏர்க்காலைச் செல்ல விட்டு, நோக்காலை ஒதுக்கி எடுக்கிறவனைப் போலப் பாவனை காட்டிக் கொண்டே, கிட்டக் கிட்டப் போய் அவளை நெருங்குகிறான். அவனைப் பாருங்களடீ, பள்ளியர்களே!

**“பத்துத் தலையும் அரக்கன் புயமும்**
**தத்தக் கணையொன் றேவிய**
**பருவ புயலின் உருவத் தழகர்**
**பண்ணைக் கண்ணாறு நடச்செய்தே**

**முத்தக் குடும்பன் பெற்ற பொத்தாணி**
**மோண்டிச் சோரன் மாறனூர்**
**மூக்கி தமக்கை காக்கி கறுப்பி**
**மூவிக் கிளைய நூவிதன்**

**குத்துமுலையும் முத்துநகையும்**
**குறிக்கி றான் அந்தச் சிறுக்கியும்**
**கூசிப் பார்க்கிறாள் அதுக்கவன் மெள்ளப்**
**பேசிப்பார்க்கும் ஆசையால்**

**எத்தத் துணிந்து அதட்டிட் டவள்முன்**
**ஏர்க்கா லைவிட்டு நோக்காலை**
**எடுக்கி றாப்போலே கிட்டக் கிட்டப்போய்**
**அடுக்கிறான பாரும்பள்ளீரே”**

**21. சண்டையைப் பாரும்!:**

அவருடைய செழுமையான திருப்பாதங்களை, ஒருமுறை தொழுந் தவத்தினையுடையோரெல்லாம், அந்தத் திவ்வியமான தரிசன நினைவினாலேயே தம்முடைய சித்தம் உருகப் பெற்றவராக நித்தமும் அந்த இன்பத்தையே தேடி வருவார்கள். அத்தகைய முக்கூடல் அழகருக்குச் சொந்தமான சிற்றாற்றுக்கால் பாசனமுடைய வயல்களிலே,

உழுந்தொழிலாலே பழந்தொளிப்பட்ட முடங்கலிலே பெருகி நின்ற தண்ணீரை உடைத்து விட்டு நடவு செய்கின்றனர். அங்கே, வண்டிப் பானையாகிய பெரிய பானையிலே இருந்த நெல்லிலே வடித்த பழங்கள்ளைத் தன் ஒரு வயிற்றிலேயேகுடித்து நிரப்பிவிட்டு எழுந்தான். கழுந்து போன்ற மொட்டைத் தலைவனான நெட்டையன் அந்த வெறியிலே, இருவக் குடும்பனுடைய மருமகன் ஈச்சக் குடும்பனின் பாய்ச்சற்காலை எட்டிமுட்டித் தட்டிவிட்டான். அப்படித் தட்டிவிடும்போது அவனுடைய கொழுந்தியின் பக்கத்திலே போய் விழுந்தான். அதற்கு அவளுடன் கூடப் பிறந்த மாடன்போய், அவனுடைய கொண்டையைப் பற்றி இழுக்கிறான். அந்த வம்புச் சண்டையைப் பாருங்களடி பள்ளியரே!

**“செழுந்தி ருப்பதம் தொழுந்த வத்தினர்**
**சித்தம் உருகி நித்தமும்**
**தேடி வருமுக் கூடலழகர்**

சிற்றாற் றுக்காற் பற்றிலே

உழுந்தொ ழிற்படு பழந்தொளிப் புனல்
உடைச்சு முடங்கல் நடச்செய்தே
ஒண்டி வயிற்றுப் பண்டிப் பானைத்
தொண்டிக் கள்ளை மண்டியே

எழுந்த நெட்டையன் கழுந்து மொட்டையன்
இருவக் குடும்பன் மருமகன்
ஈச்சக் குடும்பன் பாச்சக் காலை
எட்டி முட்டித் தட்டியே

கொழுந்தி பக்கத்தில் விழுந்த துக்கவன்
கூடப் பிறந்த மாடன் போய்
கொண்டை யைப்பிடித் திழுக்கி றான்வம்புச்
சண்டை யைப்பாரும் பள்ளீரே!"

## 22. ஓங்கியது பயிர்!

'இந்த உலகத்திலே, ஒருவருடைய பசிக்கு உண்ண உணவளிப்பவர்கள், நின்ற நிலை பெயர்ந்து போனார்கள் என்றாலும், அது அவர்கள் மென்மேலும் பெருகுவதற்கே சான்று' என்று காட்டுவன போலக் கார்மேக வண்ணரும் கருதி முதல்வருமான முக்கூடல் அழகரின் வயல்களிலே, சீருடன் நட்ட நாற்றுக்கள் முதலில் தலைதாழ்ந்து நிலையின்றிக் கிடந்தாலும், பின்னர் நடப்பெற்ற வயல்களிலே நிலைபெற்று ஓங்கி வளரலாயின.

"பாரின் அமு துண்ணப்
பசிக்களிப்பார் நின்றநிலை
பேரினும்மென் மேலும்
பெருகுதற்குச் சாட்சியென்றே
காரினுருவச் சுருதி
காரணர்முக் கூடல்வயல்
சீரினடு நாற்றுநடச்
செய்யினின் றோங்கியதே"

## 23. விளைவுத் தோற்றம்

பதிந்த நடவுகள் தேறிப் பசுமைநிறமும் ஏறிப் பின்பு பசந்து குருத்து மென்மேற் பரந்து நிலம் அடங்கச் செறிந்தன பொருள் நயம் முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும் முதல்வராகிய திருமாலோ என்னும்படியாகத் தழைத்தன. நுனி குழைந்து, பொதிந்த பொதியை நீட்டி, வாய் பொருந்தப் பூட்டிக் காட்டி, இரப்போர்க்கு வழங்கும் புரவலவர்களின் பொன் சொரியும் கைகளே போல விளங்கின அச்சுமையால் தானும் வணங்கி ஒன்றுடன் ஒன்று எதிர்த்த கதிர்களாக முளைந்து இடையிடையே நெல்லும் பழுத்த ஏற்றமான விளைவு வந்து கூடும் என்ற காட்சியையும் தோற்றிக் கொண்டு காணப்பட்டன.

பதிந்த நடவுதேறிப் பசப்பும் ஏறிப்

**பசந்து குருத்து மேன்மேற் பரந்துசெறிந்து**
**முதிர்ந்த தமிழிசைக்கு முடிய சைக்கும்**
**முதல்வ ரெனத்தழைத்து முதலகு ழைத்தே**
**பொதிந்த பொதியை நீட்டிப் பூட்டிக் காட்டிப்**
**புரப்போர்பொன் னிணங்குகை போலவணங்கி**
**எதிர்ந்த கதிர்முளைத்தே இடைப முத்து**
**ஏற்ற விளைவு தோற்றந் தோற்றியதே!**

**24. அரிகள் பரப்பினார்!:**

கதிர்கள் எல்லாம் நன்றாக முற்றி விளைந்த செய்தியை முழுவதும் முக்கூடற் பண்ணைக்காரனின் முன்னாற் சென்று பள்ளன் தெளிவாகக் கூறினான் அதனைக் கேட்ட அவன் அதற்கு உத்தரமாகச் சொன்ன வகைகள் நன்றே என்று உணர்ந்தனர் பள்ளர்கள். அனைவரும் விருப்பமுடனே வயல்களில் வந்து கூடினார்கள். நாட்கதிர் கொள்ளுவதற்குமுன், அதற்குரிய தெய்வ வழிபாடுகளைச் செய்து போற்றினர். உரிய பொருள்களையும் படையலாக இட்டனர். அதன்பின், சிறப்புடைய நாட்கதிர் கொய்தலைச் செய்து உள்ளம் களிப்படைந்தனர் பின்னர், அறுவடைக்கு ஆட்களைப் பகுத்து நிறுவி, அவரவர் அறுக்க வேண்டிய நிரைகளையும் தெளிவு பட வகுத்தனர். ஒருவரோடொருவர் அணுக்கமாக நின்று அவர்கள் நெற்கதிரை அரிந்தார்கள். அரிந்த அரிகைளை எல்லாம் வயலெங்கும் நிரம்பியிருக்குமாறு பரப்பிப் போட்டனர்.

**“முறுக விளைந்த வாறு முற்றுந் தேற்ற**
**முக்கூடற் பண்ணைக்காரன் முன்புகூற**
**மறுபடியவன் சொன்ன வகைநன் றென்ன**
**மள்ளரும் பலரும்நாடி வயலிற்கூடி**
**உறுதெய்வ நிலைபோற்றி உரிமை சாற்றி**
**ஓங்குநா் கதிர் கொய்தார்**
**நிறுவி நிரைதெரிந்தார் நெருங்கி அரிந்தார்**
**நிரப்பி அரிகளெங்கும் பரப்பி னாரே!”**

**25. அளந்தார்கள்**

பண்ணைக்காரன் களத்திலே வந்து கண்காணங்காத்திருப்பான். அவன் முன்னால் நெல்லை அளந்து பலபலகட்டளைகளுக்காகக் கொடுப்பார்கள். நாள்தோறும் அடியாருக்கு சோறிடும் தினச்சத்திரத்திற்கும். பெரிய நம்பி அய்யங்காருடைய திருமாளிகைச் செலவுகளுக்கும் என்று சிலபகுதி நெல்லை அளந்து கொடுப்பார்கள். சனக்கட்டளையாக ஏழு திருப்பதிகளுக்கும் தலத்தார் ஏற்படுத்திய படித்தரங்களுக்கும் நெல் அளப்பார்கள். மனத்துக்கு இனிய பண்பினான காவை வடமாலையப்ப பிள்ளையன் மடத்துக்கு வேண்டிய செந்நெல்லைக் குவிப்பார்கள். இப்படியாக மிகுந்த சிறப்புகள் அமையுமாறு மரக்காலைக் கையாற் கட்டிக் கட்டி அளப்பார்கள்.

**“தினச்சத்தி ரத்துக்கென்று பெரியநம்பி**
**திருமளிகை கென்னுஞ்சில**
**நெல்லுக் கொடுப்பார்**

**சனக்கட்டளை ஏழுதி ருப்பதிக்கும்**
**தலத்தார் படிக்குஞ்சில**

**சாலி யளப்பார்**

**மனத்துக் கினிய காவை வடமலேந்திரன்**
**மடத்துக்கு வேண்டுஞ்**
**செந்நெல் வாரிக் குவிப்பார்**

**கனக்குஞ் சிறப்பமையக் கட்டி யளப்பார்**
**கங்காணப் படி பண்ணைக்**
**காரனார் முன்னே"**

**26. உள்ளபடி சொன்னான்!:**

வளங்கள் எல்லாம் தந்து அருளுகின்ற தென்பாண்டிச் சீமையின் முக்கூடலிலே, கோயில் கொண்டிருக்கும் மாயவனாருடைய பண்ணையிலே அளந்த பொலிகள் இத்தனை என்று கண்டு முதலுடன் செலவு விவரங்களும், களதிலே நின்று பண்ணைக்காரனுடனே வடிவழகக் குடும்பன், அவன் மனந்தடுமாறாத வகையிலே, உள்ளபடி எல்லாவற்றையும் சொன்னான்.

**"வளந்தரு தென் முக்கூடல் மாயவனார் பண்ணையிலே**
**அளந்த பொலி இத்தனையென் றாதாய முஞ்செலவும்**
**களந்தனிலே நின்றுபண்ணைக் காரனுட னேகுடும்பன்**
**உளந்தடுமா றாதவகை உள்ளபடி சொன்னானே"**

**27. அளந்தேன்! அளந்தேன்!:**

பண்ணை ஆண்டையே! அளக்கும் பொலிகளின் கணக்குகளைச் சொல்லுகிறேன். கேளும்! பள்ளர்கள் இப்படியாக வளர்த்துக் கொண்டிருக்கும் வேலைகளிலே மனத்தைச் செலுத்தி விட்டு இதை மறந்து விடாதிருப்பீராக சொல்லி விட்டேன்.

ஆடித் திருநாளுக்கென்று, ஆறாயிரம் கோட்டைகளை அந்த நெட்டைத்தாடிப் பிச்சன் வகையிலே நமக்கு வருஞ் சம்பா நெல்லிலே அளந்து கொடுத்தேன் வருகின்ற பங்குனித் திருநாள் படிவகைக்காக ஆயிரங்கோட்டை அந்தச் சின்னத் திருவன் புள்ளியிலேசெந்தாழை நெல்லிலே அளந்து கொடுத்தேன். சிற்றாற்று அண்ணையிலே மேலுங் கல்லுக்கட்டச் செலவு ஆயிரங்கோட்டை. அதனைப் பண்ணையிலே பெற்றாக்குடும்பன் புள்ளியிற் கண்ட பெருவெள்ளை நெல்லிலே அளந்து கொடுத்தேன்.

**"அளக்கும் பொலிக் கணக்கைப் பண்ணை**
**ஆண்டே சொல்லக் கேளும் - பள்ளர்**
**வளர்க்கும் பலபெருஞ் சோலியில்**
**மறவா திருஞ் சொன்னேன்.**

**ஆடித்திரு நாளுக்கு நெல்**
**ஆறாயிரங் கோட்டை – நெட்டைத்**
**தாடிப்பிச்சன் நேருஞ் சம்பா**
**நெல் அளந்தேன்.**

**வருபங் குனிந் திருநாட்படி**
**வகைக் காயிரம் கோட்டை – சின்னத்**

திருவன் பயி ரிடும்புள்ளியில்
செந்தாழைநெல் அளந்தேன்.

சிற்றாணைக் கல்லுங் கட்டச்
செலவாயிரங் கோட்டை – பண்ணைப்
பெற்றாக்குடும்பன் புள்ளியிற்கண்ட
பெருவெள்ளை நெல் அளந்தேன்”

## 7. கலங்கல்! தெளிவு!

### 1. மூத்த பள்ளியின் நிட்டூரம்:

எல்லாக் கணக்குகளையும் சொன்னான்; என் பேரையும், எண் கணக்கையும் சொல்லாது விட்டு விட்டான். அந்தப் பள்ளனுடைய சூதான எண்ணத்தை இனிக்கேளும் என்று வில்லாண்மை உடையவரான முக்கூடல் அழகருடைய முக்கூடல் மூத்த பள்ளியானவள், தன் பொருமல் தணியாமல், பிற பள்ளியர்களின் முன்பாகத் தன்னுடைய பள்ளன் மீதிலேயே கொடுமை சொல்லத் தொடங்கினாள்.

“எல்லாக் கணக்குரைத்தும்
என்பேரும் என் கணக்கும்
சொல்லாது விட்டபள்ளன்
சூதையினிக் கேளுமென்றே
வில்லாளர் முக்கூடல்
மிக்கபள்ளி தன்பொருமல்
நில்லாமல் பள்ளியர்முன்
நிட்டூரஞ் சொன்னாளே”

### 2. வஞ்சகம் பாரும்!:

அந்த முட்டிக்கால் தட்டும் பண்ணை ஆண்டையும் நடுநின்று என் குறைகளைக் கேட்க மாட்டாரோ? அந்த ஆந்தை மூக்கு மூஞ்சியுடைய பண்ணையாரும் நடுநின்று நான் சொல்வதைக் கேட்க மாட்டாரோ? மட்டி வாயையுடைய பண்ணையாண்டை நடுநின்று கேட்க மாட்டாரோ? கருமந்தி போல முகமுடைய பண்ணை ஆண்டை நடுநின்று கேட்க மாட்டாரோ? சட்டிபோலத் தலையையுடைய பண்ணை ஆண்டை நடைமுறை கேட்க மாட்டாரோ? தண்ணீர் இறைக்கும் சால்போல் வயிற்றினையுடைய பண்ணைக்காரர் நடுமுறை கேட்கமாட்டாரோ? பெண்டாட்டிமார் இரண்டு பேர்களை வைத்துக் கொண்டிருக்கும் குடும்பன் மிகவும் கெட்டிக்காரன்! மிகவும் கெட்டிக்காரன்! அவன் செய்த கர்வமிகுந்த செயல்களையும் வஞ்சகமான செயல்களையும் நீங்களே கேளுங்களடி பள்ளியர்களே!

“முட்டிக்காற் பண்ணையாண்டே
நடுக்கே ளாரோ – ஆந்தை
மூக்குமூஞ்சிப் பண்ணையாண்டே
நடுக்கே ளாரோ!

மட்டிவாய்ப் பண்ணையாண்டே

நடுக்கே ளாரோ – கரு
மந்திமுகப் பண்ணை யாண்டே
நடுக்கே ளாரோ?

சட்டித்தலைப் பண்ணையாண்டே
நடுக்கே ளாரோ?
சால்வயிற்றுப் பண்ணை யாண்டே
நடுக்கே ளாரே?

கெட்டி கெட்டி பெண்டு ரெண்டு
வைத்த குடும்பன் - செய்த
கெருவமும் வஞ்சகமும்
கேளும் பள்ளீரே!"

### 3. இம்மட்டுந் தந்தான்!:

பள்ளனுக்கு எப்போதுமே அந்த மருதூர்ப் பள்ளியின் ஆசைதான். இன்னமும் அந்தப் பற்று அவனை விட்ட பாடில்லை. அதனால், படாத பாடுபட்டும் அவன் அறியாமற் போனான். பிள்ளையாராடி வயலிலே உறை நெல் எடுத்தான். அதை அவள் கூலியாகப் பெற்ற நெல்லுடன் கலந்து அவள் பெட்டியிலேயே வைத்து விட்டான். எனக்குள்ள பங்கை கூட எனக்குத் தரக் கை எழும்பாமல், அதைக் காலால் உழுது, வாயால் என்னை அதட்டி, எல்லாவற்றையுமே உழப்பிப் போட்டுவிட்டான். தள்ளும் மண்ணும் கல்லும், அதனோடு சற்று நெல்லுங் கலந்து எனக்கும் பங்கு தந்தோமென்ற பேருக்கு இந்த மட்டுமே தந்தான்டீ பள்ளியரே!

"பள்ளனுக்கு மருதூரிற்
பள்ளியாசைதான் - இன்னும்
பற்றுவிட்ட தில்லைபாடு
பட்டும் அறியான்

பிள்ளையார் அடியிலுறை
நெல்லும் எடுத்தான் - அவள்
பெற்றநெல் லுடன்கலந்து
பெட்டியில் வைத்தான்

உள்ளபே றெனக்குத் தரக்
கையெழும் பாமல் - காலால்
உழுதுவா யாலதட்டி
உழப்பிப் போட்டான்

தள்ளுமண்ணுங் கல்லுஞ்சற்றே
நெல்லுக்கலந்தே – பங்கு
தந்தோ மென்றெனக் கிம்மட்டும்
தந்தான் பள்ளீரே!"

**4. பள்ளியர் ஏசல்:**

பள்ளியரிடம் முறையிட்டு என்னைப் பழித்ததென்னடீ முக்கூடற் பள்ளி! உங்களுடைய பழைய செல்வம் எதையாவது பள்ளன் எனக்குத் தந்துவிட்டானோ? அப்படித் தந்திருந்தால், அதை இங்கே மெய்ப்பித்துக் காட்டடீ! முண்டை!

தொண்டை கட்டிப்போகும்படி கூவாதேடி, என்னைக் கூப்பிட்டு வைது நீ சொன்ன பேச்சை எல்லாம் பண்ணையாரிடம் போய்ச் சொல்லி விடுவேனடீ!

**“முண்டை முறை யிட்டதென்ன**
**முக்கூடற்பள்ளி – உங்கள்**
**மூப்புச் சொம்மெனக்குத் தந்தால்**
**மூதலி யடீ**

**தொண்டை கட்டக் கூப்பிடாதே**
**கூப்பிட் டென்னை – வைது**
**சொன்ன பேச்சைப் பண்ணையார்க்குச்**
**சொல்லு வேனடி”**

இளையபள்ளி இப்படிச் சொல்லவும், முக்கூடற்பள்ளி, ‘‘சொன்னால் எனக்கு என்னடீ பயம் மருதூர்ப்பள்ளி! நீ சென்று பண்ணையாரிடம் சொன்னால், உன் காசு அங்கே செல்லாதடி, போடி! போய்ச் சொல்லடி’’ என்று இளையவளுக்குச் சவால் விடுகிறாள்.

‘என்னாலே ஆகாதது உண்டோ முக்கூடற் பள்ளி! பள்ளன் இங்கே வந்தால், உன் சலுகை எல்லாம் தெரியுமடி!’ என்கிறாள் அந்த இளையவள்.

**“சொன்னாலெனக் கென்ன பயம்**
**மருதூர்ப் பள்ளி – சென்று**
**சொல்லிலுன்கா சுசெல்லாது**
**சொல்லடி போடி!**

**என்னாலேயா காததுண்டோ**
**முக்கூடற் பள்ளி – பள்ளன்**
**இங்கு வந்தால் உன் சலுகை**
**எல்லாந் தெரியும்”**

சலுகை இல்லாமலென்ன மருதூர்ப்பள்ளி நானும் என் ஊரைவிட்டு உன்னைப்போல ஒட்டுச் சாய்ப்பிலே பள்ளனோடு வந்தேனோடி?

இல்லாத வலுச்சலுகை எல்லாம் பேசாதே முக்கூடற்பள்ளி! உன்னைப்போல வழக்கிட்டும் கணக்கிட்டும் நான் வந்தேனோடி? போடி!

**‘‘சலுகையில் லாமலென்ன மருதூர்ப் பள்ளி நானும்**
**தன்னூர் விட்டுன்போல் ஒட்டுச் சாய்ப்பில் வந்தேனோ?**
**வலுச்சலுகை பேசாதேநீ முக்கூடற்பள்ளி – உன்போல்**
**வழக்கிட்டுக் கணக்கிட்டு வந்தேனோ போடி?”**

நானாகவோ வழக்கிட்டு வந்தேன், மருதூர்ப்பள்ளி? பள்ளன்தானே, ‘மாமன் மகள்’ என்று, என்னை வேறெவருக்கும் தராமல் மறித்துக் கட்டிக் கொண்டான்?

உழக்குக்குள் கிழக்கு மேற்கோ முக்கூடற்பள்ளி? உன்னை மறித்துக் கட்டிக் கொண்டான்; என்னைக் கண்டதும் என் பேரில் ஆசையினால் என்ஊருக்கே வந்து கட்டிக் கொண்டான்.

**“வழக்கிட்டுநான் வந்தேனோ**
**மருதூர்ப் பள்ளி – பள்ளன்**
**மாமன்மகள் என்றென்னை**
**மறித்துக் கொண்டான்.**

**உழக்கிற் கிழக்கு மேற்கோ**
**முக்கூடற் பள்ளி மறித்து**
**உன்னைக் கொண்டான் என்னைக் கண்டென்**
**ஊரிலே வந்தான்”**

அங்கே அவன் வந்தால்தான் என்னடி மருதூர்ப் பள்ளி? ஊராருடைய ஆமக்களைத் தொடர்ந்து உன்னைப் போல எவளடி இதற்கு முன் வந்திருக்கிறான்?

எங்கே வந்தாலும் என்னடி முக்கூடற்பள்ளி? வீட்டுக்குள் வந்துவிட்டதால் காட்டுக் கஸ்தூரிப் பூனையும் வீட்டுப் பூனைக்கு ஒப்பாகப் போய்விடுமோடீ?

**“அங்கேயவன் வந்தாலென்ன மருதூர்ப் பள்ளி – ஊரார்**
**ஆமக்களைத் தொடர்ந்துனைப் போல் ஆரடி வந்தான்?**
**எங்கேவந் தாலுமென்ன முக்கூடற் பள்ளி – வீட்டில்**
**எய்திற் காட்டு நாவி பூனைக் கிணை யாமோடி?”**

சாகத் துடிப்பவள் மாதிரி ஆட்டம் போட வேண்டாம் முக்கூடற்பள்ளி பேச்சிலே மிதமிஞ்சி ஏதாவது பேசினால் உன் நெஞ்சை அறுத்துவிடுவேன். அதற்குப் பயந்து பேசடி.

**“நாவி என்றாய் பூனையென்றாய் மருதூர்ப் பள்ளி – நாவி**
**நானடி பூனை முளி நாயும் நீயடி!**
**வீவியாட்டம் ஆடவேண்டாம் முக்கூடற் பள்ளி – பேச்சில்**
**மிஞ்சிப் பேசில் நெஞ்சறுப்பேன் அஞ்சிப் பேசடி”**

அஞ்சச் சொன்னது என்னை எதற்காகவடி மருதூர்ப் பள்ளி? உனக்கு ஆசைப்பட்ட குடும்பன் இருக்கிறானே, அவனை உனக்கு அஞ்சிக் கிடக்கச் சொல்லடி

உன்னைப்போலச் சிறுமைத்தனம் உடையவளுக்கு நான் பயப்படுவேனோ முக்கூடற்பள்ளி? இன்னும் கொண்டு போய்க் குட்டையிலே மாட்டிப் போடு; உனக்கு அவன் கும்பிட்டு அஞ்சிக் கிடப்பான்.

**“அஞ்சச் சொன்ன தென்னை என்ன**
**மருதூர்ப் பள்ளி – உனக்கு**
**ஆசைப் பட்ட குடும்பனை**

**அஞ்சச் சொல்லடி.**

**கொஞ்சக் காரிக்கு அஞ்சுவேனோ**
**முக்கூடற் பள்ளி - இன்னம்**
**குட்டையிற் போடுனக்கவன்**
**கும்மிட் டஞ்சுவான்''**

அப்படிக் குட்டையிலே மாட்டிப் போட்டதற்கு மருதூர்ப்பள்ளி நீதானோ பிணைபட்டுக் கொண்டு அந்தப் பள்ளனை மீட்டு வந்தாய்?

புருஷன் என்று கூடச் சட்டை பண்ணாமல் ஏசிக் காட்டிக் கொடடி முக்கூடற்பள்ளி! குட்டையிலே அடித்து வைப்பாய்; கழற்றுவாய் எல்லாம் உன் தந்திரமடி,

**''குட்டைதனிற் போட்டதற்கோ**
**மருதூர்ப் பள்ளி – அந்தக்**
**குடும்பனைப் பிணைபட்டுக்**
**கொண்டு மீட்டாய்?**

**சட்டைபண்ணா தேசிக்காட்டு**
**முக்கூடற் பள்ளி குட்டை**
**சாத்துவாய் கழற்றுவாயுன்**
**தந்திர மடி''**

மருதூர்ப்பள்ளி! உன்னைப்போல மந்திரமும் தந்திரமும் எனக்கு வகையாக வந்ததானால் பள்ளன் எனக்கு வசமாக மாட்டானோ? உன்னிடமோ இருப்பான்?

சந்தியில் கிடக்கும் மாங்கொட்டையடி நீ முக்கூடற் பள்ளி! போடி! உன்னைப் போலச் சாரங்கெட்ட மருதூர்க்காரி என்றோ என்னையும் சாதித்துக் காட்டுவதற்கு வருகிறாய்?

**''மந்திரமும் தந்திரமும் மருதூர்ப் பள்ளி – உனைபோல்**
**வகைவந்தால் பள்ளனுமென் வசமாகா னோ?**
**சந்தியில்லாங் கொட்டைபோடி முக்கூடற் பள்ளி நீயும்**
**சாரங்கெட்ட மருதென்றோ சாதிக்க வாராய்!''**

சாதிக்கிற தந்திரமெல்லாம் உனக்குந்தான் வரும், மருதூர்ப்பள்ளி! நரிகளையே பரிகளாக மாற்றிச் சாதித்தவன் உங்கள் சிவபெருமான் அல்லவோடி?

என்ன தவறு உண்டாக்குவதற்காக இப்படிப் பேசிச் சாதிக்க வருகிறாய், முக்கூடற்பள்ளி? கல்லையும் பெண்ணாக, சாதித்தவன் உங்கள் கண்ணன் அல்லவோடீ?

**''சாதிப்பது உனக்கு வரும் மருதூர்ப்பள்ளி – நரிதான்**
**பரியாய்ச்சா தித்தானுங்கள் சம்புவல் லோடி?**
**பேதிக்கச்சா திக்க வாராய் முக்கூடற்பள்ளி – கல்லைப்**
**பெண்ணாகச் சாதித்தானுங்கள் கண்ணன் அல்லோடி!''**

மங்கை யொருத்தி தன் ஒரு பாகத்திலேயே இருக்கவும், தான் யோகியென்று சொல்லிக் கையிலே மழுவையும் ஏந்தி நின்றானே? அவன் உங்கள் ஊமத்தை மாலையணிந்த சிவன் அல்லவோடி?

நாச்சியாரை அவளுடைய கொங்கைகள் அமுங்கக் கூடிக் கலந்துவிட்டுக், கொஞ்சமும் வெட்கமில்லாமல், முன் காலத்தில் மனந்துணிந்து நெய்யிலே கையிட்டவன் உங்கள் மேக வண்ணன் அல்லவோடி.!

**"மங்கையொரு பங்கிருக்க போகியென்று தான் - கையில் மழுவேந்தி நின்றானுங்க மத்தன் அல்லோடி?**
**கொங்கைதனில் நாச்சியாரைச் சங்கையில்லாமற் - பண்டு**
**கூடிநெய்யிற்கையிட்டா னுங்கள் கொண்டல் அல்லோடி?"**

மன்மதனைத் தன் மருமகன் என்றுகூட எண்ணிப் பார்க்காமல் முதலில் கோபித்துக் கண்ணிலே நெருப்பைக் கொட்டியவன் உங்கள் முதல்வன் அல்லவோடி?

மாமனென்றும் பாராமல் முன்னாளிலே கஞ்சனைக் கொன்றே கண்களில் என்றும் மாறாத பூ விழப்பெற்றவள் உங்கள் மாயவன் அல்லவோடி?

**"காமனை மருகனென்று**
**எண்ணிப் பாராமல் - காய்ந்து**
**கண்ணிலேறு பட்டானுங்கள்**
**கர்த்தன் அல்லோடி?**

**மாமன் என்று பாராமல்முன்**
**கஞ்சனைக் கொன்றே – கண்கள்**
**மாறாதேபூப் பட்டானுங்கள்**
**மாயன் அல்லோடி!"**

மாயவன் கண்கள் செந்தாமரைக் கண்கள். அதனைக் கஞ்சனைக் கொன்ற பாவத்தால் கண்ணிற் பூவிழுந்ததாக இளையவள் சொல்லுகிறாள். கண்ணிற் பூவிழுந்தால் கண்பார்வை கெடும்.

பெண் ஒருத்திக்காக ஆசைப்பட்டுப் பொன்னின் மயமான பனிமலையேறிப் போனவன், உங்கள் சிவபெருமான் அல்லவோடி?

காதல் கொண்டு தம்பியோடு சீதை பொருட்டாக, அந்நாளிலே கடல் கடந்து போனானே, அவன் உங்கள் கண்ணன் அல்லவோடி?

**"மாதொருத்திக் காசைப்பட்டுப்**
**பொன்னின் மயமாம் - பனி**
**மலையேறிப் போனா னுங்கள்**
**மத்தனல் லோடி?**
**காதலித்துத் தம்பியுடன்**
**சீதை பொருட்டால் - அன்று**
**கடலேறிப் போனா னுங்கள்**
**கண்ண னல்லோடி?"**

தான் பசுப்போல் நின்றுகொண்டு தன் கன்றைத் தேர்க்காலிலே விழவிட்டு, அதனால் சோழனுடைய மகனைக் கொன்றானே, அவன் உங்கள் தாணுவல்லவோடி?

பெரிய பழிக்கு உள்ளாகித் தகவலிமையுடையவன் போல மறைந்தே நின்று வாலியைக் கொன்றானே, அவன் உங்கள் மாயன் அல்லவோடி?

**தான்பசுப்போல் நின்று கன்றைத்**
**தேர்க்காலில் விட்டே – சோழன்**
**தன்மகனைக் கொன்றா னுங்கள்**
**தானு வல்லோடி?**
**வான் பழிக்கு ளாய்த்தவசி**
**போல மறைந்தே – நின்று**
**வாலியைக் கொன்றா னுங்கள்**
**மாயன் அல்லோடி?**

சுந்தரன் திருமணத்திலே வல்வழக்குப் பேசிச் சென்று, அன்று அவன் வாயால் வையக்கேட்டு நின்றானே, அவன் உங்கள் ஐயன் அல்லவோடி?

சிசுபாலன் புலிபோல எழுந்து வையவே, சபை நடுவிலே ஏழைபோல ஒடுங்கி நின்றானே. அவன் உங்கள் நீல வண்ணன் அல்லவோடி?

**“வலிய வழக்குப் பேசிச் சுந்தரன் வாயால் அன்று**
**வையக்கேட்டு நின்றா னுங்கள் ஐயன் அல்லோடி?**
**புலிபோல் எழுந்து சிசு பாலன் வையவே – ஏழை**
**போலநின்றான் உங்கள் நெடுநீலன் அல்லோடி?”**

அடியானாகிய சுந்தரரும், நாயனாகிய சிவபிரானுமாகத் தன் மனக்கோலிலுக்கு அப்பாலே இருவரையும் தொண்டனாகிய விறன்மிண்டன் அன்று தள்ளிவிட அதன்படி போக நேர்ந்தவன் உங்கள் முதல்வன் அல்லவோடி?

முடியுஞ் சூடாமல், கைகேசி தள்ளிவிடவே, காட்டில் முன்பு நெடுந்தொலைவு போய்க் கிடந்து வாடினானே, அவன் உங்கள் திருமாமல்லவோடி?

**“அடியனும் நாயனுமாய்க்**
**கோவிற் புறகே – தொண்டன்**
**அன்றுதள்ளப் போனானுங்க்**
**ஆதியல்லோடி?**
**முடியுஞ் சூடாமலே கை**
**கேசி தள்ளவே – காட்டில்**
**முன்புதள்ளிப் போனானுங்கள்**
**மூர்த்தியல் லோடி?”**

இடுப்பிலே சுற்றிக் கட்டுவதற்கு ஒரு நாலுமுழத்துண்டு கூடக் கிடையாமல் புலித்தோலை எடுத்து உடுத்தானே அவன் உங்கள் சோதி அல்லவோடி?

கற்றையாகச் சடையையும் கட்டி மரவுரியையும் இடுப்பிலே முன்காலத்திலே கட்டிக் கொண்டானே அவன் உங்கள் சங்குக் கையானாகிய திருமால் அல்லவோடி?

**“சுற்றிக்கட்ட நாலுமுழத் துண்டு மில்லாமல் - புலித்**
**தோலைஉடுத்தானுங்கள் சோதி அல்லோடி?**
**கற்றைச்சட்டை கட்டிமர வுரியுஞ் சேலைதான் - பண்டு**
**கட்டிக் கொண்டான் உங்கள் சங்குக் கையன் அல்லோடி”**

மாட்டு மந்தைக்குப் பின்னாகவே திரிந்துங்கூடச் சோற்றுக்கு வழியில்லாமல் வெறும் மண்ணைத்தின்றானே அவன் உங்கள் மேகவண்ணன் அல்லவோடி?

**“நாட்டுக்குள் இரந்தும் பசிக்கு ஆற்ற மாட்டாமல் - வாரி**
**நஞ்சையெல்லாம் உண்டா னுங்கள் நாதனல் லோடி?**

**மாட்டுப் பிற கேதிரிந்தம் சோற்றுக் கில்லாமல் -வெறும்**
**மண்ணையுண்டான் உங்கள்முகில் வண்ணனல் லோடி?”**

ஏறிச் செலுத்துவதற்குத் தகுந்த ஒரு வாகனமும் இல்லாமையினாலே மாட்டின் ஏறிக்கொண்டே திரிந்தான். அவன் உங்கள் ஈசன் அல்லவோடீ?

வீறாப்பான பேச்சு என்னடி? அந்த மாடுகூட இல்லாமற் போனதனால்தானே பறவை மீதிலேறிக் கொண்டான் உங்கள் கீதன், இது உண்மை அல்லவோடீ?

**“ஏறவொரு வாகனமும் இல்லா மையினால் -மாட்டில்**
**ஏறியே திரிந்தானுங்கள் ஈசன் அல்லோடி!**
**வீறு சொன்ன தென்னமாடு தானுமில்லாமல் - பட்சி**
**மீதிலேறிக் கொண்டானுங்கள் கீதன் அல்லோடி?”**

## 5. பள்ளியர் சமாதானம்:

பெருமாளுடைய அடியானுக்கு மனைவியாக இருந்துமே நீ எங்கள் பெருமாளைப் பழித்துப் பேசலாமோடீ? பள்ளனைத் திருமால் அடிமை என்றாய்? எவரும் மிகவும் பசி எடுத்தால் தின்னாது என ஒன்று இருக்கிறதோ? அதேபோலச் சினம் வந்தால் சொல்லாதது உண்டோ?

**“பெருமாள் அடியானுக்குப் பெண்டிருந்துமே – எங்கள்**
**பெருமாளை நீ பழித்துப் பேசலா மோடி?**
**திருமால் அடிமையென்றாய் சாலப் பசித்தால் - அருந்**
**தின்னாததுண்டோ சினந்தால் சொல்லாத துண்டோ?”**

தீராண்மை மிகவும் நன்றாகச் சொன்னாய் மருதூர்ப் பள்ளிபோ! போ! என்னதான் கோபப்பட்டாலும் சீர் அழியச் சொல்லலாமோ?

எனக்குக் கோபம் வராதோ முக்கூடற்பள்ளி? முதலிலே வைதவரை வாழ்த்தினவர் இதுவரை எவராவது இந்த உலகத்தில் தான் உண்டோ?

**“தீராண்மைநன் றாகச் சொன்னாய் மருதூர்ப் பள்ளி – போபோ**
**சினந்தாலுஞ் சீரழியச் சொல்லலா மோடி!**
**வாராதோ எனக்குக் கோபம் முக்கூடற் பள்ளி – முந்த**
**வைதவரை வாழ்த்தினவர் வையகத் துண்டோ?”**

முதலிலே ஒருவர் வைதால் நானும் வைவேன் என்றாயே மருதூர்ப்பள்ளி! இருந்தாலும், சற்று மூப்பும் இளமையும் பார்த்துக் தலைசாய்த்துப் போகிறவர்களும் உலகத்திலே இல்லையோ?

இந்த வார்த்தையை நீ முதலிலே சொல்லியிருந்தால், முக்கூடற் பள்ளி! சண்டை இத்தனையும் உண்டாகுமோ? எனக்குத்தான் அறிவில்லையோ? அப்பொழுதே பேசாமல் போயிப்பேனே?

**“முந்தவைதால் வைவேனென்றாய் மருதூர்ப் பள்ளி – சற்று**
**மூப்பிளமை பார்த்துத் தலை சாய்ப்பாரில் லையோ?**
**இந்த வார்த்தை முந்தச் சொன்னால் முக்கூடற்பள்ளி – சண்டை**
**இத்தனையுண் டோவெனக்குப் புத்தியில் லையோ?”**

## 6. பாடுவோம்!

ஏதோ சொன்னால்தான் என்ன? நீயும் பொறுத்துக் கொள்; நானும் பொறுத்துக் கொண்டேன். நம் உறவு முறையார் எல்லோரும் சூழ்ந்திருக்க நாம் இருவருமே ஒற்றுமையாகக்

கூடி வாழ்ந்திருக்கலாம். பாம்பின் தலையிலே நின்று ஆடிய முக்கூடல் அழகரின் திருப்பாதங்களை வாழ்த்தி ஆடிப்பாடுவோம் வா!

**“சொன்னலென்ன நீயும் பொறுநானும் பொறுத்தேன் - கிளை**
**சூழ்ந்திருக்க நாமேகூடி வாழ்ந்திருக்க லாம்.**
**பன்னகத்தி லாடியமுக் கூடலழகர் – திருப்**
**பாதமலர் வாழ்த்தி யாடிப் பாடுவோ மே!”**

## 7. வாழிய வாழியவே!:

செங்கமல மலரிலே வீற்றிருப்பவளான, கொவ்வைக் கனிபோன்ற வாயிதழ்களையுடைய அன்னையான, சீவல மங்கைத் தாயார் வாழ்க! நெடிய முகபடாம் அணிந்த வேழமாகிய கஜேந்திரன் அன்று அழைத்த திருப்பெயராகிய ‘ஆதிமூலம்’ என்பது வாழ்க! ஆழிப்படையுடன் அருளாளராக விளங்கும் அழகருடைய திருப்பாதங்கள் வாழ்க! திருமுக்கூடல் நகரம் வாழ்க! முக்கூடல் வைணவர் வாழ்க வாழ்கவே!

**‘‘வீழியிதழ்ச் செங்கமலம் மேவுமனை வாழி! நெடுஞ்**
**சூழிமுக வேழமன்று சொன்னதிருப் பேர் வாழி!**
**ஆழியரு ளாளர் அழகர்திருத் தாள் வாழ!**
**வாழிதிரு முக்கூடல் வைணவர்கள் வாழியவே”**

**குறுகிய விடையளி:**

1. முக்கூடற்பள்ளு உணர்த்தும் இளையபள்ளி, மூத்தபள்ளி குறித்த வர்ணனைச் - செய்திகளை குறிப்பிடுக?
2. முக்கூடற் பள்ளு குறிப்பிடும் நெல்வகைகள் மாடுவகைகள் குறித்து விளக்குக?
3. தென்கரை, வடகரை நாட்டுவளம் பற்றி குறிப்பிடுக?
4. வழிபாடு குறித்த செய்திகளை விளக்குக?
5. முக்கூடற் பள்ளியில் காணப்படும் உழவுத் தொழில் குறித்த செய்திகளை விளக்குக?
6.

**விரிவான விடையளி:**

1. பள்ளியர் ஏசல் குறித்த செய்திகளை விவரி,
2. முக்கூடற் பள்ளு உணர்த்தும் நாட்டுவளங்கள் குறித்த செய்திகளை விவரி?

# அலகு - 5
# தமிழ்விடுதூது

தமிழ்விடுதூது நூல்களில் ஒன்று தூது என்பது தனது கருத்தை மற்றவருக்கு வெளிப்படுத்துதல் ஆகும். தூது விடும் தூதுப் பொருளாக பொருள்கள், பறவைகள், விலங்குகள் எனப் பல்வேறு முறைகளில் நடைபெறுகிறது. தூது நூல்களில் முதல் தூது நூல் உமாபதி சிவாச்சாரியார் எழுதிய ‘நெஞ்சுவிடு தூது’ ஆகும்.

தமிழ்விடுதூது நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. தமிழின் ஈடிணையில்லாச் சிறப்பை உணர்த்தத் தூது இலக்கியங்களுள் மிகச் சிறந்ததாக தமிழ்விடு தூது நூல் விளங்குகிறது. மதுரைச் சொக்கநாதருக்கு தமிழைத் தூது விடு நோக்கில் இந்நூல் பாடப்பட்டுள்ளது. இது புறத்திணைத்துறைகளுள், கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின் பாற்பாடும், தமிழ்விடுதூது இயற்றிய புலவர் தமிழ்ப்பற்று மிக்கவர். சிவபெருமான் மீது குறிப்பாக மதுரைச் சொக்கநாதர் மீது பெரும் பக்தி கொண்டவர் என்பதும் இந்நூலின் மூலம் அறியப்படுகின்றது.

‘‘தமிழ்விடுதூது’’ நூல் 268 கண்ணிகளால் ஆனது. துமிழ் விடுதூது இயற்றிய ஆசிரியர் தமிழின் பெருமைகளை மிகச் சிறந்த முறையில் போற்றிப் பாடியுள்ளார்.

1. **‘‘சீர்கொண்ட கூடல் சிவராச தானி புரந்து**
   **ஏர் கொண்ட சங்கத்து இருந்தோரும் - போர்கொண்டு’’**
   **தெளிவுரை:**
   சிறப்பைக் கொண்ட கூடலாகிய மதுரை என்னும் சைவ சமயத் தலைநகரைப் பாதுகாத்து அழகைக் கொண்ட தமிழ்ச் சங்கத்தின்கண் புலவராக இருந்தவராகிய சோமசுந்தரக் கடவுளும்,

2. **‘‘இசையும் தமிழரசு என்று ஏத்தெடுப்பத் திக்கு**
   **விசையம் செலுத்திய மின்னும் - நசையுறவே**
   **தெளிவுரை:**
   போரில் விருப்பங்கொண்டு தமிழரசி என்று வணங்கத்தக்க எண்திசைகளிலும் பயணம் புரிந்த மீனாட்சியும்.

3. **‘‘செய்ய சிவஞானத்திரள் ஏட்டில் ஓரேடு**
   **கையில் எடுத்த கணபதியும் - மெய்யருளால்’’**
   **தெளிவுரை:**
   விருப்பம் அடையவே அழகிய திரண்டசிவஞான ஏடுகளுள் ஓர்ஏடு கையில் எடுத்த கணபதியும்,
4. **‘‘கூடல் புரந்து ஒருகால் கூடற்புலவர் எதிர்**
   **பாடல் அறிவித்த படைவேளும் - வீடு அகலா’’**
   **தெளிவுரை:**
   மெய்ஞ்ஞான அருளுடன் மதுரையைப் பாதுகாத்து ஒரு காலத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் எதிரில் பாடலை உணர்த்திய வேற்படைகொண்ட முருகனும்,

5. **“மன்னும் மூவாண்டில் வடகலையும் தென்கலையும்**
**அன்னை முலைப்பாலில் அறிந்தோரும் - முன்னரே”**
**தெளிவுரை:**

வீட்டை விட்டுச் செல்ல முடியாத நிலை பெற்ற மூன்றாம் அகவையிலேயே வடமொழிக்கலைகளும் தென்மொழிக் கலைகளும் உமாதேவியாகிய தாயின் முலைப் பால் உண்டு அறிந்தவராகிய திருஞானசம்பந்தரும்,

6. **“மூன்று வழியார் முன்முதலையுண்ட பிள்ளையைப்பின்**
**ஈன்றுதரச் சொல்லின் இசைத்தோரும் - தோன்று அயன்மால்**
**தெளிவுரை:**

முன்னரே முதலை உண்ட பிள்ளையை மூன்று வழிகளைக் கொண்ட சிவபெருமான் முன்னர் மீண்டு பெற்றுத் தருமாறு தமிழ்ச் சொற்களைக் கொண்டு இசைபாடிய சுந்தரரும்,

7. **“தேடி முடியா அடியைத் தேடாதே நல்லூரில்**
**பாடி முடியாப் படைத்தோரும் -நாடிமுடி”**

**தெளிவுரை:**

பிறப்பாகிய தோற்றம் கொள்கின்ற பிரமனும் திருமாலும் தேடிக் காணமுடியாத சிவபெருமானின் திருவடிகளைத் தேடாமலே திருநல்லூரில் தேவாரம் பாடித் தம் தலையில் முடியாகப் படைக்கப் பெற்றவருமாகிய அப்பர் எனப்படும் திருநாவுக்கரசரும்,

8. **“மட்டோலைப் பூவனையார் வார்ந்து ஓலை சேர்த்து**
**பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே”**
**தெளிவுரை:**

தேன் பொருந்திய தாழம்பூவை அணியாதவராகிய சிவபெருமானும் விரும்பி ஓலைகளை வாரி, தம் அட்டவணையில், எடுத்துக் கொள்ளும் பான்மையில் திருக்கோவையாரையும் திருவாசகத்தையும் பாடியருளிய மாணிக்கவாசகரும்,

9. **“ஒல்காப் பெருந்தமிழ் மூன்று ஓதியருள் மாமுனியும்**
**தொல்காப்பியம் மொழிந்த தொல்முனியும் - மல்காச் சொல்”**
**தெளிவுரை:**

முடிவற்றதேயாகிய குறையாத பெருமைக்குரிய சொல் (இயல், இசை, நாடகம் என்னும்) முத்தமிழை ஓதிய மாமுனியாகிய அகத்தியரும். தொல்காப்பியம் உரைத்தருளிய தொல்முனியாகிய தொல்காப்பியரும்.

10. **“பாத்திரம் கொண்ட பதிபால் பாய் பசுவைப் பன்னிரண்டு**
**சூத்திரம் கொண்டே பிணித்த தூயோரும் - நேத்திரமாம்”**
**தெளிவுரை:**

பாடல்வலிமையைக் கொண்டே – தம் மீது சிவஞானபோதத்தின் பன்னிரண்டு நூற்பாக்களைக் கொண்டே சிவபெருமான்மீது பாயும் பசுவாகிய உயிர்களைக் கட்டிய தூயோராகிய மெய்கண்ட தேவரும்.

11. **“தீதில் கவிதைத் திருமாளிகைத் தேவர்**
**ஆதி முனிவர் அனைவோரும் - சாதிஉறும்”**
**தெளிவுரை:**

கண்களாகும் தீமையில்லாக் கவிதைகளைக் கொண்ட திருவிசைப்பா இயற்றிய திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது முனிவர்களும்,

12. **“தந்திரத்தினால் ஒழியாச் சார்வினையைச் சாற்றுதிரு**
**மந்திரத்தினால் ஒழித்த வல்லோரும் - செந்தமிழில்”**
**தெளிவுரை:**

சாதி, புரியும் கிரியைகள் ஆகியவற்றால் ஒழிக்க முடியாத வந்தடைகின்ற வினைகளைச் சொல்லுகின்ற திருமந்திரத்தால் நீக்கிய வல்லவராகிய திருமூலரும்,

13. **“பொய்யடிமை இல்லாப் புலவர் என்று நாவலர்சொல்**
**மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்”**
**தெளிவுரை:**

செந்தமிழில் பொய்யடிமை இல்லாப் புலவர்கள் என்று நாவலர்கள் புகழ்ந்து சொல்கின்ற வாய்மைக்கு அடிமைகளாகிய சங்கப் புலவர்களாகிய மேன்மையானவர்களும்.

14. **“காடவரும் செஞ்சொற் கழறிற்றறிவாரும்**
**பாடஅரும் தெய்வமொழிப் பாவலரும் - நாடஅரும்”**
**தெளிவுரை:**

ஐயடிகள் காடவர்கோனும் செம்மையான சொல்லைக் கொண்ட கழறிற்றறிவராகிய சேரமான் பெருமாள் நாயனாரும் பாட அருமையான தெய்வ மொழியாகிய திருக்குறளை இயற்றிய பாவலரான திருவள்ளுவரும்,

**விளக்கம்:**

ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திரத்திருவெண்பா இயற்றியவர். கழறிற்றறிவார் பாடியவை: திருக்கைலாய ஞானவுலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை என்பன. திருவள்ளுவர் திருக்குறள் இயற்றினர்.

15. **“கல்லாதார் சிங்கமெனக் கல்வி கேள்விக்கு உரியர்**
**எல்லாரும் நீயாய் இருந்தமையால் - சொல் ஆரும்”**
**தெளிவுரை:**

கல்வியறிவிற்கும் கேள்வியறிவிற்கும் உரிய அனைவருமாகி நீ இருந்தமையால் கல்லாதவர்கள் (உன்னைச்) சிங்கமெனவும்.

16. **“என்னடிகளே உன்னைக்கண்டு ஏத்தின்இடர் தீருமென்றுஉன்**
**பொன்னடிகளே புகலாப் போற்றினேன் - பன்னியமென்”**
**தெளிவுரை:**

சொற்கள் நிறைந்த என்செய்யுள் அடிகளே (தமிழாகிய) உன்னைக் கண்டு வணங்கினால், துன்பம் நீங்கும் என்று உன் அழகிய அடிகளையே புகலிடமாகக் கொண்டு போற்றினேன்,

17. **“பஞ்சிபடாநூலே பலர் நெருடாப் பாவே கீண்டு**
**எஞ்சி அழுக்கு ஏறா இயல்கலையே – விஞ்சுநிறம்”**
**தெளிவுரை:**

பருத்தியின் பஞ்சிலிருந்து தோன்றாத நூலே! பலர் நெருடாத பாவே! கிழிந்து எஞ்சிநின்று அழுக்கு ஏறாத தன்மையுள்ள கலையே!

**குறிப்பு:** இக்கண்ணி சிலேடையாக அமைந்துள்ளது.

18. **“தோயாத செந்தமிழே சொல்ஏர் உழவர் அகம்**
**தீயாது சொல்விளையும் செய்யுளே – வீயாது”**
**தெளிவுரை:**

மிஞ்சும் நிறம் தோயாத செந்தமிழே! சொல்லை ஏராகக் கொண்ட உழவர்களாகிய புலவர்கள் உள்ளம் தீய்ந்து போகாது சொற்கள் விளையச் செய்யும் செய்யுளே!

19. **“ஒருகுலத்தும் வாராது உயிர்க்கு உயிராய் நின்றாய்**
**வருகுலம் ஓர் ஐந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்**
**தெளிவுரை:**

எந்த ஒரு குலத்திலும் தோன்றாமல் (தமிழர்களின்) உயிருக்கு உயிராய் நின்றனை; வருகின்றகுலம் ஐந்தாகவும் வந்தனை.

**விளக்கம்:** ‘வருகுலம் ஓர்ஐந்து’ என்னும் தொடர், வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, மருட்பா ஆகிய ஐந்து பாவினங்களைக் குறிக்கிறது.

20. **“புண்ணியம் சேர்உந்திப் புலத்தே வளிதரித்துக்**
**கண்ணிய வாக்காம் கருப்பமாய் - நண்ணித்**
**தெளிவுரை:**

உலகில் புண்ணியம் பொருந்திய உந்தியிடத்தில் காற்றைத் தாங்கிப் பெருமையுடைய வாக்காகிய கருப்பமாகி,

21. **“தலைமிடறு மூக்குஉரத்தில் சார்ந்து இகழ்நாத் தந்தம்**
**உலைவிலா அண்ணத்து உருவாய்த் - தலைதிரும்பி”**

**தெளிவுரை:**

தலை, தொண்டை, மூக்கு, மார்பு ஆகியவற்றைப் பொருந்தி, இதழ், நாக்கு, பற்கள் நடுக்கம் இல்லாத அண்ணம் ஆகியவற்றில் உருவாகி.

22. **“ஏற்பமுதல் முப்பது எழுத்தாய்ச் சார்பு இருநூற்று**
**நாற்பது எழுத்தர் நனிபிறந்தாய் - மேற்படவே”**

**தெளிவுரை:**

தலைதிரும்பிப் பொருந்த முமதல் எழுத்து முப்பதாகவும் சார்பெழுத்து இருநூற்று நாற்பது எழுத்துக்களாகவும் பெருமையுடன் பிறந்தாய்.

**விளக்கம்:** முதல் எழுத்து முப்பது – உயிர் எழுத்து 12, மெய்யெழுத்து 18; இவை 'முதல் எழுத்து' எனப்படும்.

சார்பு இருநூற்று நாற்பது எழுத்து = உயிர்மெய் 216; உயிரளபெடை 7; ஒற்றளபெடை 11; குற்றியலுகரம் 1; குற்றியலிகரம் 1; ஆய்தம் 1; ஐகாரக்குறுக்கம் 1; ஔகாரக்குறுக்கம் 1; மகரக்குறுக்கம் 1. இவை அனைத்தும் சார்பெழுத்துக்கள் எனப்படும்.

23. **"எண்முதலாகப் பகரும் ஈராறு எனும்பருவம்**
**மண்முதலோர் செய்து வளர்க்கும்நாள் - கண்மணிபோல்"**

**தெளிவுரை:**

பெருமைப்படவே சொல்லப்பெறும் பன்னிரண்டு பருவங்கள் இம்மண்ணாகிய உலகின் முதலோராகிய புலவர்கள் செய்து வளர்க்கும் நாளில்,

**விளக்கம்:** ஈராறு எனும் பருவம் = எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, இடைநிலை, கடைநிலை, போலி, பதம், புணர்ச்சி.

24. **"பள்ளிக்கூடத்து அசையாம் பற்பல தொட்டில் கிடத்தித்**
**தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி – உள்இலகு"**

**தெளிவுரை:**

கண்ணின் மணியைப்போல் பள்ளிக்கூடத்தில் அசையாகும் பற்பல தொட்டில்கள் கிடத்தித்தள்ளி உன்னைச் சிறுவர்கள் கூடித் தாலாட்டி,

**விளக்கம்:** அசை – ஓலைச்சுவடிகள் வைக்கும் பலகை; தால் - தாலாட்டு, பிள்ளைக்கவியுறுப்பல் ஒன்று; 'தாலாட்டி' இங்கு எழுத்துக்களை நாவால் ஒலித்துப் பழகும் பயிற்சியைக் குறிக்கும்.

25. **"மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்**
**மிஞசப் புகட்ட மிக வளர்ந்தாய் - மஞ்சரையே"**

**தெளிவுரை:**

உள்ளவாறு விளங்குமாறு மஞ்சள் பூசிக் குளிப்பாட்டி, மைதடவி முப்பாலும் மிஞ்சும்படிப் புகட்ட அதிகமாக வளர்ந்தாய்.

**சிலேடை:** 'மஞ்சள்' என்பது ஏடுகளில் மஞ்சள் தடவுவதைக்
குறிக்கிறது.

**'மைபூசி' என்பது எழுத்து விளக்கமாகத்**
**தெரிவதற்கு மை பூசுதலைக் குறிக்கிறது,**

'முப்பால்' என்ன, தாய்ப்பாலையும் பசுவின் பாலையும் ஆட்டின் பாலையும் குறிக்கும். எனினும் முப்பால்களைக் கொண்ட திருக்குறள் நூலைக் குறிக்கும். 'மஞ்சரையே' என்பது 'மைந்தரையே' என்பதன் போலி.

26. **"பன்னிஒரு பத்துப் பருவமிட்டு நீவளர்ந்தாய்**
**உன்னை வளர்த்துவிட ஒண்ணுமே – முன்னே"**

**தெளிவுரை:**

மைந்தர்களை ஒரு பத்துப் பருவங்களில் நீ வளர்த்தாய்; உன்னை வளர்த்துவிட இயலுமோ?

**விளக்கம்:** 'ஒரு பத்துப் பருவம்' என்னும் தொடர், காப்பு, செங்கீரை, தால். சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனப்படும் பத்துப்பருவங்கள் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களை குறிக்கிறது.
'இட்டு' என்பது ஆசை.

27. **"நினையும் படிப்பெல்லாம் நின்னைப் படிப்பார்**
**உனையும் படிப்பிப்பார் உண்டோ – புனைதருநல்"**
**தெளிவுரை:**
முன்னதாக நினைக்கும் படிப்புகள் எல்லாவற்றையும் உன்னைப் படிப்பார்கள்; உன்னையும் படிக்க வைப்பவர்கள் உள்ளனரோ?

28. **"செய்யுள்சொல் நான்கும் உயர் செந்தமிழ்ச்சொல் ஓர்நான்கும்**
**மெய்உட்பொருள் ஏழ்விதத் திணையும் - மையில் எழுத்து"**

**தெளிவுரை:**
அணிதற்குரிய நல்ல செய்யுள் சொற்கள் நான்கும், உயரிய செந்தமிழ்ச் சொற்கள் நான்கும், மெய் உட்பொருள்களாகிய அகத்திணை புறத்திணைகளைச் சார்ந்த முறையே ஏழுவகைத் திணைகளாகும்.
**விளக்கம்:** 'செய்யுள்சொல் நான்கு' என்பன, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவை.
'செந்தமிழ்ச்சொற்கள்' என்பன பெயர், வினை, இடை, உரி ஆகியவை.
'மெய் உட்பொருள் ஏழ்விதத்திணையும்' என்பன அகத்திணையையும் புறத் திணையையும் சார்ந்த திணைகள்.
**அகத்திணைகள்:** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்பன.
**புறத்திணைகள்:** வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்பன.

29. **"ஆதியாப்பு எட்டும் அலங்காரம் ஏழ்ஐந்தும்**
**பேதியாப் பேரெழில் மாப்பிள்ளையாய்ச் - சாதியிலே"**
**தெளிவுரை:**
குற்றம் இல்லாத எழுத்து முதலிய யாப்பு உறுப்புகள் எட்டும், அணிகள் முப்பத்தைந்தம். வேறுபட்டுப் பேரழகுள்ள மாப்பிள்ளையாகி,
**விளக்கம்:** யாப்பு எட்டு; எழுத்து, அசை, சீர், தளை, அடி. தொடை, பா, பாவினம் என்பன.

30. **"ஆங்குஅமை செப்பல்பண் அகவல்பண் துள்ளல்பண்**
**தூங்கல்பண் பட்டத்துத் தோகையரா – ஓங்குமனத்து"**
(பண் - ஓசை, இசைப்பாட்டு, தோகையரா – மகளிராகவும்)

**தெளிவுரை:**
பாக்களுக்கு ஏற்ப அங்கு அமைந்த செப்பல் பண், அகவல் பண், துள்ளல் பண், தூங்கல் பண் ஆகிய ஓசைகள் பட்ட மகளிராகவும்,

31. **“எண்கருவி ஐந்து ஈன்றிடு நூற்று மூன்றான
பண்களும்பின் கல்யாணப் பாவையரா – எண்கொளும்”**

**தெளிவுரை:**

மனத்தில் உயர்ந்தனவாகக் கருதப் பெறும் ஐந்து இசைக்கருவிகள் தோற்றுவித்த நூற்றுமூன்று வகைப் பண்களும் பின்னர் மண மகளிராகவும்,

**விளக்கம்:** ஐந்து கருவிகள்; தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி எனபன. இவை யனைத்தும் இசைக் கருவிகள்.

32. **“நல்தாரகமா நவரசமாம் பிள்ளைகளைப்
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே – உற்று அகலாப்”**

**தெளிவுரை:**

யாவரும் எண்ணும்படி, நல்ல ஆதாரமான ஒன்பது மெய்ப்பாடுகளைப் பிள்ளைகளாகப் பெற்றனை; பெருமைக்குரிய வாழ்வு பெற்றனை.

**விளக்கம்:** நவரசம் - நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி, அமைதி என்பன.

33. **“பண்கள் முதல் பெண்களொடும் பாலரொடும் நாடகமாம்
பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே – மண்புகழத்”**

**தெளிவுரை:**

நின்னை அடைந்த பிறகு அகலாத பண்கள் முதற்கொண்டு பெண்களுடன் சிறுவர்களுடன் நாடகமாகும் பெண்களின் உல்லாச வீற்றிருப்பில் வீற்றிருக்கப் பெற்றனை.

34. **“தாழ்விலா அட்டாதச வன்னனைகள் எனும்
வாழ்வுஎலாம் கண்டு மகிழ்ந்தாயே – ஆழ”**

**தெளிவுரை:**

உலகினர் புகழத் தாழ்வில்லாப் பதினெட்டு வர்ணனைகள் என்னும் வாழ்வுகள் அனைத்தும் கண்டு மகிழ்ந்தனை,

**விளக்கம்:** அட்டாதச வன்னனைகள் - பதினெட்டு வருணனைகள், அவை; மலை, கடல், நாடு, நகர், சிறுபொழுது, பெரும் பொழுது, கதிரவன், நிலவு என்பன.

35. **“நெடுங்கோல வையையில் என் நேசர்மேல் பட்ட
கொடுங்கோல் செய்கோலாகக் கொண்டாய் - அடங்காத”**

**தெளிவுரை:**

ஆழமான நெடிய அழகிய வையையாற்றில் என் காதலராகிய சொக்கநாதர் மீது பாண்டியவேந்தன் அடித்த கொடுங்கோல் முறையைச் (கொடுமையை) செங்கோல் முறையாகக் கொண்டனை.

36. **“எம்கோவே பத்தென்று இயம்பு திசைக்குள்ளே நின்
செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கேஉன்”**

**தெளிவுரை:**

எவராலும் அடக்க முடியாத வலிமை கொண்ட எங்கள் வேந்ததே! பத்து என்று சொல்லப்பெறும் திசைகளுக்குள்ளே உன்னுடைய செங்கோன்மை செல்லாத திசையும் உள்ளதோ?

37. **“தேசம் ஐம்பத்தாறில் திசைச்சொல் பதினேழும்**
**மாசற நீ வைத்த குறுமன்னியரோ – வீசு”**

**தெளிவுரை:**

இங்கே உன்னுடைய நாடுகள் ஐம்பத்தாறில் திசைச்சொற்கள் பதினேழும் குற்றமற நீ நியமித்த குறுநில மன்னர்களோ?

**விளக்கம்:** ‘குறுநிலமன்னியர்’ என்பது சிற்றரசர், குறுநில மன்னர், ‘குறும்பர்’ எனப் பொருள்படும்.

38. **“குடகடலும் கீழ்கடலும் கோக் குமரியாறும்**
**வடவரையும் எல்லை வகுத்தாய் - இடை இருந்த”**

**தெளிவுரை:**

அலைகள் வீசுகின்ற மேற்குக் கடலும், கிழக்குக் கடலும், தென்திசைக் குமரி ஆறும், வடவரையாகிய திருவேங்கடவன் மலையும் எல்லைகளாக வகுத்தனை.

**விளக்கம்:** ‘கோக்குமரி’ என்னும் தொடரில் உள்ள ‘கோ’ என்பது அரசன் எனக்குறிக்காமல் ‘தசை’ என்னும் பொருளில் வந்தது.

39. **“முன்உறும் தென்பாண்டி முதல் புனல்நாடு ஈறான**
**பன்னிரண்டு நாடும் அப்பால் நாடோ – அந்நாட்டுள்”**

**தெளிவுரை:**

(கூறப்பட்ட எல்லைக்கு) இடையில் இருந்த முன்னதாக அடைந்த தென்பாண்டிநாடு முதல் புனல்நாடு இறுதியிலான பன்னிரண்டு நாடுகளும் அத்தமிழகத்தைச் சார்ந்த பகுதிநாடுகளோ?

**விளக்கம்:** ‘அப்பால் நாடோ?’ என்னும் தொடர், ‘‘அத்தமிழ் நாட்டுப் பகுதியைக் கொண்ட நாடோ’’ எனவும், ‘‘தமிழ்நாட்டுக்கு உட்பட்டனவே’’ எனவும் பொருள் கொள்ள இடந்தருவது வியப்பளிக்கிறது.

**பன்னிரண்டு நாடுகள் வருமாறு:** தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, பேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு, சீதநாடு, மலாடு, புனல்நாடு.

40. **“வையை கருவை மருதாறு மருவூர் நடுவே**
**ஐய நீவாழும் அரண்மைனையோ – செய்யபுகழ்”**

**தெளிவுரை:**

தலைவனே! அந்நாடுகளுக்குள் வையை, கருவை, மருதாறு, மருவூர் ஆகியவற்றிற்கு இடையில் உள்ளது நீவாழும் அரண்மனையோ?

41. **“மூவேந்தர் வாகனமா மூவுலகும்போய் வளைந்த**
**பாவேந்ததே நீ பெரிய பார்வேந்தோ – கா ஏந்து”**

**தெளிவுரை:**

செம்மையான புகழுடைய மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களே ஊர்தியாகக் கொண்டு விண்ணுலகம் மண்ணுலகம், கீழுலகம் ஆகிய மூன்று உலகங்களுக்கும் சென்று சூழந்த பாவேந்தே! நீ பெரிய உலக வேந்தனோ?

42. **"விண்ணவரும் காணரிய வேத ஆகமங்கள் எலாம்**
**புண்ணியனே உன்றன் புரோகிதரோ – எண்ணரிய"**

**தெளிவுரை:**

புண்ணியம் வாய்ந்தவனே! கற்பகப்பூங்காவைப் பெற்றுள்ள தேவர்களும் உணருவதற்கு அரிய வேத ஆகமங்கள் அனைத்தும் உன்னுடைய புரோகிதர்களோ?

43. **"நல்ல பெருங்காப்பியங்கள் நாடகம் அலங்காரம்**
**சொல்லரசே உன்னுடைய தோழரோ – தொல் உலகில்"**

**தெளிவுரை:**

எண்ணுவதற்கு அரிய (அளவற்ற) சொற்களின் அரசே! நல்ல பெருங்காப்பியங்கள், நாடகங்கள், அணிகள் ஆகியவை உன்னுடைய நண்பர்களோ?

44. **"சார்புரக்கும் கோவே நல்சாத்திரங்கள் எல்லாம் உன்**
**பார் புரக்கும் சேனாபதிகளோ – வீரர் அதிர்"**

**தெளிவுரை:**

தொன்மையான உலகத்தில் உன்னை அடைந்தவர்களை ஆதரிக்கும் அரசே! நல்ல கலைகள் அனைத்தும் உன் உலகம் காக்கும் சேனைத் தலைவர்களோ?

45. **"போர்ப் பாரதமுன் புராணம் பதினெட்டும்**
**சீர்ப்பாவே உன்னுடைய சேனைகளோ – பார்ப்பார்கள்"**

**தெளிவுரை:**

சிறப்பான பாவே! வீரர்கள் அதிர்ச்சியடையும் போரைப் பற்றிய பாரதமும் புராணங்கள் பதினெட்டும் உன்னுடைய படைகளோ?

46. **"அக்கரவர்த்தி எனலாம் என்பார் பூலோக**
**சக்கரவர்த்தியும் நீதான் அன்றோ – சக்கரமுன்பு"**

**தெளிவுரை:**

பார்ப்பார்கள் உன்னை அக்கரவர்த்தி என்று கூறலாம் என்பார்கள்; உலகப் பேரரசும் நீயேயன்றோ?

**விளக்கம்:** 'அக்கரம்' என்பது அட்சரம்; எழுத்தைக் குறிக்கிறது, 'அக்கரவர்த்தி' என்பது சித்திரக் கவிகளுள் ஒருவகை, 'சக்கரவர்த்தி' என்பதிலுள்ள 'சக்கரம்' ஓர் அணியாகும்.

47. **"ஏந்தி நெடுந் தேர்மேல் ஏறிச் சுழிகுளம்**
**நீந்திஓர் கூடநிறை சதுக்கம் - போந்து"**

**தெளிவுரை:**

சக்கரத்தை முன்பு ஏந்தி உயர்ந்ததேரில் ஏறிச் சுழிகள் கொண்ட நீந்தி நான்கு தெருக்கள் கூடும் ஒரு சதுக்கத்தை வந்தடைந்து,

**விளக்கம்:** ‘தேர்’ என்பது இரதபந்தம் என்னும் அணி ‘சுழிகுளம்’ என்பதும் ‘கூடசதுக்கம்’ என்பதும் அணிகளாகும்.

48. **“மதுரம் கமழ் மாலைமாற்று அணிந்து சூழும்**
**சதுரங்க சேனை தயங்கச் - சதுராய்”**
**தெளிவுரை:**

தேன்மணம் கமழும் மாறுபட்ட வெவ்வேறு மாலைகளைச் சூடி. யானை, குதிரை, தேர். காலாள் என்னும் நால்வகைப் படைகள் சூழ்ந்து அசைய,

**விளக்கம்:** ‘மாலை மாற்று’ – ஓர் அணி, சதுரங்கம் - சதுரங்கபந்தம் என்னும் அணி.

49. **“முரசம் கறங்க முடிவேந்தர் சூழ**
**வரசங்கம் மீதிருந்து வாழ்ந்தே – அருள் வடிவாய்”**
**தெளிவுரை:**

திறமுடன் முரசம் ஒலிக்கவும் மூவேந்தர்கள் சூழ்ந்து வரவும் சங்கத்தில் மேன்மையாக இருந்து வாழ்ந்து.

**விளக்கம்:** ‘முரசம்’ என்பது ‘முரசபந்தம்’ என்னும் அணியைக் குறிக்கிறது.

50. **“ஓங்குபுகழ் மூவர் ஒருபாஒருப.ஃதும்**
**ஆங்கு அவை சொல் வாதவூராளி சொல்லும் - ஓங்கும் அவன்”**
**தெளிவுரை:**

அருள்வடிவமாக உயாந்த புகழினராகிய திருநாவுக்கரசர், சுந்தரர், திருஞானசம்பந்தர் பாடிய ஒருபா ஒருப.ஃது எனப்படும் பதிகங்களால் ஆகிய தேவாரமும், அவ்வாறே பாடல்கள் பாடியருளிய திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும்,

51. **“கூற்றாய் அரன் எழுதும் கோவையும் கோதில்தாய்**
**மாற்றா இரட்டைமணி மாலையும் - தேற்றம்உற”**
**தெளிவுரை:**

உயரிய மாணிக்கவாசகர் சொற்களாகச் சிவபெருமான் எழுதிய திருக்கோவையாரும், குற்றமற்ற அன்னையாகிய காரைக்கால் அம்மையார் சொற்களாகிய இரட்டைமணி மாலையும்,

52. **“பற்றாம் இலக்கண நூற்பாவும் நூற்பா அறிந்து**
**கற்றார் வழங்கு பஞ்சகாப்பியமும் - கொற்றவருக்கு”**
**தெளிவுரை:**

தெளிவடையப் பின்பற்றுதற்குரிய இலக்கண நூற்பாக்களும் நூற்பாக்களை அறிந்து, கற்ற புலவர்கள் வழங்கிய ஐம்பெருங் காப்பியங்களும்,

53. **“எண்ணிய வன்னனைகள் ஈரொன்பதும் அறியக்**
**கண்ணியம் மிக்க பெருங்காப்பியமும் - நண்ணியே”**

**தெளிவுரை:**

மன்னர்க்குரியவை என எண்ணப் பெற்ற வருணனைகள் பதினெட்டும் அறிந்தற்குரிய சீர்மை மிக்க கம்பராமாயணமும்,

54. **இன்புறு சேரன் அரங்கேற்ற மகிழ்ந்து அம்பலத்தான்**
**அன்புறு பொன்வண்ணத்து அந்தாதியும் - முன்பு அவர்சொல்"**

**தெளிவுரை:**

தில்லையைச் சேர்ந்தே இன்புற்ற சேரமான் பெருமாள் நாயனார் இயற்றி அரங்கேற்ற மகிழ்ந்து அம்பலத்தானாகிய நடராசப் பெருமான் அன்புற்ற பொன் வண்ணத் தந்தாதியும்,

55. **"மாத்தமிழாம் மும்மணி மாலையும் பட்டினத்தார்**
**கோத்தணிந்த மும்மணிக் கோவையும் - மூத்தோர்கள்"**

**தெளிவுரை:** முன்பே சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருவாரூர் மும்மணிக்கோவையும், பட்டினத்தார் கோத்துச் சிவபிரானுக்கு அணிவித்த திருவிடை மருதூர் மும்மணிக்கோவையும்,

56. **"பாடியருள் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும்**
**கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும் - ஆடகமா"**

**தெளிவுரை:** மூத்த சங்கப் புலவர்கள் பாடியருளிய பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், கெடுதி இல்லாத பதினெட்டு கீழ்க்கணக்கு நூல்களும்,

57. **"வெற்பு அனையார் மாதை விமலரிடத்தே இருவர்**
**கற்பனையால் சொன்ன கலம்பகமும் - முற்படையோடு"**

**தெளிவுரை:**

பொன்போன்ற பெரியமேருமலையை ஒத்துவனும் திருவாமாத்தூர் தூயவராகிய இறைவனிடத்தே இரட்டைப் புலவர்கள் பாடியருளிய திருவாமாத்தூர்க் கலம்பகமும்,

58. **"ஆடல் கலிங்கம் அழித்து ஆயிரம் ஆனைகொன்ற**
**பாடற்கு அரிய பரணியும் -கூடல்"**

**தெளிவுரை:**

முற்பட்டுச் செல்லும் படையுடன் போரிட்டு கலிங்கத்தை அழித்து ஆயிரம் யானைகளைக் கொன்ற வெற்றிச் சிறப்பைப் பாடுவதற்கு அரிய கலிங்கத்துப் பரணியும்,

59. **"நராதிபன் கூத்தன்எதிர் நண்ணி ஓர்கண்ணிக்கு**
**ஓராயிரம் பொன் ஈந்த உலாவும் - பராவும் அவன்"**

**தெளிவுரை:**

கூடல் என்னும் காவிரிப்பூம்பட்டினத்து மன்னனாகிய இராசராசசோழன் ஒட்டக்கூத்தருக்கு எதிரே நெருங்கி ஒரு கண்ணிக்கு ஓராயிரம் பொன்வீதம் அளிக்கப்பெற்ற (சிறப்புடைய) இராசராசசோழன் உலாவும்,

60. **"பிள்ளைத் தமிழும் முன்னாம் பேராத பல்குரவர்**
**வெள்ளத்தினும் மிகுத்தோர் மெய்காப்ப – உள்ளத்து"**

**தெளிவுரை:**

போற்றுதற்குரிய அவ்வொட்டக்கூத்தனது குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழும். முற்பட்டோராகும் நிலைபெயராத, வெள்ளம் என்னும் பேரெண்ணையும் விட மிகுந்த, நூல்களாகிய பல அரசர்கள் மெய்க்காப்பாளர்களாக விளங்க,

61. **“வீரியம் செய்து வினைஒழியவே ராச**
**காரியம் செய்யும் கவிதையே – பாரில்”**

**தெளிவுரை:**

மனத்தில் வீரம் விளைவித்துத் தீவினைகள் நீங்குதற்காகவே அரசுச் செயல்களைச் செய்யும் கவிதையே!.

62. **“அரியாசனம் உனக்கே ஆனால் உனக்குச்**
**சரியாரும் உண்டோ தமிழே! – விரிவுஆர்”**

**தெளிவுரை:**

உலகில் அரியாசனம் உனக்கே ஆகில். தமிழே! உனக்குச் சமமமானவர்களும் உள்ளனரோ?

63. **“திகழ்பா ஒருநான்கும் செய்யுள் வரம்பாகப்**
**புகழ் பாவினங்கள் மடைபோக்கா – நிகழவே”**

**தெளிவுரை:**

விரிவு நிறைந்த விளங்கும் செய்யுளுக்கு எல்லையாகவும், புகழுக்குரிய பிறபாவினங்கள் வாய்க்கால் களாகவும் நிகழ,

**விளக்கம்:** ‘புகழ் பாவினங்கள்’ என்னும் தொடர் தாழிசை. துறை, விருத்தம் என்னும் பிற பாவினங்களைக் குறிக்கிறது. ‘செய்யுள்’ என்பது வயலாகிறது.

64. **“நல்ஏரினால் செய்யுள் நால் கரணத்து ஏர்பூட்டிச்**
**சொல்லேர் உழவர் தொகுத்து ஈண்டி – நல்லநெறி”**

**தெளிவுரை:**

நல்ல அழகுடன் செய்யுளின் நான்கு கரணங்களாகிய ஏரைப்பூட்டிச் சொல்லேர் உழவர்கள் எனப்பெறும் புலவர் பெருமக்கள் கூடிவந்து,

**விளக்கம்:** நால்கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன.

65. **“நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்**
**மேலே பலன்பெறச் செய்விக்கும் நாள் - மேலோரில்”**

**தெளிவுரை:**

நான்கை விதைகளாக நன்கு விதைத்து நான்கு பொருள்களும் மேன்மையாகப் பயனடையுமாறு பியர்செய்யும் நாளில்,

**விளக்கம்:** ‘நாலே’ என்பது வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மரகதம் என்னும் கவிதை நெறிகளை உணர்த்துகிறது. ‘நாற்பொருள்’ என்னும் தொடர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களை உணர்த்துகிறது.

66. **“பாத்தனதாக் கொண்ட பிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்**
**கூத்தன் இவர் கல்லாது கோட்டி கொளும் - சீத்தையரைக்”**
**தெளிவுரை:**

புலவர்களாகிய மேன்மக்களுள் பாக்களைத் தங்களுடையனவாகக் கொண்ட பிள்ளைப் பாண்டியன், வில்லிபுத்தூரார், ஒட்டக்கூத்தர் ஆகிய இவர்களைப்பற்றிக் கல்லாமல் புலவர் கூட்டமெனவரும் கீழ்மக்களை,

67. **“குட்டிச் செவி அறுத்துக் கூட்டித் தலைகள் எல்லாம்**
**வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் –கட்டி”**
**தெளிவுரை:** தலைகளில் குட்டியும், செவிகளை அறுத்தும், தலைகளைச் சேர்த்து அவையனைத்தையும் வெட்டித் தமிழாகிய பயிரினிடையே வளர்ந்த களைகளைப் பறித்தற்கு நீ மேன்மையாகச் சேறு கொண்டு பாத்திகட்டி,

68. **“வளர்ந்தனை பால் முந்திரிகை வாழைக் கனியாய்க்**
**களிர்ந்த கரும்பாய் நாளிகேரத்து - இளங்கனியாய்த்”**
**தெளிவுரை:**

பாலாகவும் முந்திரிப்பழமாகவும், வாழைப் பழமாகவும், கிளர்ச்சி தரும் கரும்பாகவும், தென்னைமரத்து இளநீர்க்காயாகவும் வளர்ந்தனை.

69. **“தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்ளமுதின் மேலான**
**முத்திக் கனியே என் முத்தமிழே – புத்திக்குள்”**
**தெளிவுரை:**

தித்திக்கின்ற தெளிவான அமுதமாக, தெளிந்த அமுதின் மென்மையான வீடுபேறு அளிக்கும் கனியே! என் முத்தமிழே!

70. **“உண்ணப்படும் தேனே உன்னோடு உவந்து உரைக்கும்**
**விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்”**
**தெளிவுரை:**

அறிவால் உண்ணப்படும் தேனே! உனக்கு மகிழ்ச்சியுடன் சொல்லும் வேண்டுகோள் உண்டு; சொல்லக் கேட்பாயாக!

71. **“குறம் என்று பள்என்று கொள்வார் கொடுப்பாய்க்கு**
**உறவுஎன்று மூன்று இனத்தும் உண்டோ திறம்எல்லாம்”**
**தெளிவுரை:**

உலகில் குறம் என்றும் பள்ளு என்றும் உன்னிடமிருந்து (பெண்) கொள்வார்கள்; கொடுக்கின்ற உனக்கு உறவு எனத் தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்று இனங்களிலும் உண்டோ?

**விளக்கம்:** ‘குறம்’ என்பது குறவஞ்சியைக் குறிக்கிறது ‘பள்’ என்பது பள்ளுப்பாட்டு. குறம் என்னும் குறவஞ்சி குறச்சாதி, பள்ளுப்பாட்டு – பள்ளர்சாதி, ‘மூன்றினம்’ – தாழிசை, துறை, விருத்தம் என்பன.

72. **“வந்து என்றும் சிந்தாமணியா இருந்த உனைச்**
**சிந்து என்று சொல்லிய நாச்சிந்துமே – அந்தரம்மேல்”**
**தெளிவுரை:**

பாத்திறங்கள் எல்லாம் பெற்று வந்து என்றும் சிந்தாத மணியாகிய சிந்தாமணியாய் இருக்கும் உன்னைச் சிந்து என்று சொல்லும் நாக்குச் சிந்தும்.

73. **“முற்றும் உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ**
**குற்றம் இலாப் பத்துக்குணம் பெற்றாய் - மற்றொருவர்”**
**தெளிவுரை:**

மேலுலகம் உணர்ந்ததுபோல் அனைத்தும் உணர்ந்த தேவர்களும் மூன்று குணங்கள் மட்டுமே பெற்றனர்; நீயே குற்றம் இல்லாப் பத்துக் குணங்களைப் பெற்றனை.

**விளக்கம்:** ‘பத்துக்குணம்’ என்னும் தொடர், செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை. காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணங்களைத் தமிழுக்குரியனவாகக் குறிப்பிடுகிறது.

74. **“ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ**
**நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் - நாக்குலவும்”**
**தெளிவுரை:**

மேலும், ஒருவர் உருவாக்கிய நிறங்கள் ஐந்திற்குமேல் உண்டோ? நீயோ புலவர்கள் நோக்கிய (உருவாக்கிய) நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளனை.

**விளக்கம்:** வண்ணங்கள் நூறு உடையாய்’ என்னும் தொடர், குறில், அகவல், தூங்கிசைவண்ணம்முதலிய நூறு வண்ணங்களைக் கொண்டுள்ள தமிழைக் குறிக்கிறது.

இங்கு ‘வண்ணம்’ என்பது பாடல்களின் இசைவண்ணம் குறிப்பிடப் பெறுகிறது.

75. **“ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள் உணவு**
**ஆன நவரசம் உண்டாயினாய் - ஏனோர்க்கு”**
**தெளிவுரை:**

நாவினால் அளவளாவும் ஊனோடு பொருந்திய சுவைகள் ஆறு அல்லாமல் வேறு உண்டோ? (நீயோ) செவிகட்குணவாகிய ஒன்பது சுவைகளைக் கொண்டுள்ளனை,

**விளக்கம்:** ‘ஊனரசம் ஆறு’ – நாவாகிய ஊனால் உணரக்கூடிய சுவை ஆறு. அவை: கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காரம், இனிப்பு.

நவரசம்: 32 ஆம் கண்ணியில் சொல்லப்பட்டுள்ளன.

76. **“அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ**
**ஒழியா வனப்பு எட்டு உடையாய் - மொழிவேந்தர்”**
**தெளிவுரை:**

மற்றவர்களுக்கு அழியாத அழகு ஒன்று அல்லாமல் மிகுதியாக உண்டோ? நீயோ நீங்காத வனப்புகள் எட்டனைக் கொண்டுள்ளனை.

**விளக்கம்:** வனப்பு எட்டு; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன் இழைபு.

77. **“வாங்கு பொருள்கோள் வகை மூன்றே பெற்றார்நீ**
**ஓங்கு பொருள்கோள் வகை எட்டு உள்ளாயே – பாங்குபெற”**
**தெளிவுரை:**

புகழப் பெறும் அரசர்கள் வாங்கிக் கொள்ளும் பொருள் வகை மூன்றே பெற்றனர். நீ உயர்ந்த பொருள் கோள் வகைகள் எட்டனைப் பெற்றுள்ளன.

**விளக்கம்:** ‘வேந்தர் வாங்கு பொருள்கள் வகை மூன்றே’ என்ற தொடர் வாயிலாக மன்னர்களுக்கு மூன்று வகைப் பொருள்கள் உண்டு என அறியலாம். அவை: பரம்பரையாக வந்துற்ற பொருள், வரிப்பொருள், பகைவரிடமிருந்து பெற்ற பொருள் என்பன.

78. **“ஓர்முப்பால் அன்றிஐம்பால் உள்ளாய் உனைப்போலச்**
**சீர்முப்பதும் படைத்த செல்வர் ஆர் – சேரமான்”**
**தெளிவுரை:**

நீ அழகைப் பெற முப்பாலாகிய ஒரு திருக்குறள் அல்லாமல், ஐந்து பால்களைக் கொண்டுள்ளாய்; உன்னைப் போல் சீர்கள் முப்பதும் பெற்றிருக்கும் செல்வர் யார் உள்ளார்?

**விளக்கம்:** ‘முப்பால்’ என்பது அறம், பொருள், இன்பம் எனவும் அவற்றைக் கொண்டு திருக்குறளையும் குறிக்கும்.

ஐம்பால்: ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன. சீர்முப்பது: ஓரசைச்சீர் 2, ஈரசைச்சீர் 4, மூவகைச்சீர் 8, நான்கசைச்சீர் 16.

79. **“தன்னடிக் கண்டு தளை விடுத்தாய் ஏழ்தளை உன்**
**பொன்னடிக்கு உண்டு என்பது என்ன புத்தியோ – என் அரசே”**
**தெளிவுரை:**

சேரமான்கணைக்கால் இரும்பொறையின் கால்களில் தளையைக் கண்ட அதனை நீ விடுவித்தனை; உன் அழகிய அடிகளுக்கு ஏழ்தளைகள் உண்டு எனச் சொல்வது என்ன அறிவுடைமையோ?

**விளக்கம்:** ‘ஏழ்தளை’ – நேரொன்றா சிரியத்தளை, நிரையொன்றா சிரியத்தளை வெண்சீர்வெண்தளை, இயற்சீர் வெண்தளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை.

80. **“திண் பாவலர்க்கு அறிவாம் செந்தமிழாய் நின்றஉன்னை**
**வெண்பா என்று ஓதுவது மெய்தானோ – பண்புஏர்”**
**தெளிவுரை:**

என் மன்னவனே; பாடல்திறன்மிக்க புலவர்களுக்கு அறிவாகும் செந்தமிழாக நிலைத்துநின்ற உன்னை வெண்பா எனச் சொல்வது உண்மையோ?

**விளக்கம்:** ‘வெண்பா’ என்பதில் ‘வெண்’ என்பது ‘வெண்மை’ என்றும் அறிவின்மையைப் புலப்படுத்தும் சிலேடையாக அமைந்தது.

81. **“ஒளிப்பாவே சங்கத்து உலகம் மூன்று இருந்தாய்**
**கலிப்பா என்று ஓதல் கணக்கோ –உலப்புஇல்”**
**தெளிவுரை:**

பண்பும் அழகும் கொண்டு அறிவுள்ள பாவே! மூன்று யுகங்களிலும் சங்கத்தில் இருந்தனை, கலியுகப்பா எனல் மட்டும் சரியான கணக்காகுமோ?

**விளக்கம்:** ‘உலகம் மூன்று’ – யுகம் மூன்று; - கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் என்பன; இவை தற்போது நடக்கும் கலியுகத்திற்கு முற்பட்டவை.
‘கலிப்பா’ – ஒருபாவை, இங்கு சிலேடையாகக் ‘கலியுகத்திற்கு மட்டும் உரியபா’ என்னும் பொருளில் வந்தது.

82. **“இருட்பா மருள் மாற்றி ஈடேற்றும் உன்னை**
**மருட்பா என்று ஓதல் வழக்கோ – தெருள்பாப்”**
**தெளிவுரை:**

அழிவு இல்லாத இருள் பரவிய மயக்கத்தை மாற்றி வாழ்வளிக்கும் உன்னை ‘மருட்பா’ எனச் சொல்லுதல் வழக்கமாகுமோ?

83. **“பொருத்தம் ஒருபத்துப் பொருந்தும் உனைத்தானே**
**விருத்தம் என்று சொல்லல் விதியோ - இருள்குவையை”**
**தெளிவுரை:**

பத்துப் பொருத்தம் பொருந்தியிருக்கும் உன்னைத் தான் விருத்தம் என்று சொல்லுதல் விதியோ?

**விளக்கம்:** ‘பொருத்தம் ஒரு பத்து’ – மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் எனபன.

84. **“முந்தி ஒளியால் விலக்கும் முச்சுடர் என்பார் உனைப்போல்**
**வந்து என் மனத்து இருளை மாற்றுமோ – சிந்தா”**
**தெளிவுரை:**

இருட்குவியலை முன்வந்து முச்சுடர் எனப்படும் ஆதவன், நிலவு, நெருப்பு ஆகியவை நீக்கும் என்பார்கள்; அவை என் மன இருளை உன்னைப்போல் வந்து மாற்றுமோ?

85. **“மணி கொடையின் மிக்கது என்பார் வண்கொடையும் உன்பேர்**
**அணியும் பெருமையினால் அன்றோ – தணியும்”**
**தெளிவுரை:**

(தேவலோகத்து) சிந்தாமணி கொடைத் தன்மையில் மேலானது என்பார்கள்; அதன் வள்ளல் தன்மை கொண்ட கொடையும் உன்நூலாகிய சீவகசிந்தாமணியின் பெயர் அணிந்ததனால் அன்றோ அமைந்தது?

86. **“துலங்கு ஆரம் கண்டசரம் தோள்வளை மற்றுஎல்லாம்**
**அலங்காரமே உனைப்போல் ஆமோ – புலம்காணும்”**
**தெளிவுரை:**

தாழ்ந்து ஒளி செய்யும் ஆரம், கண்டசரம், தோள்வளை, மற்றுமுள்ள அணிகள் அனைத்தும் உன் அலங்காரம் போல் ஆகுமோ?

87. **“உன்னைப் பொருள்என்று உரைக்கும் தொறும் வளர்வாய்**
**பொன்னைப் பொருள் என்னப் போதுமோ – கன்னமிட்டு”**

**தெளிவுரை:**

அறிவால் காணும் உன்னைப்பொருள் சொல்லி உரைக்கும் போதெல்லாம் நீ வளர்கின்றனை. (குறையும் இயல்புடைய) பொன்னைப் பொருள் எனக்கருதுதல் நேர்மையோ?

**விளக்கம்:** ‘உரைக்கும்’ என்பது ‘சொல்லும்’ எனவும் ‘தேய்க்கும்’ எனவும் சிலேடையாக வந்துள்ளது.

பொன்னை உரைத்தால் தேயும் (குறையும்) தமிழை உரைத்தால் வளரும்.

கன்னமிட்டு – ‘காதில்வாங்கி’ எனவும் ‘திருடி’ எனவும் பொருள் படுகிறது; இதுவும் சிலேடையேயாகும்.

88. **“மன்னர் கவர்ந்தும் வளர்பொருளே கைப்பொருள்கள்**
**என்ன பொருள் உனைப்போல் எய்தாவே – நல்நெறியின்”**

**தெளிவுரை:**

கன்னமிட்டு (காதில் கேட்டு) அரசர்கள் கவர்ந்தாலும் வளர்கின்ற பொருளே! மக்களின் கைப்பொருள்கள் என்ன பொருள்கள்? உன்னைப்போல் அவை வளர்ச்சி அடையமாட்டா.

**விளக்கம்:** காதில் கேட்டு மன்னர்கள் செவிச் செல்வமாக ஏற்பதையே ‘கவர்ந்தும்’ என்னும் சொல் புலப்படுத்துகிறது. மக்களின் கைப்பொருள்கள் செலவிட அழியும்; கள்வரால் கவரப்பெறும்.

89. **“மண்ணில் புகழ்உருவாய் வாழ்வதற்கும் வாழுநர்**
**விண்ணில் போய்த் தேவுருவாய் மேவுதற்கும் - எண்ணி உனைக்**

**தெளிவுரை:**

நல்லநெறியினால் உலகில் புகழ்வடிவமாக வாழ்வதற்கும், வாழும் மக்கள் தேவருலகில் சென்று தேவர் வடிவாக அடைவதற்கும்,

90. **“கொண்டு புகழ் கொண்டவர்க்கே கூடும் உனைக்கூடாத**
**தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால் - தண்தமிழே”**

**தெளிவுரை:**

எண்ணிப்பார்த்து உன்னைக் கொண்டு புகழடைந்த புலவர்களுக்கே (விண்ணுலகம்) கிடைக்கும்; உன்னையடையாத தொண்டருக்குத் தென்திசையாகிய எமனுலகே தோன்றும்.

91. **“ஈங்குஉனது சங்கத்தால் ஈசர் உயர்ந்தாரோ**
**ஓங்கும் அவரால் நீ உயர்ந்தாயோ – பூங்கமல”**

**தெளிவுரை:**

தண்ணிய தமிழே! உன்னுடைய சங்கத்தால் சிவபிரான் உயர்ந்தாரோ? உயர்ந்த அவரால் நீ உயர்ந்தாயோ?

92. **“வீடுஆளும் வாணி அங்கை மேலே இருந்தாயோ**
**ஏடா உன்மேல் இருந்தாளோ –ஆடு அரவத்**

**தெளிவுரை:**

அழகிய தாமரை மலராகிய வீட்டை ஆளும் கலைகளின் உள்ளங்கை மீது ஏடாக இருந்தாயோ? ஏடாகிய உன்மீது கலைமகள் இருந்தாளோ?

**93. தாழ் பாயலாளரை நீதானே தொடர்ந்தாயோ**
**சூழ் பாயோடு உன்னைத் தொடர்ந்தரோ – வாழ்வே என்று"**
**தெளிவுரை:**

ஆடுகின்ற பாம்பைப் பாயாகக் கொண்ட திருமாலை நீ தானாகப் பின் தொடர்ந்து சென்றனையோ? சூழ்ந்த பாம்பாகிய பாயோடு திருமால் உன்னைத் தொடர்ந்து வந்தாரோ?

**94. "ஓதி முனிகேட்க உனை முருகர் சொன்னாரோ**
**சோதி அவரை நீ சொற்றனையோ – பேதியா"**
**தெளிவுரை:**

தமிழாகிய உன்னை ஓதுவதற்கு அகத்திய முனிவர் கேட்க, உன்னை முருகப்பிரான் அவருக்குக் கற்பித்தாரோ, (சிவபிரானின் தீயாகிய ஒளிப்பிழம்பிலிருந்து தோன்றிய) சோதியாகிய அவரை நீ கூறினாயோ?

**95. "நேசர் உனக்கே பொருளாய் நின்றாரோ – நீள்மதுரை**
**வாசருக்கு நீ பொருளாய் வந்தாயோ – பாசமுறும்"**
**தெளிவுரை:**

(என்மீது அன்பு) மாறாத காதலராகிய சொக்கேசர் உனக்குமுன்னே பொருளாக நின்றாரோ? நீண்ட மதுரையில் வாழ்பவராகிய சொக்கேசருக்கு நீ பொருளாக வந்தாயோ? (நீ இறையனார் அகப்பொருளுக்குப் பொருளாக வந்தாயோ)

**96. "என்செய்தி நீ கண்டு இரங்குவது நீதி அல்லால்**
**உன்செய்தி நானோ உரை செய்வேன் - இன்சொல்லாய்"**
**தெளிவுரை:**

ஈசனிடம் அன்புறும் என்காதலாகிய செயலை நீ கண்டு இரக்கங்கொள்வது நீதியாகும்; அன்றேல் உன் செயலை நானோ உரைப்பேன்?

**97. "கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக என்ற – சொற்குள்ளே"**
**தெளிவுரை:**

இன்சொல் கொண்ட தமிழே! கற்க வேண்டிய நூல்களைக் குற்றம் அறுமாறு கற்க வேண்டும்; கற்றபிறகு கற்றதற்குத் தக்கவாறு அந்நெறியில் நிற்க வேண்டும் என்னும் திருக்குறளின் சொற்களுக்குள்ளே.

**98. "எல்லாருக்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற**
**வல்லாய் உனக்கு உரைக்க வல்லேனோ – செல்லியஉன்"**
**தெளிவுரை:**

எல்லாருக்கும் அறிவுரை சொல்லிக் கரையேற்ற வல்லமை படைத்துள்ளாய் நீர் உனக்கு அறிவுறை கூற வல்லவளோ நான்?

**99. "ஈரடிக்குள்ளே உலகமெல்லாம் அடங்கும் எனின்**
**நேரடிக்கு வேறே நிலன் உண்டோ – ஓரடிக்குஓர்"**

**தெளிவுரை:**

சொல்லிய உன்னுடைய இரண்டு அடிகளைக் கொண்ட திருக்குறளுக்குள்ளே உலகங்கள் அனைத்தும் அடங்கும் என்றால். நேரடியாகிய நாலடியால் சொல்ல வேறு நிலம் உண்டோ?

**விளக்கம்:** "நேரடிக்கு வேறே நிலன் உண்டோ" என்னும் தொடர் வாமனாவதாரக்கதையை உணர்த்துகிறது. இது சிலேடையாக வந்துள்ளது.

**100. "ஆயிரம் பொன் இறைக்கும் ஐயரை வீதியிலே போய் இரந்து தூது சொல்லப் போக்கினாய் - ஆயிருந்தும்"**

**தெளிவுரை:**

(சுந்தரர்பாடிய) ஒவ்வொரு அடிக்கும் ஆயிரம் பொன்வீதம் பரிசாக இறைக்கும் தலைவராகிய சிவபெருமானை வீதிக்குச் சென்று இரந்து (வேண்டி) (பரவைநாச்சியாரிடம்) தூதுரைக்குமாறு அனுப்பி வைத்தனை,

**101. "மாண்பாய் ஓர் தூது சொல்லி வா என்பேன் என் வருத்தம் காண்பாய்**
**என் பெண்மதி நீ காணாதே – ஆண்பனை நல்"**

**தெளிவுரை:**

அப்படியிருந்தும் பெருமையுடன் ஒரு தூதுரை சொல்லிவிட்டு வருக எனச் சொல்கிறேன்; என் வருத்தத்தைக் காண்க! என் பெண் அறிவைக் காணாதே!

**102. "பெண்பனை ஆக்கினையால் பெண்களிலே காரைக்கால்**
**வண்பதியார் ஔவைஎன வந்து உதித்தாய் - நண்பு ஆர்"**

**தெளிவுரை:**

ஆண்பனையைப் பெண்பனை ஆக்கினாய்; பெண்களுக்குள்ளே வளமான ஊராகிய காரைக்காலில் காரைக்கால் அம்மையாராகவும் ஔவையார் எனவும் வந்து தோன்றினாய்,

**விளக்கம்:** 'ஆக்கினையால்' என்னும் தொடரில் உள்ள 'ஆல்' அசை, ஆண்பனையைப் பெண்பனையாக்கிய திருஞானசம்பந்தரின் அற்புதச் செயல் தமிழில் மேல் ஏற்றிச் சொல்லப்பட்டுள்ளது.

**103. "திலதவதியா ருடனே சென்மித்தாய் மாடக்**
**குலதவ தியானத்தார் கூடல் - பல தவம் சேர்"**

**தெளிவுரை:**

நட்புநிறைந்த திலகதியாருடன் திருநாவுக்கரசராக (அவர் தம்பியாக) நீ பிறந்தனை; மாளிகைகளும் அரண்மனையும், தவமும் தியானமும் உடையோரும் கூடிய மதுரையில்,

**விளக்கம்:** 'திலகவதி' என்பது எதுகையை நோக்கித் 'திலதவதி' என ஆனது.

**104. "மேனியார் கண்டிகையும் வெண்ணீறும் கண்டு உருகும்**
**மானியார் தேசிகனா வந்தது உதித்தாய் – ஞானியார்"**

**தெளிவுரை:**

பலதவங்கள் சேர்ந்த சிவனடியார்களின் உருத்திராட்சமும் வெண்மையான திருநீறும் கண்டு உருகும் மானம் மிகுந்த மங்கையர்க்கரசியாரின் குருவாக வந்து தோன்றினாய்.

105. **“துங்க மகவாகத் தோன்றி வனப்பகைக்கும்**
**சிங்கடிக்கும் நாதையாய்ச் சீர்செய்தாய் - இங்குநீ”**

**தெளிவுரை:**

இசைஞானியாரின் உயர்ந்த மகனான சுந்தரமூர்த்தி நாயனாராகத் தோன்றி, கோட்புலி நாயானார் மகளிர் வனப்பகைக்கும் சிங்கடிக்கும் வளர்க்கும் தந்தையாக விளங்கிச் சீர் செய்தனை,

**விளக்கம்:** ‘சீர்’ என்பது யாப்புறுப்பாகிய சீராகவும். ‘சிறப்பு’ என்னும் பொருளாகவும் அமைந்துள்ளது.

106. **“பெண்கள் எல்லாம் வாழப் பிறந்தமையால் என்மனத்தில்**
**புண்கள் எல்லாம் ஆறப் புரிகண்டாய் - ஒண் கமலத்து”**

**தெளிவுரை:**

இங்குநீ பெண்கள் அனைவரும் வாழப்பிறந்தமையால் என் மனத்தில் உள்ள புண்கள் அனைத்தும்ஆற அருள் புரியக் கடவை.

107. **“அன்னம்தனை விடுப்பேன் அன்னந்தான் அங்குஅவரை**
**இன்னம்தான் கண்டு அறியாது என்பரே – மன்எந்தாய்”**

**தெளிவுரை:**

ஒளிபொருந்திய தாமரை மலரில் அமரும் அன்னத்தைத் தூதாக விட எண்ணினேன். ஆயின், அந்த அன்னம் (பிரமன்) இன்னமும் சிபெருமானுடைய தலைமுடியைக் கண்டறியவில்லை என்பார்கள்,

108. **“அப்பால் ஓர் வண்டை அனுப்பின் அவர்காமம்**
**செப்பாதே என்றால் திகைக்குமே – தப்பாது”**

**தெளிவுரை:**

நிலைபெற்ற என் தந்தையே அதன் பிறகு ஒருவண்டைத் தூதாக அனுப்ப எண்ணின், (“கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி காமம் செப்பாது கண்டது மொழமோ” என்னும் இறையனாரின் குறுந்தொகைப் பாடலில் உன்ளது போல) தலைவர் “காமம் செப்பாதே!” என்று கூறினால் திகைக்குமே!

109. **“மானைப் போய் தூது சொல்லி வா என்பென் வல்லியப்பூத்**
**தானைப் பரமர்பால் சாராதே – ஏனைப்பூந்”**

**தெளிவுரை:**

தவறாமல் மானைத் தூதுபோய்ச் சொல்லிவிட்டு வா என்பேன்; ஆயின் அது, அழகிய புலித்தோலை ஆடையாக அணிந்த பரமராகிய சிவபெருமானிடம் (அச்சங் கொண்டு) சென்றடையாதே!

**விளக்கம்:** ‘தானை’ என்பது (தான்+ஐ) ‘தான்’ என்னும் புடவையைக் குறிக்கும்; சிவபெருமானுடைய உடலின் ஒரு பகுதி உமாதேவிக்குரியது எனவும் கொள்ளலாம்,

110. **“கோகிலத்தை நான் விடுப்பேன் கோகிலமும் காக்கையினம்**
**ஆகி வலியானுக்கு அஞ்சுமே – ஆகையினால்”**

**தெளிவுரை:**

மற்ற அழகிய குயிலைத்தூதாக விடுப்பேன்; ஆயின், குயிலும் காக்கையினமாகிக்கஞ்சனம் என்னும் கரிக்குருவிக்கு அஞ்சுமே!

111. **“இந்த மனத்தைத் தூதாய் ஏகுஎன்பேன் இம்மனமும்**
**அந்த மனோதீதர்பால் அண்டாதே – எந்தவீதம”**

**தெளிவுரை:**

ஆகவே, இந்த என்னுடைய மனத்தைத் தூதாகச் செல்க என்பேன்; ஆயின், இந்த மனமும் அந்த மனத்திற்கு எட்டாதவராகிய சிவபெருமானை நெருங்காதே!

112. **“என்றுஎன்று இரங்கினேன் என் கவலை எல்லாம்பொன்**
**குன்று அனையாய் உன்னுடனே கூறுகேன் - சென்றாலும்”**

**தெளிவுரை:**

என் காதலை எவ்விதம் கூறுவது என்று வருந்தினேன்; என் கவலைகள் அனைத்தையும் பொன்மலையாகிய மேருமலையை ஒத்த தமிழே! உன்னுடனே சொல்கின்றேன்.

113. **“பண்ணிய பத்தொன்பதின் ஆயிரத்து இருநூற்று**
**எண்ணிய தொண்ணூற்று ஒன்றெனும தொடையாய் நண்நீ”**

**தெளிவுரை:**

இலக்கணப்புலவர்கள் உருவாக்கிய 19291 என்னும் நண்நீ தொடைகளைக் கொண்ட தமிழே!.

114. **“ஒருதொடை வாங்கி உதவாயோ ஓர்சே**
**விருது உடயார்க்கு நீவேறோ – தருமிக்கே”**

**தெளிவுரை:**

சிவபெருமானை நெருங்கி ஒருதொடை (ஒருமாலை) வாங்கி வந்து உதவமாட்டாயோ? ஓர் எருதுக் கொடி உடைய ஈசருக்கு வேற்றாளோ?

115. **“ஓர் வாழ்க்கை வேண்டி உயர்கிழி கொள்வான் கொங்கு**
**தேர் வாழ்க்கை என்று எடுத்த செய்தியும் - கீரன்”**

**தெளிவுரை:**

தருமிக்கு வாழ்க்கை தரவிரும்பி உயரிய பொற்கிழி (பாண்டிய மன்னனால்) அவன் பெற்றுக் கொள்வதற்காக, “கொங்குதேர் வாழ்க்கை” என்று தொடங்கிய செய்யுளை, இயற்றிய செய்தியும்.

116. **“இசையா வகையின் இயம்பினான் என்றே**
**வசையாடித் தர்க்கித்த வாக்கும் - இசையான”**

**தெளிவுரை:**

நக்கீரன், “பொருள் பொருத்தம் பொருந்தாத வகையில் செய்யுளைக் கூறினான்” என்றே வசை கூறி வாதிட்ட உன்னுடைய கூற்றும்,

117. **“பாட்டுக்கு இரங்கி ஒருபாணனுக்குச் சேரலன்மேல்**
**சீட்டுக்கவி விடுத்த சீராட்டும் - பாட்டியலில்”**
**தெளிவுரை:**

இசைப்பாட்டுக்கு மனமிரங்கி பாணபத்திரனுக்கு உதவும்படி அறிவுறுத்திச் சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சீட்டுக்கவி அனுப்பிய சிறப்பும்,

**விளக்கம்:** ‘சீட்டுக்கவி’ என்பது திருமுகப்பாசுரம் (“மதிமலி புரிசை” என்னும் பாசுரம்)

118. **“நாத்திரமா மேவுபொருள் நன்றா அறுபதெனும்**
**சூத்திரமாப் பாடியருள் தோற்றமும் - மாத்திரமோ”**
**தெளிவுரை:**

இசைப்பாட்டு நாவாற்றலாக அமைகின்ற அகப்பொருள் நன்றாக அறுபது என்னும் சூத்திரங்களால் பாடப்பெற்ற இறையனார் அகப்பொருள் அருளிய நூலின் உருவாக்கமும்,

119. **“உன்னொடு அவர்விளையாட்டு ஒன்றோ வடமதுரைக்கு**
**அந்நேரம் உன்பிறகே யார் வந்தார் – மன்னவன் மேல்”**
**தெளிவுரை:**

இம்மாத்திரந்தானா? தமிழாகிய உன்னோடு அவர் விளையாட்டு ஒன்று மட்டுமா? அப்போது வடமதுரைக்கு உனக்குப் பின்னால் (இடைக் காடருக்குப் பின்னால் வந்தவர் யார்? (பின்னால் வந்தவர் சொக்கநாதரன்றோ?)

120. **“காரியார் நாரியார் கண்ட கவியைப் பகிர**
**வாரிஇலாக் கானகத்தில் வந்தவர்ஆர் – நாரினொடும்”**

**விளக்கம்:** “வந்தவர் ஆர்” என்னும் தொடர் “இடையனாக வந்தவர் யார்” என்னும் பொருளில், வந்தவர் ஈசர் எனத் தெளிவுபடுத்துகிறது.

121. **“போற்றிஉம் பத்திரற்காப் போந்து கிழஉருவில்**
**தோற்றி விறகு சுமந்தவர் ஆர் – தேற்றி அவற்கு”**
**தெளிவுரை:**

அன்புடன் போற்றித் தன்னையடைந்த பாணபத்திரருக்காகக் கிழவர் வடிவத்தில் தோன்றி விறகு சுமந்தவர் யார்?

122. **“ஈயரிய பொற்பலகை இட்டவர்ஆர் மற்று அவர்தன்**
**நேய மனைவிக்கு எதிரா நேர்ந்தவளைப் - போய் அவையில்”**
**தெளிவுரை:**

பாணபத்திரரைத் தேற்றி அவருக்கு எவராலும் கொடுப்பதற்கு அரிய பொற்பலகையை அவர் அமருதற்கு வைத்தவர் யார்? மற்றும், அவருடைய அன்பு மனைவிக்கு எதிராக வந்தவளை (விறலியை),

123. **“தள்ளி இசை தாபிக்கத் தக்கவர்ஆர் மதுரைக்கு**
**உள்ளிருந்த சொக்கர் உனக்குள் அன்றோ – எள்ளி”**

**தெளிவுரை:**

சென்று விலக்கி அவைக்களத்தில், இசையால் வென்று நிலைநாட்டத் தக்கவர் யார்? (இவ்வளவும் செய்தவர்) மதுரைக்குள் இருக்கும் சொக்கர் உனக்குள்ளும் உள்ளார் அன்றோ?

124. **"வடமொழியில் வேத வசனமே ஈசர்**
**திடமொழியாம் என்பார்சிலரே – அடரும்"**

**தெளிவுரை:**

தமிழ்மொழியை இகழ்ந்து, வடமொழியில் உள்ள வேத உரைகளே சிவபெருமானுடைய உறுதியான மொழிகள் எனக் கூறுவோம் சிலரே! (உணர்ந்த பலர் அவ்வாறு கூறமாட்டார்கள்; எனவே, தமிழே ஈசருக்கு உறுதியானமொழி)

125. **"பரசமய கோளரியாய்ப் பாண்டி நாடுளங்கும்**
**அரசமயம் நீ நிறுத்தும் அந்நாள் - விரசுநீ"**

**தெளிவுரை:**

அழிக்கவந்த மற்றச் சமயங்களைச் சிங்கமாக வந்து (ஞானசம்பந்தராக வந்து) பாண்டிய நாடு முழுதும், சிவனுக்குரிய சைவ சமயத்தை நீ நிலைபெறச் செய்யும் அந்நாள்,

126. **"ஆதிக்கண் வையையில் வேதாகமத்தைத் தாபித்தாய்**
**சோதிக்கின் ஏடகமே சொல்லாதோ – வேதத்தேவு"**

**தெளிவுரை:**

நீ விரைந்து முதற்கண் வையையில் தமிழ் மறைகளையும் ஆகமங்களையும் இருத்தினாய்; ஆராயின் வையைக் கரையில் ஒதுங்கிநின்ற திருவேடகம் என்னும் இடமே சொல்லாதோ?

127. **"ஆதவன் அங்கு அண்டாது அடைத்த கதவம் திறந்தாய்**
**வேதவனம் கண்டால் விளம்பாதோ – வேதம்"**

**தெளிவுரை:**

வேதங்களுக்குரிய தெய்வமாகிய கதிரவன் ஒளிக்கதிர்கள் கூட அங்கு நுழைய வழியில்லாதபடி அடைத்த கதவைத் திறந்தனை; திருமறைக்காட்டைக் கண்டால் (அச்செய்தியைச்) சொல்லாதோ?

128. **"அமிழ்தினும் மிக்கெனும் முனிக்கு அன்பர் உனைச் சொன்னார்**
**தமிழ்முனி என்னும் பேர் தாராதோ – தமிழால்"**

**தெளிவுரை:**

வடமொழி வேதம் அமிழ்தினும் மேலானது என்ற அகத்திய முனிவருக்கு அன்பராகிய சொக்கநாதர் உன்னைக் (தமிழை) கற்று அறியச் சொன்னார். அகத்தியருக்குரிய, 'தமிழ்முனி' என்னும் பெயரே சான்று அளிக்காதோ?

129. **"அறம்பொருள் இன்பம்வீடு ஆரணர் சொன்னார்அத்**
**திறம் பரமர் வாக்கே செப்பாதோ – மறந்திடல்இல்"**

**தெளிவுரை:**

ஆரணராகிய பிரமன் திருவள்ளுவராக அவதரித்து அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை முப்பால்களாகத் திருக்குறளில் சொன்னார். அத்திறமையைப் பரமராகிய இறையனார் வாக்கே (திருவள்ளுவ மாலையில் அமைந்துள்ள இறையனார் பாடலே) சொல்லாதோ?

130. **"கற்பு அலகை ஓதுமறை காணார் கீழ்நிற்கவும்நீ**
**பொன்பலகை மேலிருந்தாய் போதாதோ – தற்பரரோடு"**
**தெளிவுரை:**

மறந்து விடுதல் இல்லாத கல்வியின் விரிவை உரைக்கும் வேதங்களாலும் காணமுடியாதவராகிய சிவ பெருமான் கீழே நிற்கவும், நீ தமிழ்ப் புலவராக அழகிய சங்கப்பலகையின் மேல் வீற்றிருந்தாய்; உன் சிறப்புக்கு இது ஒன்றே போதாதோ?

131. **"எண் இறந்த வாசி அழைத்திட்டாய் சதுர்வேதப்**
**பண்நிறைந்த வாசி பகராதோ – அண்ணலார்"**
**தெளிவுரை:**

ஈசனுடன் எண்கள் கடந்த (அளவிடற்கரிய நரிகளைக் குதிரைகளாக்கி மாணிக்கவாசகர் பொருட்டு அழைத்தாய்; நான்கு மறைகளாகிய பண்நிறைந்த குதிரைகள் சான்று கூறாவோ?

132. **"தென்பால் உகந்தாடும் செய்தி எல்லாம் உன்னிடத்தில்**
**அன்பால் என்று அப்பாலும் ஆரறியார் - உன்பேர்"**
**தெளிவுரை:**

தலைவராகிய சிவபெருமான் தென்திசையில் மகிழ்ந்து கூத்தாடுகின்ற செயல் அனைத்தும் உன்னிடம் கொண்ட அன்பால்தான் என்று (தமிழ்நாட்டுக்கு) அப்பாலும் அறியாதார் யார்?

133. **"பழிஆர் திசைச்சொல்லார் பன்னார் திருவாய்**
**மொழியார் குழறி மொழிவார் – அழியா"**
**தெளிவுரை:**

உன் பெயராகிய தமிழைப் பழிநிறைந்த பிற திசைகளில் வாழும் பிறமொழியினர் (ழகரத்தைத் தெளிவாகச் சொல்ல மாட்டாததால்) சரியாகச் சொல்லமாட்டார்கள். திருவாய்மொழி பாடுகின்ற வைணவர்கள் (பிறமொழிச் சொற்களைக் கலந்து) குழறிச் சொல்வார்கள்.

134. **"உருவால் அவாய் இருக்கும் ஓதரிய முத்தித்**
**திருவலாலவாய் இருக்கும் செல்வர் – ஒருமால்"**
**தெளிவுரை:**

அழியாவடிவினை விரும்பி இருக்குவேதமும் ஓதுதற்கு அரிய வீடுபேற்றினை அளிக்கும் மதுரையில் இருக்கும் செல்வராகிய சொக்கநாதர்,

135. **“வடமதுரை ஏறுமுன்னே வந்த வடிவு என்னத்**
**தடமதுரை மீன்உயர்த்த தாணு – படர்தீர்க்கும்”**
**தெளிவுரை:**

இணையற்ற திருமால் வடமதுரையை அடைவதற்கு மன்னே எடுத்துவந்த உருவம் (மச்சாவதாரம்) என்று புகலும்படி மதுரைமாநகரில் மீன்கொடியை உயர்த்தி அரசாண்ட சுந்தரபாண்டியனாகிய சிவபிரான்.

136. **“சத்திபுரத்து ஓர்பால் தழைத்து மகழ்ந்தோர் சீவன்**
**முத்திபுரத்து ஓர்பால் முளைத்து எழுந்தோர் – அத்திசைபோல்”**
**தெளிவுரை:**

துன்பங்களைத் தீர்க்கும் சக்தியின் உடம்பில் ஒரு பகுதியில் தழைத்து மகிழ்ந்து விளங்கியவராகிய சிவபெருமான், உயிர்களுக்கு வீடு பேறு அளிக்கும் சீவன் முக்திபுரம் எனப்படும் மதுரையில் தானாக முளைத்துத் தோன்றியவர்,

137. **“அங்குலர் இருநான்கு அயிராவதம் சுமக்கும்**
**பூங்கோயிற்குள் உறைந்த புண்ணியனார் – பாங்காம்”**
**தெளிவுரை:**

அவ்வெட்டுத் திசைகளைப்போல் அங்கு எட்டு யானைகள் சுமக்கும் அழகிய கோயிலுக்குள் வசித்திருக்கும் புண்ணியனாராகிய சிவன்,

138. **“இடம் பவனம் ஈது ஆக இந்திரன் வந்து ஏத்தும்**
**கடமபவனம் மீதிலுறை காந்தர் – அடும்பேர்”**
**தெளிவுரை:**

அழகியதாகும் இடமும் அரசமனையும் (கோயிலும்) இதுவே எனக் கருதி இந்திரன் வந்து வணங்கும், கடம்பவனத்தின் மீது வசிக்கும் ஒளிமயமானவர்,

139. **“அலகு அம்பு அரிக்கும் அரியார் முடிவேய்ந்தது**
**உலகம் பரிக்கும் முறை உள்ளார் – பல நாளும்”**
**தெளிவுரை:**

கொல்லும் பெரிய கூர்ப்புரம் அமைந்த அம்பாகித்தன் கையில் இருந்த திருமாலுக்கு அறிய முடியாதவர்; முடிதரித்து உலகம் காக்கும் முறையுள்ளவர்,

140. **“நின்றவூர்ப் பூசலார் நீடு இரவெலாம் நினைந்து**
**குன்று போல சமைத்த கோயிலும் - நன்றிதரும்”**
**தெளிவுரை:**

திருநின்றவூரைச்சார்ந்தவராகிய பூசலார் பல நாட்கள் நீண்ட இரவுகளிலெல்லாம் நினைத்து மலைபோல் (மனத்துள்) கட்டிய கோயிலும்,

141. **“தாயான கங்கைமுடி தான் குளிரக் கண்ணப்பர்**
**வாயால் உமிழ்ந்த திருமஞ்சனமும் - தூயமழைத்”**

**தெளிவுரை:**

நன்மைதரும் அன்னையான கங்கையைத்தரித்த முடி குளிருமாறு கண்ணப்ப நாயனார் தம் வாயால் உமிழ்ந்த (பொன் முகரியாற்று) நீராட்டு நீரும்,

142. **“துன்புஆர் திருக்குறிப்புத் தொண்டர் துணித்துறையில்**
**அன்பாய் அளித்த பரிவட்டமும் - இன்பாத்”**

**தெளிவுரை:**

தூய மழையால் துன்பம் நிறையச் செய்து (இறைவனால் அருளப் பெற்ற) திருக்குறிப்புத் தொண்டர் துணிகளைத் துவைக்கும் அன்பாக அளித்த விக்கிரக உடையும்,

143. **“தணிவுஅரிய மானக்கஞ்சாறனார் சாத்தும்**
**மணிமுடி சூழ்பஞ்சவடியும் - அணிவிடையார்”**

(தணிவு அரிய – தணிதற்கு அரிய; மணிமுடி – அழகிய தலைமுடி)

**தெளிவுரை:**

அணிவிடையார் – (அழகிய காளைவாகனங் கொண்டுள்ள சிவபெருமான்) அன்பு குறைதல் அரிய மானக்கஞ்சாத்தனார் இன்பமாகச் சாத்தும் அழகிய தலைமுடி சூழ அணியும் பஞ்சவடியும்,

144. **“காமன்பால் முன்சேந்த கண்போல மூர்த்தியார்**
**தாம் அன்பால் முன்சேர்த்த சந்தனமும் - பூமன்போல்”**

(காமன் - மன்மதன்; சேந்த – சின்னதால் சிவந்த; பூமன் நாட்டையாளும் அரசன்)

**தெளிவுரை:**

அழகிய காளையை வாகனமாகக் கொண்ட சிவனார் காமனிடத்து முன்னர் சினத்தால் சிவந்த கண்போல மூர்த்திநாயனார் தாம் அன்பினால் முன்னர் முழங்கையால் தேய்த்துத்தந்த சந்தனமும்,

145. **“காக்கும் அரிபுனைந்த கண்மலரும் காதலொடு**
**சாக்கியர் தாம்சாத்திய பூந்தண்மலரும் - போக்கியமா”**

**தெளிவுரை:**

நாடாளும் மன்னன்போல் காக்கும் திருமால் சூட்டிய கண்களாகிய மலர்களும், அன்புடன் சாக்கியநாயனார் தாம் அணிவித்த அழகிய குளிர்ந்த மலரும்,

146. **“ஆக்கியமாறன் அமுதும் சிறுத்தொண்டர்**
**மாக்கறியும் தாயார் தரு மாவடுவும் - நீக்கரிய”**

**தெளிவுரை:**

சிவபிரான் உண்ணும் பொருட்டு இளையான்குடி மாற நாயனார் சமைத்த உணவும், சிறுத்தொண்டநாயனார் அளித்த மாண்புமிக்க அவருடைய பிள்ளைக்கறியும், அரிவாள்தாய நாயனார் தந்த மாவடுவும்,

147. **“கார்ஆர் இரவில் கணம்புல்லர் தம்முடிமேல்**
**சீராக ஏற்றிய செந்தீபமும் - ஆரால்”**

(கார்ஆர் – கரியஇருள் நிறைந்த; கணம் புல்லர் – கணம் புல்ல நாயனார்; சீராக – சிறப்பாக; ஆரால் - எவரால்)

**தெளிவுரை:**

நீக்குதற்கு அரிய கரிய இருள் நிறைந்த இரவில், கணம் புல்ல நாயனார் தம்தலைமுடிமீது சிறப்பாக ஏற்றிய சிவந்த தீபமும்,

**148. "அமைத்து வணங்கல் உறும் அங்கணர்க்குப் பூசை**
**சமைத்து வணங்கத் தகுமோ – உமைக்கு அன்பர்"**

**தெளிவுரை:**

(இத்தகைய அரிய பொருள்களை) வணங்கத்தக்க அழகிய நெற்றிக் கண்உடைய சிவபிரானுக்குப் பூசைப் பொருள் அமைத்து யாரால் வணங்க முடியும்?

**149. "அர்ச்சனை பாட்டேயாம் என்று ஆரூரர்க்கு ஆதியிலே**
**சொற்றமிழ் பாடுஎனச் சொன்னமையால் - சொற்படியே:**

**தெளிவுரை:**

உமாதேவிக்கு அன்பராகிய சிவபெருமான், நம்பியாரூரருக்கு, "எனக்கு அருச்சனை பாட்டேயாகும், தொன்மையில் தமிழ்ச் சொற்காளல் பாடுக!" எனக் கூறியமையால்,

**150. "செய்தாய் நால்வேதம் திகைத்து ஒதுங்கப் பித்தன் என்று**
**வைதாய் நீ வைதாலும் வாழ்த்தாமே – மெய்தான்"**

**தெளிவுரை:**

சிவபிரானுடைய சொல்லின்படியே நீ செய்தனை; (போற்றும்) நான்குவேதங்களும் திகைத்து ஒதுங்கப் "பித்தன்" என்று (சுந்தரர் வாயிலாக) சிவபிரானை வைதனை; நீ வைத்தாலும் அது வாழ்த்தாகும்.

**குறுகிய விடையளி:**

1. தூது நூல் என்றால் என்ன? தமிழ் விடுதூது நூலை குறிப்பிடு?
2. தமிழ்விடுதூது நூல் உணர்த்தும் இறைவன் பற்றியச் செய்திகளை குறிப்பிடுக?
3. தமிழ்விடு தூது நூல் உணர்த்தும் எண்வகை வனப்பு குறித்துச் செய்திகளை விளக்குக?
4. தமிழ்விடு தூது நூல் உணர்த்தும் மூவர் முதலிகள் குறித்த செய்திகளை விளக்குக?
5. தமிழ்விடு தூது நூல் உணர்த்தும் வண்ணங்கள் குறித்து விளக்குக.

**விரிவான விடையளி:**

1. தமிழ்விடு தூது உணர்த்தும் செய்யுளின் உறுப்புகள் பற்றி விவரி?
2. தமிழ்விடு தூது உணர்த்தும் இறைக்கருத்துக்களை விவரி?

# கலிங்கத்துப்பரணி

கலிங்கத்துப்பரணி என்ற இந்நூலின் ஆசிரியர் ஜெயங்கொண்டார். போர்க்களத் தெய்வமான கொற்றவையை பாடும் நூல்.

**"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**
**மானவனுக்கு வகுப்பது பரணி"**

என்று இலக்கண விளக்கப் பாட்டியல் பரணி நூல்களுக்கு விளக்கம் தருகின்றது. பரணி 13 உறுப்புக்களை உடையது தனியே ஒரு போர் பற்றி எழுந்த நூல் பரணி நூல் முதல் பரணி நூலாக கலிங்கத்துப் பரணி விளங்குகிறது. முதலாம் குலோத்துங்கனின் படைத் தளபதி கருணாகரத் தொண்டைமானுக்கும் கலிங்க மன்னன் ஆனந்தவர்ம சோடங்கனுக்கும் நடந்த போர் பற்றி கூறுவது கலிங்கத்துப் பரணி. கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, கோவில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்கு கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது ஆகியவை இடம்பெறும். தோற்றோரால் பெயர் பெறும் ஒரே சிற்றிலக்கியம் பரணி.

## 1. மூலமும் விளக்கக் குறிப்புரையும்

### 1. கடவுள் வாழ்த்து

கலிங்கப் போரைப் பாடவந்த ஆசிரியர் சயங்கொண்டார், முதலாவதாகக் கலிங்கப்போர்த் தலைவனான குலோத்துங்கள் நெடிது நின்று வாழவேண்டிக் கடவுளரைத் துதிக்கின்றார். சிவன், திருமால், நான்முகன். ஞாயிறு, யானைமுகன், ஆறுமுகன், நாமகள்,உமையவள், அன்னைமார் எழுவர் ஆகிய கடவுளரைத் துதிப்பவர், அவர்களோடு இயைபுறுத்திக் குலோத்துங்கனையும் ஒப்ப உரைக்கும் திறம் பெரிதும் நயம் பொருந்த அமைந்துள்ளது.

### 2. சிவ வணக்கம்:

**"புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்**
**தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்**
**செயல்வண்ணம் நிலைநிறுத்த மலைமகளைப்**
**பர்ணந்தவனைச் சிந்தை செய்வாம்**

**அருமறையின் நெறிகாட்ட அயன்பயந்த**
**நிலமகளை அண்டங் காக்கும்**
**உரிமையினிற் கைப்பிடித்த உபயகுலோத்**
**தமனபயன் வாழ்க வென்றே"**

**பொருள் நிலை:**

அருமறையின் நெறி காட்ட, நிலமகளை உரிமையின்றி கைப்பிடித்த அபயன் வாழ்க என்று, புவன வாழ்க்கைச் செயல் வண்ணம் நிலை நிறுத்த, மலைமகளைப் புணர்ந்தவனைச் சிந்தை செய்வோம்.

**விளக்கம்:** புனல் வார்க்க, தொழில் காட்ட, புணர்ந்தவன்என முடிக்க, புயல் வண்ணன்; திருமால், நீருண்ட கரிய மூகில் போன்ற நிறத்தினராகையால் திருமால் புயல் வண்ணன் எனப்பட்டார், புனல் - நீர், பூமிசையோன்; பிரமன், தொழில் திருமணச் சடங்கும்.

3. திருமால் வணக்கம்

**“ஒருவயிற்றிற் பிறவாது**
**பிறந்தருளி உலகொடுக்கும்**
**திருவயிற்றிற்று ஒருகுழவி**
**திருநாமம் பரவுதுமே**

**அந்நெடுமால் உதரம்போல்**
**அருளபயன் தனிக்கவிகை**
**இந்நெடுமா நிலமனைத்தும்**
**பொதிந்தினிது வாழ்கவென்றே”**

**பொருள் நிலை:**

கவிகை பொதிந்து வாழ்க என்று, உலகு ஒடுக்கும் வயிற்றிற்று குழவி காமம் பரவுதும்: என்று

**விளக்கம்:** ஒடுக்குதல் - அடைத்தல், வயிற்றிற்று – வயிற்றையுடையது, குழவி – குழந்தை, கண்ணன் திருமால்.

4. நான்முகன் வணக்கம்:

**“உகநான்கும் பொருள்நான்கும்**
**உபநிடதம் ஒருநான்கும்**
**முகநான்கும் படைத்துடைய**
**முதல்வனையாம் பரவுதுமே**
**நிலநான்கு திசைநான்கும்**
**நெடுங்கடல்கள் ளொருநான்கும்**
**குலநான்குங் காத்தளிக்கும்**
**குலதீபன் வாழ்கவென்றே”**

**பொருள் நிலை:**

குலநான்கும் அளிக்கும் குலதீபன் வாழ்க என்று, முகம் நான்கும் உடைய முதல்வனைப் பரவுதும்,

**விளக்கம்:** உலகம் - யுகம்; ஊழிக்காலம், பொருள் நான்கு – அறம், பொருள், இன்பம், வீடு; உபநிடதம் நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

5. ஞாயிற்று வணக்கம்

**“பேராழி உலகனைத்தும் பிறங்கவளர் இருள்நீங்க**
**ஓராழி தனைநடத்தும் ஒண்சுடரைப் பரவுதுமே**

**பனியாழி யுலகனைத்தும் பரந்தகலி யிருள்நீங்கத்**
**தனியாழி தனைநடத்தும் சயதுங்கன் வாழ்கவென்றே**

**பொருள் நிலை:** இருள் நீங்க, ஆழி, நடத்து சயதுங்கன் வாழ்க என்று, இருள் நீங்க ஓராழிதனை நடத்தும் சுடரைப் பரவுதும்.

**விளக்கம்:** ஆழிகடல், பிறங்க, ஓராழி – ஒற்றைச் சக்கத்தேர், சுடர் – ஞாயிறு, பனி – குளிர்ச்சி, ஆழி – கடல், பரந்த – பரவிய,கலி – துன்பம்.

6. யானைமுகன் வணக்கம்:

"காரணகா ரியங்களின்கட் டறுப்போர் யோகக்
கருத்தென்னுத் தனித்தறியிற் கட்டக் கட்டுண்டு
ஆரணமா நாற்கூடத் தணைந்து நிற்கும்
ஐங்கரத்தது ஒருகளிற்றுக்கு அன்பு செய்வாம்

தனித்தனியே திசையானைத் தறிக ளாகச்
சயத்தம்பம் பலநாட்டி யொருகூ டத்தே
அனைத்துலகுங் கவித்ததெனக் கவித்து நிற்கும்
அருட்கவிகைக் கலிப்பகைஞன் வாழ்க வென்றே"

**பொருள் நிலை:**

சயத்தம்பம் பல நாட்டி, கவித்து நிற்கும் கவிதை கலிப்பகைஞன் வாழ்க என்று, கட்டுண்டு, நாற்கூடத்து அனைந்து நிற்கும் ஒரு களிற்றுக்கு அன்பு செய்வோம்.

**விளக்கம்:** காரண காரியக்கட்டாவது அகப்பற்றும் புறப்பற்றும்; அவை உடல் மனனவி மக்கள் மேல் உண்டாவன. கட்டறுப்போர் – யோக்கியர், யோகம் - என ஒருமைப்பாடு.

7. ஆறுமுகன் வணக்கம்

"பொன்னிரண்டு வரைதோற்கும் பொருவரிய
நிறம்படைத்த புயமும் கண்ணும்
பன்னிரண்டும் ஆறிரண்டும் படைத்துடையான்
அடித்தலங்கள் பணிதல் செய்வாம்

ஓரிரண்டு திருக்குலமும் நிலைபெறவந்து
ஒருகுடைக்கீழ்க் கடலுந் திக்கும்
ஈரிரண்டு படைத்துடைய இரவிகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே"

**பொருள் நிலை:**

நிலைபெறவந்து, கடலும் திக்கும் படத்துடைய அபயன் வாழ்க என்று புயமும் கண்ணும் பன்னிரண்டும் ஆறிரண்டும் உடையான் அடித்தலங்கள் பணிதல் செய்வோம்.

**விளக்கம்:** இரண்டு பொன்வரை தோற்கும்என இயைக்க, இணைப்புயங்களுக்கு இருவரை உவகை என்க. பொரு – ஒப்பு.

8. நாமகள் வணக்கம்:

"பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்திருப்ப மிகவுயரத் திருப்பள் என்று
நாமாதும் கலைமாதும் என்ன சென்னி
நாவகத்துள் இருப்பாளை நவிலு வாமே

எண்மடங்கு புகழ்மடந்தை நல்ல எங்கோன்
யானவன்பால் இருப்பதுநன் றென்பாள்போல
மண்மடந்தை தன்சீர்த்தி வெள்ளை சாத்தி

**மகிழ்ந்தபிரான் வளவர்பிரான் வாழ்க வென்றே''**

**பொருள் நிலை:**

புகழ்மடந்தை ''நல்லன்; இருப்பது நன்று'' என்பாள் போல, மண்மடந்தை, வெள்ளைசாத்தி மகிழ்ந்த பிரான் வாழ்க என்று, பூமாதம் சயமாதும் புயத்திருப்ப, உயரத்திருப்பளென்று, நாவகத்துள் இருப்பாளை, நவிலுவோம்;

**விளக்கம்:** நான்முகன் நாவினும் புலவர் நாவினும் உறை தலாற் கலைமகள் நாமகளெனப்படடாள். பூமாது – மண்மகள், சயமாது – வெற்றி மகள், என்று இருப்பாளை, என்ன இருப்பானை எனத் தனித்தனி இயக்க. சென்னி – குலோத்துங்கன், நவிலுவோம் - துதிப்போம்.

**9. உமை வணக்கம்**

**''செய்யதிரு மேனியொரு பாதிகரி தாகத்**
**தெய்வமுதல் நாயகனை யெய்தசிலை மாரன்**
**கையின்மலர் பாதமலர் மீதும்அனு காநம்**
**கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்**

**கறுத்தசெழி யன்கழல்சி வப்பவரை யேறக்**
**கார்முகம்வ ளைத்துஉதியர் கோமகன்மு டிக்கண்**
**பொறுத்தமலர் பாதமலர் மீதணிய நல்கும்**
**பூழியர்பி ரான்அபயன் வாழ்கஇனி தென்றே''**

**பொருள் நிலை:**

செழியன் வரை ஏற வளைத்து, உதியர் கோம தன் மலர் பாதமலர் மீதணிய நல்கும் அபயன் வாழ்க என்று, கரிதாக எய்த சிலைமாரன் மலர் அனுகா கன்னிதன் கழல்கள் சென்னி மிசை வைப்பாம்.

**விளக்கம்:** செய்ய – சிவந்த, கரிதாக எய்த மாரன் என்க. தெய்வமுதல் நாயகன் - சிவன், மாரன் - மன்மதன், மாரகை; குறள் தொகை கன்னி – உமை, கறுத்த – சினந்து பகைத்த, செழியன் பாண்டியன்.

**10. அன்னையர் எழுவர் வணக்கம்:**

**''மேதி புள்ளலகை தோகை யேறுவணம்**
**வேழம் என்றகொடி ஏழுடைச்**
**சோதி மென்கொடிகள் ஏழின் ஏழிருது**
**ணைப்ப தந்தொழநி னைத்துமே**

**கேழல் மேழிகலை யாளி வீணைசிலை**
**கெண்டை யென்றினைய பல்கொடி**
**தாழ மேருவிலு யர்த்த செம்பியர்த**
**னிப்பு லிக்கொடித ழைக்கவே''**

**பொருள் நிலை:**

பல்கொடி தாழ உயர்த்த புலிக்கொடி தழைக்க, கொடி ஏழுடை, கொடிகள் எழின் ஏழிரு துணைப்பதம் தொழ நினைத்தும்.

**விளக்கம்:** ஏழு ரு(சத்த) மாதர்களில் சாமுண்டிக்கு எருமையும், அபிராமிக்கு அன்னமும், வராகிக்கு அலகையும், கௌமாரிக்கு மயிலும், மயேசுவரிக்கு எருதும், நாராயணிக்குக் கருடனும், இந்திராணிக்கு யானையுங் கொடிகளாம். மேதி – எருமை, புள் - அன்னம். அலகை - பேய்.

**11. வாழ்த்து**

**"விதிமறை யவர்தொழில் விளைகவே**
**விளைதலின் முகில்மழை பொழிகவே**
**நிதிதரு பயிர்வளம் நிறைகவே**
**நிறைதலி னுயிர்நிலை பெறுகவே**
**தலமுதல் உளமனு வளர்கவே**
**சயதரன் உயர்புலி வளர்கவே**
**நிலவுமிழ் கவிகையும் வளர்கவே**
**நிதிபொழி கவிதையும் வளர்கவே"**

**பொருள் நிலை:**

மனுவளர்க; புலிவளர்க; கவிதையும் வளர்க; கவிகையும் வளர்க; (அதனால்) மறையவர் தொழில் விளைக; மழை பொழிக; வளம் நிறைக; உயிர் நிலைபெறுக.

**விளக்கம்:** மறையவர் தொழில் - வேள்வி, முகில் - மேகம், நிதிதரு – செல்வத்தை தரும். நிலபெறுக – நிலைபெற்று வாழ்க. தலம் முதல் உள – உலகநிலைபேற்றிற்குக் காரணமாக உள்ள. மனு – குலோத்துங்கன். சயதரன் - குலோத்துங்களன். சயதரன் - குலோத்துங்கன். புலி – புலிக்கொடி. நிலவு – நிலாவொளி. கவிகை – வெண்கொற்றக்குடை. நிதி செல்வம், கவிகை – கீழ்நோக்கி இடக் கவிந்த கை.

## 2. கடை திறப்பு

கலிங்கப் போர் மேற்சென்ற வீரர் மீண்டுவரக் காலந்தாழ்த் தாராகவும், அதுகண்ட மகளிர் ஊடிக் கதவடைத்தாராகவும் கொண்டு, புலவர் தாம் பாடப்புகும் அக்கலிங்கப்போர்ச் சிறப்பைக் கேட்டு மகழுமாறும் அதன் பொருட்டுக் கதவைத் திறக்குமாறும் வேண்டுவதாக அமைத்துப் பாடப்பட்டது இப்பகுதி. ஈண்டுப் புலவர் அம்மகளிரின் தன்மைகளை அழகுற எடுத்துக் கூறி அவர்களை விளிக்கும் திறம் பெரிதும் நயஞ்சிறந்து காணப் படுகின்றது.

மகளிரின் தன்மைகளைக் கூறுங்கால், அவர்தம் உறுப்பு நலங்களை உவமை கொண்டு விளக்கியும், நடைபயில் இயல்பை நயம் பெறக்கூறியும், உலாப்போந்த குலோத்துங்கன் பால் உருகி கூறியும், சிறைப்பிடித்த மகளிரின் சீர் எடுத்து இயம்பியும் காதல் விளைய நின்ற நிலைகூறியும், துயில் ஒழித்தெழுந்த தோற்றம் கூறியும், நகக்குறிகண்டு மகிழ்ந்தமை கூறியும், உறுப்பு நலத்தால் மனங்கவர் இயல்பை நயம்பெற மொழிந்தும், கூடல்சுழித்தும், களப்போர் சொலபுகும் தந்நிலை உரைத்தும், கணவர் பிழை காணாக் காதலியல் கூறியும், உறவாடும் இயல்பிளை உளங்கொள உரைத்தும், கலவியின் மயக்க நிலையினைக் கூறியும், பிரிவறு துயர்நிலை நயம்பெற இயம்பியும், கணவரால் கலிங்கம் அழித்தது மொழிந்தும் செல்வது பயில்வார்க்குக் கழிபேரின்பம் பயந்து நிற்கின்றது.

**"சூதளவு அளவெனும் இளமுலைத்**
**துடியளவு அளவெனும் நுண்ணிடைக்**
**காதளவு அளவெனும் மதர்விழிக்**
**கடலமு தனையவர் திறமினோ"**

**விளக்கம்:** சூது - சூதாடு கருவி, துடி – உடுக்கை, இடை, இடுப்பு, காதை அளாவும் அளவு எனும் மதர்விழி என்க. இதனை, 'அலையிடைப் பிறவா அழித்து' என இனங்கோவடிகள் பாராட்டுதல் அறிக. மதர் – செருக்கு, விழி – கண். முலை, இடை, விழிச் சிறப்புக் கூறியவாறு. விழி காதுவரை நீண்டிருப்பது. நல்லிலக்கணம், 'காதளவோடிய கலகபாதகக் கண்'' என்றார் பட்டினத்தடிகளும்.

**முலைநலங்கூறி விளித்தது:**

**"புடைபட விளமுலை வளர்தொறும்**
**பொறைஅறி வுடையரும் நிலைதளர்ந்து**
**இடைபடு வதுபட அருளுவீர்**
**இடுகதவு உயர்கடை திறமினோ"**

**பொருள் நிலை:**

முலை வளர்தொறும், அறிவுடையரும் நிலை தளர்ந்த, இடைபடுவதுபட அருளுவீர் திறமின்;

**விளக்கம்:** புடைபட பக்கம் திரண்டு, பொறை – துன்பம் பொறுத்தல், நிலை தளர்ந்து – தன் இயற்கைத் தன்மை குன்றி, இடை - இடுப்பு, இடைபடுவது – துவள்வது; துன்புறுவது, பட – பொருந்த, உயர்கடை இடு கதவு என இயைக்க, இடு தகவு – தாழிட்ட கதவு, கடை – வாயில், கண்டாரை வருத்தும் இயல்பு கூறப்பட்டது.

**நடையழகு கூறி விளத்தது:**

**"சுரிகுழல் அசைவுற அசைவுறத்**
**துயிலெழும் மயிலென மயிலெனப்**
**பரிபுர ஒலியெழ ஒலியெழப்**
**பனிமொழி யவர்கடை திறமினோ"**

**பொருள் நிலை:**

பனிமொழியவர்! குழல் அசைவுற அசைவுற, மயில் என மயில் என. ஒலி எழ ஒலி எழ திறமின்;

**விளக்கம்:** சுரிதல் - நெளிதல், குழல் - கூந்தல், துயில் - தூக்கம். பரிபுரம் - கிண்கிணி, பனிமொழி – குளிர்ந்த (இனிய, மொழி, குழல் அசைய, பரிபுரம் ஒலிக்க, மயிலென வருபவர் என்க.

**கனவுநிலை கூறி விளித்தது:**

**"கூடிய இன்கன வதனிலே**
**கொடைநர துங்கனொடு அணைவுறாது**
**ஊடிய நெஞ்சினொடு ஊடுவீர்**
**உமது நெடுங்கடை திறமினோ"**

**பொருள் நிலை:**

கனவதனிலே, அணைவுறாது, ஊடிய நெஞ்சினோடு ஊடுவீர் திறமின்.

**விளக்கம்:** கூடிய – வந்தடைந்த, நரதுங்கன் – குலோத்துங்கன், அணைவுறாது – தழுவிப்புணராது. ஊடிய – பிணங்கிய. நெஞ்சு – மனம், கனவிற் கண்ட குலோத்துங்கனைப் புணராது விட்ட நெஞ்சினை நொந்தன ரென்க.

**ஊடல்நிலை கூறி விளித்தது**

> **“விடுமின் எங்கள்துகில் விடுமின் என்றுமுனி**
> **வெகுளி மென்குதலை துகிலினைப்**
> **பிடிமின் என்றபொருள் விளைய நின்றருள்செய்**
> **பெடைந லீர்கடைகள் திறமினோ”**

**பொருள் நிலை:**

“விடுமின்” “விடுமின்” என்று முனிகுதலை, “பிடிமின்” என்ற பொருள் விளைய, அருள்செய் பெடைநலீர், திறமின்.

**விளக்கம்:** துகில் - ஆடை, முனிவெகுளி – ஊடலால் வந்த சினம். குதலை – மழலைச்சொல். விளைய – உண்டாக, நின்று அகலாமல் நின்று, பெடை – பெண் அன்னம், நலீர் – நல்லீர்; பெண்களே,துகிலை ‘விடுமின்’ என்று சொல்லி அகலாமல் நிற்றலின் ‘பிடிமின்’ என்று சொல்லியது போலாம் என்க.

**கனவுநிலை கூறி வளித்தது:**

> **“எனத டங்கவினி வளவ துங்கனருள்**
> **எனம கிழ்ந்திரவு கனவிடைத்**
> **தனத டங்கண்மிசை நகந டந்தகுறி**
> **தடவு வீர்கடைகள் திறமினோ”**

**பொருள் நிலை:**

கனவிடை “வளவதுங்கள் அருள் அடங்க இனி எனது” என மகிழ்ந்து நகம் நடந்த குறி நடவுவீர் திறமின்.

**விளக்கம்:** அடங்க – முழுதும், வளவதுங்கள் - குலோத்துங்கள், தனதடம் - கொங்கைத்தடம், நகம் நடந்த – நகத்தால் உண்டான. குறி – கீற்றுக் குறிகளை. தடவுதல் - கையால் தொட்டுத் தொட்டுப் பார்த்தால். தடவுதல் நனவில் என்க கனவிடைக் கண்ட நகக்குறியை நன விடை ஆராய்ந்தன ரென்க இவ்வாறு தடவியதற்குக் காரணம் கனவுக்கும் நனவுக்கும் வேற்றுமை யறியாமை என்க.

**ஊடல்நிலை கூறி விளித்தது:**

> **“முனிபவர் ஒத்திலராய் முறுவல்கி ளைத்தலுமே**
> **முகிழ்நகை பெற்றமெனா மகிழ்நர்ம ணித்துவர்வாய்**
> **கனிபவ ளத்தருகே வருதலும் முத்துதிரும்**
> **கயல்களி ரண்டுடையீர் கடைதிற மின்றிறமின்”**

**பொருள் நிலை:**

முறுவல் களைத்தலும், மகிழ்நர்வாய் பவளத் தருகே வருதலும், முத்து உதிரும் கயல்கள் உடையீர் திறமின்.

**விளக்கம்:** முனிபவரொத்து – ஊடல்கொண்டு, இலராய் - பின்ஊடல் நீங்கியவராய், முறுவல் - புன்சிரிப்பு, கிளைத்தல் - தோன்றுதல், உண்டாதல், முகிழ்நகை – புன்சிரிப்பு. .

**பொய்த்துயில் நிலை கூறி விளத்தது**

> **"இத்துயில் மெய்த்துயிலே என்றுகு றித்திளைஞோர்**
> **இதுபுல விக்குமருந் தெனமனம் வைத்தடியில்**
> **கைத்தலம் வைத்தலுமே பொய்த்துயில் கூர்நயனக்**
> **கடைதிற வாமடவீர் கடைதிற மின்றிறமின்"**

**பொருள் நிலை:**

இளையோர் "மெய்த்துயிலே" என்று குறித்து, மனம் வைத்து, கைத்தலம் வைத்தலும், நயனக்கடை திறவா மடவீர் திறமின்.

**விளக்கம்:** துயில் - தூக்கம், மெய்த்துயில் - உண்மையான உறக்கம், புலவி – ஊடல் மனம் வைத்து – எண்ணி, அடி – பாதம், கைத்தலம் வைத்தல் - கைவைத்துப் பிடித்தல்.

**கனவுநிலை கூறி விளித்தது:**

> **"இகலி ழுந்தரசர் தொழவ ரும்பவனி**
> **இரவு கந்தருளு கனவினில்**
> **பகலி ழுந்தநிறை பெறமு யன்றுமொழி**
> **பதறு வீர்கடைகள் திறமினோ"**

**பொருள் நிலை:**

பகல் பவனி(யில்) இழந்த நிறைபெற முயன்று, இரவு கனவினில் மொழி பதறுவீர் திறமின்.

**விளக்கம்:** இகல் - வலி, பவனி- உலாவில், உகந்தருளும் - விரும்பிக்காணும், பகல் - பகற் பொழுதில், பதறுதல் - துடிப்புறுதல், நிறை – மனத்தை நிலைதிரியாமல் நிறுத்தல். மொழி பதறுவீர் – புணர்ந்து மொழிபதறுவீர் என்க. பகலில் நிறையழிந்தும் இரவில் கனவில் புணர்ந்தும் இருந்தனர் என்க.

**பற்குறியணி கூறி விளித்தது**

> **"முத்து வடஞ்சேர் முகிழ்முலைமேல்**
> **முயங்குங் கொழுநர் மணிச்செவ்வாய்**
> **வைத்த பவள வடம்புனைவீர்**
> **மணிப்பொற் கபாடம் திறமினோ"**

**பொருள் நிலை:**

முலைமேல், செவ்வாய் வைத்த, பவளமடம் புனைவீர் திறமின்;

**விளக்கம்:** வடம் - மாலை, முகிழ் - தாமரை மொட்டு, முயங்குதல் - புணர்தல், கொழுநர் - கணவர். மணி - அழகிய. வைத்த பவளம் - பதித்த பவளம்போன்ற பற்குறி. வடம் - மாலை போன்ற ஒழுங்கு வரிசை, பவளமாலை போன்றது கொழுநர் செய்த பற்குழி வரிசை என்க.

**குலோத்துங்கன்பால் கொண்ட மையல்கூறி விளத்தது:**

> **"தண்கொடை மானதன் மார்புதோய்**
> **தாதகி மாலையின் மேல்விழுங்**
> **கண்கொடு போம்வழி தேடுவீர்**
> **கனகநெ டுங்கடை திறமினோ"**

**பொருள் நிலை:**

மானதன் தாதகி மாலையின் மேல் விழும் கண்கொடு வழி தேடுவீர் திறமின்.

**விளக்கம்:** கொடை - கொடுத்தல், மானதன் - குலோத்துங்கன், தாதகி - ஆத்தி. கொடு (இடைக்குறை) - கொண்டு. போம்வழி - தாம் போம் வழி. கண் மாலைமீதே பதிந்து மயக்கத்தை விளைத்துவிட்டமையின். தாம்போம் வழி எதுவென்றும் தேடவேண்டியதாயிற் றென்க. கனகம் - பொன், நெடுங்கடை நீண்ட வாசல்.

**இதுவும் அது:**

**"அஞ்சியே கயல்கெடக் கூடலிற் பொருதுசென்று**
**அணிகடைக் குழையிலே விழஅடர்த் தெறிதலால்**
**வஞ்சிமா னதன்விடும் படையினிற் கொடியகண்**
**மடநலீர் இடுமணிக் கடைதிறந் திடுமினோ"**

**பொருள் நிலை:**

கயல்கெட, கடலிற்பொருது, சென்று, குழையிலே விழ அடர்த்து எறிதலால், வஞ்சிமானதன் படையினிற் கொடியகண் மடநலீர் திறந்திடுமின்.

**விளக்கம்:** கயல் - கெண்டைமீன்; மீன்கொடி. கூடல் - இருகண் கூடுமிடம்; மதுரை. பொருது – மோதி; போர்செய்து. குழை - காதணி, காடு. விழ - கண்விழ; பாண்டியர் விழ. அடர்த்த எறிதல் - நெருங்கி அழித்தல், வஞ்சிமானதன் - வஞ்சி சூடிய குலோத்துங்கன். படை-வேற்படை, கண் மடநலீர்; இரண்டன் உருபும் பயனும் தொக்க தொகை; கண்ணின் பிறழ்ச்சி கூறப்பட்டது.

மகளிர் கண்ணிற்கும் குலோத்துங்கன் படைக்கும் சிலேடை வகையால் ஒப்புமை கூறியதாம்.

**புணர்ச்சிநிலை கூறி விளித்தது.**

**"அவசமுற் றுளம்நெகத் துயில்நெகப் பவளவாய்**
**அணிசிவ பறவிழிக் கடைசிவப் புறநிறைக்**
**கவசமற்று இளநகைக் களிவரக் களிவரும்**
**கணவரைப் புணருவீர் கடைதிறந் திடுமினோ"**

**பொருள் நிலை:**

உளம்நெக, துயில் நெக, வாய்சிவப்பற, விழிக்கடை சிவப்புற, களிநகைவர புணருவீர் திறந்திடுன்;

**விளக்கம்:** அவசம் - பரவசம், நெக - இளக, துயில் - தூக்கம், நெக - தொலைய, அற - நீங்க, சிவப்புற- செம்மை நிறம் கொள்ள நிறைக்கவசம் - நிறையாகிய மனக்கட்டு. அற்று - அழிந்து. களி - களிப்பால், இளநகை - புன்முறுவல்.

**கலவி மயக்கநிலை கூறி விளித்தது:**

**"கலவிக் களியின் மயக்கத்தாற்**
**கலைபோய் அகலக் கலைமதியின்**
**நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்**
**நீள்பொற் கபாடந் திறமினோ"**

**பொருள் நிலை:**

களியின் மயக்கத்தால், கலை அகல, நிலவை எடுத்து உடுப்பீர் திறமின்.

**விளக்கம்:** கலவி - புணர்ச்சி, களி - கள்ளுண்டு களித்தது போன்ற மிகு மகிழ்ச்சி. கலை - ஆடை. அகல உலைத்துபோக. மதி - நிலா, நிலவு - நிலா வொளி. துகில் - ஆடை, உடுப்பீர்- அணிவீர். நிலவொளியைத் துகிலாகக் கருதினர் என்க.

**காமமயக்கநிலை கூறி விளித்தது:**

**“நனவினிற் சயதரன் புணரவே பெறினுநீர்**
**நனவெனத் தெளிவுறாது அதனையும் பழையஅக்**
**கனவென கூறுவீர் தோழிமார் நகைமுகங்**
**கண்டபின் தேறுவீர் கடைதிறந் திடுமினோ”**

**பொருள் நிலை:**

புணரவே பெறினும், நனவெனத் தெளிவுறாது, கனவெனக் கூறுவீர்; நகைமுகம் கண்டபின் தேறுவீர் திறந்திடுமின்.

**விளக்கம்:** கனவு – விழித்திருக்கும் நேரம், சயதரன் - குலோத்துங்கன். தெளிவுறாது – தெளியாமல், அது – புணர்ச்சி, நகை - நனவைக் கனவெனக் கூறியதைக்கேட்டு எள்ளி ஆடிய நகை.

**ஊடலும் கூடலும் விழைந்த இயல்புகூறி விளித்தது**

**“மெய்யே கொழுநர் பிழைநலிய**
**வேட்கை நலிய விடியளவும்**
**பொய்யே உறங்கும் மடநல்லீர்**
**புனைபொற் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

பிழை நலிய, வேட்கை நலிய, பொய்யே உறங்கும் மடநல்லீர் திறமின்.

**விளக்கம்:** கொழுநர் – கணவர், நலிய – மனத்தை வாட்ட. வேட்கை – கலவி வேட்கை. உறங்கல் - தூங்கல். ஊடினராயினும் புணர்ச்சி வேட்கையால் உறங்காராயினர். பொய்யாக வுறங்குதலாவது கண் மூடியவாறு கிடத்தல்.

**கலவி மயக்கநிலை கூறி விளித்தது**

**“போக அமளிக் களிமயக்கில்**
**புலர்ந்த தறியா தேகொழுநர்**
**ஆக அமளி மிசைத்துயில்வீர்**
**அம்பொற் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

களி மயக்கில், புலர்ந்த தறியாதே, ஆக அமளி மிசைத் துயில்வீர் திறமின்.

**விளக்கம்:** போகமயக்கு என இயைக்க, போகம் - கலவி இன்பம். அமளி – படுக்கை. களிமயக்கு – கள்ளுண்டது போன்ற மயக்கு. புலர்தல் - விடிதல், கொழுநர் – கணவர், ஆகம் - மார்பு, துயில் - தூக்கம், விடிந்தது தெரியாமல் கணவர் மார்பிடத்தே தூங்கினர் என்க.

**கணவர் வரவு பார்க்கும் நிலை கூறி விளித்தது:**

**"ஆளுங் கொழுநர் வரவுபார்த்து**
**அவர்தம் வரவு காணாமல்**
**தாளும் மனமும் புறம்பாகச்**
**சாத்துங் கபாடம் திறமினோ"**

**பொருள் நிலை:**

கொழுநர் வரவு பார்த்து, வரவு காணாமல் தாளும் மனமும் புறம்பாக, சாத்தும் கபாடம் திறமின்;

**விளக்கம்:** ஆளும் - தம்மை ஆட்கொண்ட; தாம் ஆளும், கொழுநர் – கணவர். தாள் - பாதம், புறம்ப – வாயிற்படிக்கு வெளியே, பாதமும் மனமும் வாயிலுக்கு வெளியே சென்று சென்று பார்க்க விழைந்தனவாம் என்க.

**கொங்கையின் அழகு கூறி விளத்தது:**

**"உந்திச் சுழியின் முளைத்தெழுந்த**
**உரோமப் பசுந்தாள் ஒன்றில் இரண்டு**
**அந்திக் கமலங் கொடுவருவீர்**
**அம்பொற் கபாடம் திறமினோ"**

**பொருள் விளக்கம்:**

உந்திச் சுழியின் எழுந்த பசுந்தாள் ஒன்றில் இரண்டு அந்திக் கமலம் கொடு வருவீர் திறமின்.

**விளக்கம்:** உந்திச்சுழி – கொப்பூழ்,உரோமம் - மயிரொழுங்கு, தாள் - தண்டு. அந்திக் கமலம் - மாலையில் காணப்படும். தாமரைமொட்டுப் போன்ற கொங்கைகள், கொடு (இடைக் குறை) – கொண்டு. ஒரு தண்டில் இரண்டு கமலம் போன்றன கொங்கைகள்.

**பெண்கள் வேளம் புகுந்த தன்மை கூறி விளித்தது:**

**"மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக ஓடிக்**
**கானம்புக வேளம்புகு மடவீர் கடை திறமின்"**

**பொருள் நிலை:**

மீனவர் ஓடிக் கானம்புக, வேளம் புகு மடவீர் திறமின்.

**விளக்கம்:** மீனம்புகு கொடி – மீன் வடிவெழுதிய கொடி, மீனவர் – பாண்டியர், விழி-கண், அம்பு – நீர். கானம் - காடு, வேளம் - சிறைப்பட்ட மகளிர் வாழும் அரண்மனை, மடவார் – பெண்கள், பாண்டியர் தோற்றோட அவர் நாட்டுப் பெண்கள் வேளம் புகுந்தனர். தோற்ற அரசரின் மகளிரைச் சிறை பிடித்துத் தனியிடத்தில் அடைப்பது பண்டைக்கால மன்னரின் வழக்கு.

**பெண்களைத் திறையாகப் பெற்றமை கூறி விளித்தது:**

**"அலைநாடிய புனல்நாடுடை அபயற்கிடு திறையா**
**மலைநாடியர் துளுநாடியர் மனையிற்கடை திறமின்"**

**பொருள் நிலை:**

அபயற்கு இடு திறையாம் மலைநாடியர் துளுநாடியர், திறமின்.

**விளக்கம்:** அலைநாடிய புனல் - அலைவீசும் புனல்; காவிரி, அபயன் - குலோத்துங்கன், திறையா – திறைப் பொருளாகக் கொடுக்கப் பெற்ற. மலை நாடு – சேர நாடு. துளுநாடு – துளுவ நாடு, பெண்கள் திறைப் பொருளானமை கூறப் பொருளாகச் செலுத்தப்பட்டனர்.

**கணவரோடுடனுறையுநிலை கூறி விளித்தது:**

**"விலையி லாதவடம் முலையி லாடவிழி**
**குழையி லாடவிழை கணவர்தோள்**
**மலையி லாடிவரு மயில்கள் போலவரு**
**மடந லீர்கடைகள் திறமினோ"**

**பொருள் நிலை:**

வடம் முலையில் ஆட, விழி குழையில் ஆட, கணவர் தோள் மலையில் ஆடிவரும் மயில்கள் போல வரும் நலீர் திறமின்.

**விளக்கம்:** வடம் - முத்துமாலை, விழி- கண், குழை – காதணி, விழி குழைவரை ஓடிய வென்க. விழை – விரும்பும், தோள்மலை – தோளாகிய மலைமீது; பண்புத்தொகை. நலீர் – நல்லீர்; பெண்களே. கணவர் தோள்மலையில் மயில் போன்றனர் பெண்கள். மயில்கள் மலைமீது ஆடுதல் இயல்பாகலின் இவ்வாறு கூறினார்.

**கன்னட நாட்டினரான பெண்களை விளித்தது:**

**"மழலைத்திரு மொழியிற்சில வடுகுஞ்சில தமிழும்**
**குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்"**

**பொருள் நிலை:**

மொழியில், வடுகும் தமிழும் குழறித்தரு கருநாடியர் திறமின்.

**விளக்கம்:** மொழி – சொல், வடுகு – தெலுங்கு, தரு – கொடுக்கின்ற, கருநாடியர் – கருநாடகம் என்ற நாட்டில் வாழ்ந்திருந்தவர். கருநடப் பெண்கள் தெலுங்கும் தமிழும் கலந்து பேசினர் என்க. குறுகி – வந்து.

**ஊடலும் கூடலும் விழைந்த இயல்பு கூறி விளித்தது:**

**"தழுவுங் கொழுநர் பிழைநலியத்**
**தழுவேல் என்னத் தழுவியகை**
**வழுவ உடனே மயங்கிடுவீர்**
**மணிப்பொற் கபாடம் திறமினோ"**

**பொருள் நிலை:**

கொழுநர் பிழை நலிய, தழுவேல் என்ன! தழுவியகை வழுவ, மயங்கிடுவீர் திறமின்;

**விளக்கம்:** கொழுநர் – கணவர், நலிய – வருத்த, என்ன, என்ன; என்று கணவரை நோக்கிக்கூற – கை – கணவர் கை வழுவ – நழுவ, மயங்கிடுவீர் (புணர்ச்சி விருப்பால்) மயங்குவீர், மணிப்பொன் - அழகிய பொன்னாலான, ஊடலால் தழுவேல் எனவும் கணவர் தழுவுதல் ஒழியப், புணர்ச்சி விருப்பால் மனம் வருந்தினர் என்க.

**நகையின் சிறப்புக் கூறி விளித்தது:**

**"வேகம் விளைய வருங்கொழுநர்**
**மேனி சிவந்த படிநோக்கிப்**
**போகம் விளைய நகைசெய்வீர்**

புனைபொற் கபாடம் திறமினோ”

**பொருள் நிலை:**

கொழுநர், சிவந்தபடி நோக்கி, போகம் விளைய நகை செய்வீர், திறமின்.

**விளக்கம்:** வேகம் விளைய – விரைவு மிகுதிப்பட, கொழுநர்-கணவர், மேனி – உடல் சிவந்தது பணர்ச்சி விழைவால் என்க. போகம் - கலவி, விளைய – அதன் பயனாய் உண்டாக. நகை-சிரிப்பு. நகைபோகத்தை விளைத்த தென்க. புனை-அழகு படுத்தப்பட்ட.

**துயிலெழுந்த நிலைகூறி விளத்தது:**

**“சொருகு கொந்தளகம் ஒருகை மேலலைய**
**ஒருகை கீழலைசெய் துகிலொடே**
**திருவ னந்தலினு முகம லர்ந்துவரு**
**தெரிவை மீர்கடைகள் திறமினோ**

**பொருள் நிலை:**

ஒரு கை மேல், அளகம் அலைய, ஒரு கை கீழ் துகிலொடே, அனந்தலினும் முகமலர்ந்ததுவரு தெரிவைமீர் திறமின்.

**விளக்கம்:** சொருகு - முடிக்கப்படுகின்ற கொந்து- பூங்கொத்து, அளகம் - கூந்தல், அலைசெய் - அலைபோல் மடிந்து மடிந்து தோன்றும், துகில் - உடை, அனந்தல் - தூங்கியெழுந்த மயக்க நிலையிலும் தெரிவை – பெண். தூக்கம் தெளிந்ததும் ஒரு கை மேலே கூந்தலைத் தாங்க, ஒரு கை கீழே துகிலைத் தாங்கி எழுந்து வந்தனர் என்க.

**நகக்குறி கண்டு களித்தமை கூறி விளித்தது:**

**“முலைமீது கொழுநர்கைந் நகமேவு குறியை**
**முன்செல்வ மில்லாத அவர்பெற்ற பொருள்போல்**
**கலைநீவி யாரேனு மில்லாவி டத்தே**
**கண்ணுற்று நெஞ்சங்க ளிப்பீர்கள் திறமின்”**

**பொருள் நிலை:**

யாரேனும் இல்லா இடத்தே, கலை நீவி, முலை மீது நகம் மேவு குறியை, கண்ணுற்று, களிப்பீர்கள் திறமின்.

**விளக்கம:** கொழுநர் – கணவர், முன் செல்வம் இல்லாத அவர் - இதற்குமுன் பொருள் இல்லாதவர், வறிஞர். பொருள் - செல்வம். யார் எனும் - ஒருவராவது. குலை – பேலாடை நீவி – விலக்கி இவ்வாறு கண்ணுதல் கல்வி நிலையை நினைந்த மகிழ்தற்கென்க.

**விழிஇயல்பு கூறி விளித்தது:**

**“கடலில் விடமென அமுதென மதனவேள்**
**கருதி வழிபடு படையொடு கருதுவார்**
**உடலின் உயிரையும் உணர்வையும் நடுவுபோய்**
**உருவு மதர்விழி யுடையவர் திறமினோ”**

**பொருள் நிலை:**

விடமென, அமுதென, மதனவேள் படையொடு, உயிரையும் உணர்வையும் உரும் மதர்வழி உடையவர் திறமின்.

**விளக்கம்:** கடல் - பாற்கடல், விடம் - நஞ்சு; மதனவேள் - மன்மதன் வழிபடு மதனவேள் என இயைக்க. படை- மலர்க்கணை உருவும் – ஊடுருவிச் செல்லும்.

**தோற்ற இயல்பு கூறி விளித்தது:**

**“முறுவல் மாலையொடு தரள மாலைமுக**
**மலரின் மீதும்முலை முகிழினுஞ்**
**சிறுநி லாவுமதின் மிகுநி லாவும்என**
**வருந லீர்கடைகள் திறமினோ”**

**பொருள் நிலை:**

முறுவல்மாலையொடு தரளமாலை, சிறு நிலாவும் மிகு நிலாவுமென வருநலீர் திறமின்.

**விளக்கம்:** முறுவல் மாலை – பல் வரிசை, தரளம் - முத்து. முகிழ – மொட்டு, சிறுநிலை - மூன்றாம் பிறை.

**மனங்கவரும் இயல்பு கூறி விளித்தது:**

**“முருகிற் சிவந்த கழுநீரும்**
**முதிரா இளைஞர் ஆருயிரும்**
**திருகிச் செருகும் குழல்மடவீர்**
**செம்பொற் கபாடம் திறமினோ”**

**பொருள்நிலை:**

கழுநீரும், இளைஞர் உயிரும் திருகிச் செருகும் குழன்மடவீர் திறமின்;

**விளக்கம்:** முருகு –பணம், கழுநீர் – செங்கழுநீர்ப்பூ, திருகி – முறுக்கிப்பறித்து. குழல் - கூந்தல், கழுநீர் மலரையும் இளைஞர் உயிரையும் தங்கள் கூந்தலில் வைத்துச் செருகினர் என்க.

**கூடல் இழைத்த இயல்பு கூறி விளித்தது.**

**“மெய்யில ணைத்துருகி பையஅ கன்றவர்தாம்**
**மீள்வரெ னக்கருதிக் கூடல்வி ளைத்து அறவே**
**கையில ணைத்தமணல் கண்பனி சோர்புனலில்**
**கரையவி ழுந்தழுவீர் கடைதிற மின்றிறமின்”**

**பொருள் நிலை:**

அகன்றவர் மீள்வரெனக் கருதி, கூடல் விளைத்து, அறிவே, மணல் புனலில் கரைய அழுவீர் திறமின்;

**விளக்கம்:** மெய் - உடல், அணைத்து – தழுவி, உருகி – மனம் உருகி (க்காட்டி) பைய – மெல்ல, அகன்றவர் – பிரிந்தவர், கையில் அணைத்த – கைகளினால் சேர்த்த, கூடல் விளைத்தல் - மணலில் சுழித்துக் குறியறிதல், அறவே – சுழியாமல் நீங்கி நிற்க. புனல்-நீர், கூடல் இழைத்த மணல் கண்ணீரால் கரைந்தது. கூடற்சுழி கூடாமற் போகவே கணவர் விரைவில் வந்து கூடாரென மிகுதியாக வருந்தலாயினர் என்க.

**ஊடல் இயல்பு கூறி விளித்தது:**

**“செருவிள நீர்பட வெம்முலைச்**
**செவ்விள நீர்படு சேயரிக்**
**கருவிள நீர்பட ஊடுவீர்**
**கனகநெ டுங்கடை திறமினோ”**

**பொருள் நிலை:**

செவ்விளநீர் செரு இளநீர்பட, கருவிளம் நீர் படஊடுவீர் திறமின்;

**விளக்கம்:** செருஇளநீர் – கலவிப் போர்க்குரிய எழுச்சியுள்ள தன்மை, பட-கெட. வெம்முலையாகிய செவ்விளநீர் என்க. சேயரிபடு என இயைக்க. சேஅரி – சிவந்த கோடுகள், படு – பொருந்திய. கருவிளம் - மலர் போன்ற கண்கள். நீர் பட – கண்ணீரைப் பொருந்த, ஊடுவீர் – கணவரொடு புலப்பீர். முலை நீர்மை கெடவும், கண்நீர் படவும் ஊடினர் என்க. செருகு விளநீர் படுதல் - பசலை கொண்டு நிறவேற்றுமையைப் பெறுதல்.

**கலவி நிலைகூறி விளித்தது:**

**"அளக பாரமிசை அசைய மேகலைகள்**
**அவிழ ஆபரண மிவையெலாம்**
**இளக மாமுலைகள் இணைய றாமல்வரும்**
**இயன லீர்கடைகள் திறமினோ"**

**பொருள் நிலை:**

அளகபாரம் அசைய, மேகலைகள் அவிழ, ஆபரண மிவையெலாம் இளக, முலைகள் வரும் இயல் நலீர் திறமின்.

**விளக்கம்:** அளகம் - கூந்தல், பாரம் - சுமை; மிகுதி, மிசை- மேலே, மேகலை – இடை அணி. இளக – நெகிழ, மா-பெரிய இணை அறாமல் - ஒன்றோடொன்று உயர்வு தாழ்வின்றி. வரும் - வளரும் இயல் - இயல்பினையுடைய நலீர்- நல்லீர்; பெண்களே. கலவிக்கால இயல்பு கூறப்பட்டது.

**இதுவும் அது**

**"மதுர மானமொழி பதற வாள்விழிசி**
**வப்ப வாயிதழ்வெ ளுப்பவே**
**அதர பானமது பான மாகவறி**
**வழியு மாதர்கடை திறமினோ"**

**பொருள் நிலை:**

மொழி பதற, விழி சிவப்ப, இதழ் வெளுப்ப அதரபானம் மதுபானமாக அறிவழியும் மாதர் திறமின்;

**விளக்கம்:** மதுரம் - இனிமை. மொழி – சொல், பதர-தடு மாற. வாள்-ஒளி பொருந்திய. இதழ் - உதடு. அதரம் - உதடு, பானம் - பருகுவது. மதுபானம் - கள், இதுவும் கலவி இயல்பு கூறியது. கள்ளுண்டார்க்கும் கலவியில் திளைத்தார்க்கும் சொல் தடுமாறுதலும், கண்கள் சிவத்தலும், வாயிதழ்கள் வெளுத்தலும் இயல்பு. ஆகலான் இரண்டு நிலையும் ஒன்றாக இணைத்துக் கூறினார்.

**நோயும் மருந்துமாந்தன்மை கூறி விளித்தது:**

**"தங்குகண் வேல்செய்த புண்களைத்**
**தடமுலை வேதுகொண் டொற்றியும்**
**செங்கனி வாய்மருந் தூட்டுவீர்**
**செம்பொன் நெடுங்கடை திறமினோ"**

**பொருள் நிலை:**

கண்வேல் செய்த புண்களை, வேதுகொண்டொற்றியும், வாய்மருந் தூட்டுவீர் திறமின்.

**விளக்கம்:** கண்வேல் (தம்) கண்ணாகிய வேல். வேது நோய்க்குச் சூடான பொருள்களால் வேது கொடுத்தல் இயல்பாம். ஒற்றுதல் - ஒற்றடங் கொடுத்தல், தங்கு – படிந்த; சேர்ந்த. வெப்பம் - ஒற்றடங் கொடுத்தல், தங்கு – படிந்த; சேர்ந்த, வெப்பம் ஊட்டுதல், இதனை 'கொம்மை

வரிமுலைவெம்மை வேதுநீஇ’ என்றார் இளங்கோவடிகளும். வாய் மருந்து அதரபானம். புண்ணுக்கு வேதும் மருந்தும் ஈண்டுக் கூறபட்டன.

**இதுவும் அது**

**“பொருங்கண் வேலிளைஞர் மார்பி னூடுருவு**
**புண்கள் தீரவிரு கொங்கையின்**
**கருங்கண் வேதுபட ஒற்றி மென்கைகொடு**
**கட்டு மாதர்கடை திறமினோ”**

**பொருள் நிலை:**

கண்வேல் மார்பினூடு உருவு புண்கள் தீர வேதுபட ஒற்றி, கைகொடு கட்டு மாதர் திறமின்;

**விளக்கம்:** பொரும் - தாக்குகின்ற. கண்வேல் - (தங்கள்) கண்ணாகிய வேல். இளைஞர் – ஆடவர். மார்பின் ஊடுருவு புண்கள் - மனத்தே புகுந்த காமத்தீயைக் குறித்தன.

**கூந்தலியல்பு கூறி விளித்தது**

**“இடையி நிலையரி திறுமிறு மெனஎழா**
**எமது புகலிடம் இனியிலை யெனவிழா**
**அடைய மதுகரம் எழுவது விழுவதாம்**
**அளக வனிதையர் அணிகடை திறமினோ”**

**பொருள் நிலை:**

‘‘மதுகரம் இடை இறும் இறும்’’ என எழா ‘‘புகழ் இடம் இலை’’ என விழா எழுவது விழுவதாம் அளக வனிதையர் திறமின்.

**விளக்கம்:** இடை - இடுப்பு, நிலை – நிலைபெறுதல், இறும்- ஓடியும், (கூந்தல் கொங்கைகளின் சுமையால் முடியும் எனல்) எழா - கூந்தல் விட்டெழுந்தும், புகலிடம் - புகுதற்குரிய இடம்; தகுதியான இடம்; அடைக்கலம்.

**நடை இயல்புகூறி விளித்தது**

**“உபய தனமசையில் ஓடியுமிடை நடையை**
**ஒழியும் ஒழியுமென ஒண்சிலம்பு**
**அபய மபயமென அலற நடைபயிலும்**
**அரிவை மீர்கடைகள் திறமினோ”**

**பொருள் நிலை:**

சிலம்பு ‘‘இடை ஒடியும்; நடையை ஒழியும் ஒழியும்’’ என, ‘‘அபயம் அபயம்’’ என அலற, நடை பயிலும் அரிவைமீர் திறமின்.

**விளக்கம்:**

உபயம் - இரண்டு, தனம் - கொங்கை, இடை - இடுப்பு, ஒழியும் - விட்டொழியும் ஒள் - ஒளி பொருந்திய, அலற – ஒலி செய்ய. நடை பயிலும் -நடக்கும். அரிவை – பெண், சிலம்பு இடை ஒடியுமென அரற்றியதாகக் கூறினார். மாதர்கள் ஆடவர்களைப் போல் மிகுதியாக நடத்தலின் மையின் அடை பயிலும் என்றார்.

**காவிரியை ஒப்புக்கூறி விளித்தது**

> **“பூவிரி மதுகரம் நுகரவும்**
> **பொருகயல் இருகரை புரளவும்**
> **காவிரி யெனவரு மடநலீர்**
> **கனகநெ டுங்கடை திறமினோ”**

**பொருள் விளக்கம்:**

மதுகரம் நுகரவும், கயல் கரை புரளவும், காவிரி எனவரு மடநலீர் திறமின்.

**விளக்கம்:** பூவிரி – அழகுமிக்க; மலர்கள் செறிந்த, மதுகரம் நுகர – தேனைக் கையால் நுகர; வண்டு உண்ண, கயல் - மீன் போன்ற கண்; மீன் கரை – அகன்ற கண்ணின் இரு கடை; காவிரியின் கரை, காவிரி – காவிரியாறு. கனகம் - பொன் பெண்களுக்கும் காவிரிக்குங் சிலேடை.

**கூந்தலியம்பு கூறி விளித்தது:**

> **“களப வண்டலிடு கலச கொங்கைகளின்**
> **மதி எழுந்துகனல் சொரியுமென்று**
> **அளக பந்திமிசை அளிகள் பந்தரிடும்**
> **அரிவை மீர்கடைகள் திறமினோ”**

**பொருள் நிலை:**

கொங்கைகளில் மதி கனல் சொரிமென்று; அளிகள் அளகபந்திமிசை பந்தரிடும் அரிவைமீர் திறமின்.

**விளக்கம்:** களம் - கல்வைச் சாந்து, கலசம் - கும்பம், வண்டல் -சேறு. மதி – நிலா. கனல் சொரியும் - பிரிந்தார்க்கு) துன்பம் செய்யும். அளகம் - கூந்தல், பந்தி – கட்டு, அளிகள் - வண்டுகள், பந்தர் பந்தல்; பந்தலிட்டாற்போல் கூட்டமாக வட்டமிட்டுப் பறந்துநிற்றல். அரிவை – பெண், பிரிந்தார்க்கு மதி கனலைச் சொரியுமென்று வண்டுகள் பந்தரிட்டன என்றார்.

**புணர்ச்சிநிலை கூறி விளித்தது:**

> **“வாயிற் சிவப்பை விழிவாங்க**
> **மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத்**
> **தோயக் கலவி யமுதளிப்பீர்**
> **துங்கக் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

விழி சிவப்பை வாங்க, வாய் வெளுப்பை வாங்க கலவி யமுது அளிப்பீர் திறமின.

**விளக்கம்:** வாங்க – தான் பற்றிக் கொள்ள, தோயம் - கடல், கலவி – புணர்ச்சி. தங்கம் - மேன்மை, விழி சிவக்க, உதடு வெளுக்கக் கலவி புரிந்தமை குறிக்கப்பட்டது. கலவியினால் வாய் வெளுத்தலும், கண் சிவத்தலும் இயற்கையாதலால், இவ்வாறு ‘வாயின்..... விழிவாங்க.... வாய் வாங்க,’.... என நயம் படக் கூறினார். தோய – தழுவ எனக் கொண்டு பொருளுரைப்பினும் பொருந்தும்.

**இதுவும் அது**

> **“கூடு இளம்பிறையில் குறுவெயர் முத்துருளக்**
> **கொங்கை வடம்புரளச் செங்கழு நீரளகக்**
> **காடு குலைந்தலைக் கைவளை பூசலிடக்**
> **கலவி விடாமடவீர் கடைதிற மின்றிறமின்”**

**பொருள் நிலை:**

வெயர்முத்து உருள, வடம் புரள, அளகக்காடு அலைய, வளை பூசலிட; கலவிவிடா மடவீர், திறமின் திறமின்.

**விளக்கம்:** பிறை – பிறைபோன்ற நெற்றி, வெயர் – வெயர்வை, வடம் - முத்துமாலை, அளகம் - கூந்தல், குலைந்து – அழிந்து, அலைய – புரள, பூசல் - ஒலி, கலவி – புணர்ச்சி. புணர்ச்சி நிலை கூறியதாம்.

**கலிங்கப்போர்ப்பாடல் கேட்குமாறு விளித்தது:**

**"காஞ்சி இருக்கக் கலிங்கங் குலைந்த**
**கலவி மடவீர் கழற்சென்னி**
**காஞ்சி இருக்கக் கலிங்கங் குலைந்த**
**களப்போர் பாடத் திறமினோ"**

**பொருள் நிலை:**

காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த மடவீர் காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த போர் பாடத் திறமின்.

**விளக்கம்:** காஞ்சி - இடை அணி. கலிங்கம் - (உடுத்த) உடை, குலைந்த – நிலை பெயர்ந்து கிடந்த. கலவி – புணர்ச்சி. கலவித் காலத்து இடையணியும் அடையும் உலைவது இயல்பாகலால் இவ்வாறு நயந்தோன்றக் கூறினார்.

**இதுவும் அது:**

**"இலங்கை எறிந்த கருணா கரன்தன்**
**இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்**
**கலிங்கம் எறிந்த கருணா கரன்தன்**
**களப்போர் பாடத் திறமினோ"**

**பொருள் நிலை:**

இலங்கை எறிந்த கருணாகரன் தன் சிலையின் வலி கேட்பீர், கலிங்கம் எறிந்த கருணாகரன் தன் போர் பாடத் திறமின்

**விளக்கம்:** கருணாகரன் - கருணைக் கடலாகிய இராமன், இகல் - வலி, சிலை – வில். கேட்பீர் – கேட்க விரும்பும் பெண்களே. கருணாகரன் - கருணாகரத் தொண்டைமான். அருளுக்கு இருப்பிடம் போன்றவன் என்பது பொருள் (குலோத்துங்கன் படைத்தலைவன்) களப்போர் – கலிங்கக் களப்போர். கருணாகரன்; இரு பொருளில் வந்த நயம் உணரத் தக்கது.

**காதல் இயல்பு கூறி விளித்தது:**

**"பேணுங் கொழுநர் பிழைகளெலாம்**
**பிரிந்த பொழுது நினைந்து அவரைக்**
**காணும் பொழுது மறந்திருப்பீர்**
**கனப்பொற் கபாடத் திறமினோ"**

**பொருள் நிலை:**

கொழுநர் பிழைகளெல்லம் பிரிந்தபொழுது நினைந்து, காணும் பொழுது மறந்திருப்பீர் திறமின்.

**விளக்கம்:** பேணும் - அன்பு செய்யும். கொழுநர்-கணவர் பிரிவுத் துன்பத்தால் பிழை நினைதலும், கண்ட உவமையில் அது மறைத்தாலும் இயல்பாம் என்க. கனம் - மேன்மை, உயர்வு. பொன்,

அழகு; பொன்னாலியன்ற. இதனைக் ‘காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால், காணேன் தவறல் லவை’ எனத் திருவள்ளுவர்த்தே காதலி கூற்றும் ஒப்புநோக்கத் தக்கது.

**கணவரோ: பயிலுமியல்பு கூறி விளித்தது:**

**“வாச மார் முலைகள் மார்பி லாடமது**
**மாலை தாழ்குழலின் வண்டெழுத்து**
**ஊச லாடவிழி பூச லாடஉற**
**வாடு வீர்கடைகள் திறமினோ”**

**பொருள் நிலை:**

முலைகள் மார்பில் ஆட குழலின் வண்டு ஊசலாட, வழி பூசலாட, உறவாடுவீர் திறமின்;.

**விளக்கம்:** வாசம் - மணம், மது – தேன், குழல் - கூந்தல், ஊசலாட – வந்தும் சென்றும் கழல, வழி – கண், பூசலாட - இரு கடைகளோடு சென்று பொர. உறாவடுதல் - அன்பு பாராட்டுதல்.

**கலவி மயக்க நில கூறி விளித்தது:**

**“நேயக் கலவி மயக்கத்தே**
**நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப**
**வாயைப் புதைக்கும் மடநல்லீர்**
**மணிப்பொற் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

மொழியைக் கிளி உரைப்ப, வாயைப் புதைக்கும் நல்லீர் திறமின்.

**விளக்கம்:** நேயம் - அன்பு, கல்வி – புணர்ச்சி, மொழி – சொல், மறைவிடத்துப் பேசிய மொழியைப் பலர்முன் சொன்ன தென்க. வாயைப் புதைக்கும் - கிளியின பாயைப் புதைக்கும்.

**பிரிவாற்றா நிலைகூறி விளித்தது:**

**“பொங்கு மதிக்கே தினம் நடுங்கிப்**
**புகுந்த அறையை நில அறைஎன்று**
**அங்கும் இருக்கப் பயப்படுவீர்**
**அம்பொற் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

மதிக்கு நடுங்கி, அறையை, நிலவறை என்று, அங்கும் இருக்கப் பயப்படுவீர் திறமின்.

**விளக்கம்:** பொங்குதல் - நிலவு காலுதல், மதி – நிலா. அறை – படுக்கை யறை, நிலவறை – நிலத்துள் அமைக்கப் பட்ட வெளிச்சமற்ற அறை, பிரிவுத் துன்பத்தால் உடல் வெம்பிப் புழுங்கலின், இங்ஙனம் கூறப்பட்டது.

**கொழுநர் வரவுபார்த்திருந்த நிலைகூறி விளித்தது:**

**“வருவார் கொழுநர் எனத்திறந்தும்**
**வாரார் கொழுநர் எனவடைத்தும்**
**திருகும் குடுமி விடியளவும்**
**தேயும் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

திறந்தும் அடைந்தும் குடுமி விடியளவும் தேயும் கபாடம் திறமின்.

**விளக்கம்:** கொழுநர் – கணவர், திருகும் - சுழலும். குடுமி வாயிலின் மேற்புறத்தமைந்த குழிவிடத்தோடு பொருத்தப்பெறும் கதவின் தலைப்பகுதி. விடி அளவும் - இரவுப் பொழுது நீங்கும் வரையும். தேயும் - தேய்ந்து போகும். இதனை யொப்ப 'தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத், தேயத் திரிந்த குடுமியவே' என வரும் முத்தொள்ளாயிரச் செய்யுளோடு ஒப்பவைத்துக் கண்டு மகிழ்க.

**கூடியும் ஊடியும் நின்ற நிலை கூறி விளித்தது:**

**"ஊடு வீர்கொழுநர் தங்கள் பான்முனிவொ**
**ழிந்து கூடுதலின் உங்களைக்**
**தேடுவீர் கடைகள் திறமி னோஇனிய**
**தெரிவை மீர்கடைகள் திறமினோ"**

**பொருள் நிலை:** ஊடுவீர்; முனிவு ஒழிந்து கூடுதலின், உங்களைத் தேடவீர், திறமினோ; தெரிவைமீர் திறமினோ.

**விளக்கம்:** கொழுநர் – கணவர். முனிவு – ஊடல்; கூடுதல் - புணர்தல், உங்களைத் தேடுவீர் – உங்களை மறந்திருப்பீர் என்றபடி அ∴தாவது காதல் மயக்கத்தால் தம்மைத்தாமே மறந்துகாதல் வயப்பட்டிருந்தல். இதனைக், 'தன்னையும் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற் றன்றே' என்னும் கம்பர் மொழியானும் அறிக. தெரிவை – பெண்.

**கண்ணியல்பு கூறி விளித்தது:**

**"பண்படு கிளவியை அமுதெனப்**
**பரவிய கொழுநனை நெறிசெயக்**
**கண்கொடு கொலைசெய அருளுவீர்**
**கனகநெ டுங்கடை திறமினோ"**

**பொருள் நிலை:**

அமுதெனப் பரவிய கொழுநனை நெறிசெய கொலை செய அருளுவீர் திறமினோ.

**விளக்கம்:** பண் - இசை, கிளவி – சொல். பரவிய – புகழ்ந்து கொழுநன் -கணவன். நெறிசெய (உங்கள்) வழிப்படுத்த. கொடுகொண்டு. கொலைசெய அருளுவீர் – கொலைபுரிய விரும்புபவர்களே. துங்களைப் புகழ்ந்த கணவரைக் கட்பார்வையால் வாட்டினர் என்க.

**பிரிவாற்றா வியலம்பு கூறி விளித்தது:**

**"பிழைநி னைந்துருகி அணைவு றாமகிழ்நர்**
**பிரிதல் அஞ்சிவிடு கண்கணீர்**
**மழை ததும்பவிரல் தரையி லேஎழுது**
**மடந லீர்கடைகள் திறமினோ"**

**பொருள் நிலை:**

மகிழ்நர் பிரிதல் அஞ்சி, நினைந்து, உருகி, விடுவீர் மழை ததும்ப, தரையிலே எழுது மடநலீர் திறமின்.

**விளக்கம்:** பிழை-பிரிய நினைந்த பிழை, அணைவுறா – அணைய நினையாத. கண்கள் நீர் – கண்களினின்றும் பெருகும் நீர். நீர்மழை- நீராகிய மழை. விரல் - காற் பெருவிரல். பிரிவுத்துன்பத்தால் கண்ணீர் மழைபோன்று பெருக.

**குலோத்துங்கனோடு ஒப்பித்து விளித்தது:**

**“நக்காஞ் சிக்கும் வடம லைக்கும்**
**நடுவில் வெளிக்கே வேடனைவிட்டு**
**அக்கா னகத்தே உயிர்பறிப்பீர்**
**அம்பொற் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

காஞ்சிக்கும் வடமலைக்கும் நடுவே வேடனைவிட்டு, கானகத்தே உயிர் பறிப்பீர் திறமின்;

**விளக்கம்:** நக்காஞ்சி – சிறந்த மேகலை; காஞ்சிநகரம், வட மலை – மாலை அணிந்த கொங்கைகள்; இமயமலை. நடுவில் - நடுவிடத்தே எனவும் நடுவஇல் நடு இடம் இல்லாத எனவும் இருபொருள் நயங் காண்க.

**மனங்கவரும் இயல்பு கூறி விளித்தது:**

**“செக்கச் சிவந்த கழுநீரும்**
**செகத்தில் இளைஞ ராருயிரும்**
**ஒக்கச் செருகும் குழன்மடவீர்**
**உம்பொற் கபாடம் திறமினோ”**

**பொருள் நிலை:**

கழுநீரும், இளைஞர் ஆருயிரும் செருகும் குழல் மடவீர், திறமின்.

**விளக்கம்:** செக்கச் சிவந்த – மிகச் சிவப்பான, கழுநீர் - கழுநீர்ப்பூ, செகம் - உலகம், குழல் - கூந்தல், பொன் - அழகு.

## 3. காடு பாடியது

கலிங்கத்துப் போர்க்களத்தில் பரணிக்கூழைப்பேய்கள் பெறுமாறு செய்த பேய்களின் தலையாகிய காளியைக் கூறப்புகுந்த ஆசிரியர். அவள் உறையும் இடமாகிய பாலை நிலத்தைச் சார்ந்த காட்டின் இயல்பை முதலாவதாகக் கூறுகின்றார்.

அக்காட்டில் கதிரவன் தெறிதலால் பொரிபொரியாய்ப் போன காரையும், கரிந்தபோன சூரையும் முதலான செடிகளும், கொடிகளும், மரங்களுமே எங்கும் காட்சியளிக்கின்றன. பருந்துகளும், புறாக்களும், மான்களும் ஆண்டாண்டுச் சில இடங்களில் காணப்படுகின்றன. ஒவ்வோரிடங்களில் மரப்பொந்துகளில் பாம்புகள் தலைநீட்டுகின்றன. கானல்நீர் எங்கும் காட்சியளிக்கின்றது. நாக இரத்தினங்களும் மூங்கில் முத்துக்களும் ஆண்டாண்டு சிதைந்து கீழே வீழ்ந்து கிடக்கின்றன. இங்ஙனம் பாலையின் கொடுமை தோன்றுமாறு, காளி உறையும் இக்காட்டை ஆசிரியர் கூறும் திறம் பெரிதும் உணர்ந்து மகிழத்தக்கது.

**தோற்றுவாய்**

**“களப்போர் விளைந்த கலிங்கத்துக்**
**கலிங்கர் நிணக்கூழ் களப்பேயின்**
**உளப்போர் இரண்டு நிறைவித்தாள்**
**உறையுங் காடு பாடுவாம்”**

**பொருள் நிலை:**

கலிங்கத்து, நிணக்கூழ் போர் இரண்டு நிறைவித்தாள் உறையும் காடு பாடுவோம்.

**விளக்கம்:** களம் - போர்க்களம், நிணம் - கொழுப்பு, உளப்போர் இரண்டு – உள் அ போர் இரண்டு. உள் வயிற்றினுள், போர் – பொந்து (போர்-போரை; பொந்து) நிறைவித்தாள் - நிறைவித்த காளி. ஊறையும் - இருக்கின்ற.

**காட்டின்இயல்பு கூறியது:**

**“பொரிந்த காரை கரிந்த சூரைபு**
**கைந்த வீரையெ ரிந்த வேய்**
**உரிந்த பாரையெ றிந்த பாலையு**
**லர்ந்த வோமைக லந்தவே”**

**பொருள் நிலை:**

காரை, சூரை, வீரை. வேய், பாரை, பாலை, ஓமை கலந்த.

**விளக்கம்:** பொரிந்த – பொரிபொரியாப் போன. உரிந்த – பட்டை உரிந்த எறிந்த - முறிந்த. கலந்த – கலந்தன. காரை சூரை விரை முதலிய மரங்கள் பொரிந்தும் கரிந்தும் புகைந்தும் எறிந்தும் போயினவெனின் அப்பாலையின் வெம்மையைப் பற்றிக் கேட்கவேண்டாவென்க.

**இதுவும் அது**

**“உதிர்ந்த வெள்ளிலு ணங்கு நெல்லியொ**
**டுங்கு துள்ளியு லர்ந்தவேல்**
**பிதிர்ந்த முள்ளிசி தைந்த வள்ளிபி**
**ளந்த கள்ளிப ரந்தவே”**

**பொருள் நிலை:**

வெள்ளில், நெல்லி, துள்ளி, வேல், மூன்று, வள்ளி – கள்ளி பரந்த,

**விளக்கம்:** உதிர்ந்த - இலை உதிர்ந்த, வெள்ளில் - விளா மரம். உணங்குதல் - உலர்தல். ஒடுங்குதல் - வளராது குறுகுதல் துள்ளி – ஒருவகை முட்செடி. வேல் - கருவேல், வெள்வேல் மரங்கள். பிதிர்தல் – பிளத்தல். முள்ளி – முள்ளிச்செடி. வள்ளி – வள்ளிக்கொடி. கள்ளி- கொடிக்கள்ளி, திருகுகள்ளி முதலியன. பரந்த – பரவியிருந்தன.

**இதுவும அது:**

**“வற்றல் வாகைவ றந்த கூகைம**
**டிந்த தேறுபொ டிந்தவேல்**
**முற்ற லீகைமு ளிந்த விண்டுமு**
**ரிந்த புன்குநி ரைந்தவே”**

**பொருள் நிலை:**

வாகை, கூகை, வேல், ஈகை, தண்டு, புன்கு நிறைந்த.

**விளக்கம்:** வறந்த-நீர்வற்றிய, கூகை- ஒருவகைக் கிழங்குக் கொடி. மடிந்த – அழிந்த. தேறு – தேற்றாமரம், முற்றுதல் - முதிர்தல், ஈகை - இண்டங்கொடி. முளிதல் - உலர்தல், விண்டு - மூங்கில். முரிதல் - ஒடிதல். புன்கு – புன்கமரம். நிறைந்த – வரிசையாக இருந்தன.

**நிலஇயல்பு கூறியது:”**

**“தீய வக்கொடிய கான கத்தரைதி**
**றந்த வாய்தொறும்நு ழைந்துதன்**
**சாயை புக்கவழி யாதெ னப்பரிதி**
**தன்க ரங்கொடுதி ளைக்குமே”**

**பொருள் நிலை:**

பரிதி, சாயை புக்கவழி யாதென, தரை திறந்த வாய்தொறும் நுழைந்து திளைக்கும்.

**விளக்கம்:** தரைதிறந்தவாய் - வெடிப்புகள். சாயை – ஞாயிற்றின் மனைவி. புக்கவழி – புகுந்த இடம். பரிதி-ஞாயிறு. கரம் - கை; ஒளிக்கதிர். திளைத்தல் - தொழிலில் இடைவிடாது பயிலல். ஒருகாலத்தில் சூரியன் மனைவியாகிய சாயை சூரியனை நீங்கிச் சென்றனள் எனவும் சூரியன் அவளைப் பலவிடங்களினுந் தேடித்திரிந்தனன் எனவும் கூறுவர்.

**நிழலின்மை கூறியது:**

**“ஆடு கின்றசிறை வெம்ப ருந்திநிழல்**
**அஞ்சி அக்கடுவ னத்தைவிட்டு**
**ஓடு கின்றநிழல் ஒக்கு நிற்கும்நிழல்**
**ஓரி டத்தும் உள அல்லவே”**

**பொருள் நிலை:**

பருந்தின் நிழல் ஓடுகின்ற நிழல் ஒக்கும்; நிற்கும் நிழல் ஓரிடத்தும் உள அல்ல.
**விளக்கம்:** ஆடுகின்ற-பறத்தலால் அசைகின்ற. கடுவனம் - கொடிய காடு. சிறை-சிறகு. அப்பாலை நிலத்தில் பறக்கும் பருந்தினுடைய நிழல் அந்நிலத்தின் வெம்மைக்காற்றாது ஓடுவதை ஒத்திருந்ததென்க.

**இதுவும் அது**

**“ஆத வம்பருகும் என்று நின்றநிழல்**
**அங்கு நின்றுகுடி போனதப்**
**பாத வம்புனல்பெ றாது ணங்குவன**
**பருகும் நம்மையென வெருவியே”**

**பொருள் நிலை:**

நின்ற நிழல். பாதவம் நம்மைப்ட பருகும் என வெருவி, அங்குநின்று குடிபோனது.
**விளக்கம்:** ஆதவம்,வெயில், நின்ற – மரத்தடியில் நின்ற. அங்கு – மரத்தடி. குடிபோனது – நீங்கிப்போயிற்று. பாதவம் - மரம், புனல் - நீர். உணங்குவன – உலர்வன. மரங்களும் தண்ணீரில்லாமையால் பட்டுபோய் நிழலற்று நின்றன என்க.

**புறாத் தென்படல் கூறியது:**

**“செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார்**
**செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்பு**
**அந்நெ ருப்பினில் புகைதி ரண்ட தொப்பு**
**அல்லது தொப்புறா அதனி டைப்புறா”**

**பொருள் நிலை:**

தரைபரப்பு, நெருப்பினைத் தகடுசெய்து பார் செய் தொக்கும்; அதனிடைப் புறா புகைதிரண்டது. ஒப்பு அல்லது ஒப்பு உறா.
**விளக்கம்:** செம்தரை – செந்நிறமுள்ள பாலை நிலம், பரப்பு-விரிவான இடம், பார் – பூமி. ஒப்பு – ஒப்புதல், உறா- பொருந்தாது, திரண்ட புகையன்றி வேறு ஒப்பு இல்லை என்க. தரைப்பரப்பு நெருப்பினைப்போன்றும் அந்நிலத்தில் பறக்கும் புறாக்கள் புகைத்திரட்சியைப் போன்றும் விளங்கினவென்க.

**மான்கள் இயல்பு கூறியது:**

**“தீயின் வாயின்நீர் பெறினு முண்பதோர்**

**சிந்தை கூரவாய் வெந்து வந்துசெந்**
**நாயின் வாயின்நீர் தன்னை நீரெனா**
**நவ்வி நாவினால் நக்கி விக்குமே”**

**பொருள் நிலை:**

நவ்வி, சிந்தை கூர, வெந்து, வந்து நாயின் வாயின் நீர் தன்னை நக்கி விக்கும்.

**விளக்கம்:** தீயின்வாய் - நெருப்பிடை, நீர்பெறினும் - நீர் கிடைப்பினும், ஆய் - ஆகி, வாயின் நீர் – வாயினின்று சொட்டும் நீர், நீர் எனா- தண்ணீரெனக் கருதி. நவ்வி – மான். செந்நாயின் வாய்நீர் நக்கத் தக்கதன்றாகலின் அதனை நக்கிய மானுக்கு விக்கலுண்டாயிற்று.

**நிலத்தின் வெம்மை கூறியது:**

**“இந்நி லத்துளோர் ஏக லாவதற்கு**
**எளிய தானமோ அரிய வானுளோர்**
**அந்நி லத்தின்மேல் வெம்மை யைக்குறித்து**
**அல்ல வோநிலத்து அடியி டாததே”**

**பொருள் நிலை:**

வானுளோர் அடி இடாதது வெம்மையைக் குறித்தல்லவோ; நிலத்துளோர் ஏகல் ஆவதற்கு எளிய தானமோ?

**விளக்கம்:** ஏகல் ஆவது – ஏகுவது, தானம் - இடம். வானுளோர்-தேவர். நிலத்து அடியிடாதது – பூமி மீது தம் கால்களை வைக்காமல் இரப்பது. கடவுளர்களின் கானிலந் தோயாமைக்குக்காரணம் இப்பாலை நிலத்தின் கொடுமையே என ஆசிரியர் ஒரு புதுமையான காரணத்தைக் கற்பித்துக் கூறுகிறார்.

**இதுவும் அது:**

**“இருபொழுதும் இரவிபசும் புரவிவிசும்பு**
**இயங்காதது இயம்பக் கேண்மின்**
**ஒருபொழுதுந் தரித்தன்றி ஊடுபோ**
**கரிதணங்கின் காடென் றன்றோ”**

**பொருள் நிலை:**

புரவி இயங்காதது கேண்மின்; அணங்கின் காடு ஊடுபோ கரிதென்றன்றோ?

**விளக்கம்:** இரவி – ஞாயிறு, புரவி – குதிரை, விசும்பு – வானம் இயங்காதது – செல்லாததன் காரணம். தரித்தல் - தங்கி இளைப்பாறல். ஊடு – நடுவே. போக அரிது – செல்லுதல் இயலாது. அணங்கு : காளி.

**இதுவும் அது:**

**“காடிதனைக் கடத்தும்எனக் கருமுகிலும்**
**வெண்மதியுங் கடக்க அப்பால்**
**ஓடிஇளைத்து உடல்வியர்த்த வியர்வன்றோ**
**உகுபுனலும் பனியும் ஐயோ”**

**பொருள் நிலை:**

முகிலும் மதியும் கடக்க, வியர்த்த வியர் வன்றோ புனலும் பனியும்.

**விளக்கம்:** கடத்தும் - கடப்போம். முகில் - மேகம், மதி - நிலா, உடல்வியர்த்த – தம்உடலின் வேர்த்தொழுகிய. புனல்-மழைநீர், பனி- பனிநீர். ஐயோ; இரக்கம் பற்றிவந்த இடைச்சொல்.

**இதுவும் அது:**

> **"விம்முகடு விசைவனத்தின் வெம்மையினைக்**
> **குறித்தன்றோ விண்ணோர் விண்ணின்**
> **மைம்முகடு முகிற்றிரையிட்டு அமுதவட்ட**
> **வாலவட்டம் எடுப்ப தையோ"**

**பொருள் நிலை:**

விண்ணோர், முகில் திரையிட்டு, ஆலவட்டம் எடுப்பது, வனத்தின் வெம்மையினைக் குறித்தன்றோ?

**விளக்கம்:** விம்மு – மிகுதியான, விசை – வெம்மையின் வேகம், வெம்மை – வெப்பம், முகடு – உச்சி, முகில் திரை – மேகமாகிய திரை. அமுதவட்டம் - நிலா, ஆல வட்டம் - விசிறி அமுதவட்டமாகிய ஆலவட்டம் என்க.

**மரங்களின் தோற்றம் கூறியது:**

> **"நிலம்புடைபேர்ந் தோடாமே**
> **நெடுமோடி நிறுத்தியபேய்**
> **புலம்பொடுநின் றுயிர்ப்பனபோல்**
> **புகைந்துமரங் கரிந்துளவால்"**

**பொருள் நிலை:**

நெடுமோடி நிறுத்திய பேய் உயிர்ப்பனபோல், மரம் கரிந்துள.

**விளக்கம்:** புடைபெயர்தல் - இடம்விட்டுப் பெயர்தல், நெடு – உயர்ந்த, மோடி – காளி, புலம்பொடு – தனியே, உயிர்த்தல் - மூச்சு விடுதல், உயிர்ப்பனபோல் கரிந்து புகைந்து நிற்கின்றன என்க.

**இதுவும் அது:**

> **"வற்றியபேய் வாயுலர்ந்து**
> **வறள்நாக்கை நீட்டுவபோல்**
> **முற்றியநீள் மரப்பொதும்பின்**
> **முதுப்பாம்பு புறப்படுமே"**

**பொருள்நிலை:**

பேய் நாக்கை நீட்டுவபோல், பாம்பு. மரப்பொதும்பில் புறப்படும்.

**விளக்கம்:** வற்றிய – மெலிந்த, உலர்தல் - ஈரம் புலர்தல். வறள்நாக்கு – வறண்ட நாக்கு, முற்றிய – முதிர்ந்த, பொதும்பு – பொந்து, முதுபாம்பு – பெரிய பாம்புகள். மரப்பொந்திலுள்ள பாம்புகள் தலையைவெளியே நீட்டிக்கொண்டு புறப்படுதல் நீர் வேட்கையால் நாவறளப்பெற்ற பேய்கள் வெளியே நாக்கை நீட்டுதலைப்போல் காணப்படுகின்றன என்க.

**சூறாவளியின் இயல்பு கூறியது:**

> **"விழிசுழல வருபேய்த்தேர்**
> **மிதந்துவரு நீரந்நீர்ச்**
> **சுழிசுழல வருவதெனச்**
> **சூறைவளி சுழன்றிடுமால்"**

**பொருள் நிலை:**

பேய்த்தேர் மிதந்துவரும் நீர் ஆகும் அந்நீர் சுழல வருவதென சூறைவளி சுழன்றிடும்;

**விளக்கம்:** பேய்த்தேர் – கானல், மிதந்துவரும் - மேலோங்கி வருகின்ற. சூறைவளி–சுழல்காற்று, கானலில் சுழி தோன்றுமாறு சுழற்காற்றடிக்குமென்க.

**மணிகள் கிடைத்தல் கூறியது:**

**"சிதைந்தவுடற் சுடுசுடலைப் பொடியைச் சூறை**
**சீத்தடிப்பச் சிதறியவப் பொடியால் செம்மை**
**புதைந்தமணி புகைபோர்த்த தழலே போலும்**
**போலாவேற் பொடிமூடு தணலே"**

**பொருள் நிலை:**

சூறை, சுடலைப் பொடியைச் சீத்தடிப்ப, அப்பொடியால் புதைந்த மணி தழலேபோலும்; போலாவேல் தணலேபோலும்.

**விளக்கம்:** சிதைந்த – உயிர்போய்ச் சிதைந்த, சூறை - சூறாவளி, சுழல்காற்று, சீத்து – கிளறி, புதைந்த – மறைந்த. மணி - இரத்தினம், பொடிமூடு தணல் - நீறு பூத்த நெருப்பு. செல்வராயினர் பிணங்களின் மீதுள்ள மணியணிகளைக் கழற்றா தொழிந்தமையின் அம்மணிகள் பலவிடங்களினுங்கிடந்த விளங்கலாயின.

**மூங்கில் முத்துதிர்தல் கூறியது:**

**"மண்ணோடி அறவறந்து துறந்து அங்காந்த**
**வாய்வழியே வேய்பொழியும் முத்தம் அவ்வேய்**
**கண்ணோடிச் சொரிகின்ற கண்ணீ ரன்றேல்**
**கண்டிரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும்"**

**பொருள் நிலை:**

வேய் பொழியும் முத்தம் கண்டு இரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும்,

**விளக்கம்:** ஓடி – வெடிப்பு ஓடி, வறந்து – வறண்டு, துறந்து பிடிப்பு நீங்கி, அங்காத்தல் - வாய்பிளத்தல், வேய் - மூங்கில், முத்தம் - முத்து. கண்ணோடி – கண்ணோட்டம் செய்து, கணுக்கள் வெடித்து, கண்டிரங்கி – கண்டு மனம் இரங்கி; கண் திரங்கி. கணுக்கள் சுருங்கி எனவும் கூறலாம் .முதிர்ந்த மூங்கில்களில் முத்துக்கள் உண்டாகி வெடித்து வெளிப்படுதலை இவ்வாறு பாலைநில வெம்மை கிரங்கிக் கண்ணீர் சொரிவதாகக் கற்பித்தார்.

**இதுவும் அது:**

**"வெடித்தகழை விசைதெறிப்பத் தரைமேல் முத்தம்**
**வீழ்ந்தனஅத் தரைபுழுங்கி அழன்று மேன்மேற்**
**பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும்**
**போலாவேல் கொப்புளங்கள் போலும் போலும்"**

**பொருள் நிலை:**

கழைநெறிப்ப வீழ்ந்தன ஆகிய முத்தம் வியர்ப்புள்ளிகளே போலும், போலாவேல் கொப்புளங்கள் போலும்;

**விளக்கம்:** கழை - மூங்கில், விசை – விரைவு, தெறிப்பு – வெடிக்க. புழுங்கி – வருந்தி. புள்ளி – வியர்வைத் துளிகள், முன்பாட்டிற் கண்ணீர்த்துளிகளெனக் கற்பித்தவர் இப்பாட்டில் வியர்வைத் துளிகளாகவுங் கொப்புளங்களாகவுங் கூறினார்.

**காற்றின் இயல்பு கூறியது:**

**"பல்கால்திண் திரைக்கரங்கள் கரையின் மேன்மேற்**
**பாய்கடல்கள் நூக்குமது அப்படர்வெங் கானிற்**
**செல்காற்று வாராமல் காக்க அன்றோ**
**திசைக்கரியின் செவிக்காற்று அதற்கே யன்றோ"**

**பொருள் நிலை:**

கடல், திரைக்கரங்களை நூக்கும் அது காற்று வாராமல் காக்க அன்றோ? கரியின் செவிக்காற்றும் அதற்கே அன்றோ?

**விளக்கம்:** பல்கால் - பலமுறை, திரைக்கரம் - அலையாகிய கை. நூக்குதல் - தள்ளுதல். திசை – திக்கு. கரி- யானை, செவிக்காற்று எழுப்பலும் அதற்கே என்க. அதற்கு – அதனை வாராமற்காக்க.

**வெப்பநிலை கூறியது:**

**"முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓட**
**முன்னொருநாள் வாளபயன் முனிந்த போரின்**
**வெள்ளாறும் கோட்டாறும் புகையான் மூட**
**வெந்தவனம் இந்தவனம் ஒக்கில் ஒக்கும்"**

**பொருள் நிலை:**

தென்னர் ஓட, அபயன் முனிந்த போரில் புகையால் மூட வெந்தவனம், இந்தவனம் ஒக்கும்;

**விளக்கம்:** முள் - முட்களையுடைய, ஆறு-வழி, கல் - பருக்கைக் கல், தென்னர் – பாண்டியர், முனிதல் - வெகுளல், வெள்ளாறு; ஆற்றின் பெயர். கோட்டாறு; ஊரின் பெயர், வனம் - பகை வெந்தரின் காவற்காடு.

**மணல் இயல்பு கூறியது:**

**"அணிகொண்ட குரங்கினங்கள்**
**அலைகடலுக்கு அப்பாலை**
**மணலொன்று காணாமல்**
**வரையெடுத்து மயங்கினவே"**

**பொருள் நிலை:**

குரங்கினங்கள், கடலுக்கு மணல் ஒன்று காணாமல், வரை எடுத்து மயங்கின.

**விளக்கம்:** அணிகொண்ட (இராவணனோடு) போர் செய்தற்கு எழுந்த, அயலகடல் - அலைகளையுடைய கடல், பாலைமணல், பாலை நிலத்தின் மணல், வரை – மலை, மயங்கின. – அறிவின்மையால் வருத்தமுற்றன.

## 4. கோயில் பாடியது

பேய்களுக்குக் கலிங்கக் கூழ் அளித்த தலைவியாகி காளி உறையும் காட்டைக் கூறியபின், அவளது கோயிலின் இயல்பு கூறப்படுகிறது.

கோயிலுக்கு அடிப்படை அமைத்ததும், சுவர் அடுக்கியதும் தூண் நிறுத்தி உத்திரம் சமைத்ததும், கூரையில் துலாம் அமைத்துப் பாப் பரப்பியதும், நாசிகை இயற்றியதும், கூரை வேய்ந்ததும், கோபுரமும் மதிலும் இயற்றியதும், மகர தோரணம் விளைத்ததும், கொடிய

முதலாகப் பல பொருள்களையும் சுற்றிலும் கட்டி அணி செய்ததும், ஊசல் அமைத்ததும், அலகிட்டு நீர் தெளித்துப், பூச்சிந்தி, விளக்கேற்றியதும் வரிசைப்படவும் அழகு பொருந்தவும் கூறப்பட்டுள்ள தன்மை வியத்தற்குரியதாகும்.

இதன் பின், உறுப்பரிந்து தருவோம் என வழிபடும் வீரர் முழக்கும், காளிமுன் வேள்வி வளர்க்கும் இயல்பும், தஞ்சிரத்தையரிந்து காளிக்குக் கொடுக்கும் வீரர் செயலும், பலிபீடத்தில் தலையரிந்து வைக்கும் இயல்பும், தலையரிந்து உடம்பு துடிக்கும் இயல்பும் உடுக்கையடித்துக் கடாப்பலி இடும் முழக்கும் கூறப்படுகின்றன.

பிறகு சாதகர் யோகினியர் காளியை வணங்கவரும் இயல்பு கூறப்படுகிறது.

அடுத்து, மூங்கில்தொறும் அரிந்த தலைகள் தொங்கவிடப்பட்டிருக்கும் காட்சி சொல்லப்படுகிறது.

கடைசியாகக், கொள்ளிவாய்ப்பேய், பருந்து. நரி, சுடுகாடு, பிணம் நெருப்பு, செம்பருத்தி, பேய் முதலிய கோயிலைச் சூழ்ந்திருக்கும் இயல்பு கூறப்பட்டுள்ளது.

**தோற்றுவாய்:**

**“ஓதி வந்தஅக் கொடிய கானகத்து**
**உறைய ணங்கினுக்கு அயன்வ குத்தவிப்**
**பூத லம்பழங் கோயில் என்னினும்**
**புதிய கோயிலுண்டு அதுவி ளம்புவாம்”**

**பொருள் நிலை:**

கானகத்து அணங்கினுக்குப் பூதலம் பழங்கோயில்; என்னினும், புதிய கோயில் உண்டு, அதுவிளம்புவாம்.

**விளக்கம்:** ஓதிவந்த – சொல்லப்பட்ட, உறைதல் - தங்கியிருத்தல், அணங்கு – காளி, அயன் - பிரமன், பூதலம் - உலகம்.

**கோயில் கடைகால் இயல்பு கூறியது:**

**“வட்ட வெண்குடை சென்னி மானதன்**
**வாளின் வாயினால் மறலி வாயிடைப்**
**பட்ட மன்னர்தம் பட்ட மங்கையர்**
**பரும ணிக்கருத் திருஇ ருத்தியே”**

**பொருள் நிலை:**

மானதன் வாளின் வாயினால் பட்ட மன்னர்தம் மங்கைய(ருடைய) மணி(யைக்) கரு(வாக) இருத்தி.

**விளக்கம்:** சென்னி – சோழன், மானதன் - குலோத்துங்கன், மறலி - இயமன். பட்ட – வீழ்ந்த. பட்டமங்கையர் – பட்டத்துத்தேவியர். மணி – நகைகளிற் பதித்த இரத்தினம், திரு- அழகிய. கரு இருதிதி- அடித்தளம் அமைத்து. திருக்கரு இருத்தி என இயைக்க. புதுக்கட்டிடத்திற்குக் கடைகால் இடுங்கால் பொன் மணிகளை இடல் மரபென்க.

**சுவர் இயல்பு கூறியது:**

**“துவர்நி றக்களிற்று உதிய ரேவலின்**
**சுரிகை போர்முகத்து உருவி நேரெதிர்த்து**
**அவர்நி ணத்தொடுஅக் குருதி நீர்குழைத்து**
**அவர்க ருந்தலை சுவர டுக்கியே”**

**பொருள் நிலை:**

உதியர் ஏவலின், எதிர்த்தவர் நிணத்தொடு, அக்குருதிநீர் குழைத்து, கருந்தலைச் சுவர் அடுக்கி.

**விளக்கம்:** துவர் – சிவப்பு, உதியர் – சேரர், சுரிகை உருவி என இயைக்க. சுரிகை – உடைவாள், போர் முகம் - போர்க்களம், எதிர்த்தவர் – சேரநாட்டு வீரர், நிணம் - கொழுப்பாகிய சேறு, குருதி – செந்நீர், அவர் – அவ்வீரர்கள். கரும்தலை – பெரிய தலை.

**தூண், உத்திர இயல்பு கூறியது:**

**"அறிஞர் தம்பிரான் அபயன் வாரணம்**
**அரசர் மண்டலத் தரண றப்பறித்து**
**எறித ரும்பெருங் கணைம ரங்கள்கொண்டு**
**எழுது தூணொடு உத்திர மியற்றியே"**

**பொருள் நிலை:**

வாரணம் பறித்து எறிதரும் கணைமரங்கள் கொண்டு தூணொடு உத்திரம் இயற்றி.

**விளக்கம்:** பிரான் - தலைவன், வாரணம் - யானை, அரண் - காவற்காடு, கணைமரம் - கோட்டை வாயிற்கதவின் குறுக்கே இடும்மரம், எழுதுதூண் - பதித்த தூண்.

**துலாம்பா இயல்பு கூறியது:**

**"கடித ழிந்துபோர் மிதிலை யிற்படும்**
**கரிம ருப்பினைத் திரள்து லாமெனும்**
**படிப ரப்பி அப் பரும யானையின்**
**பழுஎ லும்பினில் பாஅ டுக்கியே"**

**பொருள் நிலை:**

கரி மருப்பினைத் துலாம் எனும்படி பரப்பி யானையின் பழு எலும்பினில் பா அடுக்கி.

**விளக்கம்:** மிதிலை – மிதிலைநகரம், கரி – யானை, மருப்பு – தந்தம், துலாம் - உத்திரத்தின் மேல் முக்கோண வடிவுடன் நிறுத்திய மரம், பா. கூரையில் இருபக்கமும் பரப்பும் கைகள்.

**நாசிகை இயல்பு கூறியது:**

**"மீளி மாவுகைத்து அபயன் முன்னொர்நாள்**
**விருத ராசரைப் பொருது கொண்டபோர்**
**ஆளி வாரணங் கேழல் சீயமென்று**
**அவைநி ரைத்துநா சிகையி ருத்தியே"**

**பொருள் நிலை:**

அபயன், உகைத்து, பொருது, கொண்ட அவை நிரைத்த நாசிகை இருத்தி.

**விளக்கம்:** மீளி - வலிமை, மா-யானை, விருது வெற்றிச் சின்னம், ஆளி – யாளி, வாரணம் - யானை, கேழல் - பன்றி, சீயம் - சிங்கம், இவை எழுதிய கொடிகள் என்க. நிரைத்து வரிசையாக வைத்து. நாசிகை - கூடல் வாய்.

**மேற்கூரை இயல்பு கூறியது:**

**"துங்க பத்திரைச் செங் களத்திடைச்**
**சோள சேகரன் வாளெ றிந்தபோர்**
**வெங்க தக்களிற் றின்ப டத்தினால்**

**வெளிஅ டங்கவே மிசைக விக்கவே”**

**பொருள் நிலை:**

சோளசேகரன், செங்களத்திடை எறிந்த களிற்றின் படத்தினால் மிசை கவிக்க.

**விளக்கம்:** செங்களம் போர்க்களம், சோளன் - சோழன் - குலோத்துங்கன், கம் - சினம, வெளி அடங்க – வெற்றிடமில்லாது மறையும்படி, படம் - முகபடாம், மிசை - கூரை.

**கோபுர மதில் இயல்பு கூறியது:**

**“கொள்ளிவாய்ப் பேய்காக்கும்**
**கோபுரமும் நெடுமதிலும்**
**வெள்ளியால் சமைத்ததென**
**வெள்ளெலும் பினால்சமைத்தே”**

**பொருள் நிலை:**

கோபுரமும் மதிலும் எலும்பினாற் சமைத்து.

**விளக்கம்:** சமைத்தல் - ஆக்கல்

**மகரதோரண இயல்பு கூறியது:**

**“காரிரும்பின் மகரதோ ரணமாகக் கரும்பேய்கள்**
**ஓரிரண்டு கால்நாட்டி ஓரிரும்பை மிசைவளைத்தே”**

**பொருள் நிலை:**

பேய்கள், தோரணமாக, இரண்டு கால்நாட்டி இரும்பை மிசை வளைத்து;

**விளக்கம்:** மகரம் - சுறாமீன், தோரணம் - குறுக்காகக் கட்டும் கொடி, மிசை – மேல்.

**அணி செயல் வகை கூறியது:**

**“மயிற்கழுத்தும் கழுத்தரிய மலர்ந்தமுகத்**
**தாமரையும் மருங்கு சூழ்ந்த**
**எயிற்கழுத்தும் நிணக்கொடியும் இளங்குழவி**
**பசுந்தலையும் எங்கும் தூக்கி”**

**பொருள் நிலை:**

மயில் கழுத்தும், முகத்தாமரையும், நிணக் கொடியும், பசுந்தலையும் எங்கும் தூக்கி.

**விளக்கம்:** கழுத்தரிதல் தேவிக்குப் பலி இடற்கு, மருங்கு – பக்கம், எயில்- மதில், அழுத்தல் - செருகுதல், நிணக்கொடி–கொழுப்பாலான கொடிச்சீலை, பசுந்தலை - இளமையுள்ள தலை. குழவி – குழந்தை.

**இதுவும் அது**

**“பணியாத வழுதியர்தம் பாய்களிற்றின்**
**செவிச்சுளகு பலவும் தூக்கி**
**மணியூசல் எனமதுரை மகரதோ**
**ரணம்பறித்து மறித்து நாட்டி”**

**பொருள் நிலை:**

செவிச்சுளகு பலவும் தூக்கி, மணி ஊசலென. மகர தோரணம் நாட்டி.

**விளக்கம்:** வழுதியர் – பாண்டியர், சுளகு-முறம், தூக்குதல் - தொங்கவிடுதல். முறித்து – மீண்டும்.

**இதுவும் அது**

**“பரிவிருத்தி அலகிட்டுப் பசுங்குருதி**
**நீர்தெளித்து நிணப்பூச் சிந்தி**
**எரிவிரித்த ஈமவிளக்கு எமமருங்கும்**
**ஏற்றியதோர் இயல்பிற் றாலோ”**

**பொருள் நிலை:**

அலகிட்டு, நீர் தெளித்து, பூச்சிந்தி, விளக்கேற்றியதோர் இயல்பிற்று.

**விளக்கம்:** பரிவிருத்தி – பரிவு இருத்தி – அன்பை நிலையுறச் செய்து, அக்கோவில் - சுற்றுப்புறம், குருதி – செந்நீர், நிணம் - கொழுப்பு, எரி – தீ, ஈமம் - சுடலை.

**வழிபாட் டியல்பு கூறியது:**

**“சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்**
**தருகவரம் வரத்தினுக்குத் தக்க தாகப்**
**பலியாக உறுப்பரிந்து தருதும் என்று**
**பரவுமொலி கடலொலிபோல் பரக்கு மாலோ”**

**பொருள் நிலை:**

வீரர் “வரம் தருக; தக்கதாக உறுப்பரிந்து தருதல்” என்று பரவும் ஒலி பரக்கும்;

**விளக்கம்:** சலியாத – மனந்தளராத, தறுகண் - அஞ்சாமை, தருக – தருவாயாக, பலி – கொடுக்கின்ற கடன், உறுப்பு –அவயவம், பரவுதல் - துதித்தல். பரக்கும் - பரவும்.

**இதுவும் அது**

**“சொல்லரிய ஓமத்தீ வளர்ப்ப ராலோ**
**தொழுதிருந்து பழுவெலும்பு தொடரவாங்கி**
**வல்லெரியின் மிசையெரிய விடுவ ராலோ**
**வழிகுருதி நெய்யாக வார்ப்ப ராலோ”**

**பொருள் நிலை:**

ஓமத்தீ வளர்ப்பர், எலும்பு வாங்கி எரியவிடுவர், குருதி நெய்யாக வார்ப்பர்.

**விளக்கம்:** பழு எலும்பு – விலா எலும்பு. தொடர – ஒன்றோடொன்று தொடர்புற்று நிற்க. வாங்கி – பிடுங்கி. வல் எரி – மிகு நெருப்பு, குருதி – செந்நீர், வார்ப்பர் – ஊற்றுவர்.

**இதுவும் அது**

**“அடிக்கழுத்தி நெடுஞ்சிரத்தை அரிவ ராலோ**
**அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ**
**கொடுத்தசுரம் கொற்றவையைப் பரவு மாலோ**
**குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ”**

**பொருள் நிலை:**

சிரத்தை அரிவர், அரிந்த சிரம் கொடுப்பர், கொடுத்த சிரம் பரவும்,
குறை உடலம் கும்பிட்டு நிற்கும்.

**விளக்கம்:** அடிக்கழுத்து – கழுத்தின் முதலிடம், அரிவர் – அறுப்பர், அணங்கு – காளி, கொற்றவை – காளி. பரவும் - துதிக்கும் குறை உடலம் - தலையற்ற உடம்பு.

**பலியிட்ட தலை இயல்பு கூறியது**

**“நீண்டபலி பீடத்தில் அரிந்து வைத்த**
**நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் னினமென் றெண்ணி**
**ஆண்டலைப்புள் அருகணைந்து பார்க்கு மாலோ**
**அணைதலும்அச் சிரம்அச்ச முறுத்து மாலோ”**

**பொருள் நிலை:**

ஆண்டலைப்புள், வைத்த சிரத்தை இனமென்றெண்ணி, அணைந்து பார்க்கும்; அச்சிரம் அச்சுறுத்தும்.

**விளக்கம்:** பலிபீடம் - பலிக்கடன் செலுத்தும் மேலிடம், குஞ்சி – மயிர்முடி, சிரம் - தலை, ஆண்டலைப்புள் - ஆண்டலை என்றும் பறவை. அருகு – தன்பக்கம். அணைதல் - சேர்தல்.

**உடல் கண்ட பேய்நிலை கூறியது**

**“கடன மைந்ததுக ருந்தலைஅ ரிந்த பொழுதே**
**கடவ தொன்றுமிலை என்றுவிளை யாடு முடலே**
**உடல்வி ழுந்திடின்று கர்ந்திடஉ வந்த சிலபேய்**
**உறுபெ ரும்பசிஉ டன்றிடஉ டன்றிரியுமே”**

**பொருள் நிலை:**

உடல் “அரிந்த பொழுதே கடன் அமைந்தது கடவதொன்றுமில்லை”என்று விளையாடும், பேய் பசி உடன்றிட உடன் திரியும்.

**விளக்கம்:** கடன் - நாம் செய்யவேண்டிய கடன், கடவது – செய்யக்கடவது. உவந்த – விரும்பிய. உறு-மிக்க. உடன்றிட. – வருத்த, உடன் - அவ்வுடலுடன், திரியும் - செல்லாநிற்கும், உடல் துள்ளிக் கொண்டிருத்தலின், அருகே செல்ல அஞ்சிநின்றன பேய்கள் என்க.

**எருமைக்கடாப் பலி கூறியது**

**“பகடி டந்துகொள்ப சுங்குருதி இன்று தலைவி**
**புலிகொள் என்றகுரல் எண்டிசைபி ளந்து மிசைவான்**
**முகடி டந்துரும் எறிந்தெனமு ழங்க உடனே**
**மொகுமொ கென்றொலிமி குந்தமரு கங்கள் பலவே”**

**பொருள் நிலை:**

“தலைவி, இன்று குருதிகொள், பலிகொள்” என்ற குரல், பிளந்து, இடந்து, முழங்க, உடனே, தமருகங்கள் ஒலிமிகும்.

**விளக்கம்:** பகடு – எருமைக்கடா. இடத்தல் - பிளத்தல், கொள் - கொண்ட, பசுங்குருதி – பச்சிரத்தம், இன்று - இப்பொழுது, முகடு – உச்சி, உரும் - இடி, எறிந்தன - இடித்தாற் போல, மொகு மொகு என்பன, ஒலிமிகுதி குறிக்கும் இடைச்சொல், தமருகம் - உடுக்கை.

**சாதகர் இயல்பு கூறியது:**

**“தமரு கங்கள்தரு கின்றசதி யின்கண் வருவார்**
**அமரி இன்புறும்அ நாதிவரு சாத கர்களே”**

**பொருள் நிலை:**

சாதகர்கள் சதியின்கண் வருவார்.

**விளக்கம்:** தமருகம் - உடுக்கை, சதி – தாள ஒழுங்கு. அமிரி - காளி. சாதகர் – காளியின் மெய்காப்பாளர்.

**யோகினியர் இயல்பு கூறியது**

**"படைவ லங்கொடுப சுந்தலைஇ டங்கொ டணைவார்**
**இடைமொ ழிந்து இடைநு டங்கவரு யோகினிகளே"**

**பொருள் நிலை:**

மொழிந்து, நுடங்கவரு யோகினிகள் வலங்கொடு இடங்கொடு அணைவார்.

**விளக்கம்:** படை – வாள், இடம் - இடப்பக்கம், கொடு- கொண்டு, இடைமொழிதல் - இடையிடையே சில பேசிக்குகொள்ளுதல், இடை நுடங்க - இடுப்புத் துவள, யோகினி – காளியின் பரிவார மகளிர்.

**பேய் இயல்பு கூறியது:**

**"வீங்குதலை நெடுங்கழையின் மிசைதோறுந்**
**திசைதோறும் விழித்து நின்று**
**தூங்குதலை சிரிப்பனகண் டுறங்குதலை**
**மறந்திருக்கும் சுழல்கட் சூர்ப்பேய்"**

**பொருள் நிலை:**

பேய், மிசைதோறும் திசைதோறும் தலைவிழித்து நின்று சிரிப்பன கண்டு உறங்குதலை மறந்திருக்கும்,

**விளக்கம்:** வீங்குதல் - பருத்தல், நெடுங்கழை – நீண்ட மூங்கில், தூங்குதுல் - தொங்குதல். உறங்குதல் - துயிலுதல் , சுழல்கண் - சுழற்சிகொண்ட கண், சூர் – அச்சம்.

**பலிஇட்ட தலை இயல்பு கூறியது:**

**"அரிந்ததலை உடனமர்ந்தே ஆடுகழை**
**அலைகுருதிப் புனலின் மூழ்கி**
**இருந்தவுடல் கொளக்காலன் இடுகின்ற**
**நெடுந்தூண்டி என்னத் தோன்றும்"**

**பொருள் நிலை:**

தலையுடன் ஆடு தழை காலன் இடுகின்ற தூண்டில் என்னத் தோன்றும்.

**விளக்கம்:** அரிந்த – அறுத்த, அமர்ந்து – பொருந்தி, கழை - மூங்கில், காலன் - இயமன், குருதியாகிய தண்ணீரில் உடலாகிய மீனைப் பிடிக்க மூங்கிலாகிய தூண்டிலை இயமனாகிய தூண்டிற்காரன் இட்டதுபோன்று என்க.

**கொள்ளிவாய்ப் பேய் இயல்பு கூறியது:**

**"கொல்வாய் ஓரி முழவாகக்**
**கொள்ளி வாய்ப்பேய் குழவிக்கு**
**நல்வாய்ச் செய்ய தசைதேடி**
**நரிவாய்த் தசையைப் பறிக்குமால்"**

**பொருள் நிலை:**

குழவிக்கு ஓரி முழவாகப் பேய் குழவிக்குத் தசை தேடி, நரிவாய்த் தசையைப் பறிக்கும்.

**விளக்கம்:** கொல்வாய் - உயிர்களைக் கொல்கின்ற வாய், ஓரி – கிழநரி. குழவி – குழந்தை. தசை - இறைச்சி.

**காளி கோயிலின் சூழலிட இயல்பு கூறியது**

**"நிணமும் தசையும் பருந்திசிப்ப**
**நெருப்பும் பருத்தி யும்போன்று**
**பிணமும் பேயும் சுடுகாடும்**
**பிணங்கு நரியும் உடைத்தரோ"**

**பொருள் நிலை:**

நெருப்பும் பருத்தியும் பிணமும் பேயும் சுடு காடும் நரியும் உடைத்து.

**விளக்கம்:** நிணம் - கொழுப்பு, தசை – சதை, இறைச்சி, இசிப்ப - இழுப்ப, பருத்தி – செம்பருத்தி, பொன் றுதல் -இறத்தல், பிணங்குதல் - சண்டையிடல், உடைத்து –உடையது.

## 5. தேவியைப் பாடியது

ஈண்டு அக்கோயிலில் உறையும் காளி கூறப்படுகின்றாள். காளி அணிந்திருக்கும் சிலம்பு, பொட்டு, அவளது கூத்து. கொங்கை, உடை, வயிறு, மேலாடை, கை. உதடு, முகம், காதணி மாலை என்பன அடைவே கூறப்படுமாறு வியப்புச்சுவை நிறைந்து இன்பஞ் செய்வதாகும்.

**தோற்றுவாய்:**

**"உவையுவை உளஎன் றெண்ணி**
**உரைப்ப தென்உரைக் கவந்த**
**அவை அவை மகிழ்ந்த மோடி**
**அவயவம் விளம்பல் செய்வாம்"**

**பொருள் நிலை:**

உவை உவை உள என்று உரைப்பதென்; அவை அவை மகிழ்ந்த மோடி அவயவம் விளம்பல் செய்வாம்.

**விளக்கம்:** உவை உவை உளஎன்று – காளிபக்கம் இன்னின்ன பொருள் இருக்கின்றன என்று, அவை அவை மகிழ்ந்த – அவ்வெல்லாப் பொருளையும் ஏற்று மகிழ்ந்த. மோடி – காளி.

**இணையடிச் சிறப்புக் கூறியது:**

**"ஒருமலை மத்துவலத்து உலவுக யிற்றினுமற்று**
**உலகுப ரித்தபணத்து உரகவ டத்தினும்அப்**
**பருமணி முத்துநிரைத்து உடுமணி தைத்தஇணைப்**
**பரிபுரம் வைத்ததளிர்ப் பதயுக ளத்தினளே"**

**பொருள் நிலை:**

கயிற்றினும் வடத்தினும் முத்து நிரைத்த மணி தைத்த பரிபுரம் வைத்த பதத்தினள்.

**விளக்கம்:** மலை – மந்தரமலை. முத்து – தயிர்கடைமத்து, வலித்து –மேலே சுற்றி, கயிறு – கயிறாயிருந்த வாசுகி. பரித்தல் - தாங்குதல், பணம் - படம், உரகம் - (ஆதிசேடனாகிய) பாம்பு.

**கூத்தின் சிறப்புக் கூறியது**

**"அரவொடு திக்கயமப் பொழுதுப ரித்தவிடத்து**

அடியிட உட்குழிவுற்று அசைவுறும் அப்பொழுதில்
தரணித ரித்ததெனப் பரணிப ரித்தபுகழ்ச்
சயதர னைப்பரவிச் சதிகொள்ந டத்தினளே”

**பொருள் நிலை:**

திக்கயம் பரித்த இடத்து, அடி இட அசைவுறும் அப்பொழுதில் (சயதரனால்) தரணி தரித்ததென, சயதரனைப் பரவி, சதிகொள் நடத்தினள்.

**விளக்கம்:** அரவு – ஆதிசேடன், திக்கயம் - திக்கயம் - திசையானை அப்பொழுது – அந்தக் காலம்.

**தனததின் சிறப்பு கூறியது:**

“தணிதவ ளப்பிறையைச் சடைமிசை வைத்தவிடைத்
தலைவர்வ னத்தினிடைத் தனிநுகர் தற்குநினைத்து
அணிதவ ளப்பொடியிட்டு அடையவி லச்சினையிட்டு
அமுதமி ருத்தியசெப் பனையத னத்தினளே”

**பொருள் நிலை:**

தலைவர் நுகர்தற்கு நினைத்து, பொடி இட்டு, இலச்சினை இட்டு, அமுதம் இருத்திய செப்பு அனைய தனத்தினள்.

**விளக்கம்:** தணி – வெம்மையைக் குறைக்கின்ற; தண்ணிய எனற்பாலது தணி என நின்றது, குளிர்ந்த என்றவாறு, தவளம், வெண்மை. விடை – எருது. தலைவர் – சிவன். வனம் - காடு.

**உடைச் சிறப்புக் கூறியது:**

“பரிவக லத்தழுவிப் புணர்கல விக்குருகிப்
படர்சடை முக்கணுடைப் பரமர்கொ டுத்தகளிற்று
உரிமிசை யக்கரியிற் குடரொடு கட்செவியிட்டு
ஒருபுரி இட்டுஇறுகப் புனையுமு டுக்கையளே”

**பொருள் நிலை:**

பரமர் கலவிக்கு உருகிக் கொடுத்த களிற்று உரிமிசை, ஒருபுரி இட்டு இறுகப் புனையும் உடுக்கையள்.

**விளக்கம்:** பரிவு – காமத்துன்பம். கலவி – ஒன்றுபட்ட இன்பம், படர் – விரித்த. பரமர் – சிவனார். உரி – தோல். கரி - யானை. குடர் – குடல்; ஈற்றுப் போலி. கட்செவி – பாம்பு. புரிமுறுக்கிய கயிறு. உடுக்கை – அரைக்கச்சு.

**வயிற்றின் சிறப்புக் கூறியது:**

“கலைவளர் உத்தமனைக் கருமுகில் ஒப்பவனைக்
கரடத டக்கடவுட் கனகநி றத்தவனைச்
சிலைவளை வுற்றவுணத் தொகைசெக விட்டபரித்
திறலவ னைத்தரும்அத் திருஉத ரத்தினளே”

**பொருள் நிலை:**

உத்தமனை, முகில் ஒப்பவனை, கனக நிறத்தவனை, திறலவனை, தரும் அத்திரு உதரத்தினள்.

**விளக்கம்:** உத்தமன் - பிரமன், முகில் ஒப்பவன் - திருமால். கரடம் - மதம் பாய் சுவடு. கனகம் - பொன். கனக நிறத்தவன் - யானைமுகன். அவுணர் – அசுரர். செக – அழிய. பரி – மிக்க. திறலவன் - முருகன். தரும் - பெற்ற. திரு – அழகு. உதரம் - வயிறு.

**மேலாடைச் சிறப்பு:**

**"கவளம தக்கரடக் கரியுரி வைக்கயிலைக்**
**களிறுவி ருப்புறும்அக் கனகமு லைத்தரளத்**
**தவளவ டத்திடையிற் பவளமொ டொத்தெரியத்**
**தழலுமிழ் உத்தரியத் தனிஉர கத்தினளே"**

**பொருள் நிலை:**

கயிலைக்களிறு விருப்புறும் முலைத் தரளவடத்திடையில் பவளமொடு ஒத்த எரிய தழல் உமிழ் உரகத்தினள்.

**விளக்கம்:** கவளம் - உணவுருண்டை, மதக்கரடம்- மத நீர்வரும் சுவடு. கயிலைக் களிறு – சிவன். கனகம் - பொன், தரளம் - முத்து, தவளம் - வெண்மை, வடம்- மாலை, உத்தரியம் - மேலாடை, உரகம் - பாம்பு உமிழ் உரகம், உத்தரியமாகிய உரகம் எனத் தனித்தனி இயைக்க.

**கையின் சிறப்பு கூறியது:**

**"அரியுமி டற்றலையிட்டு அலைகுரு திக்கெதிர்வைத்து**
**அறவும டுத்தசிவப் பதனைமு ழுத்திசையின்**
**கரிகர டத்தொளையின் கலுழியி டைக்கழுவிக்**
**கருமைப டைத்தசுடர்க் கரகம லத்தினளே"**

**பொருள் நிலை:**

குருதிக்கு எதிர்வைத்து மடுத்த, சிவப்பதனைக் கலுழி இடைக்கழுவிக் கருமை படைத்த கர கமலத்தினன்;

**விளக்கம்:** அரியும் - அறுக்கும். மிடறு – கழுத்து. அலையிட்டு – அலையை உண்டாக்கி, அலை – நான்கு புறமும் பரக்கின்ற. குருதி – செந்நீர். எதிர்வைத்தல் - மொள்ளுதல். மடுத்தல் - கருகல். கரி-யானை. கலுழி – வெள்ளம். கரகமலம் - கைத்தாமரை.

**உதட்டின் சிறப்புக் கூறியது:**

**"சிமையவ ரைக்கனகத் திரளுரு கப்பரவைத்**
**திரைசுவ றிப்புகையத் திசைசுடு மப்பொழுதத்து**
**இமையவ ரைத்தகைதற்கு இருளுமி டற்றிறைவற்கு**
**இனியத ரத்தமுதக் கனியத ரத்தினளே"**

**பொருள் நிலை:**

திரள் உருக, திரை புகைய, திசை சுடும் அப்பொழுது, இருளும் மிடற்று இறைவற்கு அமுதக்கனி அதரத்தினள்.

**விளக்கம்:** சிமையக் கனவரைத் திரள் என இயைக்க – சிமையம் - கொடுமுடி. கனகவரை – மேருமலை. திரள் - கூட்டம். பரவை – கடல். திரை – அலை. அப்பொழுது – ஆலகாலவிடம்

எழுந்தபொழுது. இமயவர் – தேவர். தகைதல் - (விடம்பற்றாமல்) அடக்கல், மிடறு – கழுத்து, இறைவன் - சிவன், தரம் - தன்மை. கனி – கொவ்வைக்கனி, அதரம் - உதடு.

**வாயில் சிறப்புக் கூறியது**

**"உருகுத லைத்தொ டையற்கு வமைய றச்சுழல்வுற்று**
**உலவுவி ழிக்கடைபட்டு உடல்பகை யற்றொழியத்**
**திருகுரவைக் கிளவிச் சிறுகுத லைப்பவளச்**
**சிறுமுறு வற்றரளத் திருவத னத்தினளே"**

**பொருள் நிலை:**

விழிக்கடைபட்டு, உருகு தலைத் தொடையற்கு உடல்பகை அற்று ஒழிய, குரவை, குதலை, முறுவல் தரளத் திரு அதனத்தினள்.

**விளக்கம்:** உருகு – ஆசையால் உருகுகின்ற, தலைத்தொடையன் - தலைமாலையணிந்த சிவன். சுழல்வுற்று – சுழன்று. விழிக்கடை – கடைக்கண் பார்வை. ஊடல் பகை – காமநோய். குரவை – நாவை உருட்டிச் செய்யும் மகிழ்ச்சியொலி.

**திருமுகச் சிறப்புக் கூறியது:**

**"அருமறை யொத்தகுலத்து, அருணெறியொத்த குணத்து**
**அபயனு தித்தகுலத்து உபயகு லத்துமுதல்**
**திருமதி யொக்குமெனத் தினகர னொக்குமெனத்**
**திகழ்வத னத்தினிடைத் திலகவ னப்பினளே"**

**பொருள் நிலை:**

அபயன் உதித்த உபயகுலத்து முத (லாகிய) மதி. தினகரன் ஒக்குமென, வதனத்திடை, திலக வனப்பினள்;

**விளக்கம்:** குலத்து – குல ஒழுக்கத்தினையுடைய குணத்து – குணத்தினையுடைய. குலத்து – மேன்மையான. உபய குலம் - தந்தைதாயர் குலம் .முதல் - முதல்வனாகிய. மதி – திங்கள், தினகரன் - ஞாயிறு, வதனம் - முகம். திலகம் - பொட்டு. வனப்பு - அழகு.

**போருருவச் சிறப்புக் கூறியது:**

**"அண்டமுறு குலகிரிகள்**
**அவளொருகால் இருகாதில்**
**கொண்டணியின் குதம்பையுமாம்**
**கோத்தணியின் மணிவடமாம்"**

**பொருள் நிலை:**

அவன், குலகிரிகள் (ஐ) காதிற் கொண்டணியல் குதம்பையாம்; கோத்தணியின் மணிவடமாம்.

**விளக்கம்:** அண்டம் - உலகம், கிரி – மலை. ஒருகால் - ஒருசமயம். குதம்பை – காதோலை. வடம் - மாலை.

**இதுவும் அது:**

**"கைம்மலர்மேல் மம்மனையாம்**
**கந்துகமாம் கழங்குமாம்**
**அம்மலைகள் அவள்வேண்டின்**

ஆகாத தொன்றுண்டோ?"

**பொருள்நிலை:**

அம்மலைகள், அம்மனையாம், கந்துகமாம், கழங்குமாம், வேண்டின் ஆகாதது ஒன்று உண்டோ,

**விளக்கம்:** அம்மனை – அம்மனை விளையாட்டுக்கருவி. கந்துகம் - பந்து, கழங்கு – கழற்சிக்காய்.

## 6. பேய்களைப் பாடியது

அத்தேவியைச் சூழ்ந்திருக்கும்பேய்களின் இயல்பு ஈண்டுக் கூறப்படுகிறது.

பேய்களின் கை, கால், வாய், வயிறு, முழந்தாள், உடம்பு, கன்னம், கண், முதுகு, உந்தி, உடல்மயிர், மூக்கு, செவி, பல், தாலி, தலை, உதடு, என்பவற்றின் இயல்பு வியப்புறுமாறு கூறப்படுகின்றன.

பின் கான்முடப்பேய், கைம்முடப்பேய், குருட்டுப்பேய், ஊமைப்பேய், செவிட்டுப்பேய், குறட்பேய், கூன்முதுகுப்பேய் ஆகிய காளியைச் சூழ்ந்திருந்த பேய்களின் இயல்பு கூறப்படுகிறது. இத்தொடர்பாகக் குலோத்துங்கன் வெற்றிச்சிறப்புப் பல குறிக்கப்படுவது பெரிதும் போற்றத்தக்கது.

**தோற்றுவாய்:**

**"எவ்வணங்கும் அடிவணங்க**
**இப்பெருமை படைத்துடைய**
**அவ்வணங்கை அகலாத**
**அலகைகளை யினிப்பகர்வாம்"**

**பொருள் நிலை:**

அடிவணங்கப் பெருமை படைத்துடைய அணங்கை அகலாத அலகைகளைப் பகர்வாம்.

**விளக்கம்:** அணங்க – தெய்வமகளிர், அணங்கு – காளி, அலகை –பேய்.

**பேய்களின் கையால் இயல்பு கூறியது**

**"பெருநெ டும்பசி பெய்கல மாவன**
**பிற்றை நாளின்முன் னாளின் மெலிவன**
**கருநெ டும்பனங் காடுமு ழுமையுங்**
**காலுங் கையுமு டையன போல்வன"**

**பொருள் நிலை:**

பசிபெய் கலமாவன, மெலிவள; கையும் காலும் உடையன. பனங்காடு போல்வன.

**விளக்கம்:** கலம் - ஏனம், பிற்றை நாள் - மறுநாள், கரு- கருமை நிறம், மெலிவன பசியாலென்க.

**வாய், வயிறு, முழந்தாள் இயல்பு கூறியது**

**"வன்பி லத்தொடு வாதுசெய் வாயின**
**வாயி னால்நிறை யாதவ யிற்றின**
**முன்பி ருக்கின்மு கத்தினு மேற்செல**
**மும்மு ழம்படும் அம்முழந் தாளின"**

**பொருள் நிலை:**

வாயின, வயிற்றின, முழந்தாளின;

**விளக்கம்:** பிலம் - குகை, வாது செய்தல் - (தாமே பெரியன என்று) வழக்கிடல், இருக்கின் - குத்துகாலிட்டு உட்கார்ந்தால், முகத்தினும் மேற்சொல – அவற்றின் முழந்தாள் அவற்றின் முகத்துக்கும் மேற்பட்டுச் செல்லுதல் என்க.

**உடம்பின் இயல்பு கூறியது:**

**"வெற்றெ லும்பைந ரம்பின்வ லித்துமேல்**
**வெந்தி லாவிற கேய்ந்தவு டம்பின**
**கொற்ற லம்பெறு கூழிலம் எங்களைக்**
**கொள்வ தேபணி யென்றுகு ரைப்பன"**

**பொருள் நிலை:**

விறகு ஏய்ந்த உடம்பின, கூழ் இலம்; பணி கொள்வதே என்று குரைப்பன.

**விளக்கம்:** வலித்தல் - கட்டல், மேல் வெந்து இலா – மேற்புறம் வேகாத, ஏய்ந்த – ஒத்த, உள்வயிறு வெந்தும் மேல் தெரியும் விறகுபோன்ற எலும்பு வேவவில்லை யென்க. கொல்தலம் - கொல்லும் இடமாகிய போர்க்களம். கூழ் - நிணக்கூழ், கொள்வதே – கொள்ளலாமோ, பணி – குற்றேவல், குரைப்பன – ஓலமிடுவன.

**கன்னம், வழி, இயல்பு கூறியது:**

**"உள்ளொ டுங்கியி ரண்டுமொன் றாகவே**
**ஒட்டி ஒட்டிவி டாதகொ டிற்றின**
**கொள்ளி கொண்டிரண் டேமுழை யுட்புகின்**
**குன்று தோன்றுவ போலவி ழிப்பன"**

**பொருள் நிலை:**

ஒட்டுவிடாத கொடிற்றின; குன்றுதோன்றுவது போல விழிப்பன.

**விளக்கம்:** இரண்டு இரண்டு கன்னமும், கொடிறு - கன்னம், கொள்ளி – கொள்ளிக்கட்டை,எம், ஏமம் - பாதுகாப்பான, முழை – குகை. புகின் - ஒருவன் புகுந்தால் (அப்பொழுது) குன்று – மலை.

**முதுகு, உந்தி இயல்பு கூறியது:**

**"வற்ற லாகஉ லர்ந்தமு துகுகள்**
**மரக்க லத்தின்ம றிபுற மொப்பன**
**ஒற்றை வான்றொளைப் புற்றென பாம்புடன்**
**உடும்பு முட்புக்கு றங்கிடும் உந்திய"**

**பொருள் நிலை:**

முதுகுகள் மரக்கலத்தின் மறிபுறம் ஒப்பன. பாம்புடன் உடும்பும் உறங்கிடும் உந்திய;

**விளக்கம்:** வற்றல் ஆக- வற்றலைப்போல, மரக்கலம் - படகு; மறிபுறம் - காற்றால் மறிந்த புறப்பக்கம், வான்தொளை – பெரிய துளை. புற்று – வளை. புக்கு – புகந்து, உந்திய – கொப்பூழையுடையன.

**உடல், மயிர், மூக்கு, செவி இயல்பு கூறியது:**

**"பாந்தள் நால்வன போலுமு டல்மயிர்**

**பாசி பட்டப ழுந்தொளை மூக்கின**
**ஆந்தை பாந்தியி ருப்பத்து ரிஞ்சில்புக்கு**
**அங்கு மிங்குமு லாவுசெ வியின"**

**பொருள் நிலை:**

பாந்தள் போலும் மயிர்; பழந்தொளை மூக்கின; துரிஞ்சில் உலாவு செவியன.

**விளக்கம்:** பாந்தள் - பாம்பு, நாறுதல் - தொங்குதல் - பழம் பாசி – நாட்பட்ட அழுக்கு. பட்ட- பொருந்திய, பாந்தியிருத்தல் - பதுங்கியிருத்தல் துரிஞ்சில் - வௌவால் இனத்தைச் சேர்ந்தது, உலாவு – உலாவித் திரிகின்ற.

**பல், தாலி, தலை, உதடு இயல்பு கூறியது:**

**"கொட்டு மேழியுங் கோத்தன பல்லின**
**கோம்பி பாம்பிடைக் கோத்தணி தாலிய**
**தட்டி வானைத்த கர்க்குந் தலையின**
**தாழ்ந்து மார்பிடைத் தட்டும்உ தட்டின"**

**பொருள் நிலை:**

கோத்தன்ன பல்லின; கோத்து அணி தாலிய; தகர்க்கும் தலையின; தட்டும் உதட்டின.

**விளக்கம்:** கொட்டு – மண்வெட்டி, மேழி – கலப்பையின் மேழி. கோத்த அன்ன – கோவைப்படுத்தியது போன்ற. கோம்பி – ஓந்தி. பாம்பிடை – பாம்பின்கண். தட்டி – மோதி, வான் - விண். தகர்க்கும் - உடைக்கும்.

**பேய்க்குழவிகளின் இயல்பு கூறியது.**

**"அட்ட மிட்டநெ டுங்கழை காணில்என்**
**அன்னை யன்னையென் றாலுங்கு ழவிய**
**ஒட்ட வொட்டகங் காணில்என் பிள்ளையை**
**ஒக்கு மொக்குமென் றொக்கலை கொள்வன"**

**பொருள் நிலை:**

குழவி, கழை காணில் அன்னை என்று ஆலும் பேய் ஒட்டகம் காணில் ஒக்கலை கொள்வன.

**விளக்கம்:** அட்டம் - அண்மை; பக்கம். கழை - மூங்கில், ஆலும் - ஒலியிடும். குழவி – பேயின் குழந்தைகள். ஒட்ட – அண்மையில். பிள்ளை – குழந்தை. ஒக்கலை - இடுப்பு.

**பேயின் பசி இயல்பு கூறியது:**

**"புயல ளிப்பன மேலும ளித்திடும்**
**பொற்க ரத்தப யன்புலி பின்செலக்**
**கயலொ ளித்தக டுஞ்சுரம் போல் அகங்**
**காந்து வெம்பசி யிற்புறத் தீந்தவும்"**

**பொருள் நிலை:**

அபயன் புலி பின் செல, கயல் ஒளித்த சுரம் போல் காந்து வெம்பசியில் புறம் தீந்த;

**விளக்கம்:** புயல் - மேகம். அளிப்பன மேல் - அளிப்பனவற்றிற்கு மேல். பொன் அளித்திடும் - பொன்னைக் கொடுக்கின்ற. கரம் - கை அபயன் - குலோத்துங்கன். புலி – புலிக்கொடி. பின்செல

– துரத்தக் கொண்ட போக. குயல் - கயற்கொடி. சுரம் - பாலைநிலம். புறம் - வெளிப்பக்கம். தீதல் - கரிதல்.

**காளியைச் சூழ்ந்த பேய் இருப்புக் கூறியது:**

**"துஞ்ச லுக்கணித் தாமென முன்னமே**
**சொன்ன சொன்னது றைதொறும் பேயெலாம்**
**அஞ்ச லித்தொரு கால்அக லாமலவ்**
**வணங்கி னுக்கரு காகவி ருக்கவே"**

**பொருள் நிலை:**

பேய் எலாம், சொன்ன துறைதொறும் அணங்கினுக்கு அருகாக, அஞ்சலித்து, இருக்க.

**விளக்கம்:** துஞ்சல் - (பசியால்) இறத்தல்,அணித்து – நெருங்கியது. துறை - இடம். அஞ்சலித்து – வணங்கி. ஒருகால் - ஒரு காலமும். அகலாமல் விட்டுச் செல்லாமல். அணங்கு – காளி.

**கால்முடப் பேயைக் கூறியது:**

**"ஆளை சீறுக ளிற்றப யன்பொரூஉம்**
**அக்க ளத்தில்அ ரசர்சி ரஞ்சொரி**
**மூளைச் சேற்றில்வ ழுக்கிவி ழுந்திட**
**மொழிபெ யர்ந்தொரு கால்முட மானவும்"**

**பொருள் நிலை:**

அபயன் பொரூஉம் களத்தில், அரசர் சிரம் சொரி மூளைச் சேற்றில் வழுக்கி விழுந்திடகால் முடமானவும்,

**விளக்கம்:** ஆள் - ஆண்மை வீரர்கள். சீறு – சினந்து கொள்கின்ற. களிறு – யானை. அபயன் - குலோத்துங்கன., பொரூஉம் - போர்செய்கின்ற. களம் - போர்க்களம், சொரி – சிந்துகின்ற. சிரம்- தலை. மொழி – கால் மூட்டு.

**கைம்முடப் பேயைக் கூறியது:**

**"அந்த நாளக்க ளத்தடு கூழினுக்கு**
**ஆய்ந்த வெண்பல்ல ரிசியு ரற்புக**
**உந்து போதினிற் போதகக் கொம்பெனும்**
**உலக்கை பட்டுவ லக்கைசொற் றானவும்"**

**பொருள் நிலை:**

வெண்பல் அரிசி, உரல்புக, உந்து போதினில் போதகக் கொம்பெனும் உலக்கைபட்டு வலக்கை சொற்று ஆனவும்.

**விளக்கம்:** அந்தநாள் - குலோத்துங்கன் போர் புரிந்த நாள். அக்களம் - போர்க்களம். அடுதல் - சமைத்தல். கூழ–நிணக்கூழ். ஆய்ந்த – ஆராய்ந்தெடுத்த. வெண்பல் அரிசி – வெள்ளை நிறமுள்ள கற்களாகிய அரிசி. உந்துதல் - குற்றுதல். போதகக் கொம்பு – யானைத்தந்தம். சொற்று – சொற்றை. ஊனம் - முடம்.

**குருட்டுப் பேயைக் கூறியது:**

**"விருத ராசப யங்கரன் முன்னொர்நாள்**
**வென்ற சக்கரக் கோட்டத்தி டைக்கொழுங்**

**குருதி யுங்குட ருங்கலந்து அட்டவெங்**
**கூழ்தெ றித்தொரு கண்குரு டானவும்”**

**பொருள் நிலை:**

சக்கரக்கோட்டத்திடை, கூழ் தெறித்து ஒரு கண் குருடானவும்,

**விளக்கம்:** விருதராச பயங்கரன் - குலோத்துங்கன்; வெற்றிச் சின்னங்களையுடைய அரசர்களுக்கு அச்சமுண்டாக்குவோன். சக்கரக்கேட்டம் - சக்கரக்கோட்டம் என்னும் ஊர். குருதி – செந்நீர், அட்ட – சமைத்த. வெம்கூழ் - சுடுகூழ் தெறித்தல் - படுதல்.

**ஊமைப் பேயைக் கூறியது:**

**“வண்டல் பாய்பொன்னி நாடனை வாழ்த்திமா**
**மதுரை வெங்கள தேமது ரிக்கஅட்**
**டுண்ட கூழொடு நாவுஞ்சு ருண்டுபுக்கு**
**உள்வி ழுந்தற ஊமைக ளானவும்”**

**பொருள் நிலை:**

மதுரைக்களத்தே, பொன்னிநாடனை வாழ்த்தி அட்ட கூழொடு, நாவும் சுருண்டு ஊமைகளானவும்.

**விளக்கம்:** வண்டல் - இளஞ்சேறு. பொன்னி – காவிரி, மருதுரிக்க-இனிக்க. அட்டு – சமைத்து, நாச்சுருண்டது – கொதிக்கும் கூழை ஆசையால் உட்கொண்டமையின். உள்புக்கு – உள்ளேசென்று.

**செவிட்டுப் பேயைக் கூறியது:**

**“ஆனை சாயவ டுபரி ஒன்றுகைத்து**
**ஐம்ப டைப்பரு வத்தஅப யன்பொருஞ்**
**சேனை வீரர்நின் றார்த்திடும் ஆர்ப்பினில்**
**திமிரி வெங்களத் திற்செவி டானவும்”**

**பொருள் நிலை:**

அபயன், பரி உகைத்து பொரும் திமிரி வெங்களத்தில் வீரர் ஆர்த்திடும் ஆர்ப்பினில் செவிடானவும்.

**விளக்கம்:** ஆனை – யானை, அடு-கொல்லுகின்ற, பரி – குதிரை, உகைத்து – செலுத்தி ஓட்டி. ஐம்படைப்பருவம் - ஐம்படைத்தாலி அணியும் இளமைப் பருவம்,ஐம்படை; வில், வாள், தண்டு, வளை, ஆழி என்பன. இவைகளின் உருவைப் பொன்னாற் செய்து இளஞ்சிறார்களுக்குக் கழுத்தலணிவது பண்டையோர் மரபு. அபயன் - குலோத்துங்கன். ஆர்ப்பு – பேரொலி.

**குறட் பேயைக் கூறியது:**

**“பண்டு தென்னவர் சாயஅ தற்குமுன்**
**பணிசெய் பூதக ணங்கள னைத்தையுங்**
**கொண்டு வந்தபேய் கூடிய போதில்அக்**
**குமரி மாதர்பெ றக்குற ளானவும்”**

**பொருள் நிலை:**

தென்னவர் சாய, அதற்குமுன். பூதகணங்கள் அனைத்தையும், பேய் கூடிய போதில், அம்மாதர் பெறக், குறள் ஆனவும்.

**விளக்கம்:** தென்னவர் – பாண்டியர். சாய – கெட. அதற்கு முன் - சாய்வதற்குமுன். பணி செய்தல் தென்னவர்க் கென்க. பூதகணங்கள் - பூதக்கூட்டம் கூடிய போதில் - அக் குறட்பூதங்களோடு பேய்கள் புணர்ந்த போதில், குமரி மாதர் - இளைய குறட் பெண் பூதங்கள். குறள் - குறுகிய வடிவம்.

**கூன் பேயைக் கூறியது**

**"பரக்கு போதக்க டாரம ழித்தநாள்**
**பாய்ந்த செம்புன லாடியும் நீந்தியுங்**
**குரக்கு வாதம்பி டித்தவி தத்தினில்**
**குடிய டங்கலுங் கூன்முது கானவும்"**

**பொருள் நிலை:**

கடாரம் அழித்தநாள், செம்புனல் ஆடியும் நீந்தியும், குரங்கு வாதம் பிடித்த விதத்தினில் கூன் முதுகு ஆனவும்.

**விளக்கம:** ஓதம் - கடற்சார்பு. கடாரம் - பர்மா நாட்டின் கடற்கரையை அடுத்த ஓரூர். செம்புனல் - குருதி. ஆடுதல் - நீந்தி விளையாடுதல். குரங்கு வாதம் - குரங்குபோனற் கூனல் உண்டாக்கும் ஒரு வகை நோய். விதத்தினில் - விதத்தால். குடி அடங்கலும் - சில பேய்க் கூட்டம் முழுதும்.

**திறந்த விரற்பேயைக் கூறியது:**

**"சிங்க ளத்தொடு தென்மது ராபுரி**
**செற்ற கொற்றவன் வெற்றிகொள் காலையே**
**வெங்க ளத்தில் அடுமடைப் பேய்க்குலம்**
**வேலை புக்குவி ரல்கள் திறந்தவும்"**

**பொருள் நிலை:**

வெற்றிகொள் காலை, களத்தில் அடுபேய்க்குலம் வேலை புக்கு விரல்கள் திருந்தவும்.

**விளக்கம்:** செற்ற- அழித்த. கொற்றவன் - குலோத்துங்கன், களம் - போர்க்களம், அடுதல் - சமைத்தல், மடைத்தொழில் - சமையற்றொழில், வேலை – கடல்.

**சிறு வினாக்கள்:**

1. கலிங்கத்துப்பரணியில் சிவ, திருமால் வணக்கங்கள் குறித்து எழுதுக.
2. பாலை நிலத்தின் வெம்மையைப் பற்றி செயங்கொண்டார் எவ்வாறு பாடுகிறார்?
3. காளிதேவியின் அணிசெயல் வகைகளை எழுதுக.

**பெருவினாக்கள்:**

1. கலிங்கப்போர் குறித்த செய்திகளை விளக்கி வரைக?
2. காளி தேவியைச் சூழ்ந்திருக்கும் பேய்களின் இயல்புகளைத் தொகுத்துரைக்க.
3. கலிங்கத்துப்பரணி நூல் உணர்த்தும் காளிதேவியின் தோற்றம் குறித்து விவரிக்க.

# நந்திக்கலம்பகம்

தமிழில் உள்ள சிறந்த சிற்றிலக்கியங்களில் 96 வகைளில் ஒன்று நந்திக்கலம்பகம் ஆகம். இந்நல் மிகவும் சுவையானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. கலம்பக உறுப்புகள் பதினெட்டு ஆகும். இந்நூலில் இடம் பெறும் கலம்பக உறுப்புகள் புயம், அம்மானை, ஊசல், வண்டு காலம், மறம், கைக்கிளை முதலிய உறுப்புக்களை கொண்டதாக அமைந்துள்ளது. நந்திக்கலம்பக பாட்டுடைத் தலைவனாக தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மன் ஆகும். இவன் சிவபக்தி உடையவன். நந்திவர்மன் தமிழ்ப்பற்று மிக்கவன். சான்றாக ‘‘நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்’’ என்பதை சோமேசர் முதுமொழி வெண்பா கூறுகிறது.

நந்திக்கலம்பகம் அக, புறச் செய்திகளை கொண்டுள்ள நூலாக அமைகிறது.

**1. தலைவி தனது மெலிவு கண்டு வருந்திக் கூறுதல்:**

**‘‘எனதே கலைவளையும் என்னதே மன்னர்**
**சினவேறு செந்தனிக்கோல் நந்தி - இனவேழம்**
**கோமறுகில் சீறிக் குருக்கோட்டை வென்றாடும்**
**பூமறுகில் போகாப் பொழுது’’**

**தெளிவுரை:**

மன்னர்களுக்குள்ளே கோபமுடைய ஆண் சிங்கம் போல்வனாகிய ஒப்பற்ற செங்கோலுடைய நந்தியின் நல்லினத்துக் களிறு, பகை மன்னர் வீதியில் சினந்து சென்று குருக்கோட்டை என்னும் கோட்டையை வென்றதால், அவ்வெற்றியைக் கொண்டாடும் அழகிய வீதியில் நான் செல்லாதபொழுது, யான் அணிந்த ஆடை என்னுடையதாகவே இருந்தது, கை வளையலும் என்கையகத்தேயே இருந்தது.

**2. குருகு விடுதூது:**

**‘‘பொழுதுகண்டு ஆய்அதிர் கின்றது**
**போகநம் பொய்யற்கு என்றும்**
**தொழுது கொண் டேன்என்று சொல்லு கண்**
**டாய் தொல்லை நூல்வரம்பு**
**முழுதுகண் டான்நந்தி மல்லையங்**
**கானல் முதல்வனுக்குப்**
**பழுதுகண் டாய்இதைப் போய்ப்பகர்**
**வாய்நிறைப் பைங்குருகே’’**

**தெளிவுரை:**

அழகிய பசுமையான சிறகுடைய நாரையே! மாலைப் பொழுதைக் கண்டு என் தாய் அதட்டிப் பேசுதல் போக, பழமையான நூல்களின் எல்லை முழுதும் அறிந்தவனாகிய நந்தியின் மாமல்லபுரத்திலுள்ள அழகிய கானலையுடைய தலைவனுக்கு உண்டான குற்றத்தை அறிந்தாய்; ஆகையால் அவனிடத்தில் சென்று இதனைக் கூறுவாயாக; அன்றியும், நமது களவொழுக்கதில் வரும்படித் தொழுது கொண்டேன் என்றும் சொல்லுவாயாக.

**3. தலைவி கூற்று:**

**‘‘புயங்களின் பூவைமார் பொங்கு கொங்கையின்**

**நயங்கொளத் தகுபுகழ் நந்தி நச்சிசூழ்**
**கயங்களில் கடிமலர் துழாவிக் காமுகர்**
**பயங்கொளப் புகுந்தது பருவ வாடையே”**

**தெளிவுரை:**

வாடைப் பருவக்காற்று, தனது தோள்களில் மகளிரின் மேன்மேலும் வளர்கின்ற முலைகளில் இன்பத்தைக் கொள்ளத்தக்க நந்தி மன்னது காஞ்சிபுரத்தைச் சூழ்ந்துள்ள தடாகங்களில் மணமுள்ள மலர்களிலுள்ள மகரந்தத்தை அளைந்து, காதலர்கள் அஞ்சும்படி ஊரினுள்ளே புகுந்தது.

**4. தலைவி கூற்று:**

**வாடை நோக வீசு மால்அம்**
**மாரன் வாளி தூவுமால்**
**ஆடல் ஓதம் ஆர்க்கு மால் என்**
**ஆவி காக்க வல்லனோ**
**ஏடு லாவு மாலை சேதி**
**ராசன் மல்லை நந்திதோள்**
**கூடி னால்அ லர்வ ராது**
**கொங்கு விம்மு கோதையே”**

**தெளிவுரை:**

மணம் நிறைந்த மலர் மாலை போன்ற தோழியே! வாடைக்காற்று என் மனம் வருந்தும்படி வீசுகின்றது; அந்த மன்மதன் மலரம்புகளை என்மீது இறைக்கின்றான்; அலையசையும் கடல் முழங்குகின்றது. பூவிதழ் விளங்கும் மாலையணிந்த அரசனாகிய நந்தி மன்னன் தோளைச் சேர்ந்தால், அதனால் பழிச்சொல் உண்டாகாது; அவன் எனது உயிரைக் காக்க வல்லனோ.

**5. தலைவி இரங்கல்:**

**“ஆர்க்கின்ற கடலோதம் ஆர்க்கு மாறும்**
**ஆசைகின்ற இளந்தென்றல் அசையுமாறும்**
**கூர்க்கின்ற இளமதியம் கூர்க்கு மாறும்**
**காணலாகும் குருக்கோட்டைக் குறுகா மன்னர்**
**போர்க்கின்ற புகர் முகத்துக் குளித்த வாளி**
**பூதலத்தில் வடிம்பலம்பப் பூண்ட வில்லோன்**
**பார்க்கொன்று செந்தனிக்கோல் பைந்தார் நந்தி**
**பல்லவர் கோன் தண் அருள்யாம் படைத்த ஞான்றே”**

**தெளிவுரை:**

குருக்கோட்டையிலிருந்த பகைமன்னரின் போர் செய்கின்ற யானையின் புள்ளி பொருந்திய முகத்தில் தைத்த அம்பு, பூமியில் சென்றுபதியும்படி நின்ற வில்லையுடையவனாகிய உலகுக்குப் பொருந்திய செம்மையான ஒப்பற்ற நீதியையுடைய பசுமையான மாலையை யணிந்த நந்திப் பல்லவனின் குளிர்ந்த அருளை நாம் பெற்றபொழுது ஒலிக்கின்ற கடலொலி ஒலிக்கும் வகையும், அசைகின்ற இளந்தென்றற் காற்று வீசும் வகையும், நிலவொளி மிகுகின்ற இளம்பிறை நிலவை மிகுக்கும் வகையும் காணலாம்.

நந்திமன்னனின் அருளைப் பெறாத தலைவி, கடலொலியும் இளந்தென்றலும் இளமதியும் தன்னை வருத்துதல் கண்டு நந்தியின் அருளைப் பெற்றபொழுது இவை வருத்தாது இன்பம் தருதலைக் காணலாம் என்று கூறினாள்.

6. **தலைவி கூற்று:**

**“நாணாது இத்திரு மடவார் முன்புநின்**
**நன்பொற் கழலிணை தொழுதாரில்**
**பூணா கத்தொளிர் பொலனா கச்செய்த**
**புதுமென் தொண்டையது அருளாயே!**
**வாணா ளைச்சுளி களியா னைப்படை**
**வயவேல் அடையலர் குலகாலா!**
**கோணா மைக்கொரு குறையுண் டோஉரை**
**கொங்கா! நின்னது செங்கோலே”**

**தெளிவுரை:**

போரில்லாவிடில் தன் வாழ்நாளைப் பயனற்றதாக்க கோபிக்கும் மத மயக்கத்தையுடைய யானைப்படையையும், வெற்றி தரும் வேலையும் கொண்ட பகைவர் குலத்திற்கு எமனே! கொங்க நாட்டை ஆள்பவனே! இந்த அழகிய மாதர்களுக்கு எதிரே உனது நல்ல பொன்னாலான வீரக்கழலையணிந்த இரண்டு திருவடிகளையும் வணங்கியவரைப் போல், அணிகளை அணிந்த மார்பில் விளங்குகின்ற பொன்னால் செய்த புதிய மென்மையான தொண்டை மலர் மாலையை வெட்கமுறாது தந்தருள்வாய்; நீதி வளையாதிருத்தலுக்கு ஒரு குறை உள்ளதோ? நீ இதற்கு மறுமொழி கூறுவாயாக.

7. **தலைவி கூற்று:**

**மாட்டாதே இத்தனைநாள் மால்நந்தி வான்வரைத்தோள்**
**பாட்டாதே மல்லையர்கோன் பரியானைப் பருச்சுவடு**
**காட்டாதே கைதைப் பொழில் உலவுங் காவிரிநீர்**
**ஆட்டாதே வைத்தென்ன ஆயிரமுஞ் செய்தரே”**

**தெளிவுரை:**

இவ்வளவு நாட்களாக என்னை அம்மன்னனோடு கூட்டாமலும், திருமாலான நந்தி மன்னனின் பெரிய மலைபோன்ற தோளைப் பாடாமலும் மல்லையர்க்குத் தலைவனான அவனது குதிரையின் கால் சுவட்டையும், யானையின் பெரிய கால் சுவட்டையும் காட்டாமலும், தாழைச் சோலையில் உலாவுகன்ற காவிரியாற்றின் நீரில் என்னை நீராட்டாமலும் வறிதே வைத்து வேறு காரியங்களை மிகுதியாகச் செய்தீர்களே?

இதில் தலைவி தன் துயரம் நீங்குவதற்கான வழிகளைத் தோழிகளிடம் உணர்த்தினாள்.

8. **தலைவி கூற்று:**

**“தனக்குரிய என்கொங்கை தான்பயந்த**
**மழகளிற்றுக் காக்கித் தன்பால்**
**எனக்குரிய உரைமார்பம் எங்கையர்க்கே**
**ஆக்கினான் இகல்வேல் மன்னர்**
**சினக் கரியும் பாய்மாவும் தெள்ளாற்றில்**
**சிந்துவித்த செங்கோல் நந்தி**
**மனக்கினியான் அவன்இட்ட வழக்கன்றோ**
**வழக்கிந்த வையத் தார்க்கே”**

**தெளிவுரை:**

பகை கொண்ட வேலுடைய அரசர்களின் கோபமுடைய யானையையும், பாய்ந்து செல்லும் குதிரையையும் தெள்ளாறு என்னும் இடத்தில் அழியச் செய்த செங்கோலுடைய நந்தி

மன்னவனுக்கு உரியதான எனது கொங்கையை, தான் பெற்ற இளங்களிறு போன்ற மகனுக்கு உரிமையாகச் செய்து தன்னிடத்தே உள்ள எனக்குரியதாகிய மலை போன்ற மார்பை என் தங்கையர்க்கே உரியதாகச் செய்தான்; இந்த உலகத்தவரின் மனத்துக்கு இனியவனான அப்பல்லவன் வைத்த நீதியன்றோ நீதியாகும்.

**9. தலைவிக் கூற்று:**

**மலர்ச் சூழல் அமர்ந்தினிய வண்டார்க்கும் காலம்**
**வரிக்குயில்கள் மாவில்இளம் தளிர்கோதும் காலம்**
**சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல் அமுதளிக்கும் காலம்**
**தீவினையேற்கு அத்தென்றல் தீவீசும் காலம்**
**பலர்க்கெல்லாம் கோல்நந்தி பன்மாடக் கச்சி**
**பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடும் காலம்**
**மலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றும் காலம்**
**அகன்றுபோ னவர்நம்மை அயர்ந்து விட்ட காலம்"**

**தெளிவுரை:**

இன்னிசையுடைய வண்டுகள் மலருள்ள இடத்தில் தங்கி இசைபாடுங் காலம்; இசைப் பாட்டைப் பாடும் குயில்கள் மாமரத்தின் இளமையான செந்தளிர்களைத் தமது அலகால் கோதும் காலம்; செழுமையான தென்றற் காற்று சில மகளிர்க்கெல்லாம் இனிமையைத் தருகின்ற காலம்; கொடிய தீவினையுடைய எனக்கு அத்தென்றற் காற்று அனலை வீசுகின்ற காலம்; பல மனிதர்க்கெல்லாம் அரசானான நந்தி மன்னவனது பல மாடங்களையுடைய அந்நந்தியின் அருளைப் பார்த்து பெரிய முத்துக்களை எறிந்து விளையாடுகின்ற காலம்; மலர்களுக்கெல்லாம் ஐந்து வகையான மலரும்புகளையுடைய மாரன், அம்மலர்களை எடுத்து அம்புகளாக இறைக்கின்ற காலம்; பிரிந்து சென்றவர் நம்மைக் கைவிட்ட காலமாகும்.

**10. தலைவி கூற்று:**

**"கடற்கூதிர் மொய்த்த கழிப்பெண்ணை நாரை**
**மடற்கூறு தேறும் மலிமல்லை கங்குல்**
**அடற்கூடு சாவே யமையாது அவர்வை**
**திடற்கூறு வேனுக்கு ஏது ஆவி யுண்டோ?**

**தெளிவுரை:**

கடலின் குளிர்காற்றச் சூழ்ந்து உப்பங்கழியிலுள்ள பனை மரத்தின் மடற் பகுதிகளிளெல்லாம் நாரைகள் தங்கும்படியான மாமல்லபுரத்தில் இவ்விரவு வருத்துதலுக்கிடையே பேசுந்துணை இல்லாமல் அப்பரத்தையர் வைதலுக்கு அமைந்த எனக்கு ஏதேனும் உயிர் உண்டோ? (இல்லை).

**11. தலைவிக் கூற்று:**

**"தோளால் மெலியாமே ஆழ்கடலால் சோராமே**
**வாளா பெறலாமே வாய்அற்றீர் – கேளாதார்**
**குஞ்சரங்கள் சாயக் குருக்கோட்டை அத்தனையும்**
**அஞ்சரங்கள் ஆர்த்தான் அருள்"**

**தெளிவுரை:**

பேசும் திறமையற்ற தோழியர்களே! பகைவரின் யானைப்படை கெட, குருக்கோட்டைகள் எல்லாவற்றிலும் அழகிய அம்புகளை நிறைந்த நந்தி மன்னனின் அருளை, நம் தோள்கள் இளைக்காமலும் ஆழமான கடலின் ஒலியால் சோர்வடையாமலும் வருத்தமின்றிப் பெறலாமே.

**சொற்பொருள்:** கேளாதார் – பகைவர், குஞ்சரம் - யானை, சரம் - அம்பு.

**12. தலைவி கூற்று:**

**"என்னையா னேபுகழ்ந்தேன் என்னாதே எப்புவிக்கும்**
**மன்னர்கோன் நந்தி வரதுங்கன் - பொன் முடியின்**
**மேல்வருடும் தொண்டை விரைநாறும் இன்னமும் என்**
**கால்வருடும் சேடியர்தங் கை"**

**தெளிவுரை:**

பாங்கியே! என்னை நானே புகழ்ந்தேன் என்று சொல்லாதே இப்பொழுது எனது கால்களைப் பிடிக்கும் தோழியர்களின் கையில், எல்லா நாடுகட்டும் அரசர்க்கரசனான நந்தி மன்னனின் பொன்னாலான முடியின்மேல் புரளும் தொண்டைமலர் மாலையின் மணம் கமழும்.

**13. தலைவி கூற்று:**

**"சிவனை முழுதும் மறவாத சிந்தையாள்**
**செயமுன் உறவு தவிராத நந்திஊர்க்**
**குவளை மலரின் மதுஆரும் வண்டுகாள்**
**குமிழி சுழியில் விளையாடு தும்பியே**
**அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே**
**அவரும் அவதி சொனநாளும் வந்ததே**
**கவலை பெரிது பழிகாரர் வந்திலார்**
**கணவர் உறவு கதையாய் முடிந்ததே!"**

**தெளிவுரை:**

நான் முழுதும் சிவபெருமானை மறவாத சிந்தையுடையவனும், வெற்றியின் உறவு நீங்காதவனுமாகிய நந்தி மன்னவனின் ஊரில் குவளை மலர்களில் தேனை உண்ணும் வண்டுகளே! நீர்க் குமிழியிலும் நீர்ச்சுழியிலும் விளையாடும் தும்பிகளே! உலகில் மழைபெய்யும் காலமும் வந்து விட்டது; என் தலைவர் மீண்டும் வருவதாகக் குறித்து சொன்ன நாளும் வந்துவிட்டது. என் கவலையோ மிகவும் பெரியதாகி விட்டது. பழியைச் செய்பவராகிய என் கணவர் வந்திலர்; என் கணவரின் உறவு கதையாக முடிந்து விட்டது.

**சொற்பொருள்:** செயம் - வெற்றி, அவனி – உலம்.

**14. தலைவி கூற்று:**

**"தொடர்ந்து மலர்இரந்த தொண்டையந்தார் நாங்கள்**
**நடந்த வழிகள்தொறும் நாறும் - படர்ந்த**
**மலைகடாம் பட்டனைய மால்யானை நந்தி**
**முலைகடாம் பட்டசையா முன்"**

**தெளிவுரை:**

நடக்கின்ற மலையில் மதம் ஒழுகியது போல் மதம் ஒழுகுகின்ற பெரிய யானையையுடைய நந்தி மன்னனது, பலர் பின்தொடந்து வேண்டிய தொண்டை மலர் மாலை, எங்கள் கொங்கைகள், தோன்றி அசைவதற்கு முன்னே, நாங்கள் நடந்த வழிகள் தோறும் மணம் வீசும்.

**15. தலைவி கூற்று:**

**"நம்ஆவி நம்கொழுநர் பாலதா நம் கொழுநர்**

**தம்ஆவி நம்பால தாகும் தகைமையினால்**
**செம்மாலை நந்தி சிறுகுடிநாட் டன்னமே!**
**தம்ஆவி தாமுடையர் அல்லரே சாகாமே"**

**தெளிவுரை:**

செவ்விய மாலையணிந்த நந்திமன்னனது சிறுகுடி நாட்டில் வாழும் அன்னமே! நமது உயிர் நம் கணவரிடத்ததாக. நும் கணவரின் உயிர் நம்மிடத்தாக இருக்கும் தன்னையினால், அத்தலைவர் தம்முடைய உயிரைத் தரமுடையவர் அல்லர்; ஆகையால் இருவரும் இறவோம்.

**16. தலைவிக் கூற்று:**

**"மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியும் காலம்**
**மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்கும் காலம்!**
**கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்**
**கோககை நகைமுல்லை முகைநகைக்கும் காலம்**
**செங்கைமுகில் அனையகொடைச் செம்பொன்பெய் மேகத்**
**இங்குடலும் ஆனமழைக் காலம் அங்குயிறும்**
**தியாகியெனும் நந்தியருள் தோத காலம்**
**அவரொருவர் நாமொருவர் ஆனகொடுங் காலம்"**

**தெளிவுரை:**

இக்கார்காலம் தலைவரைப் பிரிந்த மகளிரின் கண்கள் நீரைச் சொரியும்படி மழை பெய்யும் காலம் மன்மதன் வில்லை வளைக்க மயில்கள் கூத்தாடும் காலம். மகளிரின் கொங்கைகள் பொன்போன்ற பசலைமிகும் காலம்; கொன்றை மரங்கள் பொன்னிறப் பூக்களைப் பூத்து உதிர்க்கும் காலம்; செந்தாமரையும் ஒளியுடைய முல்லைக் கொடிகளும் அரும்பு கொண்டு விளங்கும் காலம்; மேக போன்ற கொடைத் தொழிலுடைய செங்கையினால் செம்பொன்னைப் பொழியும் ஒப்பற்ற கொடையான் எனும் நந்தி மன்னனின் அருளை நாம் பெறாத காலம். தலைவரிடத்தில் உயிரும் இங்கே உடலுமாக இருக்கும் மழைக்காலம்; அத்தலைவர் ஒருவரும் நாம் ஒருவருமாக தனிமை கொண்ட கொடிய காலம்.

**சொற்பொருள்:** மாரவேள் - மன்மதன். சிலை – வில், கோகனைகம் - தாமரை, நகை-ஒளி, முகை – அரும்பு.

**17. தலைவிக் கூற்று:**

**அன்னையரும் தோழியரும் அடர்ந்து பெரும் காலம்**
**ஆனிபோய் ஆடிவரை ஆவணியின் காலம்**
**புன்னைகளும் பிச்சிகளும் தங்களின் மகிழ்ந்து**
**பொற்பவள வாய்திறந்து பூச்சொரியும் காலம்**
**செந்நெல்வயற் குருகினஞ்சூழ் கச்சிவள நாடன்**
**தியாகியெனும் நந்திதடந் தோள்சேராக் காலம்**
**என்னையவர் அறமறந்து போனாரே தோழி**
**இளந்தலைகண் டேநிலவு பிளந்தெரியும் காலம்"**

**தெளிவுரை:**

தோழியே! என் தாய்மார்களும் தோழியர்களும் என்னை நெருங்கிப் போரிடுங்காலம்; இந்த ஆனித் திங்கள் சென்று ஆடித்திங்கள் முடியும் எல்லையில் வருவது கார்காலத்திற்குரிய ஆவணித் திங்களுக்குரிய காலம் புன்னை மரங்களும் பிச்சி என்னும் மலிலிகையும் தமக்குள் மகிழ்ந்து பொன்னுள்ள பவளம் போன்ற வாய்திறந்து மலர்களைப் பொழியு் காலம்? செந்நெல்

வயலில் பறவைக் கூட்டங்கள் சூழ்கின்ற காஞ்சி புரமாகிய வளநாட்டை உடையவனாகிய கொடையாளி என்று சொல்லப்படும் நந்திப் பல்லவனின் பெரிய தோளைச் சேராத காலம் என்னுடைய எளிமையைக் கண்டு சந்திரன் மிகவம் ஒளி வீசி எரிகின்ற காலம்; இக்காலத்தில் அத்தலைவா என்னை முற்றிலும் மறந்து சென்றாரே.

**18. தலைவிக் கூற்று:**

> **"ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்**
> **வீட்டிருந்த பாட விடிவளவுங் - காட்டில் அழும்**
> **பேய்என்றால் அன்னை பிறர்நரிஎன் றார்தோழி**
> **நாய் என்றாள் நீ என்றேன் நான்"**

**தெளிவுரை:**

தேடிய புகழுடைய நந்தி மன்னின் பாணனே! எமது தங்கையரான பரத்தையர் வீட்டிலிருந்து இரவு விடியும் வரையில் நேற்றுப்பாட, அதனைக் கேட்டு. என் அன்னை அவ்வொலி காட்டில் அழுகின்ற பேயின் குரல் என்றாள்; மற்றவர்கள் நரியின் குரல் என்றனர்; தோழியின் அழுகை என்றாள்; நான் உன் பாடலே என்றேன்.

**19. தலைவிக் கூற்று:**

> **"செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்**
> **சந்தனமென்று ஆரோ தடவினார் – பைந்தமிழை**
> **ஆய்கின்ற கோன்நந்தி ஆகந் தழுவாமல்**
> **வேகின்ற பாவியேன் மெய்"**

**தெளிவுரை:**

பசுந்தமிழை ஆராய்கின்ற நந்தி மன்னனின் மார்பைத் தழுவாமல் வேகின்ற பாவியாகிய என் உடம்பின்மேல், செம்மையான தீயின் சாற்றைப் பிழிந்து, செழுமையான குளிர்ந்த சந்தனமென்று சொல்லித் தோழியரின் எவரோ தடவினால்.

**20. தலைவிக் கூற்று:**

> **"சதிராக நந்தி பரன்றனைக் கூடிய தையலரை**
> **எதிராக்கி என்னை இளந்தலை ஆக்கிஎன் அங்கமெல்லாம்**
> **அதிராக்கித் தூசும் அழுக்காக்கி அங்கமங் காடிக்கிட்ட**
> **பதராக்கி என்னையும் பற்றாமல் ஆக்கிய பாலகனே"**

**தெளிவுரை:**

வலிமையாக நந்தி மன்னனைக் கூடிய மகளிரை எனக்கு எதிராகச் செய்து என்னை எளிமையாக்கி, என் உறுப்புக்களை எல்லாம் நடுங்கச் செய்து, ஆடையையும் அழுக்காகச் செய்து, உடம்பை அங்காடிக் கிட்ட பதர்போல் அகச் செய்து, என்னையும் தகுதியில்லாமற் செய்த மைந்தன் இவனே.

**21. தலைவிக் கூற்று:**

> **"மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்குகரத்**
> **தண்ணுவா மாலைத் தமிழ்நந்தி நன்னாட்டில்**
> **பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும்**
> **வெண்ணிலா வேஇந்த வேகம் உனக்கு ஆகாதே"**

**தெளிவுரை:**

உலகமெல்லாம் பிழைக்க மழைபோலக் கொடுக்கும் கையையுடைய குளிர்ந்த உலா மாலையைப் பெற்ற தமிழை அறிந்த நந்தி மன்னனின் நாட்டில் பெண் இல்லாத ஊரில் பிறந்தவர்களைப் பொல் என்மேல் கொடுமை மிக வருகின்ற பெண்ணிலவே! ஊனக்கு இக்கொடுமை அகாது.

**22. தலைவிக் கூற்று:**

**"காவிஅ னந்தம் எடுத்தான் மதன்கைக் கரும்பெடுத்தான்**
**மேவிஅ னந்த வனம்புகுந்த தான் இனி வேட்ட ஞ்செய்வான்**
**ஆவிஅ னந்தமுண் டோஉயிர் தான்விட் டகாது முன்னே**
**தேவியன் நந்திக்கு இங்கு ஆரோடி விண்ணப்பம் செய்குவீரே"**

**தெளிவுரை:**

மன்மதன், தனது அம்பாகிய நீலோற்பல மலர் பலவற்றைக் கையில் எடுத்தான்; வில்லாகிய கரும்பையும் கையில் எடுத்தான்; மேலும் அம்புகளை விரும்பிப் பல சோலைகளில் புகுந்தான்; இனி நம் உயிரை வேட்டையாடத் தொடங்குவான். அவன் வேட்டைக்குத் தப்பும் உயிர் பல உள்ளனவோ? ஆகையால், என் உடலைவிட்டு உயிர் நீங்குமுன்னே, என்னுடைய நிலையைத் தெய்வத்தன்மை பொருந்திய நந்தி மன்னவனுக்குத் தெரிவிப்பவர் யாவர்?

**23. தலைவிக் கூற்று:**

**"செய்ய கமலத் திருவுக்கு முன்பிறந்த**
**தய்யல் உறவு தளிர்ந்தோமே – வையம்**
**மணக்கும் பெரும் புகழான் மானபரன் நந்தி**
**இணக்கம் பிறந்தாள் இன்று"**

**தெளிவுரை:**

உலகில் விளங்குகின்ற பெரும் புகழையுடையவனும், மானத்தை மேலாகக் கொண்டவனுமாகிய நந்தி மன்னனின் நட்பு உணடான நாளாகிய இன்னும் செந்தாமரை மலரிலிருக்கும் திருமகளுக்கு முன் பிறந்த மூதேவியின் உறவு நீங்கப் பெற்றோம்.

**24. தலைவிக் கூற்று:**

**"வானுறு மதியை அடைந்ததுன் வதணம்**
**மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி**
**கானுறு புலியை அடைந்ததுன் சீற்றம்**
**கற்பகம் அடைந்ததுன் கொடைகள்**
**தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்**
**செந்தழல் அடைந்ததுன் மேனி**
**யானும் என்கலியும் எவ்விடம் புகுவேம்**
**நந்தியே எந்தை பிரானே!"**

**தெளிவுரை:**

நந்தி மன்னனே! எனது தந்தையே! உபகாரியே உனது குளிர்ந்த தன்மை வானத்திலுள்ள சந்திரனிடத்தில் சேர்ந்தது; உன் பெருமை அலைமடங்கு கடல் சூழ்ந்த உலகில் பரவியது; உன் கோபம் காட்டில் வாழும் புலியினிடத்தில் புகுந்தது; உனது ஈகைத் தன்மைகள் கற்பகத் தருவை யடைந்து விட்டன; உன்னிடத்திலிருந்து தாமரையாளாகிய திருமாலினிடத்தில் சென்று புகுந்தாள்;

உன் உடம்பு சிவந்த தீயில் புகுந்தது. உன்னைச் சார்ந்திருந்த நானும் எனது வறுமையும் இனி எவ்விடத்தை சென்றடைவோம்?

**25. தலைவிக் கூற்று:**

> **"இரும்புழுத புண்ணிற்கு இடுமருந்தோ அன்றோ**
> **அருந்துர் தீர்க்கும் அன்னயே – பெரும்புலவா**
> **தன்கலியைத் தீர்க்கும் தமிழாகரன் நந்தி**
> **என்கலியைத் தீர்பான் இலன்"**

**தெளிவுரை:**

என்னுடைய அரிய துன்பத்தைப் போக்கும் அன்னையே! நீ என்மேற் பூசுவது மன்னனது அம்பு தைத்த புண்ணுக்குப் போடும் மருந்தேயல்லது வேறொன்றோ பெரும் புலவர்களின் துயரத்தைப் போக்குகின்ற நந்தி மன்னன், என்னுடைய துன்பத்தைத் தீர்க்கின்றானிலன்.

**சிறுவினாக்கள்:**

1. தலைவி தனது மெலிவு கண்டு வருந்திக் கூறுதலை நந்திக்கலம்பகம் வழி விளக்குக.
2. நந்திக் கலம்பகம் உணர்த்தும் குருகுவிடு தூது குறித்து எழுதுக.
3. நந்திக் கலம்பகத்தில் கைக்கிளையைப் பற்றி எழுதுக.
4. நந்திக்கலம்பகத்தில் தலைவி, வாடையை கண்டு வருந்தியது எவ்வாறு?
5. நந்தி மன்னனின் அருளைப் பெற்றபொழுது தலைவியின் இரங்கல் செய்தியினை எழுதுக.
6. தலைவியின் வேறுபாட்டைக் கண்டு வினவிய தோழிக்கு, தலைவி, தலைவனின் புறத்தொழுக்கத்தை உணர்த்தியது எவ்வாறு?

**நெடுவினைக்கள்:**

1. தலைவி மாலைப்பொழுது கண்டு இரங்குதலையும் மாலைபெறாது இரங்கல் செய்திகளையம் தொகுத்துரைக்க.
2. நந்திக்கலம்பகத்தில் தலைவி கார்ப்பருவம் கண்டு வருந்தும் நிகழ்வுகளை விவரிக்க.

## B.LITT. DEGREE EXAMINATION NOVEMBER 2016

## பக்தி இலக்கியமும் சிற்றிலக்கியமும்

**Time Three Hours** **Maximum: 100 Marks**

### பகுதி அ (5x5=25) மதிப்பெண்கள்)

### எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. சீர்காழி பதிகம் உணர்த்தும் இறைவனின் திருச்செயல்கள் பற்றி விளக்குக.
2. இறைவன் நீக்கமற விளங்குகின்றதை நும் பாடப்பகுதி கொண்டு சுந்தரர் தேவாரம் வழி நின்று விளக்குக.
3. மாணிக்கவாசகர் ஞானத்தைப் பற்றி திருக்கோத்தும்பியிடம் எவ்வாறு கூறுகிறார்?
4. அன்புடையோர், அன்பில்லாதவர் காணும் முறைமையினை விளக்குக.
5. பாவை நோன்பில் செய்ய வேண்டியவைவிலக்க வேண்டியவைகளை விளக்குக.
6. முக்கூடற்பள்ளு உணர்த்தும் இளையபள்ளி, மூத்தபள்ளி குறித்த வர்ணனைச் - செய்திகளை குறிப்பிடுக?
7. தமிழ்விடுதூது நூல் உணர்த்தும் வண்ணங்களும், குணங்களும் குறித்து எழுதுக.
8. நந்தி மன்னனின் அருளைப் பெற்றபொழுது தலைவியின் இரங்கல் செய்தியினை எழுதுக.

### பகுதி ஆ (5x15=75) மதிப்பெண்கள்)

### எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

9. திருநாவுக்கரசர் திருவதிகைவீரட்டானத்தில் வீற்றிருக்கும் இறைவனிடம் முறையிடுவதை தொகுத்துரைக்க.
10. சுந்தரர் திருவண்ணெய் நல்லூரில் எழுந்தருளியருக்கும் தடுத்தாட் கொண்டு நாதரிடம் கொண்ட பக்தி நயத்தைப் புலப்படுத்துக.
11. திருவாலங்காட்டு இறைவனிடம் காரைக்காலம்மையார் கொண்ட பக்தி திறத்தைப் புலப்படுத்துக.
12. ‘அன்புடைமை’ எனும் அதிகாரத்தில் இடம் பெறும் கருத்துக்களை திருமந்திரம் வழிநின்று கட்டுரைக்க.
13. கண்ணன் திரு அவதாரச் சிறப்பினை பெரியாழ்வார் எவ்வாறு உணர்த்துகிறார்?
14. திருவேங்கட மலையின் சம்பந்தம் வேண்டல் குறித்து குலசேகராழ்வார் கூறும் கருத்துகளை தொகுத்துரைக்க.
15. முக்கூடற் பள்ளு உணர்த்தும் நாட்டுவளங்கள் குறித்த செய்திகளை விவரிக்க?
16. கலிங்கப்போர் குறித்த செய்திகளை விளக்கி வரைக?